# உலக மொழிகள்

மூன்றும் பகுதி

## உராலிக்-அல்டய்க் மொழிகள்
## அமெரிக்க இந்திய மொழிகள்

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

# உலக மொழிகள்

மூன்றாம் பகுதி

## உராலிக்-அல்டய்க் மொழிகள்
## அமெரிக்க இந்திய மொழிகள்


**டாக்டர் ச. அகத்தியலிங்கம்**
எம். ஏ., பிஎச். டி. (கேரளா), பிஎச். டி. (இந்தியானா)
பேராசிரியர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்



விற்பனை உரிமை
**பாரி நிலையம்**
59. பிராட்வே, சென்னை - 1.

சண்முகம்பிள்ளை அகத்தியலிங்கம் (1929)
வெளியீடு — பொன்னகம், அண்ணாமலைநகர்
உரிமை ஆசிரியருக்கே
முதல் பதிப்பு 1972
விலை ரூ.19.00

சிவகாமி அச்சகம்
அண்ணாமலைநகர்

# முன்னுரை

மனித இனம் மற்றைய உயிரினங்களிலிருந்து மாறுபட்டது. மனித இனம் ஆறறிவு கொண்டது. சிந்திக்கும் ஆற்றலும் அச்சிந்தனையில் பூத்த செய்திகளைப் பிறருக்குச் சொல்லும் திறனும் பெற்றது. இடத்தையும் காலத்தையும் கடந்து தன் எண்ணத்தைப் பரவச்செய்யும் அளவுக்குப் பக்குவம் பெற்றது. இப்பக்குவம்தான் மனிதனை மனிதனாகவும் நாள்தோறும் முன்னேறி, எண்ணியதை எண்ணியாங்கு ஈடேற்றும் உயிரினமாகவும் ஆக்கி வருகிறது.

இந்நிலையில்தான் ஒருமனிதனின் மொழி அவன் வாழ்க்கையில் பிரிக்க முடியாத அளவுக்குப் பின்னிப் பிணைந்து நிற்கக் காணுகிறோம். உண்பது, உடுப்பது, உறங்குவது போன்று பேசுவதும் மனிதனுக்கு இன்றியமையாத ஒரு பண்பாக அமைந்து விடுகிறது. நாட்டில் நவநாகரிகச் சூழ்நிலையில் பிறந்தவனாயினும்சரி, அல்லது காட்டில் பிறந்து கனிகளைத் தின்று வாழ்பவனாயினும்சரி, பேசத்தெரிந்தவனாக மாறிவிடுகிற நிலையைக் காணுகின்றோம். பேச்சிலே கொச்சை இருக்கலாம், அல்லது குளறல் இருக்கலாம். சொல் வளம் நிரம்பிப் புத்தம் புதிய பொருட்களின் பெயர்களைக் கொண்டு விளங்கலாம் ஒரு மொழி. அதிக சொல்வளம் இன்றி ஆக்கச் சொற்கள் குறைவாகக் காணப்படலாம் மற்றொரு மொழியில். எனினும் இவ்விரு மொழிகளும் அம்மொழிகளைப் பேசுவோரைப் பொறுத்த மட்டில் தன்னிறைவு பெற்றதாகவே கருதப்படுகிறது. பிறமொழிக் கருத்துக்களைத் தன் மொழியில் கொண்டுவரும்போதுதான் புதிய சொற்களை ஆக்குகிறோம்.

இவ்வாறு மனிதனின் வாழ்வோடு வாழ்வாக, சிந்தனையோடு சிந்தனையாகக் கலந்துவிட்ட மொழிகளின் வாழ்வும் வளமும் எத்தனையோ நிலைகளில் உள்ளன. செத்துவிட்ட மொழிகளும் தேய்ந்து விட்ட மொழிகளும் எத்தனையோ உள்ளன. இது போன்று வாழும் மொழிகளும் வளரும் மொழிகளும் பலவாகக் காணப்படுகின்றன.

வரலாற்று அடிப்படையிலும் மக்களின் வளமான வாழ்வு அடிப்படையிலும் சில மொழிகள் சிறந்து விளங்கக் காணலாம். சாக்கிரட்டீஸ் பேசிய கிரேக்கமும் சீசர் பேசிய லத்தீனும் உலக மொழிகளாகக் கருதப்படலாம். ஆனால் இவ்வடிப்படைகளை வைத்து நோக்கின் அமெரிக்க இந்தியர்களின் மொழி அத்தனை சிறப்புடையதாக கருதப்படாமல் இருக்கலாம். இது போன்றே சில இந்திய மொழிகளும் ஆப்பிரிக்க மொழிகளும் உலக அரங்கில் உயர்ந்து விளங்கி உன்னத நிலையை அடையாமல் இருக்கலாம். ஆனால் இம்மொழிகள் மொழியியல் அறிஞனுக்கும் ஆராய்ச்சியாளனுக்கும் விருந்தாக அமைவனவாகும்.

இத்தகைய உலக மொழிகள் அனைத்தையும் அறிவியல் அடிப்படையில் ஆய்ந்து மொழியியல் கண்ணோட்டத்துடன் தமிழ் மக்கள் முன் வைக்க வேண்டும் என்னும் எண்ணத்தில் தோன்றியவைதான் உலக மொழிகள் என்னும் வரிசை நூல்கள். முன்னைய இரு பகுதிகளிலும் இந்தோ–ஐரோப்பிய மொழிகளில் பல இடம் பெற்றன. கிரீக், லத்தீன், ஸ்பானிஷ், பிரஞ்சு, இத்தாலியன் போன்ற மொழிகள் முதல் பகுதியிலும் ஆங்கிலம், ஜெர்மன், ரஷ்யன் போன்ற மொழிகள் இரண்டாவது பகுதியிலும் இடம் கொண்டன.

இந்நிலையில் ஐரோப்பிய நாட்டில் பேசப்படும் உராலிக் மொழிகளும் காக்கேசிய மொழிகளும் பாக்ஸ் மொழியும் இப் பகுதியில் இடம் பெறுகின்றன இவை தவிர அமெரிக்கப் பெரு

நிலப் பரப்பில் காட்டுப் பகுதிகளிலும் மேட்டு நிலப் பரப்புக ளிலும் பேசப்படுகின்ற அமெரிக்க இந்திய மொழிகளும் இப் பகுதியில் காணப்படும். எனவே முதல் மூன்று பகுதிகளிலும் அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய பெருநிலப் பகுதிகளில் வழங்கு கின்ற மொழிகள் இடம் பெற்றுள்ளன.

அடுத்து வெளிவரும் பகுதிகள் (1) ஆப்பிரிக்க மொழிகள்; (2) திராவிட மொழிகள், (3) இந்திய மொழிகள், (4) ஆசிய மொழிகளைக் கொண்டு விளங்கும்.

இப்பணிக்குத் துணைபுரிந்த நூல்கள் பல. இவை கிடைப் பதற்குத் துணைபுரிந்த நூல்நிலையங்கள் சில. அவற்றுள் சிக் காக்கோ பல்கலைக்கழகம், இந்தியானா பல்கலைக்கழகம், வாஷிங் டன் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், டெல்லி பல்கலைக்கழகம், மிக்சிக்கன் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் நூல் நிலையங்கள் குறிப்பிடத்தக்கன. வேண்டும் போதெல்லாம் நூல் களைத் தந்துதவிய நூல்நிலையப் பொறுப்பாளர்களுக்கு என்றும் என் நன்றி.

இந்நூல் அச்சாவதற்கு முன்னர்க் கையெழுத்துப் பிரதி யைப் பார்வையிட்டுதவியும் அச்சாகும்போது அச்சுப்பிரதியை ஒப்புநோக்கித் திருத்தியும் உதவிய என் மாணவ நண்பர்கள் திரு R. பாலகிருஷ்ணன், திரு V. சிதம்பரநாதன், திரு S. ஜெய பால் ஆகியோருக்கும் அழகுற அச்சிட்டுதவிய அண்ணாமலைநகர் சிவகாமி அச்சகத்தாருக்கும் என் உளமார்ந்த நன்றி.

**ச. அகத்தியலிங்கம்**

## உள்ளுறை


| | | |
|---|---|---|
| | முன்னுரை | v |
| | உள்ளுறை | ix |
| **3.0** | **உராலிக்-அல்டய்க் மொழிகள்** | **1–144** |
| **3.1** | **பால்டிக் பின்னிக் மொழிகள்** | **19–32** |
| 3.11 | பின்னிஷ் | 19 |
| 3.12 | எஸ்தோனியன் | 26 |
| 3.13 | காரெலியன் | 31 |
| 3.14 | வொதே | 32 |
| 3.15 | வெப்ஸ் | 32 |
| 3.16 | லிவோனியன் | 32 |
| 3.17 | ஒலனத் | 32 |
| **3.2** | **வால்கா பின்னிஷ் மொழிகள்** | **33-35** |
| 3.21 | மார்ட்வினியன் | 33 |
| 3.22 | செரிமிஸ் | 35 |
| **3.3** | **உக்ரிக் மொழிகள்** | **36-46** |
| 3.31 | ஹங்கேரியன் மொழிகள் | 36 |
| 3.32 | வொகுல் | 45 |
| **3.4** | **பெரிமியன் மொழிகள்** | **47-49** |
| 3.41 | சிரியென் | 47 |
| 3.42 | வொத்யக் | 48 |
| **3.5** | **லாப்பிஷ் மொழிகள்** | **50–52** |
| 3.51 | லாப்பிஷ் | 50 |

| | | |
|---|---|---|
| 3.6 | சமொயொதிக் மொழிகள் | 53-58 |
| 3.61 | செல்கப் | 54 |
| 3.62 | யுரக் | 57 |
| 3.7 | அல்டய்க் மொழிகள் | 59-114 |
| 3·71 | துருக்கிய மொழிகள் | 65–93 |
| 3·71.1 | துருக்கிமொழி | 75 |
| 3.71.2 | உஸ்பெக் | 80 |
| 3.71.3 | யகுத் | 84 |
| 3.71.4 | சுவாஷ் | 89 |
| 3.72 | மங்கோலிய மொழிகள் | 94-106 |
| 3.72.1 | வடமங்கோலியன் அல்லது புரியத் | 97 |
| 3.72.2 | மங்கோலியன் | 99 |
| 3.72.3 | ஓரியத் | 104 |
| 3.72.4 | தகூர் | 105 |
| 3.72.5 | மொங்கூர் | 105 |
| 3.72.6 | மொகுல் | 106 |
| 3.73 | துங்கூஸ் மொழிகள் | 107-114 |
| 3.73.1 | மஞ்சு | 109 |
| 3·73.2 | கோல்ட் | 114 |
| 3.8 | காக்கேசியன் மொழிகள் | 115–121 |
| 3.8.1 | தென் காக்கேசியன் | 118 |
| 3.8.2 | வடமேற்கு காக்கேசியன் | 119 |
| 3.8.3 | வடகிழக்கு மொழிகள் | 120 |
| 3.9 | பாஸ்க் | 122-128 |
| 3.10 | அமெரிக்க இந்திய மொழிகள் | 129 240 |

| | | |
|---|---|---|
| **3.10.1** | எஸ்க்கிமோ - அலியுத் பெருங்குழு | **149-154** |
| 3.10.1.1 | எஸ்கிமோ | 149 |
| **3.10.2** | அல்கோன்கியன் வகாஷன் பெருங்குழு | **155-174** |
| 3.10.2.1 | சாலிஷ் மொழிகள் | 155 |
| 3.10.2.2 | சிமாக்குவன் மொழிகள் | 155 |
| 3.10.2.3 | அல்கோன்கியன் மொழிகள் | 156 |
| 3.10.2.4 | வகாஷன் மொழிகள் | 156 |
| 3.10.2.5 | குய்லெயுத் | 156 |
| 3.10.2.6 | பாக்ஸ் | 162 |
| 3.10.2.7 | குவத்தில் | 169 |
| **3.10.3** | நா-தென் பெருங்குழு | **175-185** |
| 3.10.3.1 | வட அதபாஸ்கன் | 175 |
| 3.10.3.2 | பசிபிக்கரையோர அதபாஸ்கன் | 176 |
| 3,10.3.3 | தென்மெற்கு அதபாஸ்கன் | 176 |
| 3.10.3.4 | ஹைடா | 177 |
| 3.10.3.5 | அப்பாச்சே | 182 |
| **3.10.4** | பெனுஷியன் பெருங்குழு | **186-204** |
| 3.10.4.1 | மைது | 189 |
| 3.10.4.2 | சினூக் | 193 |
| 3.10.4.3 | திசிம்ஷியன் | 199 |
| **3.10.5** | ஹோக்கன் சியோவன் பெருங்குழு | **205-228** |
| 3.10.5.1 | யுச்சி | 208 |
| 3.10.5.2 | துனிக்கா | 216 |
| 3.10.5.3 | தோங்கவா | 220 |
| 3.10.5.4 | டக்கோட்டா | 223 |
| **3.10.6** | அஸ்டெக் தனோவன் பெருங்குழு | **229-235** |
| 3.10.6.1 | உட்டோ-அஸ்டெகன் | 229 |

| | | |
|---|---|---|
| 3.10.6.2 | தனேவன் | 229 |
| 3.10.6.3 | கியோவா | 230 |
| 3.10.6.4 | சூனி | 230 |
| 3.10.7 | மேக்ரோ-ஒட்டோ மேன்குவன் பெருங்குழு | 336 |
| 3.10.8 | மேக்ரோ சிப்ச்சன் பெருங்குழு | 237 |
| 3.10.9 | கே-பானு காரிப் பெருங்குழு | 238 |
| 3.10.10 | ஆண்டின் இக்குவெட்டரியல் பெருங்குழு | 239 |
| | பிற்சேர்க்கை – 1 | 241 |
| | பிற்சேர்க்கை – 2 | 251 |
| | உதவிய நூல்கள் | 256 |

## 3. 0 உராலிக் - அல்டய்க் மொழிகள் (Uralic–Altaic Languages)

இவ்வின மொழிகள் இன்று ஐரோப்பா, ஆசியா, ஆகிய பெரு நிலப்பரப்புக்களில் வாழும் சுமார் ஒன்பது கோடி மக்களால் பேசப்படுகின்றன. பின்லாந்து, ஹங்கேரி, எஸ்தோனியா, துருக்கி, ரஷ்யா, சைனா, மங்கோலியா முதலிய நாடுகளில் எல்லாம் இம்மொழிகள் வழக்கிலுள்ளன. இம்மொழிகள் முன்னர் சித்திய இனம் என்றும் துரானிய இனம் என்றும் அழைக்கப்பட்டன. கால்டுவெல் தம்முடைய ஒப்பிலக்கணத்தில் இம்மொழிகளைச் சித்திய இனம் எனக் குறிப்பிடுவதையும் இம்மொழிகட்கும் திராவிட மொழிகட்கும் இடையே தொடர்பு காண்பதையும் நாம் அறிவோம்.[1] மொழி இயல் வரலாற்றில் இது போன்ற பல நிகழ்ச்சிகளைக் காணலாம். பல அறிஞர்கள் உராலிக் மொழிகட்கும் இந்தோ ஐரோப்பிய மொழிகட்கும் இடையே தொடர்பு கண்டு இவ்விரண்டு இனங்களும் ஒன்று என எண்ணியதுண்டு. இதே போன்று உராலிக் மொழிகளும் முண்டா மொழிகளும் ஓரினத்தைச் சார்ந்தன என்று கூறியவர்களும் உண்டு. இன்னும் சிலர் இம்மொழிகட்கும் சுமேரியன் மொழிக்குமிடையே இன உறவு உள்ளது என்றும் கூறியுள்ளனர்.[2]

எல்லாவற்றிற்கும் மேலாக உராலிக், அல்டய்க், சைனோ-திபேத்திய மொழிகள், திராவிட மொழிகள், மோன்குமெர், அமெரிக்க இந்திய மொழிகள் போன்ற பல மொழிகள் ஒரே இனத்தைச் சார்ந்தன என்று எண்ணிய மொழி இயல் அறிஞர்களும் உண்டு.[3]

---

1. Robert Caldwell, *Comparative Grammar of the Dravidian Languages*, pp. 67-69.
2. Louis H. Gray, *Foundations of Language*, p. 369.
3. Most of the languages of South - East Asia belong to

வான் லெப்னிட்ஸ் (G. W. von Leibnitz, 1646 - 1716) என்ற ஜெர்மன் அறிஞர் முதன்முதலில் பின்னிஷ், லாப்பிஷ், எஸ்தோனியன், லிவொனியன், ஹங்கேரியன் போன்ற மொழிகட்கிடையே தொடர்பு காணப்படுகிறது என்றும் இதே போன்று துருக்கிய, மங்கோலிய, மஞ்சு மொழிகட்குமிடையே தொடர்பு காணப்படுகிறது என்றும் கூறினார். உராலிக்– அல்டய்க் மொழிகட்கிடையே காணப்படும் தொடர்பு இனவுறவெனப் பதினெட்டாம் நூற்றாண்டில் ஓரளவு ஒத்துக் கொள்ளப் பட்டிருப்பினும் இன்று அதை எல்லா மொழியியல் அறிஞர்களும் ஒத்துக்கொள்ளுதல் இல்லை என்றே கூறவேண்டும்.[1]

**3.01 உராலிக் மொழிகளின் அமைப்பு முறை**

ஐரோப்பிய நாட்டில் இந்தோ ஐரோப்பிய மொழிகட்கு அடுத்தபடியாக முக்கிய இனமாகக் கருதப்படுவது உராலிக் இன

---

either Sino - Tibetan family or the smaller Mon - Khmer or Austroasiatic family, both of which are thought to form part of a larger Turanian family, which may include the Dravidian, Ural- Altaic, Finno - Ugrian, Tungusic, Palaeo - Asiatic (Kamchatka), and possibly the American Indian languages as well as other groups. Such a linguistic group has long been recognised by Philolgists but the actual evidence for it is somewhat scanty.

Peter A. Lanyon Orgill, *An Introduction to the Thai (Siamese) Language for European students*, p. 2.

Some persons unite this Family with the Finno - Ugric family (consisting of Finish, Hungarian and some minor languages spoken in the Soviet union), but the scientific basis of this broad relationship has not yet been fully established. Such a super - stock is called the Ural-Altaic family.

John R. Krueger, *Chuvash Manual*, p. 53.

1. Affinity with Altaic has frequently been postulated, but as yet can scarcely be considered demonstrated.

Louis H. Gray, *Foundations of Language*, p. 369.

மாகும். இன்று இம்மொழி பேசுவோர்களாக சுமார் இரண்டு கோடி மக்கள் உள்ளனர். பின்லாந்து, ஹங்கேரி, எஸ்தோனியா, சுவீடன் (300,000), அமெரிக்கா (300,000), ரஷ்யா முதலிய இடங்களில் இம்மக்கள் வாழுகின்றனர். யூரல் மலைச் சாரலைத் தங்கள் வாழ்விடமாகக் கொண்டிருந்தமையால் இம்மக்களையும் இம்மொழிகளையும் இப்பெயரால் அழைக்கின்றனர்.

பண்டை நாளில் இம்மக்கள் காக்கேசியன் (Caucasian) பிரதேசங்களில் வாழ்ந்து வந்ததாகவும் பின்னர் பல்வேறு இடங்கட்குச் சென்று குடியேறினர் என்றும் வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். இவ்வாறு குடி பெயர்ந்தவர்களில் முதல் பிரிவினர் யூரல் மலைச்சாரலுச்குச் சென்று, பின்னர் ஒன்பதாம் நூற்றாண்டை ஒட்டி மேற்குத் திக்கில் சென்று இறுதியில் ஹங்கேரியில் உறைந்தனர் என்பர். பின்னியர்கள் கி. பி. முதல் நூற்றாண்டையொட்டிக் குடிபெயர்ந்து பால்டிக் கரையோரமாக வந்து பின்லாந்தைத் தங்கள் உறைவிடமாகக் கொண்டனர் என்று கூறுவர். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் பெரிமியர்கள் கிழக்கு, வடகிழக்குத் திக்கில் சென்றனராம்.

பொதுவாக இம்மொழிகளின் உயிர் எழுத்துக்களில் குறில், நெடில் வேற்றுமை உள்ளது எனக்கூறலாம்[1]. வெப்ஸ், மார்ட்வின் போன்ற மொழிகளில் குறில், நெடில் பகுப்பு இல்லையெனினும் பழைய உராலிக் மொழியில் இப்பகுப்பு இருந்திருந்தது என்றே கருதுகின்றனர். சாதாரணமாக எந்தவிதமான மெய் மயக்கங்களும் சொற்கட்கு முதலில் வருவதில்லை என்றும்

---

1. In Finnic (with the exception of Veps) and Hungarian there is a clear-cut opposition between short and long vowels. In Mordvin and Permian there is no quantitative opposition. Lappish, Cheremis, and Ob-Ugric have an opposition between etymologically short and etymologically long vowels.

B. Collinder, *Comparative Grammar of the Uralic Languages*, p. 149.

*Ibid*, p. 150.

மார்ட்வின், லாப்பிஷ் மொழிகளில் காணப்படும் மெய் மயக்கங்கள் ஸ்காண்டிநேவிய மொழிகளின் செல்வாக்கினுல் ஏற்பட்டன என்றும் கூறுவர்.

இம்மொழிகளின் முக்கிய பண்பாகக் கருதப்படுவது உயிர் ஒருமைப்பாடாகும் (Vowel Harmony). இத்தகைய நிலை இம் மொழிகளில் இருப்பதால் ஒரே இலக்கணக்கூற்றினைக் குறிப்பனவாக ஒன்றுக்கு மேற்பட்ட உருபுகள் இருப்பதைக் காணலாம். பின்னிஷ் மொழியில் இத்தன்மையை நன்கு காணமுடியும்.

| | |
|---|---|
| மா | நிலம் |
| மாஹன் | நிலத்தினுள் |
| பே | தலை |
| பேஹென் | தலையினுள் |
| பீ | தீக்கல் |
| பீஹின் | தீக்கல்லினுள் |
| பூ | மரம் |
| பூஹுன் | மரத்தினுள் |

திராவிட மொழிகளைப் போன்று இம்மொழிகளும் ஒட்டு மொழிகளாகும். இலக்கணக்கூறுகள் பல்வேறு உருபுகளால் உணர்த்தப்படுகின்றன. வேற்றுமை உருபுகள், பன்மை உருபுகள், கால இடைநிலைகள், விகுதிகள் போன்றன தமிழ் போன்றே இம்மொழிச் சொற்களில் காணப்படுகின்றன.

தமிழில் காணப்படும் பால் பகுப்பு இம்மொழிகளில் இல்லை என்றே கூறவேண்டும்.[1] செல்கப் (Selkup) மொழியில் உயிர்த்திணை, உயிரல் திணை (animate vs. inanimate) என்ற

1. The category of sex is alien to the Uralic languages, broadly speaking.

B. Collinder, *Comparative Grammar of the Uralic languages*, p. 242.

பாகுபாடு காணப்படுகிறது. கண் வேற்றுமை, பிரிவு வேற்றுமை (Partitive) போன்ற வேற்றுமைகள் உயிர்த்திணையாயின் ஒருவகை உருபிணையும் உயிரல் திணையாயின் வேறொரு வகை உருபிணையும் கொண்டுள்ளன.[1]

தமிழில் படர்க்கைப் பெயர்கள் பால் காட்டுதல் போன்று உராலிக் பெயர்கள் பால் காட்டுவதில்லை. சில மொழிகள் (ஹங்கேரியன்) உயர்திணை, அஃறிணை காட்டுவதும் சில மொழிகள் (எஸ்தோனியன்) இவ்வேற்றுமையைக் காட்டாமலிருப்பதும் கவனிக்கத்தக்கன.

| | | |
|---|---|---|
| எ(யொ) | (ö) | அவன்/அவள் (ஹங்கேரியன்) |
| அஸ் | (az) | அது |
| தெம | (tema) | அவன்/அவள்/அது (எஸ்தோனியன்) |

எனினும் அண்மையில் ஹங்கேரியன், பின்னிஷ் போன்ற மொழிகளில் மகள், பெண் என்ற சொற்களினின்றும் பெண் பாலைக் குறிக்கும் ஒட்டுகள் உருவாகியுள்ளன என்றும் சில சொற்களில் ஆண், பெண் வேற்றுமை காட்டப்படுகின்றன என்றும் கூறுவர்.

| | | |
|---|---|---|
| தனர் | (tanaar) | பேராசிரியர் (ஆண்) |
| தனர | (tanaarö) | பேராசிரியர் (பெண்) |
| நுவொருக்கொ | (nuoriuko) | (புதிதாக மணமான) இளம்பெண் |
| நுவொருக்கொனென் | (nuoriukonen) | இளங்காளை |

---

1. In Selkup, some of the cases of the nouns have two different case endings one for designation of living beings the other for all the rest. This constitutes, then two genders: Genus animatum and genus inanimum.

*Ibid*, p. 241.

பெரும்பாலான உராலிக் மொழிகளில் ஒருமை, பன்மை பாகுபாடே காணப்படுகிறது. ஆனால் லாப்பிஷ், ஒப்–உக்ரிக், சமொயொதிக் மொழிகளில் ஒருமை, இருமை, பன்மை எண்கள் உள்ளன. லாப்பிஷ் மொழியில் மூவிடப்பெயர்களும் உடைமை ஒட்டுகளும் வினைச்சொற்களுமே இருமையைக் காட்டும். பெயர்கள் பிறமொழிகளைப் போன்று ஒருமை, பன்மை எண்களையே கொண்டுள்ளன. இந்த நிலை இருமை எண் மறைந்து வருவதைக் காட்டும். இத்தகைய பண்பினைப் பிற இனமொழிகளிலும் காணலாம்.[1]

| | | |
|---|---|---|
| க்வல் | | வீடு |
| க்வலி | | இரு வீடுகள் |
| க்வலெத் | | வீடுகள் |
| ஹொப் | (hop) | வள்ளம் |
| ஹொப் ஙன் | (hop - ṅən) | இரு வள்ளங்கள் |
| ஹொபத் | (hop - ət) | வள்ளங்கள் |

பெயர்களிலும் மூவிடப் பெயர்களின் உடைமைத் தன்மையைக் காட்டும் உருபுகளிலும் ஒருமை, பன்மை, இருமை என்ற எண் பாகுபாடு காணப்படுவதால் 'என்னுடைய வள்ளம்' 'என்னுடைய இரு வள்ளங்கள்' 'என்னுடைய வள்ளங்கள்', 'எங்களிருவரின் வள்ளம்', 'எங்களிருவரின் இரு வள்ளங்கள்'' 'எங்களிருவரின் வள்ளங்கள்'', 'எங்களின் வள்ளம்' 'எங்களின் இரு வள்ளங்கள்' 'எங்களின் வள்ளங்கள்' போன்று பல சொற்களில் நாம் கூறுவதை இவர்கள் ஒரே சொல்லில் கூறிவிட முடியும்.

---

1. A dual number occurs in Lappish, Ob - Ugric, and Samoyed ...... In Lappish, only verbs and personal pronouns and Px have dual number; and the same might be said of Kamassian, but for the dual *kagaazəgej*, (two) brothers, noted by Kai Donner.

| | | |
|---|---|---|
| ஹொபெம் | (hop em) | என் வள்ளம் |
| ஹொப்ஙதம் | (hop - ṅet - am) | என் இரு வள்ளங்கள் |
| ஹொப்தம் | (hop-t am) | என் வள்ளங்கள் |
| ஹொபெமன் | (hop-e mən) | எங்கள் இருவரின் வள்ளம் |

உராலிக் மொழிகளில் ஏராளமான வேற்றுமைகளைக் காண லாம்.[1] ஹங்கேரிய மொழியில் இருபத்தைந்து வேற்றுமைகள் வரை உண்டு என்பர் சிலர் (Encyclopedia Brittanica). பின் னிஷ் மொழியில் பதினைந்து உள்ளன. எஸ்தோனியனில் 4 உள் ளன. இன்னும் மார்ட்வின், செரிமிஸ் போன்ற மொழிகளில் பல வேற்றுமைகள் இருப்பதைக் காணலாம். இம்மொழிகளில் ஒஸ்த்யக் மொழியே குறைந்த வேற்றுமைகளை உடையது. தமிழில் எட்டு வேற்றுமைகள் இருப்பதும் சில காக்கேசிய

---

The gradual disappearance of the dual number has parallels in Indo-European languages. Gothic, for instance, has preserved the dual only in the verb and in the personal and possessive pronouns.

B. Collinder, *Ibid*, pp. 237 - 238.

1. A well known feature of the Morphology of Finnish is the number of declensional cases. There are fifteen 'living' cases, all dating atleast from the later Proto-Finnic period, but only about a third of them existed of Finno-Ugric. One may compare thus with the situation in Lapp which has 8 cases, Mordvin with 10, Cheremis with 13, Zyryan with 18, Votyak with 14, Vogul with 6, Ostyak in which the number varies from 5 to 8 according to dialect, and Hungarian with 21. In French on the other hand there is only one case, in English and Swedish 2, in German 4, in Russian 6, in Polish and Lithuanian 7 and in Indo-European there are thought to have been 7.

Lauri Hakulinen (translated by John Atkinson). *The Structure and Development of the Finnish Language*, p. 67.

B. Collinder, *Ibid*, p. 238.

மொழிகளில் முப்பதுக்கும் அதிகமான வேற்றுமைகள் **(Avar, 30, Lak 50)** இருப்பதும் இவண் ஒப்பு நோக்கத்தக்க தாகும்.[1]

பெயரடைகள் தமிழ் மொழியைப் போலவே பெயர்கட் கேற்ப மாறுவதில்லை. பின்னிஷ், ஹங்கேரியன் போன்ற மொழி களில் பெயர்கள் ஒருமையாயினும் பன்மையாயினும் எந்த வேற்றுமையாயினும் பெயரடைகள் எந்தவிதமான மாற்றமு மின்றி ஒரே நிலைமையில் உள்ளன. ஆனால் இலக்கிய எஸ்தோ னியனில் ஒருசில வேற்றுமைகட்கேற்ப பெயரடைகள் மாறுவ தைக காணலாம்.[2] இந்நிலைமையைப் பின்னிஷ் மொழியிலும் காணலாம்.[3]

| | | |
|---|---|---|
| ஒதல் | ராமத்த | மலிவான புத்தகம் |
| உதவத் | ராமதுத | மலிவான புத்தகங்கள் |
| உதவ | ராமது | மலிவான புத்தகத்தின் |
| உதவத்த | ராமத்துத | புத்தகத்தின் பகுதி |
| ஒதவைத் | ராமத்துய்த் | புத்தகங்களின் மகுதி |

(எஸ்தோனியன்)

1. Louis H. Gray, *Foundations of Language*, p. 374.

2. When an adjective is used independently (without a following substantive) it has the same declension as a substantive. When an adjective appears as a qualifier before a substantive, the terminative. essive, abessive, and comitative cases are replaced by the genitive. In the remaining cases the adjective has the same case as its substantive, though in colloquial Estonian this agreement is not always observed.

B. Collinder, *Survey of the Uralic Languages*, p. 141.

3. As a rule, an adjective agrees with a noun in case and number.

There are, however, a considerable number of exceptions to this rule.

C. N. E. Eliot, *A Finnish Grammar*, p. 128.

| | | |
|---|---|---|
| சூரி | த்லொ | பெரிய வீடு |
| சூரென் | த்லொன் | பெரிய வீட்டின் |
| சூரெத் | த்லொதி | பெரிய வீடுகள் |

உராலிக் மொழி வினைச்சொற்கள் தமிழ் வினைகளைப் போன்றே காலம், இடம், எண் போன்ற பல இலக்கணக் கூறு களைப் பல்வேறு ஒட்டுகளால் காட்டுகின்றன. இம்மொழிகளில் பால் பாகுபாடு இல்லாததால் வினைச்சொற்களும் பால் காட்டு வதில்லை.

இவற்றின்கண் காணப்படும் காலங்களை நிகழ்காலம், இறந்தகாலம் என இரண்டாகப் பிரிக்கலாம். பண்டைத் தமிழைப் போன்றே நிகழ்காலத்தைக் காட்டவெனத் தனியான இடைநிலை ஏதுமில்லை. செல்கப், யுரக் போன்ற ஒன்றிரண்டு மொழிகளைத் தவிர பிற மொழிகளில் பகுதியுடன் விகுதி இணைந்து எந்தவிதமான இடைநிலையுமின்றி நிகழ், எதிர்காலங் களைக் காட்டுகின்றது. தமிழில் இறப்பில் இறப்பு, எதிர்வில் நிகழ்வு போன்றவை துணை வினைகளால் காட்டப்படுவது போன்று இம்மொழிகளிலும் துணைவினைகளால் காட்டப்படுகின் றன. 'இரு' என்ற வினை துணைவினையாகப் பின்னிஷ், ஹங்கே ரியன் மொழிகளில் பயன்படுகின்றன. 'செய்த' என்னும் பெய ரெச்சத்திற்கு முன்னால் துணைவினையை இணைத்து இறப்பில் நிகழ்வு, இறப்பு போன்ற காலங்களைக் காட்டுவர்.[1]

---

1. The pluepefect, formed by prefixing the imperfect o the auxiliary to the same participle: *olin*, *olit*, *oil*, *saamut*, *olimme*, *olitte*, *olivat*, *sannet*, I had received, etc.

C. N. E. Eliot, *A Finnish Grammar*, p. 73.

B. Collinder, *Comparative Grammar of the Uralic Languages*, p. 246.

| | | |
|---|---|---|
| ஒலென் | (olen) | இருக்கிறேன் |
| ஸானுத் | (saa-nut) | பெற்ற |
| ஒலென் ஸானுத் | | பெற்றிருக்கிறேன் |
| ஒலின் | | இருந்தேன் |
| ஒலின் ஸானுதி | | பெற்றிருந்தேன் (பின்னிஷ்) |

ஹங்கேரியன் போன்ற மொழிகளில் செயப்பாட்டு வினை இல்லை என்பர். வொகுல், ஒஸ்த்யக் **(Ob - Ugric)** போன்ற மொழிகளில் செயப்பாட்டு வினை பயன்படுவதைக் காணலாம் லாப்பிஷ் மொழியில் இது நல்ல வளர்ச்சியடைந்துள்ளது.

தமிழ் வினைச்சொற்களைப் போன்று இம்மொழிகளின் வினைச்சொற்களும் விகுதிகளை ஏற்று எழுவாய் காட்டும். தமிழ் விகுதிகள் பால் காட்ட இவ்விகுதிகள் பால் காட்டுதல் இல்லை. ஆனால் பல மொழிகளில் ஒருமை, இருமை, பன்மை பாகுபாடு உள்ளதால் அம்மொழி வினைச்சொற்களும் இவ்வெண் பாகுபாட்டினைக் காட்டுகின்றன.

மேலும் மார்ட்வின் போன்ற சில மொழிகள் எழுவாயுடன் செயப்படு பொருளையும் வினைச்சொற்களில் காட்டுகின்றன. இவ்வாறு செயப்படுபொருள் காட்டுவதிலும் இரண்டு வகைகள் உள்ளன. யுரக் மொழி வினைகள் தொக்கிநிற்கும் செயப்படு பொருளையே காட்டவல்லது.

| | | |
|---|---|---|
| மதம் | **(mada-m)** | வெட்டுகிறேன் (செயப்படு பொருள் இல்லை) |
| மதவ் | **(mada-w)** | (அதை) வெட்டுகிறேன் |

ஆனால் வொகுல் மொழி வினைகளில் செயப்படுபொருள் காட்டும் ஒட்டினைக் கலந்து கூறிவிடமுடியும்.[1]

---

**1.** In some Uralic languages (Mordvin, Ugric, Sam N) there are two conjugations, with different sets of personal endings. In the so called objective conjugation not only the subject, but also the direct object is determined (by the

| | | |
|---|---|---|
| தொதெகும் | (tote-g-um) | கொணருகிறேன் |
| தொதிலும் | (toti-l-um) | அதைக் கொணருகிறேன் |
| தொதியகும் | (toti-ag-um) | இரண்டு கொணருகிறேன் |
| தொதிலுவ் | (toti-l-uw) | அதைக் கொணருகிறோம் |

சில மொழிகளில் பெயர்களுடன் விகுதிகள் இணைந்து வருதலைக் காணலாம். இதே போன்று பெயர்களுடன் இறந்தகால இடைநிலைகளும் இணைந்து வந்து காலம் காட்டும் என்பர். இந்த நிலையினைச் சில அமெரிக்க இந்திய மொழிகளிலும் காண முடியும் "மலையனேன்", "பெரியை" போன்ற தமிழ்ச்சொற்களுடன் இத்தகைய சொற்கள் ஒப்ப வைத்து எண்ணுதற்குரியனவாம்.[1]

| | | |
|---|---|---|
| பொக்ஷன் | (pokša-n) | நான் பெரியவன் |
| பொக்ஷ்தொல்னெக் | (pokš-to-l-nek) | பெரியவர்களாக இருந்தோம் (மார்ட்டின்) |

---

personal ending) as being the person speaking, the person(s) spoken to, or somebody (something else.).

*Ibid*, p. 244.

There are two ways of moulding forms of the objective conjugation. One is exemplified by *hu varom* and by *ur madaw*, I cut [it]. The other way is to incorporate into the verb form a pronoun that stands for the direct object; e. g. *hu szertlek*, I love you [cf. *szeretek*, I love, and *szeretem*, I love him. her or that].

*Ibid*, p. 244.

1. The Mordvin and the Samoyed verbs show another picture that the Finnish verb. We have mentioned the objective conjugation, which may be a comparatively recent feature, and the fact that the personal endings (characterizing the subject as 1st, 2nd or 3rd person) or even the characteristic of the past tense, can be added to noun stems.

B. Collinder, *Comparative Grammar of the Uralic Languages*, p. 245.

B. Collinder, *Survey of the Uralic Languages*, p. 232.

## 3.02. உராலிக் மொழியியல் வரலாறு

இம்மொழிகளைப் பற்றிய எண்ணம் கி. பி. 17, 18 – ஆம் நூற்றுண்டுகளில் வடிவுபெறத் தொடங்கியது எனினும் கி. பி. 18-ஆவது நூற்றுண்டின் இறுதி வரையிலும் உறுதியான எண்ணம் எதுவும் உருப்பெறவில்லை என்றே கூறலாம். ஹங்கேரியன் போன்ற மொழிகள் ஹீப்ரு மொழியுடன் தொடர்புடையன என்று எண்ணியிருந்தனர் பலர். கி. பி 1660–ஐ யொட்டி மார்ட்டின் போகல் **(Martin Fogil of Hamburg)** என்பவர் ஹங்கேரி மொழியும் பின்னிஷ் மொழியும் தம்முள் தொடர்புடையன என்று எண்ணினுர். இவரையடுத்து வான் லெப்னிட்ஸ் **(G. W. Von Leibnitz 1646 - 1716)** என்ற ஜெர்மன் அறிஞர் ஐரோப்பிய நாட்டிலுள்ள பலமொழிச் சொற்களைத் திரட்டித் தொகுத்ததன் விளைவாக இம்மொழிகள் ஒரு குழுவினதாக இருக்கலாம் என எண்ணினுர். 1708–இல் தாம் எழுதிய கடிதம் ஒன்றில் இக்கருத்தினைக் கூறுவார் இவர். பின்னிஷ், லாப்பிஷ், எஸ்தோனியன், லிவோனியன், ஹங்கேரியன் போன்ற மொழிகட்கிடையே தொடர்பு காணப்படுகிறது என்றும் இதே போல் துருக்கிய, மங்கோலிய மஞ்சு மொழிகட்கு மிடையே தொடர்பு உள்ளது என்றும் கூறினுர் இவர்.

1709 இல் சுவீடிஷ் நாட்டைச் சார்ந்த அரசியல் பணியாளராகிய ஸ்டிராலன்பெர்க் **(F. J. Strahlenberg)** என்பார் போல்தாவில் **(Poltav)** சிறைபட்டு சைபீரியாவிற்கு நாடுகடத்தப்பட்டபோது தாம் அங்குவாழ்ந்த பதின்மூன்று ஆண்டுகளில் பல்வேறு மொழிச் சொற்களைச் சேகரித்து அவற்றையெல்லாம் இணைத்து பின்னர் 1730-இல் நூல் ஒன்ருக வெளியிட்டார். ஜெர்மன் மொழியில் எழுதப்பட்ட இந்நூலில் வடகிழக்குப் பகுதிகளில் பேசப்பட்ட மொழிகளை

1. பின்னோ உக்ரிக் மொழிகள்
2. வடக்கு துருக்கிய மொழிகள்
3. சமொயொதிக் மொழிகள்
4. கல்மித், மஞ்சு, துங்கு மொழிகள்
5. சில கலப்பு மொழிகள்
6. காக்கேசிய மொழிகள்

என ஆறு பெரும் பிரிவுகளாகப் பிரித்தார். ஆனால், பதினெட்டாவது நூற்றாண்டின் இடைப்பகுதியில் ரஷ்யப் பேரரசியான இரண்டாவது கேதரின் உதவியுடன் சேகரிக்கப்பட்ட பல்வேறு மொழிச் செய்திகளை அடிப்படையாக வைத்து பல்லாஸ் (P. S. Pallas) என்பார் இம்மொழிகளைப் பற்றிய பல்வேறு செய்திகளை வெளியிட்டார். 1787 – '89-இல் வெளியான இவருடைய நூல் இம்மொழிகளைப் பற்றி அறிவதற்கு மிகவும் உதவியாக இருந்தது.

இதற்கு முன்னரே சைனோவிக்ஸ் (J. Sajnovics) என்ற ஹங்கேரிய அறிஞர் கி. பி. 1770–இல் லாப்பிஷ் மொழியும் ஹங்கேரிய மொழியும் தம்முள் தொடர்புடையன எனக் கூறினார். நார்வேயில் தங்கியிருந்தபோது லாப் மக்களுடன் நேரடித் தொடர்பு கொண்டிருந்த இவர் அம்மொழிக்கும் தம் மொழியாகிய ஹங்கேரிய மொழிக்கும் உள்ள தொடர்பினைக் கண்டு கூறிய போது முன்னேற்றம் எதுவுமின்றி இருந்த லாப் மக்களுக்கும் தங்களுக்கும் என்ன தொடர்பு இருக்கமுடியும் எனச் சாடிய ஹங்கேரியர்கள் பலர் எனக் கூறுவர்.

இத்துறையில் உழைத்த மற்றொரு அறிஞர் கியர்மதி (Gyarmati) ஆவார். 1799–இல் வெளியான இவருடைய நூலொன்றில் ஹங்கேரிய மொழிக்கும் பின்னிஷ் மொழிக்கும் மிகுந்த தொடர்பு உண்டு எனக் காரண காரியங்களுடன் நிரூபித்தார் இவ்வறிஞர். சைனோவிக்ஸைப் போலன்றி அன்று

கிடைத்த சொற்கள் பலவற்றின் அடிப்படையிலும் இலக்கணக் கூறுகள் சிலவற்றின் அடிப்படையிலும் இவ்வுண்மையை நிரூபித் ததோடு ஹங்கேரிய மொழியில் காணப்பட்ட சிலாவிய மொழிக் கூறுகள் பல கடன் வாங்கியதின் விளைவாக ஏற்பட்டன என்றும் கூறிப்போந்தார் இவ்வறிஞர். இத்தகைய பேரறிஞர் தன்னு டைய இலக்கண ஆராய்ச்சியோடு சிறந்த உருளைக்கிழங்கு ரகம் ஒன்றையும் ஹங்கேரிக்குக் கொண்டு வந்தார் என்றும் இதன் காரணமாக ஹங்கேரிய மக்களால் பாராட்டப்பட்டார் என்றும் வரலாறு கூறும். இவ்வறிஞர் இந்தோ ஐரோப்பிய மொழிகளை ஆராய்ந்த பாப், ராஸ்க், கிரிம் போன்ற அறிஞர்களின் காலத் திற்கு முன்னாலேயே தன்னுடைய கொள்கையினை உருவாக்கிய வர் என்பது இங்கு நினைவு கூரத் தக்கதாகும். போதிய ஆதா வும் பிற அறிஞர்களின் ஒத்துழைப்பும் இல்லாத காரணத்தால் தான் இவர்தம் ஆராய்ச்சி மங்கிக் கிடந்தது எனக் கூறலாம். 19-ஆவது நூற்றாண்டில் பலர் இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டனர். குறிப்பாக பின்னோ—உக்ரிக் மொழிகட்கும் அல்டய்க் மொழி கட்குமிடையே பல ஒற்றுமைகளைக் கண்டனர். கி. பி. 1836-இல் ஸ்காட் (W. Scott) என்பாரும் 1838-இல் வித்மான் (E. T. Wiedmann) என்பாரும் பல ஒற்றுமைகளைக் கண்டு இவ்விரண்டு இன மொழிகளும்,

1. உயிர் ஒலி ஒற்றுமை (Vowel Harmony)
2. இலக்கணப் பாலின்மை (No Grammatical Gender)
3. சிறப்புச் சுட்டு இன்மை (No Articles)
4. ஒட்டுத் தன்மை (Agglutination)
5. பின்னொட்டு உடைமை (Preposition)

போன்ற பல்வேறு நிலைகளில் ஒற்றுமையுடையன என்றும் எனவே இவைகள் தொடர்புடையன என்றும் கூறிச் சென்

றனர். இதேநிலையைக் கேஸ்டிரன் (M. A. Castran) என்பாரும் உறுதிப்படுத்திச் சென்றமை காணலாம்.

இந்நிலையில் உராலிக்-அல்டய்க் மொழிகட்கிடையே பலர் உறவு சாற்றினும் இன்று எல்லா மொழியியல் அறிஞர்களும் இதனை ஒத்துக்கொள்ளுதல் இல்லையென்றே கூறலாம்.[1]

### 3.03 உராலிக் மொழிகளின் வகைப்பாடு

உராலிக் மொழிகளைப் பின்னோ—உக்ரிக், பெரிமியன், லாப்பிஷ், சமொயொதிக் மொழிகள் என நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர். இவற்றுள் பின்னோ—உக்ரிக் மொழிகளை மீண்டும் பின்னிஷ் மொழிகள் என்றும் உக்ரிக் மொழிகள் என்றும் பிரித்துள்ளனர். பால்டிக் பின்னிக், வால்கா பின்னிக் என இரு கிளைகளைக் கொண்ட முதற்குழுவில் பத்து மொழிகள் உள்ளன.

### 3.04 பால்டிக் பின்னிக் மொழிகள் (Baltic Finnic)

இதன் கண் பின்னிஷ், எஸ்தோனியன், காரலியன், வொதே, வெப்ஸ், லூட், லிவோனியன், ஒலனத் என்ற எட்டு மொழிகள் அடங்கும். இவை பொதுவாக பின்லாந்து, எஸ்தோனியா, சோவியத் ரஷ்யா ஆகிய நாடுகளில் வழங்குகின்றன. 'பின்' என்ற சொல் 'வேடர்கள்' எனப் பொருள் தரும் ஸ்காண்டிநேவியச் சொல்லாகும். ஒன்பதாவது நூற்றூண்டு

---

1. Some persons unite this family with the Finno - Ugric family (consisting of Finnish, Hungarian and some minor languages spoken in the Soviet Union) but the scientific basis of this broad relationship has not yet been fully established. Such a super-stock is called the Ural-Altaic family.

John R- Krueger, *Chuvash Manual* , p.53.

Affiinity with Altaic has frequently been postualted but as yet can scarcely considered demonstrated.

Louis H. Gray, *Foundations of Language,* p. 369.

முதலே இச்சொல் காணப்படுவதாயினும் முதன்முதலில் இச்சொல் லாப்பிஷ் மக்களையே குறித்தது என்பர். பின்னிஷ் மக்கள் தங்களை "suomi" என்றழைப்பர்.

### 3.05 வால்கா பின்னிக் மொழிகள் (Volga Finnic)

மார்ட்வியன் என்ற மொழியும் செரிமிஸ் மொழியும் இதன்கண் அடங்கும். இவற்றுள் மார்ட்வியன் மொழி சோவியத் நாட்டில் மத்திய வால்கா பிரதேசத்தில் வாழும் சுமார் 15 லட்சம் மக்களால் பேசப்படுகிறது. மொக்ஷா (Mokhsa), எர்சியா (Erzya) என்ற இரு கிளைகளை உடையது. இவை இரண்டிற்கும் தனித்தனியே இலக்கியங்கள் உள்ளன. செரிமிஸ் மொழி 5 லட்சத்துக்கு அதிகமான மக்களால் பேசப்பட்டு வருகிறது. இம்மொழி பேசுவோர் வால்கா நதிக்கரையின் (செரிமிஸ் மலைப் பக்கம்) கண்ணும் காமா (Kama) நதிக்கரையின் கண்ணும் வாழ்கின்றனர். இதன்கண் 3 கிளை மொழிகள் உள்ளன.

### 3.06 உக்ரிக் மொழிகள் (Ugric languages)

இப்பிரிவில் ஹங்கேரியன், வொகுல் (Vogul), ஒஸ்த்யக் என்ற மூன்று மொழிகள் உள்ளன. இவற்றுள் வொகுலையும் ஒஸ்த்யக்கையும் இணைத்து ஒப் – உக்ரிக் (Ob-Ugric) பிரிவு என்று கூறுவார்கள். உராலிக் மொழிகளில் ஹங்கேரிய மொழியே அதிகமான மக்களால் பேசப்படுகிற மொழி.

### 3.07 பெரிமியன் மொழிகள் (Permic languages)

இப்பிரிவின் கண் சிரியன் (Zyrian) மொழியும் வொத்யக் (Votyak) மொழியும் அடங்கும். சிரியன் மொழியைச் சிரேனியன் (Syryenian) என்றும் அழைப்பர். காமா, பெச்சோரா போன்ற நதிகளின் கரையோரங்களிலும் யூரல் மலைப்பிரதேசத்திலும் வாழும் சுமார் 4300000 மக்களால் இம்மொழி பேசப்

படுகின்றது. 14–வது நூற்றாண்டிலிருந்தே இம்மொழியின்கண் எழுத்துச் சான்றுகள் கிடைக்கின்றன. 14–வது நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்டீபன் என்ற பாதிரியார் இம்மொழியின் எழுத்துக்களை உருவாக்கினர். இம்மொழியில் இரு இலக்கியக் கிளை மொழிகள் உள்ளனவாம்.

வொத்யக் மொழி வியத்கா, காமா நதிகட்கு இடையிலுள்ள பிரதேசங்களில் வாழும் 6 லட்சம் மக்களால் பேசப்படுகின்றது.

**3.08 லாப்பிஷ் மொழிகள் (Lappish languages)**

30,000 மக்கள் இம்மொழி பேசுகின்றனர் பொதுவாக இம் மொழி பேசும் மக்களை வட, தென், கிழக்கு லாப்பிஷ் மக்கள் என்று மூன்று பிரிவாகப் பிரிப்பார்கள். வட நார்வே, பின்லாந்து பகுதியில் வாழும் மக்கள் வட லாப்பிஷ் மொழி பேசுகின்றனர். சுவீடன் பகுதியில் வாழுவோர் தென் லாப்பிஷ் மொழியையும் ரஷ்யாவின்கண் கோலா பகுதியில் வாழுவோர் கிழக்கு லாப்பிஷ் மொழியையும் பேசுகின்றனர்.

**3.09 சமொயொதிக் மொழிகள் (Somoyedic languages)**

சோவியத் நாட்டின் வட பகுதியின்கண் வாழும் சுமார் 1,80,000 மக்கள் இம்மொழி பேசுகின்றனர். இதன்கண் வட பிரிவு, தென்பிரிவு என்று இருபிரிவுகளைக் காணலாம். வட பிரிவினர் சைபீரியாவிலும் தென் பிரிவினர் டாஸ் நதிக்கரையிலும் வாழுகின்றனர். இவற்றின் கிளை மொழிகள் பல இப்போது துருக்கிய மொழிகளாலும் ரஷிய மொழியாலும் அழிந்து கொண்டிருக்கின்றன


உராலிக்
பின்னோ-உக்ரிக்
பெரிமியன்
லாப்பிஷ்
சமொயொதிக்
பின்னிஷ்
உக்ரிக்
சிரியன்
வொத்யக்
வடலாப்பிஷ்
தென் லாப்பிஷ்
கிழக்கு லாப்பிஷ்
பால்டிக் பின்னிக்
வால்கா பின்னிக்
ஹங்கேரியன்
வொகுல் (ஒப்-உக்ரிக்)
ஒஸ்த்யக் (ஒப்-உக்ரிக்)
நெனெட்ஸ் (யுரக்)
எனெட்ஸ் (எனிசெ)
நெகனசன் (தக்வி)
செல்கப் (ஒஸ்த்யக்)
காமாஸ் (காமாவியன்)
மாட்வினியன்
செரிமிஸ்
பின்னிஷ்
எஸ்தோனியன்
காரலியன்
வொதே
வெப்ஸ்
லூட்
லிவோனியன்
ஒலனத்

## 3. 1 பால்டிக் பின்னிக் மொழிகள்

### 3.11 பின்னிஷ் (Finnish)

இது பின்லாந்து நாட்டின் அரசியல் மொழியாகும். இன்று இம்மொழி பேசுவோர்களாக நாற்பது லட்சம் மக்கள் உள்ளனர். பின்லாந்து நாட்டையடுத்த ஸ்காண்டிநேவியப் பகுதிகளிலும், ரஷ்யப் பகுதிகளிலும் இம்மொழி வழக்கிலுள்ளது. பதினாறுவது நூற்றாண்டிலிருந்தே இம்மொழியில் எழுதப்பட்ட எழுத்துச் சான்றுகள் உள்ளன. 1557-இல் அக்ரிகோலா (Agricola) என்ற பாதிரியாரால் மொழிபெயர்க்கப்பட்ட வேதாகமே இதன் முதல் இலக்கியமாகக் கருதப்படுகிறது. இம்மொழியில் காணப் படும் கலவெலா (Kalavala) என்ற நாடோடிப் பாடல் தொகுதி முக்கியம் வாய்ந்ததாகும்.

இதன்கண் எட்டு உயிர்களும் (a, ä, e, i, o, u, y (u) ), பதினாறு சந்தியக்கரங்களும், பதின்மூன்று மெய்களும் (d, g, h, j, k, l, m, n, p, r, s, t, v ) உள்ளன. தமிழைப் போன்று உயிர்களில் நெடில்களும் மெய்யெழுத்துக்களில் உடனிலை மெய்மயக்கங்களும் காணப்படுகின்றன. இதன்கண் மெய்யெழுத் துக்கள் பிற மொழிகளை நோக்க மிக மிகக் குறைவாகவே பயன் படுகின்றன என்று கூறுவர்.[1]

பிற மொழிகளினின்றும் கடனாகப் பெற்ற பிற மொழிச் சொற்களைத் தவிர தூய பின்னிஷ் சொற்களின் ஈற்றிலோ முதலிலோ எத்தகைய மெய் மயக்கங்களையும் காண முடியாது. இம் மொழியின் கண் காணப்படும் மற்றொரு பண்பு உயிர் ஒருமைப்பாடாகும். (Vowel harmony). முதல் அசையில்

---

1. The phonetic system of Finnish is characterized by a great paucity of consonants and a correspondingly great develpo-ment of vowels.

C. N. E. Eliot, *A Finnish Grammar*, p. 1.

வரும் உயிர்கட்கேற்பவே பிற அசைகளில் வரும் உயிர்கள் அமைகின்றன.[1] தமிழ் மொழியைப் போன்றே இதுவும் ஒரு ஒட்டு மொழியாகும். பல்வேறு இலக்கணக் கூறுகள் ஒட்டுக்களால்தான் காட்டப்படுகின்றன. பெயர் மாற்றங்கள், வினை மாற்றங்கள், பெயரடை மாற்றங்கள் எல்லாம் இம் முறையில் அமைந்திருக்கக் காணலாம். இதன்கண் பதினைந்து வேற்றுமைகள் உள்ளன. திராவிட மொழிகளைப் போலன்றி சில சொற்கள் எழுவாயாக வரும்போதும் மாற்றம் அடைகின்றன என்பர்.[2]

---

ஹகுலினென் என்பார் பிற மொழிகளில் காணப்படும் மெய்களின் எண்ணிக்கையையும் பின்னிஷ் மொழியில் காணப்படும் எண்ணிக்கையையும் ஒப்புமைப் படுத்திக் கீழ்வரும் அட்டவணையைத் தந்துள்ளார்.

The number of consonants used per 100 vowels is

| | |
|---|---|
| Finnish | 96 |
| Italian | 108 |
| Ancient Greek | 117 |
| Spanish | 122 |
| Welsh | 122 |
| Latin | 127 |
| Yurkish | 132 |
| Aungarian | 141 |
| French | 141 |
| Uazan Tatar | 141 |
| Gothic | 144 |
| Russian | 150 |
| Swedish | 161 |
| German | 171 |
| Czech | 188 |

L. Hakulinen, *The Structure and Development of Finnish Language*, p. 6.

1. An important characteristic of Finnish is what is known as vowel harmony.

Arthur H. Whitney, *Teaching Yourself Finnish,* p. 18.

2. The nominative has no suffix, thongh, it does not always represent the pure root. In *mas* land, the two are identical, but the roots *kate, vete, viraha* produce the nominatives *kasi vesi vieras.*

Ellis, *Ibid,* p. 20.

| | | | |
|---|---|---|---|
| Nominative | தலொ | (talo) | வீடு |
| Genitive | தலொன் | (talo-n) | வீட்டின் |
| Accusative | தலொன் | (talo-n) | வீட்டை |
| Partitive | தலொ ஆ | (talo-a) | வீட்டின்பகுதி.[1] |
| Inessive | தலொஸ்ஸ | (talo-ssa) | வீட்டினுள் |
| Elative | தலொஸ்த | (talo-sta) | வீட்டின் வெளியே |
| Illative | தலொ ஒன் | (talo-on) | வீட்டிற்குள் |
| Adessive | தலொல்ல | (talo-lla) | வீட்டிற்கு மேல் |
| Ablative | தலொல்த | (talo-lta) | வீட்டிற்கு வெளியிலிருந்து |
| Allative | தலொஃலெ | (talo-lle) | வீட்டிற்கு வெளியே |
| Essive[2] | தலொன | (talo-na) | வீடாக |

1. The partitive replaces 'some of', 'some and any', The inessive, elative and illative reply to the question (inside) where? Out of whence? and into whither? The adessive, ablative and allative respectively indicate the position on, movement from and on to *s* the.

Aune Tuomikoski and Helen Deans, *Elementary Finnish*, pp. 65 - 66.

2. The essive is formed by adding the endings - *na* or *nä* to the stem. This case expresses a state of being regarded as continuous. Thus *talo - na* as a house.

A Clemens Niemi, *Finnish Grammar*, p. 23.

| | | | |
|---|---|---|---|
| Translative[1] | தலொக்ஸி | (talo-ksi) | வீடாக மாறின |
| Instructive | தலொன் | (talo-n) | வீடால் |
| Comitative | தலொ இன | (talo-i-ne) | வீடுகளுடன் |
| Abessive | தலொத்த | (talo-tta) | வீடில்லாமல் |

தமிழ் மொழியைப் போன்றே இதன்கண்ணும் ஒரே வேற்றுமை உருபு ஒருமையுடனும், பன்மையுடனும் வந்து வேற்றுமைப் பொருள் தருவதும், இவ்வுருபுகள் பன்மை ஒட்டுகட்குப் பின் வருவதும் தமிழ் மொழியுடன் வைத்து ஒப்பு நோக்கதாம்.

தமிழில் 'உடைய' பொருளைக் குறிக்கும் ஒரு சொல் பெயராயினும், மூவிடப் பெயராயினும் எந்த வேற்றுமையுமின்றி உடைமை உருபுகளை ஏற்று உடைமைப் பொருள் காட்டும். ஆனால் பின்னிஷ் உடைமைச் சொல்லுடன் ஒட்டாக நின்று இப்பொருளைத் தரும் –நி, ஸி, –ன்ஸ, –ம்மெ, –ன்னே, என்பன இப்பொருள் தரும் உருபுகளாம்.

| | |
|---|---|
| கிர்ய-நி | என் புத்தகம் |
| கிர்ய–ஸி | உன் புத்தகம் |
| கிர்ய–ன்ஸ | அவனுடைய/அவளுடைய புத்தகம் |
| கிர்ய–ம்மெ | நம்முடைய / எங்களுடைய புத்தகம் |
| தலொ–ஒன்–நி > தலோநி | என்னுடைய வீட்டிற்குள் |

இதன்கண் மூன்று சுட்டுப்பெயர்கள் உள்ளன. இவற்றுள் ஒன்று சேய்மைச் சுட்டையும் (tuo) மற்றொன்று அண்மைச் சுட்டையும் (tama) இன்னொன்று "it" (se) என்ற பொருளையும் தரும்.

---

1. The translative expresses change from one form to another. It is designated in English by the preposition for, to, into *Ibid*, p. 30.

தமிழைப் போன்றே இதன் கண்ணும் மூவிடப் பெயர்கள் காணப்படுகின்றன. ஆனால் தமிழில் படர்க்கை ஒருமையில் காணப்படும் ஆண், பெண்பால் வேற்றுமை இதன் கண் இல்லை. எனவே ஒரே சொல் 'அவன்', 'அவள்' எனப் பொருள்படும். இலக்கண ஆசிரியர்கள் பின்னிஷ் மொழியிலுள்ள சொற்கள் எந்த விதமான பால் வேற்றுமையையும் காட்டுவதில்லை என்பர். எனினும் படர்க்கை ஒருமையில் 'அது' எனப் பொருள் தரும் சொல் அவள்/அவன் என்ற சொல்லினின்று வேறாக உள்ளது.[1]

| | | |
|---|---|---|
| மினா | (mina) | நான் |
| ஸினா | (sina) | நீ |
| ஹன் | (han) | அவன்/அவள் |
| மெ | (me) | நாம்/நாங்கள் |
| தெ | (te) | நீங்கள் |
| ஹெ | (he) | அவர்கள் |

பின்னிஷ் பெயரடைகள் தமிழ்ப் பெயடைகளைப் போன்று பெயர்ச் சொற்களின் முன்னால்தான் வருகின்றன. எனினும் பெயர்ச் சொற்களின் எண் வேற்றுமைக்கேற்ப மாறும் தன்மையன. பெயர்ச்சொல் ஒருமையாயின் இதுவும் ஒருமையாக இருப்பதும், பன்மையாயின் பன்மையாக வருவதும் பெயர் காட்டும் வேற்றுமைக் கேற்ப இதுவும் அவ்வேற்றுமை உருபினை ஏற்று நிற்பதும் இவ்விரு மொழிப் பெயரடைகட் கிடையே காணும் வேற்றுமையாம்.[2]

---

1. Finnish like all the cognate languages has no distinctions of gender. It possesses two numbers, the singular and plural; all traces of the dual which exists in Ostiak and Vogul having been lost.

C. N. E. Eliot. *Ibid*, p. XVII.

2. The Finnish adjective is not distinguished from the noun, but it presents this peculiarity that contrary to the usage of the cognate language It agrees with its substantive in number and case.

*Ibid*, p. XXII

| | |
|---|---|
| சூரி தலோ | பெரிய வீடு |
| சூரென் தலோன் | பெரிய வீட்டில் |
| சூரெத் தலோத் | பெரிய வீடுகள் |
| சூர்தென் தலோயென் | பெரிய வீடுகளின் |

பின்னிஷ் வினைச் சொற்கள் தமிழ் வினைகளைப் போலவே காலம் எதிர்மறை, எண், இடம் போன்ற பல இலக்கணக்கூறுகளைக் காட்டுகின்றன. எல்லா இலக்கணக்கூறுகளும் பல்வேறு ஒட்டு களால் உணர்த்தப்படுவதும் தமிழ் மொழியைப் போன்றே எழுவாய்க்கும் பயனிலைக்குமிடையே இட எண் ஒருமைப்பாடு (concord) காணப்படுவதும் உணரத்தக்கன.[1] சாதாரணமாக வினைச்சொற்கள் இறப்பு, எதிர்வு, நிகழ்வு, என்ற மூன்று காலங்களைக் காட்டும். இவற்றுள் நிகழ்காலத்தையும் எதிர் காலத் தையும் குறிக்கவெனத் தனியான இடைநிலை எதுவுமில்லை. அடிச் சொற்களின் பின்னால் விகுதிகள் இணைந்து நின்று எந்த இடை நிலையும் இல்லாமல் இக்காலங்களைக் காட்டுகின்றன. எழுவாய் காட்டும் விகுதிகளாக –ன், –த், (ஒருமை) –ம்மெ, –த்தெ, –வத் (பன்மை) என்பன காணப்படுகின்றன. படர்க்கை ஒருமை பெரும்பாலும் எந்த விகுதியையும் ஏற்பதில்லை.

| | | |
|---|---|---|
| சனொன் | (sano-n) | கூறுகிறேன் |
| சனொத் | (sano-t) | கூறுகிறாய் |
| சனோ | (sano-o) | கூறுகிறான், கூறுகிறாள், கூறுகிறது |
| சனொம்மெ | (sano-mme) | கூறுகிறோம் |
| சனொத்தெ | (sano-tte) | கூறுகிறீர்கள் |
| சனொவத் | (sano-vat) | கூறுகிறார்கள் |

---

1. The verb agrees in number and person with its subject which is nearly always in the nominative.

Aune Tuo Mikoshi, *Ibid,* p. 64.

கால இடைநிலைகள் வினைச் சொற்களில் வரும் தமிழ் இடைநிலைகளைப் போன்றே பகுதிக்கும், விகுதிக்கும் இடையில் வருவன. இறப்பில் இறப்பு, எதிர்வு போன்ற காலங்கள் 'இரு' என்ற துணைவினையால் காட்டப் படுகின்றன.[1]

| | | |
|---|---|---|
| சனோ இன் | (sano - in) | கூறினேன் |
| சனோ இத் | | கூறினாய் |
| சனோ இ | | கூறினான், கூறினாள்[2] |
| சனோ இம்மெ | | கூறினோம் |
| சனோ இத்தெ | | கூறினீர்கள் |
| சனோ இவத் | | கூறினார்கள் |

செயவெனும் வினையெச்சம் தமிழைப் போன்றே காணப்படுகிறது. வினையடிகளின் பின்னால் - *a*, - ä, - *da*, - *d*ä என்று ஒட்டுகள் வந்து வினையெச்சப் பொருளைத் தரும்.[3] இம்மொழி இலக்கண ஆசிரியர்கள் நாம் கூறும் வினைப்பெயர்கள் (வருதல், போதல்) போன்று காணப்படும் சொற்களையும் வினையெச்சங்கள் என்றே அழைக்கின்றனர். இதன்கண் காணப்படும் ஏவல் வினைகள் - *koo*, - *k*öö என்ற ஒட்டுகளைக் கொண்டிருப்பதும் தமிழ் வியங்கோளைப் போன்று இவ்வினைகள் எல்லா இடங்களிலும் வருவதும் - *va*,- *v*ä,– *nut* போன்ற ஒட்டுகள் வினையடிகளுடன் இணைந்து பெயரெச்சங்கள் அமைவதும் எதிர்மறை காட்

---

1. The compound tenses are formed by combining certain verbal forms with parts of the verb 'to be'.

Eliot, *Ibid*, p. 62.

2. The third person singular has no ending except that in the present indicative and potenial. The final vowel of the stem is lengthened if it is not a long vowel or diphong. Thus *saa/n* I receive; s*aa* he receives; *tuo/n* I bring; tuo he brings.

Niemi, *Ibid*, p. 20.

3. The first infinitive has the signs -*a* or *ä* after a short vowel and - *da* or *dä* after a long vowel or diphthong.

Niemi, *Ibid*, p. 33.

டும் சொற்கள் வினையினின்றும் தனிபாக வருவதும் அவற்றுள் ஏகாரம் காணப்படுவதும் தமிழ் மொழியுடன் ஒப்ப வைத்து எண்ணத் தக்கனவாம்.

| | | |
|---|---|---|
| சனொஅ | **(sano - a)** | சொல்ல |
| சாத | **(saa-da)** | பெற |
| சனொகாம்மே | **(sano-kaa-mme)** | நீ சொல்க |
| சனொகோன் | **(sano - koo - n)** | நான் சொல்க |
| சனொகோத் | **(sano - koo - t)** | அவர்கள் சொல்க |
| சனொகாத்தெ | **(sano - kaa - tte)** | நீங்கள் சொல்க |
| சனொவ | **(sano - va)** | சொல்லுகிற |
| சனொனுத் | **(sano - nut)** | சொன்ன |
| என் சனொ | | சொல்லேன் (நிகழ்வு) |
| எம்மெ சனொ | | சொல்லோம் (நிகழ்வு) |
| என் சனொனுத் | | நான்சொல்லவில்லை (இறப்பு) |

பின்னிஷ் மக்கள் தங்கள் மொழியை **"suomi"** என்றழைப்பர். தங்கள் நாட்டினை **"suomaa"** என்று அழைப்பர். **"suo"** 'செழி என்றும் மாநிலம் என்றும் பொருள்படும். எனவே சதுப்பு நிலம் என்று பொருள் படுவதாகும்.

**3.12 எஸ்தோனியன் (Estonian)**

பின்னிஷ் மொழியைப் போல எஸ்தோனியன் மொழியின் கண்ணும் குறில்–நெடில் வேற்றுமை உண்டு. இரு மெய் மயக்கம், மும்மெய் மயக்கம், நான்கு மெய் மயக்கம் ஆகியன இம்மொழியில் காணப்படுகின்றன. ஆனால் சொற்களின் இறுதி யில் இரு மெய்களும் மூன்று மெய்களும் வரக் காணலாம்.

எஸ்தோனியனும் ஒரு ஒட்டு மொழியாகும். எல்லா இலக்கணக்கூறுகளும் பின்னொட்டுகளினால்,நான் உணர்த்தப் படுகின்றன. இதன் கண்ணுள்ள சொற்களைப் பெயர், வினை, இடை என்று மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர். இவற் றுள் பெயர் வேற்றுமை உருபுகளையும் வினை, கால இடை நிலை

களையும் ஏற்கின்றன. இவற்றை ஏற்காத பிற சொற்கள் அனைத்தையும் இடைச் சொற்களாகக் கருதுகின்றனர்.[1]

பின்னிஷ் மொழியில் 15 வேற்றுமைகள் உள்ளனவென்று கண்டோம். இம்மொழியில் 14 வேற்றுமைகள் இருக்கின்றன. இவற்றுள் எழுவாய் வேற்றுமை, அது வேற்றுமை, பகுதி வேற்றுமை (Partitive) களின் உருபுகள் ஒருமை–பன்மையும் காட்டுவனவாக அமைந்துள்ளன. எனவே அவற்றை வேற்றுமை–எண் உருபு அல்லது ஒட்டு என்று கூறலாம்.

எஸ்தோனியாவில் வாழும் 12½ லட்சம் மக்களால் இம்மொழி பேசப்படுகிறது. 16–வது நூற்றூண்டிலிருந்தே இம்மொழியில் எழுத்துச் சான்றுகள் உள்ளன. வட எஸ்தோனியன் மொழிக்கும் தென் எஸ்தோனியனுக்கும் மிகுந்த வேற்றுமை உண்டு என்பர். தற்கால இலக்கியங்கள் யாவும் வட எஸ்தோனியனை ஒட்டி எழுந்தவையாகும்.

இதன் கண் ஒன்பது உயிர்களும் பதினெட்டு மெய்களும் உள்ளன. குறில்–நெடில் வேற்றுமையைக் காட்ட மொழி நூலார் இம்மொழியை அடிக்கடி எடுத்தாளுவர். சிலர் குறில், அரை நெடில், நெடில், கழிநெடில் என்ற நான்கு வகையான வேற்றுமைகள் உள்ளன என்றும் சிலர் குறில், நெடில், கழிநெடில் என்ற மூன்று வேற்றுமைகளே உள்ளன என்றும் இன்னும்சிலர் குறில், நெடில் என்ற இருவேற்றுமைகளே உள்ளன என்றும் கூறுவர். இதேநிலையைச் சில மெய்யெழுத்துக்களிலும் காணலாம். எஸ்தோனிய எழுத்துமுறை ப, த, க, ற் என்ற எழுத்துக்கள் மூன்று முறை இரட்டிக்கும் தன்மையைக் காட்டும்.[2]

---

1. Noun stems occur with case-number and secondary case-suffix, verb stems occur with tense and mood and person (-number) suffixes. The class particles contain all other words.

Robert T. Harms, *Estonian Grammar*, p. 57.

2. Wiede Mann recognizes the following four-degree sys-

| | | | |
|---|---|---|---|
| Nominative | ராமத் | (raamatt) | புத்தகம் |
| Genitive | ராமத்து | (raamattu) | புத்தகத்தின் |
| Partitive | ராமத்துஸ்ஸெ | (raamattu-sse) | புத்தகத்தின் பகுதி |
| Illative | ராமத்துஸ் | (raamattu-s) | புத்தகத்தினுள் |
| Inessive | ராமத்துஸ் | (raamattu-s) | புத்தகத்தில் |
| Elative | ராமத்துஸ்த் | (raamattu-st) | புத்தகத்தின் வெளியே |
| Adessive | ராமத்துல் | (raamattu-l) | புத்தகத்தின் மேல் |
| Ablative | ராமத்துல்த் | (raamattu-lt) | புத்தகத்திலிருந்து |
| Allative | ராமத்துலெ | (raamattu-le) | புத்தகத்திற்கு |
| Terminative | ராமத்துனி | (raamattu-ni) | புத்தகம்வரை |
| Essive | ராமத்துன | (raamattu-na) | புத்தகமாக |
| Translative | ராமத்துக்ஸ் | (raamattu-ks) | புத்தகத்துக்காக |
| Abessive | ராமத்துத்த | (raamattu-tta) | புத்தகமின்றி |
| Cominative | ராமத்துக | (raamattu-ka) | புத்தகத்துடன் |

இலக்கணக்கூறுகள் அனைத்தும் பின்னொட்டுக்களால்தான் காட்டப்படுகின்றன. இம்மொழியில் காணப்படும் சொற்களைப் பெயர், வினை, இடை என மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர். பெயர்கள் அனைத்தும் வேற்றுமை உருபுகளை ஏற்று வருவதும் வினைகள் எல்லாம் காலம் காட்டுவதும் பிற சொற்கள் இடைச் சொற்களாக இருப்பதும் தமிழ்மொழிச் சொற்களுடன்

---

tems (1) short, (2) long, (3) extra-long, (4) maximally long.

Robert T. Harms, *Estonian Grammar*, p. 144.

There are three degrees of the quantity (1) short, (2) medium long, (3) extra long.

In the 3rd degree both vowels and consonants are written double. In the second degree they are written simple (as in the first degree) or double according to cartain rules.

B. Collinder, *Survey of the Uralic languages*, p. 137.

வைத்து ஒப்பு நோக்கத்தக்கதாகும்.[1] இதன்கண் பதினொன்று வேற்றுமைகள் உள்ளன.[2]

இவ்வேற்றுமை உருபுகள் ராமத்துத்தெ 'புத்தகங்களின்' என்ற சொல்லுடனிணைந்து பிற வேற்றுமை, பன்மைகளைக் காட்டுவதும் ராமத்துத் (raamattud) என்ற சொல் 'புத்தகங்கள்' என்று பொருள்படுவதும் பிற ஊராலிக் மொழிகளில் காணப்படாத ஒரு பண்பாம்.

பெயரடைகள் பெயர்கட்கேற்பவோ வேற்றுமைகட்கு ஏற்பவோ மாறுவது இம்மொழியில் காணப்படும் மற்றொரு பண்பாகும். எனினும் பேச்சுமொழியில் இப்பண்பு அத்தனை முக்கியமன்று என்பர்.

| | |
|---|---|
| ஒதவ் ராமத் | மலிவான புத்தகம் |
| ஒதவத் ராமத் | மலிவான புத்தகங்கள் |
| ஒதவ் ராமது | மலிவான புத்தகத்தின் |
| ஒதவத்தெ ராமத்துத்தெ | மலிவான புத்தகங்களின் |

எஸ்தோனியன் மொழியில் இருவகையான மூவிடப் பெயர்கள் உள்ளன. மூவிடப்பெயர்சட்கு முக்கியத்துவம் கொடுத்துப்

---

1. All inflection in Estonian is by suffixation. In terms of the inflectional suffixes which occur with each stem, it is possible to establish three inflectional word classes: nouns, verbs and particles. Noun stems occur with tense, mood and person (-number) suffixes. The class particles contains all other words.

Robert T. Harms, *Ibid*, p. 56.

2. With nouns, there are fourteen categories; nominative, genitive, partitive, illative (into), inessive (in), elative (out of), translative (on to), adessive (on), ablative (off of), translative (becoming, being as), essive (being as), terminative (upto, as far as), comitative (with), abessive (without).

Robert T. Harms, *ibid*, p. 56.

பேசும்போது ஒன்றையும், சாதாரணமாகப் பேசும்போது மற்றொன்றையும் பயன் படுத்துவர்.[1]

| | | | |
|---|---|---|---|
| மின | ம | — | நான் |
| சின | ச | — | நீ |
| தெம | த | — | அவன் / அவள் / அது |
| மெயெ | மெ | — | நாம் |
| தெயெ | நெ | — | நீங்கள் |
| நெமத் | நத் | — | அவர்கள் / அவைகள் |

தமிழ் வினைகளைப் போன்று இம்மொழியும் காலம், இடம், எண், எழுவாய் போன்ற பல இலக்கணக் கூறுகளைக் காட்டும். பிற பின்னிஷ் மொழிகளைப் போன்று எஸ்தோனியனும் வினையடிகளுடன் விகுதிகளிணையும்போது நிகழ், எதிர்காலங்களைக் காட்டும். –ந், – மெ (*–n, – me*; என்பன தன்மை ஒருமை பன்மையினையும் – ப், – வத், (*- b, - vat*) என்பன படர்க்கை ஒருமை பன்மையினையும் காட்டும் விகுதிகளாம். தமிழில் அவன் வரவில்லை, இவள் வரவில்லை என்பன போன்ற வாக்கியங்களில் எதிர்மறை எந்த விகுதியையும் எடுக்காது. பொதுவாக நிற்பது போன்று இம்மொழி எதிர்மறை சொற்களும் எந்த விகுதியையும் ஏற்பதில்லை. தமிழில் வினைச்சொற்களின் பின்னால் எதிர்மறை காட்டும் (இல்லை) சொல் நிற்க, இம்மொழியில் முன்னால் நிற்கக் காணலாம். இறந்தகால இடைநிலைகளாக –ஸி, -ஸ் காணப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| ம பலுன் | (ma palun) | — | நான் கேட்கிறேன் |
| ஸ் பலுன் | (sa palud) | — | நீ கேட்கிறாய் |
| த பலுப் | (ta palub) | — | அவன் கேட்கிறான் |

1. Some pronouns have two forms: a longer one which is used when the pronoun is stressed, and a shorter one which is used when the pronoun is not stressed.

B. Collinder, *Ibid*, p. 149.

| | | |
|---|---|---|
| மெ பலுமெ | — | நாம் கேட்கிறோம் |
| தெ பலுத்தெ | — | நீங்கள் கேட்கிறீர்கள் |
| நத் பலுவத் | — | அவர்கள் கேட்கிறார்கள் |
| ம பலுவின் | — | நான் கேட்டேன் |
| த பலுவித் | — | நீ கேட்டாய் |
| ம எய்பலு | — | நான் கேட்கவில்லை |
| த பலுஸ் | — | அவன் கேட்டான் |

செய வென எச்சம் –அ, –த, –த்த என்ற ஒட்டுகளால் காட்டப்படுவதும் தமிழுடன் வைத்து ஒப்பிடத்தக்கதாகும்[1].

| | | |
|---|---|---|
| ஒல்ல | (olla) | இருக்க |
| பலுத | ( Paluda) | கேட்க |
| ஹக்கத்த | (hakkatta) | ஆரம்பிக்க |

**3.13 காரெலியன் (Karelian)**

கிழக்கு பின்னிஷ் மொழியே காரெலியன் மொழியாக உரு வெடுத்தது. 1959-இல் இம்மொழி பேசுவோராக ரஷ்ய நாட்டில் (காரெலியன் பகுதியில்) 167,000 மக்கள் வாழ்ந்தனர். இதனைக் காரெலியன் என்றும் ஒலனெஸ்தியன் என்றும் பிரிப்பர். காரெ




1. The infinitive - also called the da- infinitive or the 2nd infinitive ends in -a, -da, or -ṭa -t.

*Ibid*, p. 155.

லியன் தன்னினும் இரு கிளைமொழிகள் உள்ளன. தெற்குக் காரெலியன் வடக்குக் காரெலியன் என வழங்குவர். சிலர் காரெலியன் தூய பின்னிக் மொழியென்றும் பின்னிக் கலந்த வேறுமொழியென்றும் கருதுவர்.

### 3·14 வொதே (Vote)

சோவியத் நாட்டில் இங்கிரியா ( Ingria ) பகுதிகளில் வாழும் ஒரு சில மக்களால் பேசப்படுவது. இதனை அழிந்து விட்ட ஒரு மொழியாகவே கருதலாம். ஒரு காலத்தில் இங்கிரியா முதல் வோல்கோ நதி தீரம் வரையிலும் பரந்திருந்த மொழி என்பர்.

### 3.15 வெப்ஸ் (Veps)

மிகக் குறைவான மக்களே இம்மொழியினைப் பேசுகின்றனர். சோவியத் நாட்டில் ஒனகா ( Onega ) ஏரிப் பகுதிகளிலும் திவினு ( Tihvina ) என்ற பகுதிகளிலும் இம்மக்கள் வாழுகின்றனர். இவர்களையொட்டியே லூத் மொழியினரும் உறைகின்றனர்.

### 3.16 லிவோனியன் (Livonian)

இதுவும் இறந்துவிட்ட மொழியே. கி. பி. 1944 வரையிலும் குர்லாந்தில் வாழ்ந்துவந்த மக்களால் பேசப்பட்ட மொழியாகும். இதன்கண்ணும் மேற்கு கிழக்கு லிவோனியன் என இரு கிளைமொழிகள் இருந்தன என்பர். இன்னும் சில வயோதிகர்கள் இம் மொழி பேசுகின்றனர். பிறர் லெத் மொழி பேசுகின்றனர்.

### 3.17 ஒலனத் (Olenet)

ரஷ்ய நாட்டில் லடகா பகுதியில் வழங்கும் இம் மொழி ஒருசில மக்களால் பேசப்படுவது.

## 3.2 வால்கா பின்னிஷ் மொழிகள்

### 3.21 மார்ட்வினியன் (Mordvinian)

இது சோவியத் நாட்டில் மத்திய வால்கா பிரதேசத்தில் சுமார் 15 லட்சம் மக்களால் பேசப்படும் மொழி. இதன்கண் எர்ஸா (Erza), மொக்ஷா (Moksha) என்ற இரு கிளைமொழிகள் உள்ளன. எர்ஸா மொழியின்கண் எட்டு உயிர்களும், முப்பது மெய்களும் உள்ளன. பின்னிஷ் மொழியைப் போன்று இம் மொழியிலும் உயிர் ஒருமைப் பாட்டினைக் காணலாம். இதன்கண் பதினொரு வேற்றுமைகள் உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| Nominative | குதொ | (kudo) | வீடு |
| Genitive | குதொன் | (kudo-n) | வீட்டின் |
| Inessive | குதொஸொ | (kudo-so) | வீட்டில் |
| Elative | குதொஸ்தொ | (kudo-sto) | வீட்டின் வெளியே |
| Illative | குதொஸ் | (kudo-s) | வீட்டினுள் |
| Ablative | குதொதொ | (kudo-do) | வீட்டிலிருந்து |
| Allative | குதொனென் | (kudo-nen) | வீட்டிற்கு |
| Prolative | குதொவ | (kudo-va) | வீட்டின் வழியே |
| Translative | குதொக்ஸ் | (kudo-ks) | வீட்டுக்காக |
| Abessive | குதொவ்தொமொ | (kudo-vtomo) | வீடின்றி |
| Comparative | குதொஸ்க | (kudo-ska) | வீட்டைப் போல |

இம்மொழியில் பெயரடைகள் பொதுவாக தமிழைப் போன்றே காணப்படுகின்றன. ஆனால் மனித இனத்தைக் குறிக்கும் பெயர்களின் முன்னால் வரின் அப்பெயர்களின் எண்கட் கேற்ப மாறும் தன்மையன. தமிழ் வேற்றுமை உருபுகளைப் போல இம்மொழி உருபுகளும் பன்மைக்குப் பின்னால் வருவன

வாம். மேலும் இதன்கண் மூவிடப் பெயர்களின் உடைமையி னைக் குறிக்கவெனத் தனியான ஒட்டுகள் உள்ளன.—ம், —த், —ஸொ ( m, -t, -zo) என்பன ஒருமையினையும் —மொக், -ங்க், —ஸ்த் (-mok, – k, -st) என்பன பன்மையினையும் காட்டும். குதொம் 'என்னுடைய வீடு', குதொத் 'உன்னுடைய வீடு' எனப் பொருள்படும். பெயர்களும் வினைகளும் அடையும் மாற்றத்தை இம்மொழிப் பெயரடைகள் தன்மையிலும் முன்னிலையிலும் பெற்று (நான் பெரியவன், நீ பெரியை என்பன போன்று) வருவதும் (poksan = நான் பெரியன்) வினைச் சொற்களில் எழு வாய் காட்டும் விகுதி மட்டுமன்றி எழுவாய் - செயப்படு பொருள் காட்டும் விகுதிகள் பெற்று வருவதும் காணத் தக்கன.

பிற உராலிக் மொழி வினைகளைப் போலவே இம்மொழி வினைச்சொற்களும் காலம், எண், இடம் போன்ற இலக்கணக் கூறுகளைக் காட்டுகின்றன. இகரமும் ஸகரமும் இறந்த கால இடைநிலைகளாக உள்ளன.

| | | |
|---|---|---|
| வனன் | (vanan) | பார்க்கிறேன் |
| வனின் | (vanin) | பார்த்தேன் |

எதிர்மறை, வினைகளினின்று வேறாக நின்று எதிர்மறைப் பொருளைத் தரும்.

| | |
|---|---|
| அ வனன் | பாரேன் |
| அ வனத் | பாராய் |
| அ வனி | பாரான், பாராள், பாராது |
| எலின் வனெக் | நான் பார்க்கவில்லை |

பிற மொழிகளைப் போலன்றி இம்மொழி வினைச்சொல் எழுவாயினையும் காட்டவல்லது.[1]

1. In the objective conjugation, the personal ending indicates person, and number of the direct object as well as of the subject. This would a priori make for thirty-six endings,

**3.22 செரிமிஸ் (Cheremis)**

ரஷ்ய நாட்டில் மாரி **(Mari)**, பஷ்கிர் **(Bashkir)** பகுதிகளில் வாழும் ஐந்து லட்சத்துக்கும் அதிகமான மக்களால் பேசப்படுவது இம்மொழி. இம்மக்கள் தங்களையும், தங்கள் மொழியினையும் மாரி என்று அழைப்பர்.

இதன்கண் ஏழு உயிர்களும் பத்தொன்பது மெய்களும் உள்ளன. பின்னிஷ் மொழியைப் போன்றே இம்மொழியும் உயிர் ஒருமைப்பாட்டினைக் கொண்டுள்ளது பல வேற்றுமைகள் காணப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| Nominative | கித் | (kit) | கை |
| Genitive | கிதன் | (kidən) | கையின் |
| Accusative | கிதம் | (kidəm) | கையை |
| Inessive | கிதஷ்த | (kidəstə) | கையில் |
| Elative | கிதச் | (kidəc (ən) | கையின் வெளியே |
| Illative | கிதஷ் | (kidəš) | கையினுள் |
| Ablative | கித்லச் | (kitləc) | கையிலிருந்து |
| Allative | கித்லன் | (kitlĕn) | கைக்கு |
| Dative | கிதெஷ் | (kideš) | கைக்கு |
| Instructive | கிதன் | (kidən) | கையால் |
| Comitative | கித்கே | (kitke) | கையோடு |
| Abessive | கித்தே | (kitte) | கையில்லாமல் |
| Modal | கித்ல | (kitla) | |

பிற உராலிக் மொழிகளைப் போன்றே இம்மொழி வினைச்சொற்களிலும் மூன்று காலங்கள், ஒருமை—பன்மை இடங்கள் உள்ளன. "இரு" என்ற துணை வினையினால் பிற காலங்கள் உருவாகின்றன.

---

but as the system does not include reflexive forms, there are no more than twenty-eight and by syncretism (homonymy) the number boils down to eighteen.

B. Collinder, *Ibid*, p. 235.

## 3.3 உக்ரிக் மொழிகள்

### 3.31 ஹங்கேரியன் மொழி (Hungarian Language)

இது ஹங்கேரி நாட்டின் அரசியல் மொழியாகும். இன்று இம்மொழி பேசுவோராக 13,000,000 மக்கள் உள்ளனர். இவர்கள் ஹங்கேரி, செக்கஸ்லோவாக்கியா, ருமேனியா, யுகஸ்லோவாக்கியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ளனர். ஐந்து லட்சம் மக்கள் அமெரிக்காவிலும் ஐந்து லட்சம் மக்கள் யுகஸ்லோவாக்கியாவிலும் நான்கு லட்சம் பேர் செக்கஸ்லோவாக்கியாவிலும் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் பேர் ரஷ்ய நாட்டிலும் 10 லட்சம் மக்கள் டிரான்சில்வேனியாவிலும் உள்ளனர். சைபீரியாவில் வழங்கும் உக்ரிக் மொழிகளான வொகுல், ஒஸ்த்யக் என்பவற்றுடன் ஹங்கேரியன் மிகுந்த தொடர்புடையது.

பண்டைக்காலத்தில் இவர்கள் மத்திய ரஷ்யாவின்கண் (மாஸ்கோவின் அருகாமையில்) வாழ்ந்து வந்தனர் என்றும் கி. மு. இரண்டாயிரத்தை ஒட்டி இவர்கள் அவ்விடத்தை விட்டுப் பெயர்ந்தனர் என்றும் பின்னியர்களும் எஸ்தோனியர்களும் மேற்கு நோக்கிப் போயினர் என்றும் ஆனால் ஹங்கேரியர்களோ தென்மேற்கே சென்றனர் என்றும் கி. மு. 500—ஐ ஒட்டிய காலத்தில் யூரல் மலையைக் கடந்து அம்மலைச்சாரலின் கிழக்குப் பகுதியில் கி பி. ஆறுவது நூற்றாண்டுவரை வாழ்ந்து வந்தனர் என்றும் ஆசியாவிலிருந்து வந்த மக்களின் குடியேற்றத்தால் மீண்டும் மேற்கு நோக்கிச் சென்று ஒன்பதாவது நூற்றாண்டின் இறுதியில் கார்பாதியன் மலைச்சாரலில் தங்கிப் பின்னர் இன்றைய ஹங்கேரி சமவெளிப் பிரதேசங்களில் நிரந்தரமாகக் குடியேறினர் என்றும் கூறுவர்.

இடையிடையே பக்கத்திலுள்ள பிற நாடுகளைத் தாக்கு வதைத் தொழிலாகக் கொண்ட இம்மக்கள் ஒரு நூற்றுண்டுக் குப் பின்னரே நிரந்தரமாக வாழத் தொடங்கினர். இடைக் காலத்தில் இவர்கள் ஐரோப்பாவில் மிகப் பலம் பொருந்திய வர்களாக இருந்தனர். ஆனல் 16—ஆம் நூற்றுண்டில் பலம் பொருந்திய "ஒட்டமன்" அரசாங்கத்திற்குப் பணிய நேரிட்ட தால் 150 வருடங்கள் துருக்கிய மக்களின் அதிகாரத்தில் வாழ வேண்டியிருந்தது. மீண்டும் நானூறு ஆண்டுகள் அந்நிய ஆதிக்கத்திற்கு (Hapasburg) உட்பட்டிருந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஜேக்கப் கிரிம் என்பார் இம்மொழி அரசாங்க மொழியாக ஆக்கப்படவேண்டியதன் இன்றியமையாமையைப் பற்றி அறிவுறுத்தினர். அப்போதுதான் இது அரசாங்க மொழியாயிற்று.

உராலிக் இனத்தின்கண் இம்மொழியில்தான் பழைமையான எழுத்துச் சான்றுகள் கிடைக்கின்றன. பத்தாவது நூற்றுண் டிலிருந்தே லத்தீனில் எழுதப்பட்ட நூல்களின்கண் ஹங்கேரியச் சொற்கள் கலந்துள்ளன. பதின்மூன்றுவது நூற்றுண்டில் எழு தப்பட்ட 'சாவுப் பேச்சு' ஒன்று இம்மொழியின் முதல் நூலா கக் கருதப்படுகின்றது. பதினைந்து, பதினுறுவது நூற்றுண்டு களில் எழுதப்பட்ட பலவிதமான சமயத் தொடர்பான கையெழுத்துப் பிரதிகள் உள்ளன. 18, 19—வது நூற்றுண்டு களில் இம்மொழி நல்லதொரு வளர்ச்சியைக் கண்டது என்பர். இம்மொழியின்கண் லத்தீன், ஜெர்மன், சிலாவிக் போன்ற மொழி களின் செல்வாக்கினை அதிகமாகக் காணமுடியும். இப்போது வழக்கிலிருக்கும் ஹங்கேரிய எழுத்துமுறை 11—வது நூற்றுண் டில் கிறிஸ்தவப் பாதிரிமார்களால் உபயோகத்தில் வந்ததாகும்

இதன்கண் எழு உயிர்களும் இருபத்தாறு மெய்களும் உள்ளன. இவையனைத்தும் தமிழைப் போன்று குறிலாகவும்

நெடிலாகவும் வரும் தன்மையன. பின்னிஷ் மொழியைப் போலல்லாமல் இதன்கண் மெய்மயக்கங்கள் சொற்களில் முதலி லும் ஈற்றிலும் வருவனவாம். அம்மொழியைப் போன்றே இம்மொழியிலும் உயிர் ஒருமைப்பாடு நல்ல வளர்ச்சியுடன் காணப்படுகிறது, இதனால் ஒரே இலக்கணக்கூற்றினைக் காட்டும் ஒட்டுக்கு இரண்டு அல்லது மூன்று உருவங்கள் உள்ளன.[1]

பெர்லின்பென் **(berlin-ben)** பெர்லினில்

ஸ்டாக்கோம்பன் **(stockhom-ban)** ஸ்டாக்ஹோமில்

எண், வேற்றுமை, இடம்; காலம் போன்றவை ஒட்டு களால்தான் உணர்த்தப்படுகின்றன.[2] தமிழைப் போன்றே பின்னுருபுகளும் பல காணப்படுகின்றன. பின்னிஷ் மொழியைப் போலவே இம்மொழியும் பால் பகுப்பினைக் காட்டுவதில்லை. தமிழ் அஃறிணைச் சொற்களைப் போன்று ஆண், பெண் என்ற சொற்களை இணைத்து விலங்குகளில் ஆண் பெண் இனங்களைக் காட்டுவர்.[3]

---

1. Charles Wojatsek, *Hungarian Text Book and Grammar*, p. ii (preface).

VOCALIC HARMONY is a prominent feature of the vowel pattern of Hungarian: in principle, all the vowels in a given word must be either front or back vowels ..... However, /i, e / may also occur in the same with back vowels.

Robert A. Hall Jr., *Hungarian Grammar*, Lang. Monograph, No. 21, p. 18.

2. The Hungarian is an agglutinative language, therefore number, person and cases are expressed by suffixes added to the stem of the word.

Charles Wojatsek, *Ibid*, p. 17.

3. The Hungarian language has on grammatical gender. Names of males are masculine and those of females are feminine.

C. Arthur and Ilona Ginever, *Hungarian Grammar*, p. 70.

ஹீம் பர்கஸ் (hiim farkas) ஆண் ஓநாய்

நயுஸ்தேனியு பர்கஸ் (nösteenü farkas) பெண் ஓநாய்

ஒருமை, பன்மை என்ற இரு எண்கள் உள்ளன. பன்மை காட்டும் ஒட்டாக —க் (-k) பயன்படுகிறது. இதன் மாற்று உருபன்களும் பல உள்ளன.

| | | |
|---|---|---|
| ஹாஸ் | (hàz) | வீடு |
| ஹாஸ்க் | | வீடுகள் |
| பத் | (pad) | பெஞ்சு |
| படொக் | | பெஞ்சுகள் |
| கெர்த் | (kert) | தோட்டம் |
| கெர்தெக் | | தோட்டங்கள் |
| அய்தோ | (aytoo) | கதவு |
| அய்தோக் | | கதவுகள் |

தமிழ் வேற்றுமை உருபுகளைப் போன்று இம்மொழி உருபுகளும் பன்மை விகுதிகளின் பின்னால் இணைக்கப்படுவது காணத் தக்கதாம்.

| | |
|---|---|
| தவத் | குளத்தை |
| தவக் | குளங்கள் |
| தவக்த் | குளங்களை |

இம்மொழியின்கண் இருபத்தைந்து வேற்றுமைகள் உள்ளன என்பர்.[1] பழைய இலக்கணங்கள் நான்கு அல்லது ஐந்து பற்றியே குறிப்பிடும்.[2] இன்னும் சிலர் வேற்றுமை உருபுகளாகப்

---

1. *Encyclopedia Brittanica* (1972), p. 850.

2. There are four cases :- Nominative, Genitive or possessive, Dative and Accusative.

C. Arthur and Ginever, *Ibid*, p. 10.

பிறர் குறிப்பிடுவனவற்றில் பல உருபுகளல்லவெனக் கூறி அவற்றின் எண்ணிக்கையைக் குறைத்துக் கூறுவர்.[1]

| | | | |
|---|---|---|---|
| Nominative | எம்பெர் | (ember) | மனிதன் |
| Accusative | எம்பெர்த் | (ember-t) | மனிதனை |
| Superessive | ஹெர்தென்கேந்த் | (hertenkee-nt) | ஒவ்வொரு வாரத்துக்கும் (per week) |
| Terminative | ஹாஸிஸ் | (haaz-iz) | வீடுவரை (upto) |
| Translative | எம்பெர்ரே | (ember-r-ee) | மனிதனாக |
| Adessive | ஹாஸ்னல் | (haaz-nal) | வீட்டால் |
| Illative | ஹாஸ்ப | (hazz-ba) | வீட்டிற்குள் |
| Sublative | ஹாஸ்ர | (hazz-ra) | வீட்டுமேல் |
| Allative | ஆஸ்தல்ஹோஸ் | (astal-hoz) | மேசைக்கு |
| Elative | சொபாபோல் | (sobaa-bool) | அறையிலிருந்து |
| Delative | ஹாதுல்ரோல் | (haatul-rool) | பின்னாலிருந்து |
| Ablative | அஸ்ஸோந்தோல் | (asson-tool) | பெண்ணிடமிருந்து |
| Dative | எம்பெர்னெக் | (ember-nek) | மனிதனுக்கு |

---

1. Lotz lists 24 items in his class of case suffixes: Some of these, however, are formally not even suffixes. His no. 15, Temporal :- *kor*, for example, is simply a free morpheme, 'age, period of time', that enters into compounds with other nouns, as it was pointed out elsewhere. Others, though formally suffixes are not case suffixes: thus his no. 16, Temporal-iterative; *-nta*, *-nte*, for example, is a formative (denominative, distributive-repetitive) suffix.

Thomas A. Sebeok, "Finnish and Hungarian case systems. Their form and function", (in Acta Instituti Hungarici Univers sitatis Holmiensis Series *B*), *Linguistica*; 3, p. 20.

| | | | |
|---|---|---|---|
| Final | விஸோர்த் | (viz-eert) | தண்ணீருக்காக |
| Comitative | தியஸேல் | (tyz-eel) | தீயுடன் |

பின்னிஷ் மொழியைப் போலவே இதன்கண்ணும் மூவிடப் பெயர், உடைமைப் பொருள் தனித்தனி ஒட்டுகளால் காட்டப் படுகின்றன. இவ்வுடைமை ஒட்டுகள் பன்மை விகுதிகட்குப் பின்னும் வருவனவாம்.

| | |
|---|---|
| ஹாஸெம் (haz-em ) | என் வீடு |
| ஹாஸெத் | உன் வீடு |
| ஹாஸெ | அவன்/அவள் வீடு |
| ஹாஸுங்க் | நம் வீடு |
| ஹாஸதொக் | உங்கள் வீடு |
| ஹாஸுக் | அவர்கள் வீடு |
| ஹாஸைம் (haz-ai-m) | என் வீடுகள் |
| ஹாஸையத் | உன் வீடுகள் |

இவ்வாறு கூறுவதோடன்றி உறுதிப்பாட்டைக் காட்ட விரும்பின் ஏன் ஹாஸெம் (een hazem) என்று கூறுகின்ற வழக்கமும் உள்ளது என்பர்.

இதன்கண் சேய்மைச் சுட்டும் (az), அண்மைச் சுட்டும் (ez) காணப்படுவதோடு பின்னிஷ் மொழியில் இல்லாத சிறப்புச் சுட்டும் (article) காணப்படுகிறது. இச்சுட்டு ஹங்கேரியன் வாக்கிய ஆக்கத்தில் முக்கிய இடத்தைப் பெறுகிறது எனலாம். அண்மைச் சுட்டையும் அதன்பின் சிறப்புச் சுட்டையும் அதற்குப்பின்னால் பெயரையும் இணைத்துக் கூறும்போது உருவாவது ஒரு பெயர்த்தொடராகவும் சிறப்புச் சுட்டின்றி கூறின் ஒரு முழு வாக்கியமாகவுமிருப்பதைக் காணலாம்.

| | |
|---|---|
| **ez az isvola** | இந்த பள்ளிக்கூடம் |
| **ez iskola** | இது பள்ளிக்கூடம் |

ஹங்கேரிய மூவிடப் பெயர்கள் பிற உக்ரிக் மொழிப்பெயர்களைப் போன்றே உள்ளன. படர்க்கையில் வரும் பெயர்கள் ஆண், பெண் பால் பகுப்பற்று பின்னிஷ் மொழிப் பெயரைப் போன்றுள்ளன. தமிழில் காணப்படும் உளப்பாட்டுத் தன்மை இம்மொழியில் இல்லை.

| | | |
|---|---|---|
| என் | **(een)** | நான் |
| மி | **(mi)** | நாம், நாங்கள் |
| எ(யொ) | **(ö)** | அவன், அவள் |
| எ(யொ)க் | **(ök)** | அவர்கள் |
| அஸ் | **(az)** | அது |
| அஸொக் | **(azok)** | அவை |
| எ(யொ)ன் | **(ön)** | நீங்கள் |
| எ(யொ)ஞெக் | **(önök)** | நீங்கள் (பன்மை) |

பின்னிஷ் பெயரடைகளைப் போன்று இம்மொழிப் பெயரடைகள் பெயரடைகளாகவும் வாக்கியங்களில் பயனிலையாகவும் வரும் தன்மையன. பெயரடைகளாக வரும்போது எந்தவிதமான மாற்றத்தையும் இவை அடைவதில்லை. இது பின்னிஷ் மொழிக்கும் இதற்குமிடையே காணப்படும் வேற்றுமையாகும். ஆனால் தமிழுக்கும் இதற்குமிடையே காணப்படும் ஒற்றுமையாகும். தமிழில் சிவந்ததைக் (சிவந்த பூவை) கண்டேன், பெரியவனுக்குக் கொடுத்தேன் எனக் கூறுவதை இம்மொழியில் பெயரடைகளை உபயோகித்துக் கூறமுடியும். இந்நிலையில் இவை பெயர்களைப் போன்று வேற்றுமை, எண் போன்றவற்றைக் காட்டவல்லன. பெறும் இடமாற்றத்தால் பயனிலையாக நிற்பதைக் காணலாம்.

| | | |
|---|---|---|
| அ நகி ஹஸ் | பெரிய வீடு | (அ = the) |
| அ ஹஸ் நகி | வீடு பெரியது | |

வினைச்சொற்கள் காலம், இடம், எண் போன்ற இலக்கணக் கூறுகளைப் பல ஒட்டுகளால் காட்டுகின்றன. பின்னிஷ் மொழியைப் போன்றே இம்மொழியின் கண்ணும் நிகழ்காலத்தைக் காட்டும் எந்த இடைநிலையும் இல்லை. விகுதிகள் வினையடிகளுடன் நின்று நிகழ் காலத்தைக் காட்டும். ஆனால் இறந்த காலத்தை –த், –த்த் என்ற இடைநிலைகள் காட்டுவது தமிழ் மொழியுடன் வைத்து ஒப்புநோக்கத் தக்கதாம். விகுதிகள் மாறும் தன்மையன.

| | |
|---|---|
| ஈர்த் | எழுதினான் |
| ஈர் | எழுதுகிறான் |
| வக்—ஒக் | வெட்டுகிறேன் |
| வக்—த்—அம் | வெட்டினேன் |
| ஹி—த்த்—எம் | நம்பினேன் |
| மென்ன பொகொக் | போவேன்[1] |
| மென்னி பொக் | போவான்/போவாள்/போகும் |

பிறவினைச் சொற்கள் இரண்டுவிதமான வினைமாற்றத்தை அடைகின்றன வருகின்ற செயப்படுபொருள் பொதுவான பொருளாக இருக்குமானால் (a Hungarian book) ஒருவகை மாற்றத்தையும் (indefinite conjugation) குறிப்பிட்ட பொருளைக் குறிக்குமானால் வேறொரு வகையான மாற்றத்தையும் (definite

1. The future indicative of verbs (cf.) formed by adding to the present indicative conjugationl forms of the auxiliary *fozni* "to begin" the infinitive of the main verb, which may stand before or after auxiliary, depend upon whether the emphasis is upon the nature or upon the times of the action.

conjugation) அடையும். இம்மாற்றத்தை ஒட்டியும் விகுதிகள் வேறு வேறாக அமைகின்றன.[1]

| | | |
|---|---|---|
| ஈரொக் | எழுதினேன் | (indefinite) |
| ஈரொம் | (அதை) எழுதினேன் | (definite) |

ஹங்கேரிய மொழியில் செயப்பாட்டுவினை இல்லை என்பர். செயப்பாட்டுப்பொருள் செய்வினையால்தான் காட்டப்படுகின்றது. சில இலக்கண ஆசிரியர்கள் செயப்பாட்டுவினை உண்டு எனக்கூறினும் ஒரு சில வினைச் சொற்களில்தான் காணப்படுகிறது என்று கூறுவது உணரத் தக்கதாம்.[2]

---

For example: *menni fogok* "(I) shall go" *fogok menni* "(I) shall go".

Leslie C. Tihany, *A. Modern Hurgarian Grammar*, p. 56.

1. Every transitive verb in Hungarian has two conjugations. We call them indefinite or subjective and the definite or objective conjugations, depending upon whether the object is less determinate or indefinite.

Charles Wojatsek, *Ibid*, p. 30.

2. There is in Hungarian no passive voice, although certain grammarians attempted to introduce one. The only parts of the verb which have a passive significance are the past and future participles where in English, we should say "I am loved", in Hungarian it is necessary to say *szeret nek engem* (they love me), or *valaki szeret engem* (one loves me).

C. Arthur, *Ibid*, p. 51.

The Hungarian has, properly speaking, no passive voice for active verbs, but grammarians have introduced a so called passive voice for transitive verbs which is, however, not generally used, but is restricted to a few verb only.

Ignatius Singer, *Simplified Grammar of the Hungarian Language*, pp. 69-70.

### 3. 32 வொகுல் (Vogul)

இது யூரல் மலையின் வடபகுதியில் வாழும் சுமார் 6000 மக்களால் பேசப்படும் மொழியாகும். இம்மக்களில் பெரும் பாலோர் விவசாயிகளாகவும் வேட்டையாடுபவர்களாகவும் உள்ளனர். இது ஹங்கேரி, ஒஸ்த்யக் மொழிகளுடன் மிகுந்த தொடர்புடையது. 1917 முதல்தான் சில சிறிய புத்தகங்கள் இம்மொழியில் வர ஆரம்பித்துள்ளன. பல பாடபுத்தகங்கள், நாடோடிக் கதைகள் போன்றன இன்று அச்சில் வருகின்றன.

இதன்கண் ஒருமை, இருமை, பன்மை எண்கள் உள்ளன.[1] எழுவாய், செயப்படுபொருள் போன்ற ஏழு வேற்றுமைகள் காணப்படுகின்றன. உராலிக் மொழிகளைப் போலவே வேற்றுமை உருபுகள் எண் காட்டும் ஒட்டுகட்குப் பின்னால் வருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| Nominative | க்வல் | (kwal) | வீடு |
| Accusative | க்வல்மெ | (kwal-me) | வீட்டை |
| Locative | க்வல்த் | (kwal-t) | வீட்டில் |
| Separative | க்வல்னெல் | (kwal-nel) | வீட்டிலிருந்து |
| Dative | க்வல்னெ | (kwal-ne) | வீட்டுக்கு |
| Translative | க்வல்ய்க் | (kwal-yg) | வீடாக |
| Instructive | க்வலெல் | (kwal-el) | வீட்டால் |
| | க்வலி | (kwal-i) | இரு வீடுகள் |
| | க்வலெத் | (kwal -(e)t) | வீடுகள் |
| | க்வலிமெ | (kwal-ime) | இரு வீடுகளை |
| | க்வல்தொம | (kwal-toma) | வீடுகளை |

என்னுடைய வீடு (kwalom), என்னுடைய இரு வீடுகள் (kwalam), என்னுயை வீடுகள் (kwalam), எங்கள் இரு

---

1. Vogul has three number: singular, dual and plural. B. Collinder, *Ibid*, p 322.

வருடைய வீடு (kwalam), எங்கள் இருவருடைய இரு வீடுகள் (kwalam), எங்கள் இருவருடைய வீடுகள் (kwalenam), எங்களுடைய வீடு (kwalau), எங்களுடைய இரு வீடுகள் (kwalau), எங்களுடைய வீடுகள் (kwalenáu) என நாம் பல சொற்களில் கூறுவதை இவர்கள் ஒரு சொல்லில் கூறிவிடுவர். இது போன்றே உடைமைப் பொருளைக் குறிக்கும் சொற்கள் முன்னிலை ஒருமை, இருமை, பன்மைகளிலும் படர்க்கை ஒருமை, இருமை, பன்மைகளிலும் காணக்கிடக்கின்றன.

மார்ட்வினியன் மொழியைப் போலவே இம்மொழியும் வினைச் சொற்களில் செயப்படுபொருள் காட்டுகின்றன. -உம், –மென், –வ் (–(u)m,-men, v) என்பன தன்மை விகுதிகளாவும் –ன், முன்னிலை விகுதியாகவும் –இ, –க, –த் என்பன படர்க்கை விகுதிகளாகவும் உள்ளன. -ல், –அக், –அன் (–l, -ag, –an) முறையே ஒருமை, இருமை, பன்மை செயப்படுபொருள் காட்டும்.

| | | |
|---|---|---|
| தொதெகும் | (tote.g-um) | கொணருகிறேன் |
| தொதெகின் | (tote-g-(y)n) | கொணருகிறாய் |
| தொதிமென் | (tote-i-men) | நாங்களிருவர்/நாம் இருவர் கொணருகிறோம் |
| தொதெவ் | (tote-w) | நாம்/நாங்கள் கொணருகிறோம் |
| தொதிலும் | (toti-l-um) | அதைக் கொணருகிறேன் |
| தொதியகும் | (toti(i)-ag-um) | இரண்டு கொணருகிறேன் |
| தொதியனும் | (toti(i)-an-um) | பல கொணருகிறேன் |

## 3.4 பெரிமியன் மொழிகள்

### 3.41 சிரியென் (Zyryene)

சோவியத் நாட்டில் வாழும் சுமார் 430000 மக்கள் இம் மொழி பேசுகின்றனர். 14–வது நூற்றாண்டு முதலே இம் மொழியின்கண் எழுத்துச் சான்றுகள் உள்ளன. இதன்கண் பதினேழு வேற்றுமைகள் காணப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| Nominative | மொர்த் | (mort) | மனிதன் |
| Accusative | மொர்தொஸ் | (mort-os) | மனிதனை |
| Inessive | மொர்த்ய்ன் | (mort-yn) | மனிதனுக்குள் |
| Instrumental | மொர்தொன் | (mort-on) | மனிதனால் |
| Elative | மொர்த்ய்ஸ் | (mort-ys) | மனிதனுக்குப்புறம்பே |
| Illative | மொர்தொ | (mort-o) | மனிதனுக்குள் |
| Adessive | மொர்த்லொன் | (mort-lon) | மனிதனுக்குமேல் |
| Ablative | மொர்த்ல்ய்ஸ் | (mort-lys) | மனிதனிடமிருந்து |
| Egressive | மொர்த்ஸன் | (mort-san) | மனிதனிடமிருந்து |
| Allative | மொர்த்ல்ய் | (mort-ly) | மனிதனுக்கு |
| Preclusive | மொர்த்ஸ | (mort-sa) | மனிதனைத்தவிர |
| Approximative | மொர்த்லன் | (mort-lan) | மனிதனின்கீழ் |
| Terminative | மொர்தொஸ் | (mort-oz) | மனிதன்வரை |
| Prolative | துகொத் | (tugod) | பாதைவழி |
| Consecutive | மொர்த்ல | (mort-la) | மனிதனுக்காக |
| Comitative | மொர்கொத் | (mort-kod) | மனிதனுடன் |
| Abessive | மொர்த்தொக் | (mort-tog) | மனிதனின்றி |

பிற உராலிக் மொழிகளைப் போன்று இதுவும் வினைச் சொல்லில் பல இலக்கணக்கூறுகளைக் காட்டுகின்றது. இறந்த

காலம் காட்டும் இடைநிலையாக "இ" உள்ளது. நிகழ்கால இடைநிலைகளாக "a", "o" உள்ளன.

| | | |
|---|---|---|
| முன | (mun-a) | போகிறேன் |
| முனி | (mun-i) | போனேன் |
| ஒக் முன் | (og–mun) | போகேன் |
| எக் முன் | (eg-mun) | போகவில்லை (இறந்த காலம்) |

**3.42 வொத்யக் (Votyak)**

ரஷ்ய நாட்டில் உத்முர்த் பகுதியில் வாழும் சுமார் ஆறு லட்சம் (600000) மக்களால் இம்மொழி பேசப்படுகிறது. செரிமிஸ் மக்களைப் போன்றே இம்மக்களும் முன்னால் துருக்கிய அரசாங்கத்தின் கீழும் பின்னர் தத்தார் அரசின் கீழும் இருந்தனர். 16-வது நூற்றாண்டில் ரஷ்ய நாட்டு மக்களாக மாறினர்.

பிற உராலிக் மொழிகளைப் போன்றே இம்மொழியிலும் பல வேற்றுமைகள் உள்ளன.[1]

| | | | |
|---|---|---|---|
| Nominative | முர்த் | (murt) | மனிதன் |
| Accusative | முர்தெஸ் | (murt-ez) | மனிதனை |
| Inessive | முர்த்யன் | (murt-yn) | மனிதனிடம் |
| Instructive | முர்தென் | (murt-en) | மனிதனால் |
| Elative | முர்திஸ் | (murt-is) | மனிதனுக்கு புறம்பே |
| Illative | முர்தெ | (murt-e) | மனிதனுக்குள் |
| Adessive | முர்தெலென் | (murt-elen) | மனிதனுக்கு மேலே |

1. The cases are: nominative, accusative inessive (instructive), elative, illative, adessive, ablat alativel (dative), egressive, terminative, prolative, processive, abessive.

B. Collinder, *Ibid*, p. 276.

| | | | |
|---|---|---|---|
| Ablative | முர்த்லெஸ் | (murt-les) | மனிதனிடமிருந்து |
| Allative | முர்த்ய்ன் | (murt-yn) | மனிதனுக்கு |
| Egressive | இன்மிஸென் | (inmi-sen) | வானிலிருந்து |
| Terminative | முர்தொஸ் | (murt-oz) | மனிதன்வரை |
| Prolative | ஒஸெதி | (os-eti) | கதவு வழி |
| Processive | தொல்ஜ | (tol -ja) | காற்றுப் போக்கில் |
| Abessive | முர்த்தெக் | (murt-tek) | மனிதனின்றி |

பிற உராலிக் மொழிகளைப் போன்று இம்மொழி வினைச் சொற்களும் காலம், இடம், எண் போன்ற பல இலக்கணக் கூறுகளைக் காட்டுகின்றன.[1]

1. The personal and possessive pronouns have three numbers, singular, plural and dual - these numbers being expressed rather by different stems than by different endings, e.g. *men* 'I', *mi* 'we', *moai* 'we (two)'.

B. Collinder, *Survey of the Uralic Languages*, p. 190.

## 3.5 லாப்பிஷ் மொழிகள்

### 3.51 லாப்பிஷ் (Lappish)

இம்மொழி பேசுவோராக 30,000 மக்கள் உள்ளனர். நார்வே சுவீடன், பின்லாந்து, ரஷ்யா ஆகிய நாடுகளில் இம் மொழி பேசப்படுகிறது. இதை வட, தென், கிழக்கு லாப்பிஷ் என்று பிரிப்பர். நார்வே, பின்லாந்து நாடுகளில் வாழ்வோர் வட லாப்பிஷ் மொழியினையும் சுவீடனில் வாழ்வோர் தென் லாப்பிஷ் மொழியினையும் ரஷ்யாவில் கோலா பகுதியில் வாழ் வோர் கிழக்கு லாப்பிஷ் மொழியினையும் பேசுகின்றனர். நார்வே பகுதி லாப்பிஷில் ஸ்காண்டிநேவியச் சொற்கள் பலவற்றைக் காணலாம்.

பின்னிஷ், ஹங்கேரியன், எஸ்தோனியன் மொழிகளைப் போலல்லாமல் இதன்கண்ணுள்ள மூவிடப் பெயர்களிலும் வினைகளிலும் ஒருமை, இருமை, பன்மை என்ற எண் பாகு பாட்டைக் காணலாம். பெயர்களில் இத்தன்மை இல்லை. மூவி டப் பெயர்கள் உடைய பொருளாய் வரும்போது இருமை காட்டி நிற்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| –ம் | பர்தனம் | (bardanam) | என்மகன் |
| -மெ | பர்தனமெ | | எங்களிருவர் மகன் |
| -மெக் | பர்தனமெக் | | எங்கள் மகன் |

இதே போன்று –த் (-d), –தெ (-de), -தெக் (-dek) என் பன முறையே முன்னிலை ஒருமை, இருமை, பன்மை உடைமை யினையும் –ஸ் (-s), –ஸ்க (-ska), –ஸெக் (-sek) என்பன முறையே படர்க்கை ஒருமை, இருமை, பன்மையினையும் காட்டுவன.

வினைச்சொற்கள் பின்னிஷ், ஹங்கேரியன் வினைகளைப் போன்று எண், இடம் போன்ற இலக்கணக்கூறுகளைக்

காட்டும். பிறமொழிகள் ஒருமை, பன்மை எண்களைக் காட்ட இம்மொழி ஒருமை, இருமை, பன்மைகளைக் காட்டுவது குறிப்பிடத் தக்கதாம். பிற மொழிகளைப் போன்றே இம்மொழியின் கண்ணும் நிகழ் – எதிர்கால இடைநிலை எதுவும் இல்லை.[1] இறந்த கால இடைநிலைகளில் ஒன்றாக 'இ' (i) காணப்படுவதும் நினைவு கூரத் தக்கதாம்.

| | | |
|---|---|---|
| லொகம் | (logam) | வாசிக்கிறேன் |
| லொகக் | (logak) | வாசிக்கிறாய் |
| லொக்க | (lokka) | வாசிக்கிறான்/வாசிக்கிறாள்/ வாசிக்கிறது |
| லொக்கி | (lokki) | நாம் (இருவர்) வாசிக்கிறோம் |
| லொக்கபத்தெ | (lokkabatte) | நீங்கள் இருவர் வாசிக்கிறீர்கள் |
| லொக்கப் | (lokkap) | நாம் வாசிக்கிறோம் |
| லொக்கிம் | (lokkim) | வாசித்தோம் |
| லொக்கிக் | (lokkik) | வாசித்தாய் |
| லொகை | (logai) | வாசித்தான் / வாசித்தாள் / வாசித்தது |
| லொகைமெ | (logaime) | நாம் இருவர் வாசித்தோம் |
| லொகைமெக் | (logaimek) | வாசித்தோம் |

இதன்கண் ஆறு வேற்றுமைகள் உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| Nominative | ஒஅப்ப | (oabba) | தங்கை/தமக்கை |
| Genitive } Accusative | ஒஅப்ப | | உடன் பிறந்தாளின்/ உடன் பிறந்தாளை |

1. The present tense has no characteristic of its own. In other words, there is no special present base, but the personal endings are added directly to the verb stem.

The preterite tense (imperfect) has in all forms except the first and second persons singular and the third person plural a non-syllabic *i* as its characteristic. Before this characteristic, trisyllabic stems have the vowel *i* in the third person singular, but *e* or *ae* in the other persons.

*Ibid*, p. 199.

| | | | |
|---|---|---|---|
| Inessive / Elative | ஒஅப்பஸ்(த்) | (oabbast) | உடன் பிறந்தாளின் புறத்தே |
| Illative | ஒஅப்பை | (oabbai) | தங்கையின் உட்புறத்து |
| Commitative | ஒஅப்பைன் | (oabbain) | தங்கையுடன் |
| Essive | ஒஅப்பன் | (oabban) | தங்கையாக |

பின்னிஷ் போன்று உக்ரிக் மொழிகளில் ஒருமைக்கும் பன்மைக்கும் வேற்றுமை உருபுகள் ஒன்ருக இருக்க இம்மொழியில் வெவ்வேருக உள்ளன.[1]

| | |
|---|---|
| Nominative | oabbak |
| | oabbai |
| | oabbain |
| | oabbaidi |
| | oabbaiguim |

இவற்றுள் **-k** எழுவாய் வேற்றுமைப் பன்மையாகவும் **-n, di, -guim** என்பன பிற வேற்றுமை உருபுகளாகவுமிருப்பது காண்க. மேலும் இம்மொழியில் ஒருமையில் **elative** ஆகவும் அதே வேற்றுமை பன்மையில் **inessive** ஆகவும் பயன்படுகிறது.[2]

---

1. Like Finnish, Lappish has no plural ending common to all cases. It has one ending of complex function, denoting nominative plural, and a plural character common to all other plural.

*Ibid*, p. 190.

2. The inessive - elative has originated by confusion of two cases. In the singular, the original elative is used, with the ending *-s* (*t*), and original inessive is used in the plural, with the ending *-n*.

*Ibid*, p. 189.

## 3.6 சமொயொதிக் மொழிகள்

வெள்ளைக் கடலிலிருந்து கடங்காகுடா வரையிலும் ஆர்டிக் கடல் முதல் சயன் (Sayan) மலைவரையிலும் கிடக்கும் பகுதிகளில் வாழும் 30,000 மக்களிடையே இம்மொழிகள் வழங்குகின்றன. சயன் மலைப் பகுதியில்தான் பின்னோ—உக்ரிக் மக்கள் பண்டைக்காலத்தில் வாழ்ந்தார்கள் என்று சிலர் கருதினும் இக் கருத்து உண்மையன்று.

இம்மொழிகளை நெனெட்ஸ், எனட்ஸ், நகனசன், செல்கப், காமாஸ் (Nenets, Enets, Naganasan, Selkup and Kamas) என்று ஐந்து மொழிகளாகப் பிரிப்பார்கள். நெனெட் மொழி பேசும் மக்களே அதிகம். 25,000 மக்கள் இம்மொழி பேசுகின்றனர். இவர்கள் கிழக்கு ஐரோப்பிய பகுதிகளிலும் மேற்கு சைபீரிய பிரதேசங்களிலும் வாழுகின்றனர். இவர்களுடைய முக்கியமான தொழில் ரயிண்டியர் வளர்த்தலும் மீன் பிடித்தலுமாகும்.

நெனெட், செல்கப் என்ற மொழிகளைப்பற்றியே ஓரளவு தெரிகின்றன. நெனெட் தந்துருவக் கிளைமொழி, காட்டுக் கிளைமொழி (Forest dialect) என்ற இரண்டு பிரிவுகளை உடையது.

நெனெட்ஸில் முன்னுயிர் எழுத்துக்கள் (Front vowels) எப்போதும் 'palatal' மெய்யெழுத்துக்கட்குப் பின்னல் வருகின்

---

1. Castren claimed that the ancient Samoyeds lived on the slopes of Altai, or Sayan Mountains. According to him, this was also the ancient home of the Finnougrians. Later research, however, has shown that the ancient Uralic home was not in Southern Siberia but on the Western side of the Ural Mountains, around the bend of the Volga, along the Kama and Vyatka Rivers, and into territories somewhat farther east.

Peter Hajdu, *The Samoyed Peoples and Languages*, p. 42.

றன. இதே போன்று பிற உயிர் எழுத்துக்கள் பிற மெய்களின் பின்னல் வருகின்றன.[1] ஹ, க, ங என்ற மூன்று மெய்களைத் தவிர மீதி எல்லா மெய்களுக்கும் அவற்றை ஒத்த 'palatal' மெய்யெழுத்துக்கள் உள்ளன.

இம்மொழியில் பொதுவாக சொற்கள் உயிர் எழுத்துக்களில் தொடங்குவதில்லை.[2]

இம்மொழிகளின் கிளை மொழிகள் ரஷ்ய மொழியாலும் துருக்கிய மொழிகளாலும் அழிந்து கொண்டிருக்கின்றன.

**3.61 செல்கப் (Selkup)**

இதனை ஒஸ்த்யக் (Ostyak) என்றும் கூறுவர். ரஷ்ய நாட்டில் ஆர்டிக் வட்டத்தின் தெற்கே டாஸ் நதிக் கரையோரங்களிலும் கெத் நதிக்கரைகளிலும் இம்மொழி பேசப்படுகிறது.

உராலிக் மொழிகளில் காணப்படாத பால் வேற்றுமை இம்மொழியில் உள்ளது.[3] இம்மொழியில் பெயர்களை உயிர்த்திணை, உயிரல்திணை (animate, inanimate) என இருவகையாகப் பிரிப்பர். கண் வேற்றுமை, பிரிவு வேற்றுமை, கு வேற்றுமை உருபுகள் உயிர்த்திணை, உயிரல்திணைச் சொற்கட்கு வெவ்வேறாக உள்ளன.

---

1. The most characteristic trait of the Nenets phonological system is the phenomenon that front vowels can occur only after palatalized consonants, and back vowels only after non-palatalized consonants.

*Ibid*, p. 61.

2. In most of the Nenets dialects, vowels cannot occur initially in syllables, therefore, a word cannot begin with a vowel.

*Ibid*, p. 61.

3. Selkup has two genders, genus animatum and genus nanimum.

B. Collinder, *Survey of the Uralic Languages*, p. 459.

| | | | |
|---|---|---|---|
| -nmygyt | அதன்மிகித் | (ata-nmygyt) | (ரயிண்டியர்) மானிடம் |
| -gyn | யுகோகின் | (ukoo gyn) | தொப்பியில் |
| -nyk | அதனிக் | (ata-nyk) | (ரயிண்டியர்) மானுக்கு |
| -ndy | யுகோன்தி | (ukoo-ndy) | தொப்பிக்கு |
| -nnany | அதன்னனி | (ata-nnany) | (ரயிண்டியர்) மானிலிருந்து |
| -gyny | யுகோகினி | (ukoo-gyny) | தொப்பியிலிருந்து |

மேலும் பொதுவாக உராலிக் மொழிகளில் காணப்படாத இருமை எண்ணும் இம்மொழியில் உள்ளது. உராலிக் மொழிகளில் வொகுல், ஒஸ்தியக் (உக்ரிக் பிரிவைச் சார்ந்தது) வட சமொயொத் மொழிகள் என்ற ஒரு சில மொழிகளே இருமை எண்களைக் கொண்டுள்ளன.[1]

| | | |
|---|---|---|
| அத | (ata) | ரயிண்டியர் |
| அதாகி | (ata-agy) | இரு ரயிண்டியர் |
| அதத் | (ata-t) | பல ரயிண்டியர் |

பிற உராலிக் மொழிகளைப் போன்றே இதன் கண்ணும் பல வெற்றுமைகள் உள்ளன.[2] இவ்வேற்றுமை உருபுகள்

---

1. Like Vogal, Ostayak and Northern Samoyed, Selkup has a dual even in the declension of nouns.

B. Collinder, *Ibid*, p. 450.

B. Collinder, *Comparative Grammar of the Uralic Languages*, pp. 237 - 238.

2. Selkup has the following ordinary cases: nominative,

பெயர்ச் சொற்களின் பின்னும் இருமை அல்லது பன்மையினைக் காட்டும் உருபுகளின் பின்னும் இணைக்கப் படுகின்றன.

| | | |
|---|---|---|
| அதன் | (ata-n) | ரயிண்டியரின் |
| அதாகின் | (ata-agyn) | இரு ரயிண்டியரின் |
| அததின் | (ata-tyn) | ரயிண்டியர்களின் |

இம்மொழி வினைச்சொற்கள் தமிழ் வினைகளைப் போன்றே காலம், இடம் போன்ற பல இலக்கணக்கூறுகளைப் பல்வேறு ஒட்டுகளால் காட்டுகின்றன. தமிழைப் போலவே மூன்று காலங்கள் இதன் கண் உள்ளன. ஆனால் வினைகள் தன்வினை யாயின் (intransitives) ஒருவகையான விகுதிகளையும் பிறவினை யாயின் (transitives) வேறொரு வகையான விகுதிகளையும் எடுப்பதைக் காணலாம்.[1] வினைகள் எந்தவிதமான பாலையும் காட்டுவதில்லை.

| | | |
|---|---|---|
| அம்னப் | (am-n-ap) | உண்ணுகிறேன் |
| த்யுனக் | (tu-n-ak) | வருகிறேன் |
| அம்னெய் | (am-n-ey) | (இருவர்) உண்ணுகிறோம் |
| அம்னிமித் | (am-n-ymyt) | உண்ணுகிறோம் |
| அப்ஸப் | (ap-s-ap~am-s-ap) | உண்டேன் |
| அவ்லப் | (aw-l-ap) | உண்ணுவேன் |

---

genitive, accusative. locative, separative, lative (dative), prolative, instructive, translative.

B. Collinder, *Ibid*, p. 459.

1. Selkup has an intransitive and transitive conjugation. The transitive conjugation is used when there is a direct object.

*Ibid*, p. 470.

### 3.62 யுரக் (Yurak)

சோவியத் நாட்டில் ஆர்டிக் கடலோரத்தில் கனின் பகுதிகளிலும் அதை ஒட்டிய பிற இடங்களிலும் வாழும் மக்களால் இம்மொழி பேசப்படுகிறது. இம்மக்களைத் துந்தர யுரக், மலை வாழ் யுரக் என இரு பிரிவுகளாகப் பிரிப்பர். இவர்களுடைய முக்கியத் தொழில் ரயிண்டியர் வளர்த்தலும் மீன் பிடித்தலுமாகும். இம்மொழியை நெனெட்ஸ் (Nenets) என்றும் அழைப்பர்.

துந்தர யுரக்கில் 10 உயிர்கள் உள்ளன. பொதுவாக இம்மொழிகளில் சொற்கள் உயிர்களில் தொடங்குவதில்லை.[1]

ஒருமை, இருமை, பன்மை எண்களும் காணப்படுகின்றன. பிற உராலிக் மொழிகளைப் போலன்றி ஒருமை, இருமை, பன்மைக்கென வேறு வேறு வேற்றுமை உருபுகள் உள்ளன எனத் தோன்றுகிறது. பொதுவாக யுரக் மொழியில் ஒருமை, இருமை, பன்மை காணப்படினும் சில கிளை மொழிகளில் இருமை காணப்படுவதில்லை என்பர்.[2]

இதன் கண் ஏழு வேற்றுமைகள் உள்ளன.[3]

---

1. In most of the Nenets dialects, vowels cannot occur initially in syllables; therefore a word cannot begin with a vowel.

Peter-Hajdu, *The Samoyed Peoples and Languages*, p. 61.

2. There are three numbers: singular, dual and plural. Note: The dialects of the Kanin peninsula and Malaya Zemlya have lost the dual both in the declension of nouns and in the conjugation.

B. Collinder, *Survey of the Uralic Languages*, p. 427.

3. There are seven ordinary cases, namely, nominative, genitive, accusative, locative, separative, lative (dative) and prolative.

B. Collinder, *Ibid*, p. 427.

இதன் கண் ஒருமை, இருமை, பன்மை என்ற எண் பாகுபாடு காணப்படுவதால் மூவிடப் பெயர்களின் உடைமைப் பொருளைக் காட்டும் உருபுகள் இருபத்தேழு காணப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| லம்பவ் | (lamba-w) | என் "ஸ்கீ" (பனிக்கட்டியில் விளையாடும் கருவி) |
| லம்பஹயுன் | (lamba-hayu-n) | என் இரு "ஸ்கீ" |
| லம்பின் | (lamba-i-n) | என் "ஸ்கீ"கள் |

பிற உராலிக் மொழிகளைப் போலவே இதன்கண்ணும் மூன்று காலங்கள் உள்ளன. எனினும் நிகழ் காலத்திற்கென எந்த விதமான இடைநிலையும் இல்லை. பல உராலிக் மொழிகளைப் போலன்றி யுரக் வினைச்சொற்கள் எழுவாயினையும் செயப்படு பொருளையும் உணர்த்துகின்றன. தன்வினையாயின் (intransitive) எழுவாயினையும் பிற வினையாயின் (transitive) எழுவாய் - செயப்படு பொருளையும் காட்டும் விகுதிகள் உள்ளன. முன்னர்க் குறிப்பிட்டது போன்று இம்மொழியின்கண் ஒருமை, இருமை, பன்மை எண் பாகுபாடு காணப்படுவதால் எழுவாய் காட்டும் விகுதிகளாக ஒன்பது உள்ளன. இதே போன்று எழுவாய் – செயப்படுபொருள் காட்டும் விகுதிகளாக இருபத்தேழு உள்ளன. பிற வினையாயின் எழுவாய் ஒன்றினையே காட்டும் விகுதி பெற்று வருதலும் உண்டு.

| | | |
|---|---|---|
| மதம் | (mata-m) | வெட்டுகிறேன் |
| மதவ் | (mata-w) | வெட்டுகிறேன் (ஒன்றை) |
| மதஹஙயுன் | (mata-hanaju-n) | வெட்டுகிறேன் (இரண்டை) |
| மதய்ன் | (mata-j-n) | வெட்டுகிறேன் (பலவற்றை) |
| யீலெம் | (jiile-m) | வாழுகிறேன் |
| மதமிக் | (mata-mik) | இருவர்வெட்டுகிறோம்(ஒன்றை) |
| மதஉக் | (mata-wk) | வெட்டுகிறோம் (ஒன்றை) |

எனப் பல்வேறு விகுதிகள் உள்ளன.

## 3. 7 அல்டய்க் மொழிகள் (Altaic Languages)

துருக்கிய மொழிகள் (Turko- Tatar), மங்கோலிய மொழிகள், மஞ்சு – துங்கூஸ் மொழிகள் (Manchu - Tungus) ஆகிய மூன்று பிரிவு மொழிகளை இணைத்து இன்று அல்டய்க் மொழிகள் என்ற பெயரால் அழைக்கின்றனர். துருக்கி, ரஷ்ய நாட்டில் வால்கா முதல் கிழக்கு நோக்கிப் பரந்து கிடக்கும் ஆசியப் பிரதேசம், மஞ்சூரியா (சைனு), சைனுவில் சிங்கியாங் பகுதிகள், மங்கோலியா, ஈரானின் வடமேற்குப் பகுதிகள், ஆப்கானிஸ்தானத்தின் வடபகுதி போன்ற பல இடங்களில் இவ்வின மொழிகள் வழங்குகின்றன. சுமார் ஏழு கோடி மக்கள் இம்மொழிகளைப் பேசுகின்றனர்.

மங்கோலியர்களையும் துருக்கியர்களையும் பண்டை ரஷ்ய நூல்களும் சைன நூல்களும் தாத்தர் (Tatar) மக்கள் என்று குறிப்பிட்டன. தாத்தர் என்ற சொல் மங்கோலியாவின் வடகிழக்குப் பகுதியில் வாழ்ந்து வந்த மக்களைக் குறித்த 'தாத்த (Tata) என்ற சொல்லிலிருந்து வந்திருக்கலாம் என்று எண்ணுகின்றனர். ரஷ்ய புரட்சிக்குப் பின்னர் தாத்தர் என்ற சொல் வட காக்கேசிய பகுதிகளில் வாழ்ந்து வந்த துருக்கிய மக்களைக் குறிப்பிடுவதாயிற்று. அதன் பின்னர் வால்கா, யூரல் பிரதேசங்கள், சைபீரியா போன்ற இடங்களில் வாழும் மக்களைக் குறிப்பிடும் சொல்லாயிற்று. இன்று துருக்கிய, மங்கோலிய, மஞ்சு-துங்கூஸ் மக்களை அல்டய்க் மக்கள் என்றும் இம்மொழிகளை அல்டய்க் மொழிகள் (Altaic Languages) என்றும் குறிப்பிடுவர். அல்டய்க் என்ற சொல் ரஷ்யாவுக்கும் மங்கோலியாவுக்கும் சைனுவுக்குமிடையே உள்ள எல்லையில் கிடக்கும் மலையின் பெயராம்.

இம்மொழிகளின் இடையே இனத்தொடர்பு காணப்படுகிறது என்று கூறிய பெருமை ஸ்டராகலன் பர்க் (Fr. T. Von

Strahlenberg), லெப்னிட்ஸ் (C. W. Von Leibnitz 1646-1716) என்ற அறிஞர்களைச் சாரும். இவர்கள் உராலிக் மொழிகளுடன் இவற்றை இணைத்து ஒரு இனமாகக் கருதினர். முன்னர்க் குறிப்பிட்டது போன்று பத்தொன்பதாவது நூற்றாண்டில் இக் கொள்கை ஓரளவுக்கு ஒத்துக்கொள்ளப்பட்டது என்றாலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பல அறிஞர்கள் இவ் வுறவில் ஐயப்பாடு கொண்டனர். இன்னும் இவ்வையப்பாடு நீங்கவில்லை. மொழியியல் துறையில் வளர்ந்து வரும் ஆராய்ச்சியே முடிவான நிலையைக் கொடுக்கும்.

சிலர் இம்மொழிகளுடன் கொரியன் மொழியையும் இன்னும் சிலர் ஜப்பானிய மொழியையும் அடக்கினர்.[1] இக் கொள்கை உடையவர்கள் இன்று மிகச் சிலரே ஆவர்.

இம்மொழிகளின் முதல் எழுத்துச் சான்றுகளாகக் கிடைப்பன ஒக்ரோன் (Okhron) கல்வெட்டுக்களாகும் இவை கி. பி. எட்டாம் நூற்றாண்டைச் (734 அல்லது 735) சார்ந்தன. காலம் நிர்ணயிக்கப்படாத சில கல்வெட்டுக்களும் கிடைத்துள்ளன. இவை கி. பி. ஆறும் நூற்றாண்டைச் சார்ந்தனவாக இருக்கலாம் என எண்ணுகின்றனர்.

இவை பல்வேறு எழுத்துமுறையைக் கொண்டிருந்தன. துருக்கிய மொழிகள் முதன் முதலில் துருக்கிய, ரூனிக் எழுத்துக்களாலும் பின்னர் (9–ம் நூற்றாண்டு) உகுர் எழுத்துக்களாலும் பின்னர் இம்மக்கள் இஸ்லாமிய மதத்தைத் தழுவிய போது (10–ம் நூற்றாண்டு அரபிக் எழுத்துக்களாலும் எழுதப்

1. Turkish, Mongol and Japanese are the most prominent representives among the languages of the Altaic branch of the Mongol family.

Hands Nordewin Von Koerber, *Comparative Study of the Turkish, Mongol and Japanese Languages*, p. 6.

பட்டன. பின்னர் துருக்கி மொழியிலும் பிற மொழிகளிலும் ரோமன் எழுத்துக்கள் பயன்பட்டன. பின்னர் இருபதாம் நூற்றாண்டில் ரஷ்ய நாட்டு மொழிகளில் கிரில்லிக் எழுத்து முறை புகுத்தப்பட்டது. இன்று துருக்கிய மொழிகள் புதிய உகுர் (சைனா), உரோமன் எழுத்துக்களாலும் மங்கோலியன் மொழி கிரில்லிக் முறையினாலும் மஞ்சு மொழி மங்கோலிய முறையினும் எழுதப் படுகின்றன.

யகுத், துர்க்குமென் என்ற இரு மொழிகளைத் தவிர பிற துருக்கிய மொழிகளில் குறில், நெடில் வேற்றுமை இல்லை.[1] ஆனால் மங்கோலிய, மஞ்சு மொழி உயிர்கள் குறில், நெடில் வேற்றுமை உடையன வாகும். கடன் வாங்கப்பட்ட சொற்களைத் தவிர இம்மொழிச் சொற்கள் பொதுவாக இரு மெய்மயக்கங்களில் தொடங்குவதோ அன்றி முடிவதோ இல்லை. உராலிக் மொழிகளில் உடனிலை மெய்மயக்கங்கள் காணப்பட இவற்றில் காணப்படாமை இவ்விரு இனங்கட்குமிடையே காணப்படும் ஒரு வேற்றுமையாகும்.[2]

உராலிக் மொழிகளைப் போன்றே இம்மொழிகளிலும் உயிர் ஒருமைப்பாட்டினைக் காணலாம். துருக்கிய மொழிகள் பொதுவாக இப்பண்பினை நன்கு காட்டுவதாக உள்ளன. துருக்கிய மொழிகளில் சுவாஷ் ஒன்றுதான் அதிகமாக இப்பண்பைக்

---

1. Another feature of most present-day Turkic languages is the fairly general absence of long vowles. Old Turkic can be assumed to have passed long and short vowels, but the original length of vowel sounds has, to a great extent, been preserved only in Turkmen and Yakut, and is but sporadically met within other languages.

*Ibid*, p. 6.

2. Dr. Stefan Wurm; *Turkic Peoples of the USSR*, p. 30.

காட்டுவதில்லை.[1] இதைப் போன்று மஞ்சு–துங்கூஸ் மொழிகளும் இப்பண்பினை அதிகமாகக் காட்டுவதில்லை என்பர்.[2]

தமிழில் காணப்படும் பால் பகுப்பு இந்த மொழிகளில் இல்லை. ஆனால் ஒருமை, பன்மை எண்கள் காணப்படுகின்றன. இம்மொழிகளனைத்தும் இவ்வேற்றுமையைப் பல்வேறு ஒட்டுகளால்தான் காட்டுகின்றன. இன்றைய மங்கோலியன் பேச்சு மொழியில் ஒருமை, பன்மை வேற்றுமை இல்லாததும் மஞ்சு மொழி பிற முறைகளுடன் பெயர்கள் இரட்டிப்பதால் பன்மையைக் காட்டுவதும் குறிப்பிடத் தக்கனவாம்.

ளெ ஸெ வருடங்கள்

இம்மொழிகள் பொதுவாகத் தமிழைப் போலவே பல வேற்றுமைகளைக் கொண்டுள்ளன. துருக்கிய மொழிகளில் யகுத் வேற்றுமைகள் பிற மொழி வேற்றுமைகளினின்றும் சிறிது வேறுபட்டுள்ளன என்பர். எல்லா மொழிகளும் பின்னொட்டுகளால் இவற்றைக் காட்ட, மஞ்சு மொழியில் பெயர்களின் பின்னால் வரும் பின்னுருபுகளே **(Post Positions)** வேற்றுமைப் பொருட்களைத் தருகின்றன. எனினும் மூவிடப் பெயர்களுடன் வரும் ஒட்டுகளே அம்மொழியில் வேற்றுமை உருபுகளாகப் பயன்படுகின்றன.

தமிழில் நாம், நாங்கள் என்ற இரு வகையான தன்மைப் பன்மை உள்ளன. அல்டய்க் மொழிகளைப் பொருத்த மட்டில் மூன்று விதமான நிலைகள் உள்ளன. துருக்கிய மொழிகளில் ஒரே தன்மைப் பன்மையே உள்ளது. மங்கோலிய மொழிகளில்

---

1. Louis H. Gray, *Foundations of Language*, p. 390.

2. In Churash, however, this principle is not carried through quite as strictly some other languages require it.
John R. Krueger, *Chuvash Manual*, p. 96.

தமிழைப் போன்றே உளப்பாட்டுத் தன்மைப் பன்மை காணப் படுகின்றது. புரியத் மொழியில் இரு பெயர்கள் காணப்படினும் (biden, man) இன்று பொருளில் எந்தவித வேற்றுமையுமின் றியே வழங்கப்படுகின்றன என்பர்.[1] மஞ்சு மொழியில் "ஒரு நாட்டு மக்கள்", "ஒரு இன மக்கள்' என்ற பொருளைத் தரும் தன்மைப் பன்மை ஒன்று உள்ளது என்பர் [2]

உராலிக்—அல்டய்க மொழி வினை முற்றுக்கள் எழுவாயினைக் காட்ட வல்லன. பொதுவாக எல்லா மொழிகளும் பல்வேறு விகுதிகளை ஏற்று ஒருமை, பன்மையைக் காட்டும். ஆனால் மங் கோலியனும் மஞ்சுவும் இப்பண்புக்கு விதி விலக்காய் அமைந் துள்ளன. இவற்றின் வினைச்சொற்கள் ஆங்கில வினைச் சொற் களைப் போன்று காலத்தை மட்டும் காட்டுவனவாக உள்ளன.

---

1. All the Altaic languages show this peculiarity, the Turkish dialects the most, the Tungusic and Manchu the least.

P. C. Von Mollendorff, *A Manchu Crammar*, p. 1.

2. There are two pronouns of the first person plural: stem */biden/* and stem */man/*. Both mean "we". In ancient Mongolian they had slightly different meanings: */biden/* was an inclusive pronoun (including the speakers and listeners) and */man/* was an exclusive pronoun (comprising only the speakers). In Buriat the difference in meaning was lost long ago. Both stems are used indiscriminately.

Nicholas N. Poppe, *Buriat Grammar*, p. 50.

P. C. Von Mollendorff, *Ibid*, p. 6.



அல்டய்க்
துருக்கிய மொழிகள்
மங்கோலிய மொழிகள்
மஞ்சு-துங்கூஸ் மொழிகள்
வடக்கு
மேற்கு
கிழக்கு
வடக்கு துங்கூஸ்(3.73)
தெற்கு துங்கூஸ்
புரியத்
ஒரியத்
மொகுல்
ஒர்தொஸ்
கார்க்கின்
சகா
கால்கா
மஞ்சு
நனய் (3.73)
வடகிழக்கு
வடமேற்கு
தென்கிழக்கு
தென்மேற்கு
யகுத்
சுவாஷ்
புதிய உகுர்
உஸ்பெக் (சகதை)
துர்க்குமென்
ஆஸ்பர்ஜானி
துருக்கி
கிர்க்கிஸ்
கசக்
கரச்சய்
பால்கர்
நோகய்
கரய்ம்
தாத்தர்
பஸ்கீர்
துவா (உரியங்கை)
கிரகாஸ்
கக்காஸ்
ஷோர்
அல்டய்

## 3.71 துருக்கிய மொழிகள் (Turkic Languages)

இவற்றுள் பதினேழுக்கதிகமான முக்கிய மொழிகள் உள்ளன. இம்மொழிகள் கருங்கடல் முதல் கிழக்கு சைபீரியா வரையிலும் வழங்குகின்றன ஆறரைக் கோடிக்கதிகமான மக்கள் இம்மொழிகளைப் பேசுகின்றனர். இவர்களுள் சுமார் மூன்று கோடி மக்கள் சோவியத் நாட்டிலும் இரண்டு கோடி மக்கள் துருக்கியிலும் ஐம்பது லட்சம் மக்கள் சைனாவில் சிங்கியாங் மாநிலத்திலும் மீதி உள்ளோர் யுகோஸ்லேவியா (250,000), பல்கேரியா (200,000), கிரீஸ் (200,000), ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா போன்ற பல இடங்களிலும் வாழுகின்றனர். இம்மொழிகளை முன்னால் துர்க்கோ - தாத்தர் (Turco - Tatar) என்று அழைத்தனர்.

துருக்கிய மக்களைப் பற்றிய குறிப்புக்கள் முதன் முதலாக 6—ஆவது நூற்றாண்டைச் சார்ந்த சீன எழுத்துக்களில் காணப்படுகின்றன. நாடோடிகளாய்த் திரிந்த துருக்கிய மக்கள் (Turk) மங்கோலியா முதல் கருங்கடல் வரை பரந்து கிடந்த பேரரசு ஒன்றை கி. பி. 6—வது நூற்றாண்டில் நிறுவினர் என்று கூறுகின்றன இவை. இப்பேரரசு ஏழாவது நூற்றாண்டில் "தாங்" பேரரசுக்குப் பணிய வேண்டியிருந்தது என்றாலும் இந்நூற்றாண்டின் பிற்பகுதியில் சீன அரசினின்றும் விடுதலை பெற்று மீண்டும் தனியாட்சி நிறுவியது. இப்பேரரசு பற்றிய பல செய்திகள் ஓர்க்கொன் (Orkhon) கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. கி. பி. எட்டாவது நூற்றாண்டைச் சார்ந்த இக்கல்வெட்டுக்களும் யெனிசெய் (Yenisei) ஆற்றுப் பள்ளத்தாக்கில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களும் (1721-ல்) துருக்கிய மொழிகளில் கிடைக்கும் பழைமையான எழுத்துச் சான்றுகளாகும். இக்கல்வெட்டுக்கள் ஒருவகை புதிய வடிவான எழுத்துக்களால் எழுதப்பட்டவை. இவற்றை 1893—ல் வாசித்தறிந்த டேனிஷ்

மொழியறிஞர் "துருக்கிய ரூனிக் எழுத்துக்கள்" என இவற்றை அழைத்தார். இவ்வெழுத்துக்கள் அரபிக் எழுத்து முறையினின்றும் வந்திருக்கலாம் என எண்ணுகின்றனர். இத்தகைய கல்வெட்டுக்கள் பல சைனுவைச் சார்ந்த துருக்கிஸ்தான் (Turkestan), தலாஸ் (Talas) ஆற்றுப் பள்ளத்தாக்கு, தர்பான் (Turfan) போன்ற பல இடங்களில் கிடைத்துள்ளன. இக் கல்வெட்டுக்களின் எழுத்து முறையில் பல வேறுபாடுகளும் உள்ளன.[1] இம்முறையையே ஹங்கேரியர்களும் கைக்கொண்டிருந்தனர் என்பர்.[2]

இதன் பின்னர் தோன்றிய (8, 9 நூற்றுண்டு) கல்வெட்டுக் கள் உகுர் (Uighur) எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. துருக்கிய மக்களில் ஒரு பிரிவினர் சோகுடியன் (Sogudian) மக்களின் மதத்தைத் தழுவிய போது அவர்கள் மனிசெயின் (Manichaean) எழுத்து முறையினையும் கைக்கொண்டனர். இவ்விரண்டு முறைகட்குமிடையே ஒரு சில வேறுபாடுகளே உள்ளன.[3] உகுர் முறையினின்றுதான் மங்கோலிய, மஞ்சு

---

1. The symbols of this script, which are assumed to be derived from the Aramaic alphabet through the old Soghdian alphabet, show numerous variations in different inscriptions and manuscripts

Dr. Stefan Wurm, *Turkic Peoples of the USSR*, p. 11.

2. The Turks have used various scripts during the course of their history. The oldest is the Kok Turkic Script, the first general script of the Nomadic world. Records in this script have come down to us from the Kirghis (6th C,) the Kok Turks, and the Peehenege. This script was also adopted by the Uralish Hungarians.

T. Nemeth, *Turkish Grammar*, p. 15.

3. In the eighth and ninth centuries, the Uighur script, derived from one of the Northern semitic alphabets through the intermediary of the Soghdian script, from which it differs

எழுத்துக்கள் தோன்றின. உகுர் எழுத்துக்களால் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் பல சைன துருக்கிஸ்தானிலும் தர்பானிலும் கிடைத்துள்ளன.

ஆனால் மத்திய ஆசியாவில் வாழ்ந்த துருக்கிய மக்கள் ஒன்பது, பத்தாம் நூற்றாண்டுகளில் இஸ்லாம் மதத்தைத் தழுவிய போது மீண்டும் இவர்களின் எழுத்து முறையில் மாற்றம் ஏற்பட்டது. அரபிக் எழுத்து முறை மெல்ல மெல்லப் பரவ உகுர் எழுத்து வழக்கிழந்தது. மக்களிடையே வழக்கற்ற போதிலும் அரசாங்கச் செய்திகள் பதினைந்தாம் நூற்றாண்டு வரையிலும் இவ்வெழுத்துக்களாலேயே எழுதப்பட்டன என்பர். ஆனால் சைனாவில் வாழ்ந்த இஸ்லாம் மதத்தைத் தழுவாத துருக்கிய மக்கள் பதினெட்டாவது நூற்றாண்டு வரையிலும் இம்முறையையே பின்பற்றினர். ஆனால் அதற்குப் பின்னர் திபேத்திய எழுத்துமுறை வழக்கில் வர உகுர் எழுத்துக்கள் வழக்கிழந்தன.

அரபிக் முறையும் துருக்கிய மொழியில் இறுதிவரையிலும் பின்பற்றப் படவில்லை. ஒட்டமன் (Ottomon) மொழியினின்றும் இன்றைய துருக்கி மொழி உருவாகிய போது துருக்கியில் 1928–ல் உரோம எழுத்துக்கள் புகுத்தப் பட்டன. இன்று துருக்கி மொழி (Turkish) இவ்வெழுத்துக்களாலேயே எழுதப்படுகிறது.

ஆனால் சொவியத் நாட்டில் வழங்கும் உஸ்பெக், அஸர்பஜானி, சுவாஷ், யகுத் போன்ற மொழிகளின் நிலை வேறாகும். இம்மொழிகள் முன்னால் உரோம எழுத்துக்களால் எழுதப்பட்டன. ஆனால் இன்று இவையனைத்தும் ரஷ்ய, சிரில்லிக் எழுத்து முறையினால்தான் எழுதப்படுகின்றன.

---

only very little, came into use among the Uighurs (see Historical sketch) and eventually replaced the old Runic script.

Stefan Wurm, *Ibid*, p. 11.

துருக்கிய மொழிகளில் முதல் முதலாக இலக்கிய மொழியாக உருவானது உகுர் மொழியாகும். பழைய கல்வெட்டுக்களில் காணப்படும் மொழி நிலைக்கும் இந்ன் மொழி நிலைக்கும் அதிக வேற்றுமையில்லை. பத்தாவது, பதினொன்றாவது நூற்றாண்டுகளில் மத்திய ஆசியாவில் உகுர் இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு கரகனித் இலக்கியம் வளர்ந்தது என்பர். எனினும் பதினான்கு அல்லது பதினைந்தாவது நூற்றாண்டு வரையிலும் துருக்கிய மொழிகளில் இலக்கியங்கள் ஒன்றுக்கொன்று மிகுந்த உறவுடனும் தொடர்புடனுமே காணப்பட்டன. இக்காலத்திற்குப் பின்னர்தான் ஒட்டமன் துருக்கி, சகதை **(Chaghatai)** துருக்கி என இரு தனிப்பட்ட பிரிவாகக் கிளைத்தன எனக் கூறலாம். பொதுவாக இவ்விலக்கியங்களில் பெர்சியன், அரபிக் மொழிகளின் செல்வாக்கினைக் காணலாம். இவையனைத்தும் அரபிக் எழுத்துக்களிலேயே உள்ளன.

இன்றைய துருக்கிய இலக்கியங்களில் பெரும்பாலானவை ரஷ்ய நாட்டைச் சார்ந்தனவாகும். முதல் உலகப் பெரும் போர் வரையிலும் இவை பற்றிய நூல்கள் பெரும்பாலும் ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன் மொழிகளில் வெளிவந்தன. ஆனால் 1917 புரட்சிக்குப் பின்னர் ரஷ்ய மொழியிலேயே பெரும்பாலும் வருகின்றன. சோவியத் அரசாங்கம் அரபிக் எழுத்துக்களை நீக்கிவிட்டு உரோம எழுத்தினையும் பின்னர் சிரில்லிக் எழுத்துக்களையும் புகுத்தியுள்ளது.[1]

இம்மொழிகளின் முக்கியமான பண்பாகக் கருதப்படுவது உயிர் ஒருமைப்பாடாகும். முன்னர் வருகின்ற உயிர்கட்கேற்ப பின்னர் வருகின்ற உயிர்கள் அமைகின்றன. இதனால் பன்மை, வேற்றுமை போன்ற இலக்கணக்கூறுகளைக் காட்டும் உருபுகள்

1. Rudolf Loewonthal, *The Turkish Languages, and Literatures of Central Asia,* p. 8.

ஒன்றுக்கு மேல் காணப்படுகின்றன. எடுத்துக் காட்டாகத் துருக்கி மொழியில் பன்மை உருபுகள் இரண்டு உள்ளன.

| | | |
|---|---|---|
| எவ் | (ev) | வீடு |
| அத் | (at) | குதிரை |
| எவ்லெர் | (ev–ler) | வீடுகள் |
| அத்லர் | (at-lar) | குதிரைகள் |
| எவ்லெரிம் | (ev-ler-im) | என் வீடுகள் |
| அத்லரும் | (at-lar-um) | என் குதிரைகள் |
| எவ்லெரிமை | (ev-ler-im-ai) | என் வீடுகட்கு |
| அத்லருமை | (at-lar-um-ai) | என் குதிரைகட்கு |

இம்மொழிகளில் பொதுவாக உயிர்களில் குறில், நெடில் வேற்றுமை (துர்க்குமென், யகுத் தவிர) காணப்படுவதில்லை. ஆனல் பழைய துருக்கி மொழியில் இருந்தது என்று கூறு வர். இன்றும் பெர்சியன், அரபிக் போன்ற மொழிகளினின்றும் கடனகப் பெறுகின்ற சொற்களில் நெடில் உள்ளன என்பர். இதே போன்றுதான் துருக்கி சொற்களில் லகர, ரகரங்களோ இரு மெய்மயக்கமோ மொழிக்கு முதலில் வருவதில்லை, சொல் லுக்கு இறுதியிலும் எவ்வித மெய்மயக்கமும் வருவதில்லை. பேச்சுத் தமிழில் இடையிலுள்ள உயிர்கள் கெட்டு இரு மெய் மயக்கங்கள் முதலில் வருவது போன்று இம்மொழிகளில் முத லிலும் ஈற்றிலும் வருவதுண்டு.

இம்மொழிகள் தமிழைப் போன்று ஒட்டு மொழிகளாகும். பல்வேறு ஒட்டுகள் பல்வேறு இலக்கணக்கூறுகளைக் காட்டுகின் றன. ஒரு இலக்கணக்கூறுக்கு ஒரு ஒட்டு என இருப்பதால் மிக ஒழுங்காகவும் கண்ணடி போன்று மிகத் தெளிவாகவும் இம்மொழிகளின் அமைப்பு உள்ளது. லத்தீன், ரஷ்யன் போன்ற மொழிகளில் ஒருமைக்கு ஒரு வேற்றுமை உருபு, பன்மைக்கு

வேறு உருபு என இல்லாது தமிழைப் போன்றே காணப் படுகிறது. தமிழில் "மனிதனின் வீடு" எனக் கூறுவதைத் துருக்கிய மொழியினர் "மனிதனின் வீடு அவனுடைய" என்று கூறுகின்றனர். எடுத்துக்காட்டாக உஸ்பெக் மொழியினர்.

அதம் னிங உயி (adɛm-niṅɛ üyi)

என்றும் துருக்கி மொழியினர்

அதேமுன் எவி (atam-In-ev-i)

என்றும் கூறுவர்.[1] மேலும் தமிழில் உடைய பொருள் மூவிடப் பெயர்களாயின் அதனுடன் அது வேற்றுமை உருபை இணைத்துக் கூறுகிறோம். ஆனால் துருக்கிய மொழிகளில் உடைமைப் பொருள்களுடன் என்னுடைய, உன்னுடைய எனப் பொருள்படும் ஒட்டுகளை இணைத்துக் கூறுவது காணத்தக்கதாம்.

| | | |
|---|---|---|
| குயு | கிணறு | |
| குயும் | என்னுடைய கிணறு | |
| குயுன் | உன்னுடைய கிணறு | (துருக்கி) |

இவை எந்த விதமான பால் பகுப்பையும் கொண்டதல்ல. தமிழில் காணப்படும் உயர்திணை, அஃறிணை பகுப்போ ஆண்

1. To express the genitive, it is not sufficient to add the genitive suffix to the word indicating the possessor, but the possessive suffix of the third person must also be added to the word indicating the object possessed. The word indicating the possessor always precedes the word indicating the object possessed Conesequently, for "the man's house" a phrase similar in structure "man's house – his " is used in Turkic languages, i.e. in Turky – Turkish: *adam-In - ev-i*, in Uzbek ......

Stefan Wurm, *Ibid*, pp. 36-37.

பெண், பால் பகுப்போ இவற்றில் இல்லை. படர்க்கை மூவிடப் பெயரும் பால் பகுப்பினைக் காட்டுவதில்லை.[1]

| | | | |
|---|---|---|---|
| ஒ | (o) | அவன், அவள், அது | (துருக்கி) |
| உ | (u) | அவன், அவள், அது | (உஸ்பெக்) |
| வல் | (val) | அவன், அவள், அது | (சுவாஸ்) |
| கினி | (kini) | அவன், அவள், அது | (யகுத்) |

பொதுவாகத் துருக்கிய மொழிகளில் மூன்று சுட்டுப் பெயர்கள் உள்ளன. அண்மையிலிருக்கும் சேய்மையிலிருக்கும் பொருட்களையும் சுட்டும். சேய்மையிலுள்ளவற்றைக் கண்கட்குத் தெரிவன, தெரியதான என இருவகைப் படுத்துவர்.[2] ஆனல் எல்லா மொழிகளிலும் இவ்வேற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. சுவாஷ் போன்ற மொழிகளில் மூன்றுக்கும் அதிகமான சுட்டுக்கள் உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| பு | (bu) | இது | |
| ஷு | (su) | இது (சிறிது சேய்மையில்) | |
| ஒ | (o) | அது | (துருக்கி) |
| ஷு | (su) | அது, அவை | |
| பு | (bu) | இது, இவை | |
| உ | (u) | அது, அவை (சேய்மை) | (உஸ்பெக்) |

---

1. John R. Krueger, *Yakut Manual*, p. 29

John R. Krueger, *Chuvash Manual*, p. 53

2. The demonstrative pronouns in the Turkic languages distinguish three degrees of distance, in contrast to the two ("this" and "that") found in English. Turkic speakers use different pronouns to indicate "this" (near), "that" (distant, but visible) and "that" (distant and invisible).

Stefan Wurm, *Ibid*, p. 38.

| | | | |
|---|---|---|---|
| பு | (bu) | இது | |
| இதி | (iti) | இது (சிறுது சேய்மை) | |
| ஒல் | (ol) | அது | (யகுத்) |
| கு | (ku) | இது | |
| ஸக் | (sak) | அது | |
| லெஷ் | (les) | அது | (சுவாஷ்) |

வினைச்சொற்கள் பல ஒட்டுகளால் இலக்கணக்கூறுகள் பலவற்றைக் காட்டும். இந்தோ ஐரோப்பிய மொழிகளைப் போலல்லாமல் இவ்வினைச் சொற்கள் விகுதிகளை ஏற்று ஒரு வினையினைக் காட்ட வல்லன. தமிழில் காணப்படுவது போன்ற பெயரெச்சங்கள் இம்மொழிகளிலும் உள்ளன.

| | | |
|---|---|---|
| கெலென் அதம் | (gel-en-adam) | வருகிற மனிதன் |
| கெல்மிஸ் அதம் | (gel-mis-adam) | வந்த மனிதன் |
| கெலெஸெ அதம் | (gel-esek-adam) | வரும் மனிதன் |

எளிமையான அமைப்பைக் கொண்டிருந்த போதிலும் இம் மொழிகள் எளிமையாக மாறும் தன்மையன அல்ல. துருக்கிய மொழிகளில் கிடைக்கும் பழைய கல்வெட்டுக்களில் காணப் படும் மொழி நிலைக்கும் இன்றைய மொழி நிலைக்கும் அதிக வேற்றுமை இல்லை என்பர்.[1] இவற்றுள் சுவாஷ், யகுத் மொழி

1. Although the Turkic languages do display a remarkable similarity among themselves and are moreover very conservative (so that the difference in structure between the language of the Orkhon inscriptions of the 8th century and modern Turkic language is not great), a generally accepted scheme for arranging and classifying the various groups has not yet been agreed upon.

John R. Krueger, *Chuvash Manual*, p. 54.

களே பிற மொழிகளினின்றும் சிறிது வேறுபட்டுள்ளன. பிற மொழிகள் மிக நெருங்கிய தொடர்புடன் காணப்படுகின்றன.[1]

துருக்கிய மொழிகளை வகைப்படுத்துவதில் எல்லோருக்கும் உடன்பட்ட ஒரு நிலை இல்லையெனினும் இவற்றை வட கிழக்கு, வட மேற்கு, தென் கிழக்கு, தென் மேற்கு எனப் பிரிப்பர். யகுத், சுவாஷ் மொழிகள் தனியாகக் கருதப்படுகின்றன.

**வடகிழக்கு மொழிகள்**

இவற்றை வட மொழிகள் என்றும் அழைப்பர். இதன் கண் துவா (Tuva) அல்லது உரியங்கை (Urayankhai), கராகாஸ் (Karagas), காக்கஸ் (Khahas), ஷோர் (Shor) போன்ற மொழிகள் அடங்கும். ஒய்ரொத் என்றழைக்கப்பட்ட அல்டய் (Alati proper) மொழிகளும் இப்பிரிவினுள் உட்பட்டதாகும். அல்டய் மொழிகள் அல்டய் பிரதேசங்களில் வழங்குவனவாம். இன்று இம்மொழிகள் அனைத்தும் ரஷ்ய எழுத்துக்களால் எழுதப்படுகின்றன.

**வடமேற்கு மொழிகள்**

இவற்றை மேற்கு மொழிகள் என்றும் அழைப்பர். இப்பிரிவின்கண் கிர்கிஸ் (Kirgiz), (முன்னால் கரகிர்கிஸ் (Karakirgiz) என்றழைக்கப் பட்டது) கசக் (Kazakh) மொழிகளும் காக்காசஸ் பிரதேசங்களில் வழங்கும் கரச்சை (Karachai), பால்கர் (Balkar), பஷ்கிர் (Baskir), நெகய் (Nogai), கரய்ம் (Karaim) மொழிகளும் தாத்தர் மொழிகளும் அடங்கும். இவற்றை முன்னால் பொதுவாக கிப்சக் (Kipchak) என்றழைத்தனர்.

---

1. In general the Turkic languages have been very conser vative, with the exception of Chuvash and Yakut, they are closely related to each other.

Nemeth, *Turkish Grammar*, p. 14.

இவற்றுள் கிர்கிஸ் சுமார் 10 லட்சம் மக்களாலும் கசக் 35 லட்சம் மக்களாலும் தாத்தர் சுமார் 50 லட்சம் மக்களாலும் பேசப் படுகின்றன. கசக் மிக முக்கியமான மொழியாகும். கடந்த மூன்று நூற்றுண்டுகளில் இது மிகச் சிறந்த இலக்கிய மொழி யாக மாறியுள்ளது. அரபிக் எழுத்துக்களால் எழுதப்பட்ட இது பின்னர் 1928 முதல் உரோம எழுத்துக்களையும் பின்னர் 1940 முதல் ரஷ்ய சிரில்லிக் எழுத்துக்களையும் பயன் படுத்தி யுள்ளது. இதைப்போன்றே தாத்தர் மொழியும் முக்கியம் வாய்ந்தது. சிரில்லிக் எழுத்துக்களே இப்பிரிவு மொழிகளனைத்துக்கும் பயன்படுகின்றன.

### தென் கிழக்கு மொழிகள்

இவற்றைக் கிழக்கு மொழிகள் என்றும் அழைப்பர். சைனுவில் பேசப்படும் புதிய உகுர் (New Uighur) மொழியும் ரஷ்யாவில் உஸ்பெக்கிஸ்தானில் வழங்கும் உஸ்பெக்கும் இப்பிரிவில் அடங்கும். புதிய உகுர் பேசுவோராக சுமார் 30 லட்சம் மக்கள் உள்ளனர் என்பர். துருக்கிய மொழிகளில் இது ஒன்றே பதினெட்டாம் நூற்றுண்டு வரையிலும் உகுர் எழுத்துக்களால் எழுதப்பட்டது. பின்னர் திபேத்திய எழுத்துக்கள் பயன்பட்டன. உஸ்பெக், சகதை மொழிகளினின்றும் தோன்றியது எனக் கூறலாம். சகதை இலக்கியங்கள் துருக்கிய மொழி இலக்கியங்களில் முக்கியமானவை. இவையனைத்தும் அரபிக் எழுத்துக்களிலேயே எழுதப்பட்டுள்ளன. சகதை என்ற பெயர் மங்கோலிய பேரரசனை செங்கிஸ்கானின் மகனுடைய பெயராகும். அவன் கண்ட இடத்திற்கும் அவ்விடத்தில் வழங்கிய துருக்கிய மொழிக்கும் இப்பெயர் பொருந்துவதாயிற்று. இன்று சோவியத் நாட்டில் உஸ்பெக் மிக முக்கிய மொழியாம். பிற துருக்கிய மொழிகளைப் போன்றே இதுவும் இன்று சிரில்லிச் எழுத்துக்களால் எழுதப்படுகிறது.

**தென் மேற்கு மொழிகள்**

இவற்றைத் தென் மொழிகள் என்றும் அழைப்பர். துர்க்குமென், அஸர்பஜானி, துருக்கி மொழிகள் ஆகியவை இப்பிரிவினுள் அடங்கும். முன்னால் இவை ஒகுஸ் மொழிகள் (**Oghuz Turks**) என்றழைக்கப்பட்டன. துர்க்குமென் சோவியத் நாட்டிலும், அஸர்பஜானி சோவியத் நாட்டிலும் (25 லட்சம்) வட ஈரான் நாட்டிலும் (10 லட்சம்) துருக்கி மொழி துருக்கியிலும் வழங்குகின்றன. துர்க்குமென் பேசுவோராக இன்று 10 லட்சம் மக்கள் உள்ளனர். இன்று துருக்கியில் துருக்கி மொழி பேசுவோராக இரண்டு கோடி மக்களும் பிறமொழி பேசுவோராகப் பல லட்சம் மக்களும் உள்ளனர். துர்க்குமென் மொழிதான் 13வது நூற்றாண்டில் மத்திய ஆசியாவில் துருக்கிய இலக்கிய மொழிக்கு வழிவகுத்தது. 14-வது நூற்றாண்டில் தனக்கென ஒரு இலக்கியப் பாணியை வகுத்துக் கொண்ட இம்மொழி 15-வது நூற்றாண்டில் சகதை மொழியின் செல்வாக்குக்குட்பட்டது. அரபிக் எழுத்தில் எழுதப்பட்ட இது இருபதாம் நூற்றாண்டில் உரோமன் எழுத்து முறையையும் (1929-30) பின்னர் (1939–40) ரஷ்ய சிரில்லிக் முறையையும் மேற்கொண்டது. 14-ஆவது நூற்றாண்டில் ஒரு சிறந்த பொற்காலத்தைக் கொண்டிருந்த அஸர்பஜானி, ஒட்டமன் இலக்கியத்திற்கு அடிபணிந்தது. துருக்கிய மொழிகளில் முதன் முதலாக உரோமன் எழுத்துக்களை மேற்கொண்டவற்றில் இதுவும் (1924) ஒன்றாகும். பின்னர் (1930–40) சிரில்லிக் முறையைக் கொண்டது.

### 3.71.1 துருக்கி மொழி

இன்று துருக்கி மொழி என்று கூறினால் துருக்கியில் பேசப்படும் ஒட்டமன் (**Ottaman**) துருக்கிய மொழியையே குறிக்கும். துருக்கியில் வாழும் 2 கோடி மக்கள் இம்மொழி பேசு

கின்றனர். இம்மொழியின்கண் அரபிக், பெர்சியன் மொழிகளின் செல்வாக்கை நிறையக் காணமுடியும்.

இம்மொழியும் பிற அல்டய்க் மொழிகளைப் போன்று ஒரு ஒட்டு மொழியாகும். இதனுடைய அமைப்பு கண்ணடி போன்று மிகத் தெளிவாகவும் ஒழுங்காகவும் அமைந்துள்ளது.[1] ஒழுங்கான உயிர் ஒருமைப்பாட்டைக் கொண்டு அதற்கேற்ப இனிமையான ஓசையையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. **a, o, u, ı** என்றும் **e, ö, ü, i** என்றும் இரண்டு பிரிவான உயிர் ஒலிகள் உடையதாகையால் ஒட்டுகளும் இரண்டு அல்லது பல உருவங்களில் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாகப் பன்மை ஒட்டு –லர், -லெர் என்று இரு உருவங்களில் உள்ளது.

| | | |
|---|---|---|
| எவ்லெர் | **(ev-ler)** | வீடுகள் |
| அதம்லர் | **(atam-lar)** | மனிதர்கள் |

வினையிலிருந்து பெயரும், பெயரிலிருந்து வினையும் மிக எளிதாக இம்மொழியில் உண்டுபண்ணப் படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேஸ் | **(göz)** | கண் |
| கேஸ்லெமெக் | **(göz-le-mek)** | கவனிக்க |
| கேஸ்லெமெமெக் | **(göz-le-me-mek)** | கவனியாமல் இருக்க |
| செவ் | **(sev)** | காதலி (வினை) |
| செவ்கி | **(sev-gi)** | காதல் |
| ஒத்ல | **(otla)** | மேய |
| ஒத்லக் | **(otla-k)** | புல்வெளி (மேய்ச்சல் இடம்) |

1. The Turkic languages are characterized by a great regularity of patterns and by crystal clear structure, so that they look like a product of scientific planning.

Nemeth, *Turkish Grammar*, p. 14.

துருக்கி மொழியில் இலக்கணப் பால் பகுப்பு இல்லை.[1] அரபிக்கிலிருந்து கடன் வாங்கிய பெயர்ச் சொற்களில் இப்பகுப்பைக் காணலாம். பொதுவாக இதிலுள்ள பெயர்ச் சொற்கள் ஒருமையையே காட்டுவன. பன்மை ஒட்டுகளை ஏற்று பன்மையைக் காட்டும். தமிழில் 'என்னுடைய தாய்' என்று கூறுவதை இம்மொழியில் ஒரே சொல்லில் கூற முடியும். தாய் என்ற பொருளைத் தரும் சொல்லுடன் என்னுடைய, உன்னுடைய போன்ற பொருளைத் தரும் ஒட்டுகளை இணைத்துக் கூறுகின்றனர்.

| | | |
|---|---|---|
| அனம் | (ana-m) | என்னுடைய தாய் |
| அனன் | (ana-n) | உன்னுடைய தாய் |
| அனசி | (ana-si) | அவன்/அவள்/அதன் தாய் |
| அனமிஸ் | (ana-miz) | நம்முடைய தாய் |
| அனனிஸ் | (ana-niz) | உங்களுடைய தாய் |
| அனசி | (ana-si) | அவர்களுடைய தாய் |
| குயும் | (kuyu-m) | என்னுடைய கிணறு |
| குயுன் | (kuyu-n) | உன்னுடைய கிணறு |
| குயுசு | (kuyu-su) | அவன்/அவள்/அதன் கிணறு |
| குயுமுஸ் | (kuyu-muz) | நம்முடைய கிணறு |
| குயுனுஸ் | (kuyu-nuz) | உங்களுடைய கிணறு |
| குயுசு | (kuyu-su) | அவர்களுடைய கிணறு |

பன்மையைக் குறிக்கும் ஒட்டு, பெயருக்கும் இடப்பெயர் உடைமைக்கும் இடையில் வந்து பன்மையைக் காட்டும்.

| | | |
|---|---|---|
| குயுலரிம் | (kuyu-lar-im) | என்னுடைய கிணறுகள் |

---

1. Grammatical gender was originally unknown in Turkish as well as in Persian.
*Ibid*, p. 33.

எழுவாய் வேற்றுமை, ஐ வேற்றுமை, கு வேற்றுமை, இன் வேற்றுமை, இல் வேற்றுமை, அது வேற்றுமை ஆகிய ஆறு வேற்றுமைகள் உள்ளன.

| | | |
|---|---|---|
| தெனிஸ் | (deniz) | கடல் |
| தெனிஸி | (deniz-i) | கடலை |
| தெனிஸெ | (deniz-e) | கடலுக்கு |
| தெனிஸ்தென் | (deniz-den) | கடலிலிருந்து |
| தெனிஸ்தெ | (deniz-de) | கடலில் |
| தெனிஸின் | (deniz-in) | கடலின் |

பெயர்ச் சொல்லுக்கும் வேற்றுமை உருபுகட்கும் இடையில் பன்மை உருபை ஒட்டும் போது பன்மையைக் காட்டும். இவ் வுருபுகளும் சொல்லில் காணப்படுகின்ற உயிர் எழுத்துக்கேற்ப மாறும்.

தமிழில் சில சொற்கள் அடுக்கி வந்து மிகுதியைக் காட்டு வது போன்று (மெல்ல மெல்ல நடந்தான்) இம்மொழியில் பெயரடைகள் இரட்டித்து மிகுதியைக் காட்டுகின்றன.

| | | |
|---|---|---|
| உசுன் | (usun) | நீளமான |
| உசுன் உசுன் | (usun usun) | மிக நீளமான |

இதில் முழுச் சொல்லும் இரட்டித்தது. சில சொற்களில் முதல் அசை இரட்டித்து, அதனுடன் மகர ஒற்றையும் ஏற்று மிகுதியைக் காட்டும். இன்னும் சில சொற்களில் முதல் அசை இரட்டிப்பதுடன் மகர ஒற்றையும் மற்றும் சில சொற்கள் ரகர வொற்றையும் ஏற்கின்றன

| | | |
|---|---|---|
| பொம்பொஸ் | (bos-m-bos > bombos) | மிகச்சூனியமான |
| குப்குரு | (kuru-p-kuru > kupkuru) | மிக உலர்ந்த |
| தொர்தொப் | (top-r-top > tortop) | மிக வட்டமான |

தமிழைப் போன்று துருக்கி மொழியிலும் வினைமாற்றங்கள் பல்வேறு பின்னொட்டுகளினால் உணர்த்தப்படுகின்றன. இவ்வினைமாற்றங்கள் மிக ஒழுங்காகவும் எளிமையாகவும் விளங்குகின்றன.[1]

வினைச்சொற்கள் காலம் காட்டும் இறப்பில் எதிர்வு, இறப்பில் இறப்பு போன்ற காலங்கள் இம்மொழியில் உண்டு. எனினும் இறப்பு, எதிர்வு, நிகழ் காலங்கள் அதிகமாக பயிலுகின்றன.

| | | |
|---|---|---|
| செவெரிம் | (sev-er-im) | காதலிக்கிறேன் |
| செவர்திம் | (sev-er-di-m) | காதலித்தேன் |
| செவ்செகிம் | (sev-ceg-im) | காதலிப்பேன் |
| செவ்மெம் | (sev-me-m) | நான் காதலியேன் |

இறந்தகால ஒட்டான –தி– (-di) நிகழ்கால ஒட்டுக்குப் பின்னால் இணைக்கப்படுவது கவனிக்கத் தக்கதாகும். தன்மை ஒருமை, முன்னிலை ஒருமை, முன்னிலைப் பன்மை, படர்க்கை ஒருமை, படர்க்கைப் பன்மைகளும் வினைமாற்றத்தில் காணக்கிடக்கின்றன.

| | | |
|---|---|---|
| செவெரிம் | (sev-ér-im) | காதலிக்கிறேன் |
| செவெர்ஸின் | (sev–ér–sin) | காதலிக்கிறாய் |
| செவெர் | (sev-ér) | காதலிக்கிறான்/ காதலிக்கிறாள்/காதலிக்கிறது |
| செவெரிஸ் | (sev-ér-iz) | நாம் / நாங்கள் காதலிக்கிறோம் |
| செவெர்ஸினிஸ் | (sev-ér-si-niz) | காதலிக்கிறீர்கள் |
| செவெர்லெர் | (sev-ér-ler) | காதலிக்கிறார்கள் |

---

1. The Turkish language has a vast number of conjugational forms One could not, however, imagine, a simpler and clearer conjugations than that in Turkish.

*Ibid*, p. 66.

தமிழில் 'செய்தால்' வினையெச்சத்தில் இட - எண் விகுதி இருப்பதில்லை. ஆனால் துருக்கி மொழியில் இட — எண் விகுதியைக் காணலாம்.

| | | |
|---|---|---|
| ஸெவ்ஸெம் | (sev-sé-m) | நான் காதலித்திருந்தால் |
| ஸெவ்ஸென் | (sev-sé-n) | நீ காதலித்திருந்தால் |
| ஸெவ்ஸெ | (sev-sé) | அவன்/அவள்/அது காதலித்திருந்தால் |
| ஸெவ்ஸெக் | (sev-sé-k) | நாம்/நாங்கள் காதலித்திருந்தால் |
| ஸெவ்ஸெனிஸ் | (sev-sé-niz) | நீங்கள் காதலித்திருந்தால் |
| ஸெவ்ஸெலெர் | (sev-sé-ler) | அவை/அவர்கள் காதலித்திருந்தால் |
| ஸெவ்மெஸெம் | (sev-me-sé-m) | நான் காதலிக்காமலிருந்திருந்தால் |

இம்மொழியில் அதிகமாக வினையெச்சங்களை உபயோகித்து மிக நீளமான வாக்கியங்களை அமைப்பது இதன் ஒரு விசேட பண்பாகும்.[1] சில வாக்கியங்கள் ஒரு பத்தியாகவே இருக்கின்றன.

### 3.71.2 உஸ்பெக் (Uzbek)

சுமார் 7,000,000 மக்கள் இம்மொழி பேசுகின்றனர். துருக்கிய மொழிகளில் தென் கிழக்கு பிரிவைச் சார்ந்தவற்றில் இது முக்கியமானதாகும். இவர்களில் பெரும்பாலோர் (50 லட்சம் ரஷ்ப நாட்டில் உஸ்பெக்கிஸ்தான், காசக்கிஸ்தான் போன்ற மாநிலங்களிலும் ஐந்து லட்சம் மக்கள் துருக்கியிலும் ஆப்கா

---

1. A special feature of the Turkic languages is the abundant use of participial and gerund constructions. Because of this, extremely long sentences can be formed without using conjunctions and subordidinate clauses.

*Ibid*, p. 15.

னிஸ்தானத்திலும் உள்ளனர். சைனுவைச் சார்ந்த சிங்கியாங், பாகிஸ்தான், சௌதி அரேபியா, ஈராக் போன்ற நாடுகளிலும் இம்மொழி பேசுவோர் உள்ளனர் என்பர். கி. பி. ஆறுவது நூற்றுண்டு முதல் பத்தொன்பதாவது நூற்றுண்டுவரை பெர்சிய மக்களின் செல்வாக்கு இம்மக்களிடையே இருந்து வந்ததால் இம்மொழியின் கண்ணும் பெர்சிப மொழியின் செல்வாக்கு அதிகமாக உள்ளது. கற்ற மக்கள் பெர்சியன் மொழியிலேயே எழுதியும் உரையாடியும் வந்தனர்.

பல நூற்றுண்டுகளாக அரபிக் எழுத்துக்களிலேயே எழுதி வந்தனர் இவர்கள். ஆனுல் ரஷ்ய புரட்சிக்குப் பின் (1925–ஐ ஒட்டி) உரோமன் லிபி பயன் படுத்தப்பட்டது. ஆனுல் பின்னர் (1940–41) சிரில்லிக் எழுத்துக்கள் புகுத்தப்பட்டன.

உஸ்பெக் மொழியில் ஆறு உயிர்களும் இருபத்தாறு மெய்களும் உள்ளன. சொல்லுக்கு முதலிலும் ஈற்றிலும் இரண்டு மூன்று மெய்கள் வருவதைக் காணலாம். இத்தகைய மெய் மயக்கங்கள் பெரும்பாலும் ரஷ்ய மொழியினின்றும் கடன் வாங்கப்பட்ட சொற்களிலேயே காணப்படுகின்றன.

இதன்கண் நான்கு வேற்றுமைகள் காணப்படுகின்றன. -னி **(-ni)** ஐ வேற்றுமை உருபாகவும் –க **(-ka)** கு வேற்றுமை உருபாகவும் -த, –தன், **(-da, -dan)** முறையே கண், இன் வேற்றுமை உருபுகளாகவும் உள்ளன.

| | | |
|---|---|---|
| தொஸ்த்னி | **(dost-ni)** | நண்பனை |
| தொஸ்த்க | **(dost-ka)** | நண்பனுக்கு |
| உய்லர்த | **(uy-lar-da)** | வீடுகளில் |
| உய்லர்தன் | **(uy-lar-dan)** | வீடுகளிலிருந்து |

உடைய பொருள் மூவிடப் பெயர்களாயின் பெயர்களுடன் சில ஒட்டுகளை இணைத்து உடைமைப் பொருள் காட்டப்படும்.

உடைமை உருபுகளின் பின்னர் வேற்றுமை உருபுகளிணைந்து வேற்றுமைப் பொருட்களைக் காட்டும்.

| | | |
|---|---|---|
| உயிம் | (uy-im) | என் வீடு |
| அனம் | (ɔna-m) | என் தாய் |
| அனங் | (ɔna-ṅ) | உன் தாய் |
| அனசி | (ɔna-si) | அவன்/அவள்/அதன் தாய் |
| உயிம்க | (uy-im-ga) | என் வீட்டுக்கு |

பிற துருக்கிய மொழிகளைப் போன்றே இதன் மூவிடப் பெயர்களும் உள்ளன. தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்கள் தமிழ் மொழியில் இருப்பன போன்றே காணப்படுகின்றன. இவை வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது தமிழ்ப் பெயர்களைப் போன்றே மாற்றம் அடைகின்றன.[1]

| | | |
|---|---|---|
| மன்/மென் | (man/men) | நான் |
| மெனி | (me-ni) | என்னை |
| சன்/சென் | (san/sen) | நீ |
| செனி | (se-ni) | உன்னை |
| உ | (u) | அவன், அவள், அது |

இம்மொழியில் பலவிதமான சுட்டுப் பெயர்கள் உள்ளன. அண்மைச் சுட்டு, இடைநிலைச் சுட்டு, சேய்மைச் சுட்டு எனப் பல வகையாகப் பிரிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பு | (bu) | இது, இவை |
| புலர் | (bu-lar) | இவை |

---

1. With very few exceptions, they do not take possessive suffixes. They also diverge from nouns in that their nominative singular form may be some what different from their stem form - that which acquires case suffixes.

Andree F. Joberg, *Uzbek Structural Grammar*, p. 88.

| | | |
|---|---|---|
| ஷு | (su) | அது, அவை |
| உ | (u) | அது, அவை, அவன், அவள் |
| உலர் | (u-lar) | அவை, அவர்கள் |
| ஒஷ | (osa) | அது, அவை, அவன், அவள் |
| ஒஷலர் | (osa-lar) | அவை, அவர்கள் |
| உஷ்பு | (usbu) | இது, இவை |
| உஷ்புலர் | (usbu-lar) | இவை |

இவற்றுள் பிந்திய மூன்று பெயர்களும் அதிகமாகப் பயன் படுவதில்லை.

வினைச்சொற்கள் எதிர்மறை, காலம், எழுவாய் போன்ற பல இலக்கணக்கூறுகளைக் காட்டுகின்றன. தமிழ் மொழியைப் போன்றே தன்மை, முன்னிலை, படர்க்கை, ஒருமை, பன்மை போன்றவற்றைக் காட்டும் விகுதிகள் உள்ளன. ஆனல் இவற்றைக் காட்டும் விகுதிகளாகப் பல காணப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கெல்கன்மன் | **(kel-gan–man)** | வந்தேன், வந்திருக்கிறேன் |
| கெல்திம் | **(kel-di–m)** | வந்தேன் |
| கெலய் | **(kel-ay)** | நான் வரட்டும் |
| கெல்கன்சன் | **(kel-gan-san)** | வந்தாய், வந்திருக்கிருய் |
| கெல்கன் | **(kel-gan)** | வந்தான்/வந்தாள்/வந்தது |
| கெல்கன்மிஸ் | **(kel-gan–miz)** | வந்தோம் |
| கெல்கன்சிஸ் | **(kel-gan-siz)** | வந்தீர்கள் (பன் உயிர்) |
| கெல்கன்லை | **(kel-gan-lai)** | வந்தார்கள் |
| கெலர்மன் | **(kel-ar-man)** | வருகிறேன் |
| கெலமன் | **(kel-a-man)** | வருவேன் |

தமிழைப் போலல்லாமல் செயின், செய்தால் என்ற வினையெச்சங்கள் விகுதியேற்று வருவதும் வியங்கோள் விகுதி ஏற்பதும் கணத்தக்கன.

| | | |
|---|---|---|
| kel-sa-m | நான் வந்தால் | 'if I come' |
| kel-a-ay | நான் வரட்டும் | 'let me come' |

**3 71.3 யகுத் (Yakut)**

இம்மொழி சோவியத் நாட்டில் கிழக்கு சைபீரியாவில் உள்ள யகுஷியா மாநிலத்தில் வாழும் சுமார் 250,000 மக்களால் பேசப்படுகின்றது. துருக்கிய மொழிகள் பொதுவாக ஒலியியலைத் தவிர பிற பகுதிகளில் தம்முள் மிக ஒற்றுமை உடையனவாகும். இவற்றுள் ஒருமொழி பயின்றவர் பிற மொழிகளை எவ்வளவு புரிந்து கொள்ள முடியும் என்பதைப் பற்றித் திட்டவட்டமாகக் கூற முடியாவிடினும் மொழியியல் பயின்றவர்கட்கு கண்ணாடிப் போன்று இம்மொழிகளின் அமைப்புக்களைத் தெளிவாகக் காணமுடியும் என்பார்கள். அதிலும் குறிப்பாகத் துருக்கி மொழி நன்றாகத் தெரியுமானால் பிற மொழிகளைப் புரிந்து கொள்வதில் அத்தனைக் கஷ்டங்கள் கிடையாது என்பர்.[1] சுவாஷ் மொழியும் யகுத் மொழியும் பிற துருக்கிய மொழிகளின்றும் வேறுபட்டவை என்று அறிஞர்கள் கருதுகின்றனர். எனினும் சுவாஷ் போன்று யகுத் அவ்வளவு வேறுபட்டதன்று.

---

1. Different statements as to the relative mutual intelligibility between specific languages vary, considerably, so that one cannot say with certainity how much native speakers of different languages comprehend each other, but the relationships between the languages are obvious to a trained linguist, who will pass easily from one to another, using his basic knowledge of any major dialect (most frequently, Osmanli Turkish, the language of modern Turkey).

John R. Krueger, *Yakut Manual*, p. 32.

பிற துருக்கிய மொழிகளில் காணப்படாத குறில்—நெடில் வேற்றுமை இம்மொழியிலும் துர்க்குமென் மொழியிலும் காணப் படுகின்றது.[1]

| | | |
|---|---|---|
| அஸ் | (as) | உணவு |
| ஆஸ் | (aas) | பசி |
| அத் | (at) | குதிரை |
| ஆத் | (aat) | பெயர் |

பிற அல்டய்க் மொழிகளைப் போன்று இம்மொழியிலும் இலக்கணப் பால் பகுப்பு இல்லை.[2] கினி (kini) என்ற சொல் அவன், அவள், அது என்ற மூன்று பொருட்களைத் தரும். தந்தை, தாய் போன்ற சொற்கள் இவ்வகையாகவே ஆண்பாலை யும் பெண்பாலையும் முறையே சுட்டுவனவாக இருப்பினும் இம் மொழியில் எந்தவிதமான வேற்றுமையுமின்றி பயன்படுத்தப் படுகின்றன.

தமிழ் கொச்சை மொழியில் 'நாலு புஸ்தகம்' என்று கூறு கிறோம். இதே போன்று 'அஞ்சு மரம் நிக்கி' என்றும் கூறு கின்றோம். இவற்றைக் கூறும்போது இவை தப்பு என்று நாம் கருதுவதில்லை. இதே போன்று இம்மொழியிலும் 'பியெஸ்

---

1. Yakut is distinguished from other Turkic languages, as earlier remarked, by the presence in it by a set of 8 long and 8 short vowels, a distinction which has been lost in all other Turkic languages except Turkmen.

*Ibid*, p. 34.

2. The question of gender in the Yakut language, as indicated in other Altaic languages, is really an academic one since on grammatical distinctions in words owing to inherent or arbitrary sex of the person or object named are made in Yakut.

*Ibid*, p. 71.

கினிகெ (bies kiniga) என்று கூறுவது 'ஐந்து புத்தகம்' என்ற பொருளைத் தரும். ஆங்கிலம் போன்ற மொழிகளைப் போன்று எண் வேற்றுமை அவ்வளவு திண்ணமாக இல்லை; எனினும் 16-க்கும் அதிகமான பன்மையைக் குறிக்கும் பின்னொட்டுகளைக் காணலாம்.[1] இத்தகைய பெருக்கத்திற்குக் காரணம் இதன்கண் காணப்படும் உயிர் ஒருமைப்பாடாகும்.

தமிழைப் போன்று யகுத் மொழியிலும் பன்மை ஒட்டுக்குப் பின்னர்தான் வேற்றுமை உருபுகள் இணைக்கப்படுகின்றன.

பலனீஸ்ஸலர்க (balaniissa-lar-ga) மருத்துவ விடுதிகளில்

தமிழ் மொழியில் பல சொற்களால் சொல்லுகின்ற கருத்துக்களை இம்மொழியில் ஒரே சொல்லினால் கூறமுடிகின்றது. இந்நிலையை இம்மொழியில் மட்டுமின்றி துருக்கிய மொழிகள் பலவற்றிலும் காணலாம்.

எழுவாய் வேற்றுமை, ஐ வேற்றுமை, கு வேற்றுமை, இன் வேற்றுமை, ஒடு வேற்றுமை, உடனிகழ்ச்சி வேற்றுமை, ஒப்பு வேற்றுமை, விளி வேற்றுமை, பகுதி வேற்றுமை (Partitive), இது வேற்றுமை என்ற பத்து வேற்றுமைகளை உடையது இம் மொழி. இவற்றுள் உடைமை வேற்றுமை பிற அல்டய்க் மொழிகளினின்றும் வேறுபட்டது. பிற அல்டய்க் மொழிகளில் ஒடு வேற்றுமையும் உடனிகழ்ச்சி வேற்றுமையும் இல்லை என்பர்.[2]

---

1.

| | | | |
|---|---|---|---|
| *paarta-lar* | school desks | *oy-der* | reasons |
| *kinige-ler* | books | *tomtor-dor* | knobs |
| *ojo-lor* | children | *kotor-dor* | birds |
| *boro-lor* | wolves | *aan-nar* | doors |
| *at-tar* | horses | *clen-ner* | members |
| *sep-ter* | tools | *jon-nor* | peoples |
| *oloppos-tor* | chairs | *bodonn-nor* | strong ones |
| *ubay-dar* | elder brothers | *ottox-tor* | farms |

2. The case system of Yakut has both resemblances to the general Turkic system as well as divergence from it.

உயிர் ஒருமைப்பாட்டால் வேற்றுமை உருபுகளின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகிறது. பெயர்ச் சொற்களில் காணப்படும் உயிர் எழுத்துக்கட்கு ஏற்ப வேற்றுமை உருபுகளிலும் உயிர் எழுத்துக்கள் மாறுகின்றன. எனினும் ஒவ்வொரு வேற்றுமைக்கும் ஒவ்வொரு எடுத்துக் காட்டே இதில் தரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| எத்தை | (et-te) | இறைச்சியை |
| எத்கெ | (et-ke) | இறைச்சிக்கு |
| எதினென் | (et-inen) | இறைச்சியால் |
| எதீன் | (et-iin) | இறைச்சியொடு |
| எதேகெர் | (et-eeker) | இறைச்சியைவிட |
| எபே | (ebe-e) | பாட்டீ! |
| எத்தென் | (et-ten) | இறைச்சியிலிருந்து |
| எத்தை | (et-te) | சிறிது இறைச்சி |
| எத் | (et) | இறைச்சி |

தமிழில் உடைமை உருபினை உடைமைப் பொருளைக் குறிக்கும் சொல்லோடு இணைப்பதில்லை. ஆனால் இம்மொழியில் உடைமை உருபினை உடைமைப் பொருளைக் குறிக்கும் சொல்லுடன் இணைக்கின்றனர். மேலும் உடைமை உருபு தன்மை. முன்னிலை, படர்க்கை இடப்பெயர்களின் உடைமை வேற்றுமையாக அமைந்திருக்கின்றது.

| | | |
|---|---|---|
| இம் | (im) | என்னுடைய |
| எதிம் | (et-im) | என்னுடைய இறைச்சி |

---

**Chief among the latter are the absence of a genitive case (cf. Hungarian) and the presence of some new cases, as the instrumental and sociative, and the retention of some old features from the earlier languages, as the instrumental.**

**John R. Krueger, *Ibid*, p. 76.**

| | | |
|---|---|---|
| எபெங் | (eb–eṅ) | உன்னுடைய பாட்டி |
| எதெ | (et–e) | அவனுடைய இறைச்சி |
| தீஸ்பித் | (tiis-pit) | நம்முடைய/எங்களுடைய பல்/பற்கள் |
| உவொல்குத் | (uol-gut) | உங்களுடைய மகன் |
| உவொல்லர | (uol-lara) | அவர்களுடைய மகன் |

பன்மையைக் காட்டும் ஒட்டுகளின் பின்னால் இவ்வேற்றுமை உருபுகளையும் இணைத்துக் கூறுகின்றனர்.

லுவொஸ்கலர்ஜித் (luoska-lar-g.t) உங்களுடைய கரண்டிகள்

இத்தகைய சொற்களுடன் மற்றொரு வேற்றுமை உருபினையும் சேர்த்துக் கூறலாம். தமிழில் இந்த நிலை இல்லை.

அத்-தர்–பித்–இனன் (at-tar–bit-inan) நம்முடைய குதிரைகளால்

(Base + Plural + Possessive + Case)

இவ்வாறு கூறமுடியுமாயினும் பெரும்பான்மையாக ஒருமையே பயன்படுத்தப்படுகிறது.

வினைமாற்றங்களனைத்தும் பின்னொட்டுகளினால் உணர்த்தப்படுகின்றன. வினையில் காலமும் எதிர்மறையும் இடமும் எண்ணும் காணப்படுகின்றன. வினைச்சொற்களின் வேர்ச்சொற்கள் தமிழில் போன்று ஏவல் வினையாக நிற்கின்றன.

| | | |
|---|---|---|
| கெல் | (kel) | வா! |
| கெலிமெ | (kel-ime) | வராதே! |
| கெலிங் | (kel-iṅ) | வாருங்கள்! |
| கெலிமெங் | (kel-ime-ṅ) | வராதேயுங்கள்! |

பல வினைச்சொற்கள் பெயர்ச் சொற்களினின்றும் தோன்று கின்றன.

| | | |
|---|---|---|
| மஸ் | (mas) | மரம் |
| மஸ்தா | (mastaa) | மரம் வெட்டு |
| குவொரத் | (kuorat) | நகரம் |
| குவொரத்தா | (kuorattaa) | நகரத்துக்குப் போ |
| ஆன் | (aan) | கதவு |
| ஆன்னா | (aannaa) | வழிவிடு |

இவற்றைப்போன்று பல வினைச்சொற்கள் பல வினை ஒட்டுகளைப் பெயர்ச் சொற்களுடன் இணைப்பதால் உண்டாகின்றன.

ரஷ்யப் புரட்சிவரை இம்மொழியில் எந்த விதமான நூல்களும் வெளிவந்தது இல்லை. கர்ணபரம்பரையாகப் பலவிதமான நாடோடி இலக்கியங்கள் சொல்லப்பட்டு வந்திருப்பினும் 1917 முதல்தான் அச்சுப் புத்தகங்கள் வெளிவரத் தொடங்கின. பாட புத்தகங்கள், வேதாகமங்கள் போன்றனதான் இம்மொழியில் இன்று காணப்படும் இலக்கியங்கள். இப்போது பல மொழிபெயர்ப்புக்களும் வெளிவருகின்றன.

### 3.71.4 சுவாஷ் (Chuvash)

இது சோவியத் நாட்டில் சுவாஷ் மாநிலத்தில் வாழும் சுமார் பதினைந்து லட்சம் மக்களால் பேசப்படும் மொழியாகும். இவர்களில் பெரும்பாலோர் உழவர்கள்.

இதன்கண் ஒன்பது உயிர்கள் உள்ளன. பிற துருக்கிய மொழிகளில் உயிர் ஒருமைப்பாடு காணப்படினும் இம்மொழியில் நன்கு பின்பற்றப்படவில்லை என்பர். பல ஒட்டுகளும் உருபுகளும் வருகின்ற உயிர்கட்கேற்ப பல மாற்றுருவங்களில்

உள்ளன. எனினும் பிற துருக்கிய மொழிகளில் காணப்படும் அளவுக்கு இதன்கண் உயிர் ஒருமைப்பாடு இல்லை எனலாம்.[1]

பிற துருக்கிய மொழிகளைப் போலவே இதன்கண்ணும் எந்தப் பால் பகுப்பும் இல்லை. சொற்கள் குறிக்கும் பொருளிலிருந்தே அவை எந்தப் பாலைக் குறிக்கின்றன என்று அறிந்து கொள்ள முடியும். ஐரோப்பிய, திராவிட மொழிகளில் காணப்படும் இலக்கணப் பால் பகுப்பு இதன்கண் இல்லை. அத்தெ (தந்தை), அன்னெ (தாய்), அக்க (akka), பிச்செ (தம்பி /அண்ணன்) போன்ற சொற்களின் பொருளிலிருந்துதான் இவைகளின் பாலை நிர்ணயிக்கிறோம். ஆண் அல்லது பெண் பாலைக் காட்ட வேண்டின் ஆண், பெண் (as'a & ama) என்ற சொற்களை விலங்குகளின் பெயர்களுடனும் மனிதன், பெண் என்ற சொற்களை மனித இனப் பெயர்களுடனும் இணைத்துக் கூறுவர்.[2]

பெயர்களில் எண் காட்டுதல் அவ்வளவு முக்கியமாகக் காணப்படவில்லை. பெயர்களின் முன்னால் எண்ணுப் பெயர்கள் வரின் பன்மை உருபினை இணைத்துக் கூறுவதில்லை. இம்மொழியில் காணப்படும் பன்மையைப் போன்று வளர்ச்சி அடையவில்லை என்பர். பிற துருக்கிய மொழிகளில் பன்மை உருபுகட்குப் பின் பிற ஒட்டுகள் வருவதும் இம்மொழியில்

---

1. In Chuvash, however, this principle is not carried through quite as strictly as some other Turkic languages require it. Thus, many words may be found which violate this rules in part, especially loan words from Russian or from other Turkic languages, or from the spoken dialects of Chuvash. Although nearly all suffix morphemes have two forms, one for use with front vocalic words, and one for use with back vowel words a few have only one form.

John R. Krueger, *Chuvash Manual*, p. 96.

2. *Ibid*, pp. 92-93.

பிற ஒட்டுகட்குப் பின் பன்மை வருவதும் இவற்றிடையே காணும் வேறொரு முக்கிய வேற்றுமையாகும்.[1]

இதன்கண் ஆறு வேற்றுமைகள் உள்ளன. எழுவாய் வேற்றுமைக்கெனத் தனி உருபு எதுவுமில்லை. தமிழ் மொழி போன்று இம்மொழியின் கண்ணும் எழுவாய், பொதுவாக வாக்கியத்தின் முதலில் நின்று இப்பொருளை உணர்த்தும். பிற வேற்றுமைகள் பல உருபுகளால் காட்டப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| லஷ | (lasa) | குதிரை |
| உயெ | (uy-e) | வயலுக்கு, வயலை |
| தூரன் | (tuu-ran) | மலையிலிருந்து |
| மன்ப | (man-pa) | என்னோடு |
| வரமன்ப | (varaman-pa) | காட்டுவழியில் |
| லஷன் | (lasa-n) | குதிரையின் |
| உய்ர | (uy-ra) | வயலில் |

உடைய பொருள் மூவிடப் பெயராயின் அவற்றுடன் இன் வேற்றுமை உருபினை இணைத்து (தமிழ் போன்ற) உடைமைப் பொருள் காட்டுவதுடன் பின்னிஷ் மொழிகளைப் போன்று உடைமைப் பெயர்களுடன் என்னுடைய, உன்னுடைய

---

1. The plural morpheme in Chuvash is placed after any other preceding suffixes, as possessive morphemes (to be learned after) whereas, in all other Turkic languages, the plural morpheme follows the root morpheme, and then any possessive or other morphemes are added.

*Ibid*, p. 95.

As pointed out previously, Chuvash is unique among Turkic languages in that the possessive morphemes are added before the plural morpheme, contrary to the practice in others:

*Ibid*, p. 112.

போன்ற பொருள் தரும் ஒட்டுகளை இணைத்துக் காட்டுவதும் உண்டு.[1]

| | | |
|---|---|---|
| மனன் லஷ | (manan lasa) | என்னுடைய குதிரை |
| ஸனன் லஷ | (sanan lasa) | உன்னுடைய குதிரை |
| உனன் லஷி | (unan lasi) | அவனுடைய/அவளுடைய/ அதனுடைய குதிரை |
| இவலம் | (ival-am) | என் மகன் |
| இவலு | (ival-u) | உன் மகன் |
| இவலர் | (ival-ar) | உங்களுடைய மகன் |
| இவலெ | (ival-e) | அவன்/அவள் மகன் |

இவ்வாறு கூறுவது மட்டுமன்றி இவ்விரண்டினையும் இணைத்துக் கூறுவதும் உண்டு.[2]

| | |
|---|---|
| மனன் இவ்லம் | என் மகன் |
| ஸனன் இவலு | உன் மகன் |
| உனன் இவலெ | அவன் மகன் |
| பிரென் இவலமர் | நம் மகன் |
| ஸிரென் இவலர் | உங்களுடைய மகன் |

---

1. Although the manner of expressing possession showr above is a very commen one Chuvash, there is another important way also found in the other Turkic languages and elsewhere. This is to add suffixes (morphemes) to the word to indicate who the owner is.

*Ibid,* pp. 115-116.

2. If speakers want to make it absolutely clear as to what possession is involved, they may combine both forms, and then add to appropriate endings to the noun as well as in this way.

*Ibid,* p. 116.

வினைச்சொற்கள் காலம், எண், இடம் போன்ற இலக்கணக்கூறுகளைக் காட்டுகின்றன. நிகழ்வு, எதிர்வு, இறப்பு, இறப்பில் எதிர்வு போன்ற காலங்கள் உள்ளன. வினையடிகட்குப்பின் கால இடைநிலை, விகுதி என்ற வரிசை காணப்படுகிறது.

| | | |
|---|---|---|
| வுலதப் | (vula-t-ap) | படித்துக் கொண்டிருக்கிறேன் |
| வுலதன் | (vula-t-an) | படித்துக் கொண்டிருக்கிறாய் |
| வுலத் | (vula-t) | படித்துக் கொண்டிருக்கிறான் |
| வுலத்பர் | (vula-t-par) | படித்துக் கொண்டிருக்கிறோம் |
| வுலதர் | (vula-t-ar) | படித்துக் நொண்டிருக்கிறீர்கள் |
| வுலஸ்ஸெ | (vala-s-se) | படித்துக் கொண்டிருக்கிறார்கள் |
| வுலப் | (vula-p) | படிப்பேன் |
| வுலரம் | (vula-r-am) | படித்தேன் |
| வுலமஸ்தப் | (vula-mast-ap) | நான் படித்துக்கொண்டிருக்கவில்லை |

## 3.72 மங்கோலிய மொழிகள் (Mangolian Languages)

இம்மொழிகளைப் பேசுவோர்களாக சுமார் முப்பத்தைந்து லட்சம் (3,500,000) மக்கள் உள்ளனர். மங்கோலியாவிலும் (Outer Mongolia) சைனுவைச் சார்ந்த உள் மங்கோலியாவிலும், மஞ்சூரியா, சிங்கியாங் பிரதேசங்களிலும் ரஷ்ய நாட்டைச் சார்ந்த புரியத் மாநிலத்திலும் வால்கா பிரதேசங்களிலும் ஆப்கானிஸ்தானத்திலும் இம்மொழிகள் வழங்குகின்றன. பதின்மூன்ருவது நூற்ருண்டு முதலே எழுதப்பட்ட கல்வெட்டுக்களும் பிற எழுத்துச் சான்றுகளும் உள்ளன. பொதுவாக இம்மொழிகளின் எழுத்துமுறை உகுர் (Uighur) முறையினின்றும் வந்தது என்பர். மங்கோலிய மொழியின் முதல் கல்வெட்டு கி. பி. 1225–ஐச் சார்ந்தது.[1]

இம்மக்களைப் பற்றிய செய்திகளைத் தாங் வம்சாவழி (T'ang Dynasty 618-907 A D) பற்றிக் கூறும் வரலாற்றுக் குறிப்புக்களில் காணலாம். இம்மொழியினர் புதன்சார் (Budantsar) பரம்பரையில் தோன்றினர் என்றும் வீரச் செயல்கள் பல புரிந்தவர்கள் என்றும் குறிப்பிடுவர். இப்பரம்பரையில் வந்தவன் தான் செங்கிஸ்கான் என்பதும் அவனுடைய தந்தையாகிய எசுகை (Yesugei) இப்பரம்பரையின் எட்டாவது அரசன் என்

---

1. The Mongols got their script from Uighurs, an ancient Turkic people, who did not invent their alphabet, but borrowed from the Sogdians, an Iranian people, who in turn, had taken theirs form Aramaic script.

The introduction of script among the Mongols is supposed to have taken place in the twelfth century. The most ancient monument of Written Mongolian is an inscription on a stone erected in honor of Chinggis Khan's nephew, Yisungge, in about 1225.

Nicholas Poppe, *Grammar of Written Mongolian*, p. 1.

பதும் இங்கு நினைவு கூரத் தக்கது. செங்கிஸ்கான் 1206-ல் முடி சூடிக் கொண்டதும் அதன் பின்னர் ஆங்காங்கே பரந்து வாழ்ந்த மங்கோலிய மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டி ஒரு குடையின் கீழ் கொணர்ந்து மங்கோலியப் பேரரசை நிறுவினான் என்பதும் வரலாறு தரும் செய்திகள். இப்பேரரசு கிழக்கே ஜப்பான் முதல் மேற்கே புடாபஸ்ட் (Budapest) வரையிலும் பரந்து கிடந்த ஒன்றாகும். இவன் காலத்தில் இப்பேரரசு மிக வலிமை பெற்று விளங்கியது. இதனால் மங்கோலிய மக்களும் உலக வரலாற்றில் இடம் பெற்றனர்.

மங்கோலிய மொழியில் 1269-ல் திபேத்திய எழுத்து முறையையொட்டிய எழுத்துக்கள் புகுத்தப்பட்டன. எனினும் பழைய மங்கோலிய எழுத்துக்களே நிலைப்பதாயிற்று. மேற்கு மொழிகளைச் சார்ந்த கல்மக் (Kalmuck) மொழியில் 1648-ல் எழுத்துச் சீர்திருத்தம் ஏற்பட்டது. இம்முறையே இன்றும் இம்மொழியில் உபயோகத்தில் உள்ளது. ஆனால் மங்கோலியா விலும் புரியத் மாநிலத்திலும் வழங்கும் மொழிகளில் ரஷ்ய எழுத்தே இன்று பழக்கத்திலிருப்பதைக் காணலாம். புரியத் மொழி 1937-லும் மங்கோலியன் 1946-லும் சிரில்லிக் எழுத்து முறையை மேற்கொண்டன.[1]

மங்கோலிய மொழிகளில் உராலிக் மொழிகளைப் போன்று உயிர் ஒருமைப் பாட்டினைக் காணலாம். பிற உராலிக்-அல்டய்க் மொழிகளைப் போன்று இம்மொழிகளும் பல்வேறு இலக்கணக் கூறுகளை ஒட்டுகளால் காட்டுகின்றன. உயிர் ஒருமைப்பாடு காணப்படுவதால் ஒரே இலக்கணக்கூற்றினைக் காட்டும் ஒட்டு

---

1. In 1946, the Mongolian People's Republic followed suit Books, periodicals and other writings are now apparently printed entirely in Cryllic script.

Kaare Grønbech and John R. Krueger, *An Introduction to Classical (Literary) Mongolian*, p. 16.

களாகப் பல காணப்படும். சில மொழிகள் வினைச்சொற்களில் எந்த விதமான விகுதியையும் ஏற்காது இருப்பது உராலிக் மொழிகளில் காணப்படாத ஒரு பண்பாகும். இம்மொழிகள் இலக்கணப் பால் பகுப்பற்றன.[1]

மங்கோலிய மொழிகளை வடக்கு, மேற்கு, கிழக்கு மொழிகள் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். இப்பிரிவினைப் பலர் ஒத்துக் கொள்ளாவிடினும் இம்மொழிகள் பற்றிய ஆராய்ச்சிகள் வெளிவருவது வரையிலும் அதைக் கொள்ளுவதில் தவறு எதுவும் இல்லை. சோவியத் நாட்டில் புரியத் மாநிலத்தில் வழங்கும் புரியத் வட பிரிவினையும் உள் மங்கோலியா, மங்கோலியா (வெளி மங்கோலியா) முதலிய இடங்களில் பேசப்படும் மொழிகள் கிழக்குப் பிரிவினையும் சோவியத் நாட்டில் வால்கா பிரதேசம், ஆப்கானிஸ்தானம், சைனாவில் சிங்கியாங் பகுதி ஆகிய இடங்களில் வழங்கும் மொழிகள் மேற்குப் பிரிவினையும் சார்ந்தனவாகும். இவற்றுள் புரியத், கல்மக், கால்கா என்பவை முக்கியம் வாய்ந்தன. கல்மக் மக்கள் ஓரியத் மக்களின் ஒரு பகுதியினர். கல்மக் என்ற சொல் துருக்கிய சொல்லான கல்மக் என்பதிலிருந்து வந்ததாம். இச்சொல் அம்மொழியில் "இஸ்லாமாக மாற்றப்படாத மக்கள்" எனப் பொருள் படும் என்பர்.[2] மேற்கு மங்கோலியர்கள் அனைவரையும் ஓரியத் மக்கள்

---

1. Mongolian is characterized inter alia by vowel harmonys absence of initial and final consonant clusters, non-existence of long consonants, absence of gender and a general agglutination of suffixes.

Grϕnbech. *Ibid*, p. 13.

2. The term Kalmuck derives from a Turkic word kalmak, to remain, referring to those Kalmucks who were not converted to Islam, but remain behind.

Lawrence Krader, *Social Organization of The Mongol-Turkic Pastoral Nomads*, p. 116.

என்றழைப்பர். இவ்வின மொழிகளைப் பேசுவோராக சுமார் முப்பத்தைந்து லட்சம் மக்கள் உள்ளனர். இவர்களுள் 15 லட்சம் மக்கள் சைனுவிலும் 11 லட்சம் மக்கள் மங்கோலியா விலும் புரியத் மாநிலத்தில் மூன்று லட்சம் மக்களும் கல்மக் பேசுவோராக ஒன்றரை லட்சம் மக்களும் உள்ளனர்.

### 3.72.1 வட மங்கோலியன் அல்லது புரியத் (Buriat)

சோவியத் நாட்டில் சைபீரியாவிலுள்ள புரியத் மாநிலத்தில் வாழும் மூன்று லட்சம் மக்களால் பேசப்படுவது இம் மொழி. வெளி மங்கோலியாவில் பேசப்படும் கால்கா (Khalkha) மொழியுடனும் மஞ்சூரியாவிலும் உள் மங்கோலியாவிலும் வழங்கும் மங்கோலிய மொழிகளுடனும் கிழக்கு வால்கா பகுதியில் வழங்கும் கல்மக் (Kalmuck) மொழியுடனும் மிகுந்த தொடர்புடையது. இதன்கண் பல்வேறு கிளைமொழிகள் உண்டு என்பர். எனினும் இவை தம்முள் ஒலியில் மட்டுமே வேற்றுமை உடையன

புரியத் மொழியில் ஆறு உயிர்களும் இருபத்திரண்டு மெய்களும் உள்ளன. தமிழ் உயிர்களைப் போன்றே இம்மொழி உயிர்களும் குறில், நெடில் வேற்றுமை கொண்டன. புரியத் சொற்களில் இரு மெய்மயக்கங்கள் மொழிக்கு முதலில் வாராவிடினும் கடன் வாங்கப்பட்ட சொற்கள் பலவற்றில் இரண்டு மூன்று மெய்மயக்கங்கள் காணப்படுகின்றன.

இதன்கண் ஒருமை, பன்மை என்ற இரு எண்கள் உள்ளன. தமிழ்ப் பெயர்ச் சொற்களைப் போன்று இம்மொழிப் பெயர்களிலும் பன்மை உருபுக்குப் பின்னுல் வேற்றுமை உருபுகள் வருகின்றன.

| | | |
|---|---|---|
| ஹத | (xada) | மலை |
| ஹதனூத் | (xada-nuud) | மலைகள் |
| ஹதனூதை | (xada-nuud-ai) | மலைகளின் |

இம்மொழியில் ஏழு வேற்றுமைகள் காணப்படுகின்றன. இவை தவிர பல்வேறு பின்னுருபுகளும் உள்ளன.

| | | |
|---|---|---|
| மல் | (mal) | மாடு |
| மலை | (mal-ai) | மாட்டின் |
| மல்த | (mal-da) | மாட்டுக்கு |
| மலீயி | (mal-iiji) | மாட்டை |
| மலார் | (mal-aar) | மாட்டால் |
| மல்ஹா | (mal-haa) | மாட்டிலிருந்து |
| மல்தை | (mal-tai) | மாட்டினோடு |
| உகன் சோ | (uhan-soo) | தண்ணீரில் |
| உகன் சோகோ | (uhan-soo-hoo) | தண்ணீரினுள்ளிருந்து |
| ஷுலூன் மெதெ | (suluun-mete) | கல்லைப் போல் |

உடைய பொருள் மூவிடப் பெயர்களாயின் பெயர்களுடன் உடைமையைக் காட்டும் மூவிடப் பெயர் ஒட்டுகளிணைந்து இப் பொருள் தரும். –ம்(னி) (-m(ni) ),–ஷ்னி (–sni) போன்ற ஒட்டு கள் பெயர்களுடனிணைந்து உடைமைப் பொருளைக் காட்டும். இச்சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது வேற் றுமை உருபுகள் பெயர்க்கும் உடைமை உருபுக்குமிடையே வருகின்றன.

| | | |
|---|---|---|
| அகம்னி | (axa-mni) | என்னுடைய அண்ணன் |
| அகதம் | (axa-da-m) | என் அண்ணனுக்கு |
| அகஷ்னி | (axa-sni) | உன் அண்ணன் |
| அகதஷ்னி | (axa-da-sni) | உன் அண்ணனுக்கு |

தன்மை, முன்னிலை, படர்க்கை மூவிடப் பெயர்களும் அண்மை, சேய்மை சுட்டுப் பெயர்களும் புரியத் மொழியில் உள்ளன. மூவிடப் பெயர்கள் எழுவாயாக வரின் அதற்கெனத் தன்மையில் உளப்பாட்டுத் தன்மை இருந்தது. எனினும் இன்றைய புரியத் மொழியில் வழக்கில் இல்லை என்பர். தமிழைப் போன்றே இதன்கண்ணும் சுட்டுப் பெயர்களே படர்க்கை மூவிடப் பெயர்களாகப் பயன் படுகின்றன.[1]

| | | |
|---|---|---|
| எனெ | (ene) | இது (எழுவாய்), இவன், இவள் |
| எதெ | (ede) | இவை (எழுவாய்), இவர்கள் |
| எதென் | (ede-n) | இவை, இவர்கள் |
| தெரெ | (tere) | அது (எழுவாய்), அவன், அவள் |
| தெரென் | (tere-n) | அது, அவன், அவள் |
| தெ தெ | (tede) | அவை (எழுவாய்), அவர்கள் |
| தெதென் | (tede-n) | அவை, அவர்கள் |

**3.72.2 மங்கோலியன் (Mangolian)**

இம்மொழி மங்கோலியாவில் பேசப்படுகிறது. இதைக் கால்கா (Khalkha) என்றும் அழைப்பர். முன்னர்க் குறிப்பிட்டது போன்று இம்மொழி பேசுவோராக சுமார் 11 லட்சம்

---

1. Personal pronouns differ from nouns and other pronouns in that they are the only group of words which have a nominative form different from the stem.

Nicholas N. Poppe, *Buriat Grammar*, p. 50

There is no special pronoun of the third person, instead the demonstrative pronouns */end/* 'this' */ede/* 'these' */edener/* 'these', */tere/* 'that', */tede/* 'those' */tedener/* 'those' are used: */ene/*, */tere/* 'he, she' */ede/*, */edener/*, */tede/*, */tedener/* 'they'

*Ibid*, p. 53.

மக்கள் உள்ளனர். 'மங்' (வீரம்) சொல்லினின்றும் வந்த இச்சொல் வீரமுள்ள மக்கள் எனப் பொருள் படும் என்பர்.

இதன்கண் ஏழு உயிர்களும் பதினெட்டு மெய்களும் உள் ளன. பிற அல்டய்க் மொழிகளைப் போன்றே இம்மொழியிலும் உயிர் ஒருமைப்பாட்டினைக் காணலாம்.[1] உயிர்களிடையே குறில், நெடில் வேற்றுமை உண்டு.

| | | |
|---|---|---|
| தெர் | (der) | தலையணை |
| தேர் | (deer) | மேலே |

மங்கோலியச் சொற்களைப் பெயர், வினை, இடை என மூன்றுவகையாகப் பிரிப்பர்.[2] இவற்றுள் பெயர் வேற்றுமை உருபினை ஏற்றும், வினை கால இடைநிலைகளை ஏற்றும் வருவன. இடைச்சொற்கள் எந்த விதமான ஒட்டுகளையும் ஏற்பதில்லை. இதன்கண் எழுவாய் வேற்றுமை, ஐ, ஆல், ஒடு, கு, இன், அது வேற்றுமைகள் உள்ளன. கு வேற்றுமை இடப்பொருளை யும் தரும்.

| | | | |
|---|---|---|---|
| எழுவாய் | கெர் | (ger) | வீடு |
| ஐ | கெரீர் | (ger-iir) | வீட்டை |
| ஆல் | கெரேர் | (ger-eer) | வீட்டால் |
| ஒடு | கெரேதெய் | (ger-tei) | வீட்டோடு |
| கு | கெர்தெ | (ger-te) | வீட்டுக்கு |

1. Vowel harmony is a phonological feature of all Mongol words, and a word may be defined as a stretch of sound in which one vowel harmony operates. The vowel of the first syllable determines the nature of all vowels that follow.

William M. Austin, John G. Hangin, and Peter M. Onan, *Mongol Reader*, p. 10.

2. *Ibid*, p. 11.

| | | | |
|---|---|---|---|
| இன் | கெரேஸ் | (ger-ees) | வீட்டிலிருந்து |
| அது | கெரீன் | (ger-iin) | வீட்டின் |

இன்றைய பேச்சு மொழியில் ஒருமைப் பன்மை பகுப்பு இல்லை. பழைய மங்கோலியன் (இலக்கிய) மொழியில் இப்பகுப்பு இருந்தது. பன்மையைக் காட்டும் ஒட்டுகட்குப் பின்பே வேற்றுமை உருபுகள் இணைந்து வேற்றுமைப் பொருள் காட்டின.[1] இன்றும் பன்மை காட்ட வேண்டிய நிலை ஏற்படின் பழைய பன்மை உருபுகளை இணைத்துப் பன்மை காட்டுவர் என்பர்[2]. பன்மை உருபுகளாகப் பல இருந்தன.

| | | |
|---|---|---|
| ஷபி | (šabi) | மாணவன் |
| ஷபினர் | (šabi-nar) | மாணவர்கள் |
| தெங்கெ | (tenge) | கடவுள் |
| தெங்கெனெர் | (tenge-ner) | கடவுளர் |

---

1. Only words acting as substantives have a plural form, but words expressing qualities and numerals used as substantives can form a plural. The plural stem is, at the same time, the nominative plural. Suffixes of oblique cases follow the plural suffix.

Nicholas Poppe, *Grammar of Written Mongolian*, p. 69.

The case snffixes are the same in the singular and plural. *Ibid*, p. 73.

2. Nouns are used in an indefinite sense in colloquial Mongolian. Usually no effort is made to signify singular or plural, the context alone being relied upon to give indication. Plurals being sometimes necessary, however, the Mongolians have borrowed from the written language certain means of expressing plurality.

A Nevillo J. Whymant, *A Mongolian Grammar*, p. 6.

பிற அல்டய்க் மொழிகளைப் போன்று இதன்கண்ணும் இலக்கணப் பால் பகுப்பு இல்லை. சொற்கள் காட்டும் பொருட்களை ஒட்டியே பால் அமைந்துள்ளது.[1]

இடப்பெயர்கள் பிற மொழிகளைப் போன்றே காணப்படுகின்றன. தமிழைப் போன்றே இதன்கண்ணும் உளப்பாட்டுத் தன்மை உள்ளது.[2] தமிழ் மொழியைப் போன்றே இதன்கண் முன்னிலையில் உயர் சொற்கிளவியாகப் பயன்படும் இடப்பெயரும் உள்ளது. தமிழில் ஒரே சொல் உயர் சொற்கிளவியாகவும் பன்மையாகவும் பயன்பட இம்மொழியில் வேறு வேறு சொற்கள் உள்ளன. மேலும் எழுவாயாக வரும் பெயர்களும் வேற்றுமை உருபேற்று வரும் பெயர்களும் வேறு வேறாக உள்ளன.[3]

| | | |
|---|---|---|
| பி | (bi) | நான் |
| சி | (či) | நீ |
| த | (ta) | நீங்கள் (ஒருமை) |
| தெர் | (ter) | அவன், அவள், அது |

---

1. Mongolian nouns have no grammatical gender, sex is expressed only in the inherent meaning of the word, which in fact play no role in declension.

Grϕnbech, *Ibid*, p. 19.

2. The first person plural is *bida* and *ba*. The former is an inclusive pronoun 'we' (including both the persons speaking and the audience), the latter an exclusive pronoun 'we' (including only the persons speaking and excluding the audience). The nominative *ba* occurs in ancient books. In modern books this is replaced by *bida*, whereas the oblique cases are still used.

Nicholas Poppe, *Ibid*, p. 50.

3. *Ibid*, p. 50

William M Austin, *Ibid*, p. 20.

| | | |
|---|---|---|
| பித் | (bid) | நாம், நாங்கள் |
| தத் | (tad) | நீங்கள் (பன்மை) |
| தெத் | (ted) | அவர்கள், அவைகள் |
| பித | (bida) | நாம் |
| ப | (ba) | நாங்கள் (பழைய மங்கோலியன்) |

பழைய மங்கோலியனில் 'இ' அவன், அவள், அது என்ற பொருளிலும் 'அ' அவர்கள் என்ற பொருளிலும் வழங்கின என்பர்.

தமிழ்ப் பெயரடைகளைப் போன்றே இம்மொழிப் பெயரடைகளும் எண், வேற்றுமை எதுவும் காட்டுவதில்லை.

| | | |
|---|---|---|
| சைன் | (sain) | நல்ல |
| சைன் மொரி | (sain mori) | நல்ல குதிரை |

மங்கோலியன் வினைச்சொற்கள் காலம் காட்டும்; ஆனால் பிற உராலிக்-அல்டய்க் மொழிகளைப் போன்று (மஞ்சு தவிர) எந்தவித விகுதியையும் ஏற்பதில்லை.[1] இது பிறமொழிகட்கும் இதற்குமிடையே காணப்படும் ஒரு வேற்றுமையாகும். மேலும் இவ்வினைச் சொற்கள் இறப்பில் நிகழ்வு போன்ற காலங்களையும் காட்டும்.[2]

---

1. A verb may be defined as any form that can 'take' the suffix *-ne*, indicating the present imperfective (incomplete present or present future), There are no indications in the verb of the person and no number and no irregular verbs, although there are a few defective verbs.

Whilliam M. Austin, *Ibid*, p. 27.

2. There are only two tenses in the Mangol verb, a non-past (present, future) and a past and each has two aspects indicating whether the action is conceived of as complete (perfective) or incomplete (imperfective).

*Ibid*, p. 27.

| | | | |
|---|---|---|---|
| பி | யபன | (bi yabana) | நான் போகிறேன், போவேன் |
| பி | யப்லே | (be yablee) | நான்போயிருக்கிறேன் |
| பி | யப்பே | (bi yabbee) | நான் போயிருந்தேன் |
| பி | யப்ப | (bi yabba) | நான் போனேன் |
| | யப் | (yab) | போ |
| | யபாரை | (yabaarai) | போங்கள் |
| | யபக | (yabaga) | போக |

### 3.72.3 ஒரியத் (Oriyat)

இதன்கண் கல்மக், புஸவா (Kalmyk, Buzawa) போன்ற பல கிளைமொழிகள் உள்ளன. இவற்றைப் பேசுவோர்களாக மூன்று லட்சம் மக்கள் உள்ளனர். ரஷ்ய நாட்டின் பல பகுதிகளிலும் இம்மொழிகள் பேசப்படுகின்றன.[1] கல்மக் மொழியினர் கி. பி. 17-வது நூற்றுண்டில் தங்களது இடமாகிய சிங்கியாங்கை விட்டு வெளியேறினர் என்றும் பின்னர் காஸ்பியன் கடலோரக் கரையில் வாழ்ந்தனர் என்றும் வரலாறு கூறும். இவர்களில் பலர் ரஷ்ய அரசாங்கத்துக்கு எதிராக நின்றதன் விளைவாக, அந்நாடு விட்டு ஜெர்மனியிலும் பின்னர் அமெரிக்க நாட்டிலும் குடியேறினர் என்று கூறுவர். ஒரியத் பிரிவில் கல்மக் மொழிபற்றியே நம்மால் நன்கு அறிய முடிகிறது.

---

1. The main Centers of Oirat speakers are located on the Volga (Kalmyk), in the district of Astrakhan (Buzawa, Torgut of Orenburg), at Kobdo (Oirat of Kobdo, Derbet of Kobdo, Bait), in the Altai (Torgut of the Altai, Uriangkhai of the Altai), in the South West Mongolia (Dzakhačin, Dambi - Elet, Mingat), along the Koko-nor (Torgut of the Koko-nor), and in the Ili Valley of Chinese Turkestan (Olot). The minimum estimate for total number of Oriyat speakers is 250,000.

*Anthropological Linguistics*, Vol. 7. No. 1 pp. 86.

இப்பிரிவைச் சார்ந்த பிற மொழியினர் ரஷ்ய-சீன எல்லைப் பகுதிகளில் வாழுகின்றனர். இம்மொழிகளில் ரஷ்ய மொழியின் செல்வாக்கினை அதிகமாகக் காணமுடியும்.

**3.72 4 தகூர் (Dagur)**

இது மங்கோலியப் பிரிவைச் சார்ந்தது எனக் கூறுவர். போப் இதனைப் பற்றி ஆராய்ந்து மங்கோலியப் பிரிவைச் சார்ந்தது என நிறுவியுள்ளார்.[1] தகூர், மொங்கூர் **(Mongour)**, மொகுல் **(Mogul)** ஆகிய மொழிகள் தனித்தனி மொழிகள் என்றும் இம்மொழிகளைப் பேசுபவர்களில் ஒருவர் மற்றொருவரை புரிந்து கொள்ள முடியாது என்றும் கூறுவர். தகூர் மொழியினர் செங்கிஸ்கானின் இளவலான காசர் **(Khasar)** என்பானின் வழியில் வந்தவர்கள் எனக் கூறுவர். துங்கூஸ் மொழியினரோடு கலந்து வாழ்ந்த இவர்கள், அவர்களோடு ஒன்றி வாழ்வதைக் காணலாம். எனவேதான் இம்மொழியும் துங்கூஸ் பிரிவைச் சார்ந்தது எனக் கருதினர். மஞ்சூரியாவில் வாழும் இம்மக்கள் கி. பி. 19-ஆம் நூற்றுண்டு முதலே மஞ்சுக் கொள்கைகளைப் பின்பற்றி வருகின்றனர். இம்மொழியைப் பேசுபவர்களாக சுமார் ஐம்பது ஆயிரம் (1960) மக்கள் உள்ளனர்.

**3.72.5 மொங்கூர் (Mongour)**

இம்மொழியினர் தங்களை வெள்ளை மங்கோலியர்கள் (čagan mongol) என்றழைப்பர். மேற்கு கன்சு (West Kansu) பகுதியில் வாழும் இம்மக்களின் மொழி சீனமொழியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்பர். இம்மொழியின் ஒலி அமைப்பிற்கும் பிற மங்கோலிய மொழிகளின் ஒலி அமைப்பிற்கும் வேற்றுமைகள் அதிகம் இருக்கக் காணலாம். இம்மொழி பேசுவோர்களாக ஏறத்தாழ அறுபதினாயிரம் பேர் உள்ளனர்.

---

1. *Anthropological Linguistics*, Vol. 7, No. 1, p. 8.

**3 72 6 மொகுல் (Mogul)**

இம்மொழிக்கும் ஓரியத் மொழிக்கும் இடையே ஒற்றுமைகள் பல உள்ளன. எனினும், இவ்விரு மொழிகளும் தனித் தனி மொழிகளாகக் கருதப்படுகின்றன. ஈரான், ஆப்கானிஸ்தான், சோவியத் நாடு போன்ற பகுதிகளில் பேசப்படும் இம் மொழி அங்கே பேசப்படும் பிற மொழிகளால் அதிகமாகப் பாதிக்கப்படவில்லை என்பர். கிர்கிஸ் (Kirgiz), உஸ்பெக் (Uzbek), துர்க்குமென் (Turkmen) போன்ற துருக்கிய மொழிகளின் செல்வாக்கினைச் சிறிது காணலாம். இம்மொழி மேற்கு மங்கோலிய மொழியைச் சார்ந்தது எனக் கருதலாம்.

## 3.73 துங்கூஸ் மொழிகள் (Tungus Languages)

கிழக்கு சைபீரியப் பகுதிகள் முழுவதிலும் பரந்து பேசப் படுகின்றன இம்மொழிகள். இப்பிரிவின்கண் பதினேழுக்கும் அதிகமான மொழிகள் உள்ளன என்றும் இவற்றுள் பல பல்வேறு கிளைமொழிகளைக் (dialects) கொண்டிருக்கின்றன என்றும் குறிப்பிடுவர் மொழியியலாளர்கள். 19-ஆவது நூற்றாண்டு முதலே இம்மொழிகளை அல்டய்க் மொழிகள் என எண்ணி வந்துள்ளனர். இம்மொழிகளுக்கும் பிற பிரிவு அல்டய்க் மொழிகளுக்குமிடையே பல்வேறு மொழிக்கூறுகள் ஒன்றிக் காணப் படுகின்றன. இத்தகைய ஒற்றுமை காணப்படினும் இம்மொழி பேசுகின்ற மக்களுக்கும் பிற அல்டய்க் மொழியினர்க்குமிடையே இனத்தொடர்பு உள்ளதா என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு. ஒரே இனமொழிகளைப் பேசுவோரிடையே இனத் தொடர்பு இருக்கவேண்டும் என்ற நியதி இல்லையென்பது இங்கு கவனிக்கத் தக்கதாகும். இரு இன மக்கள் ஒருவரோடு ஒருவர் நெருங்கிப் பழகும்போது ஒருவருடைய மொழியை மற்றொருவர் பேசுவதும் அதனால் ஒருவர் மொழி அழிவதும் உலக வரலாற்றில் காணப்படும் உண்மையாகும். இம்மொழி பேசுவோராக (1950 மக்கட்தொகைக் கணிப்புப்படி) 70,000 மக்கள் உள்ளனர் என்பர்.

இம்மொழிகளை வடக்குத் துங்கூஸ் மொழிகள் என்றும் தெற்குத் துங்கூஸ் மொழிகள் என்றும் இருபிரிவாகப் பிரிப்பர். தெற்குத் துங்கூஸ் மொழிகள் தென்மேற்கு மொழிகள் (மஞ்சு குழு) என்றும் தென்கிழக்கு மொழிகள் (நனய் குழு) என்றும் பிரிவுபடும்.

வடக்குத் துங்கூஸ் மொழிகள் வடமேற்குத் துங்கூஸ் மொழிகள் (எவங்கி குழு) எனவும் பெயர்பெறும். இதன்கண் மூன்று விதமான கிளைமொழிக் குழுக்கள் (dialect groups) உள்ளன.

இவற்றை முறையே வடக்குக் கிளைமொழி, தெற்குக் கிளைமொழி, கிழக்குக் கிளைமொழி என அழைப்பர். இவை தவிர வடமேற்குத் துங்கூஸ் பிரிவில் நெகிதால், சொலொன், மனகிர், ஒரொச், சொன், எவன் என்ற மொழிகளையும் காணுகிறோம்.

தெற்குத் துங்கூஸ் மொழிகள்

- மஞ்சு (Manchu)
- நனய் (Nanaj)
  - உகிதெ (Ugide)
  - ஒரொச் (Oroc)
  - நனய் (Nanaj)
  - கோல்ட் (Gold)
  - சமாகிர் (Samagir)
  - ஒல்சா (Olca)
  - ஒரக் (Orok)
  - பிரார் (Birar)
  - கிலே (Kile)
  - அக்கனி (Akani)

வடக்குத் துங்கூஸ் மொழிகள்

- எவங்கி (Evenki)
  - வடக்கு
  - தெற்கு
  - கிழக்கு
- நெகிதால் (Negital)
  - சொலொன் (Solon)
  - மனகிர் (Manegir)
  - ஒரொச் (Oroc)
  - சொன் (Con)
  - எவன் (Even) (Lamut)

**3.73.1 மஞ்சு (Manchu)**

இது மஞ்சு-துங்கூஸ் பிரிவைச் சார்ந்ததாகும். இம்மொழி பேசுவோர் சைனுவிலும் மஞ்சூரியாவிலும் (சைனுவின் பகுதி) கிழக்கு சைபீரியாவிலும் வாழுகின்றனர். இவர்களில் சிலர் வெளி மங்கோலியாவிலும் சிங்கியாங் பகுதிகளிலும் குடியேறியுள்ளனர். மஞ்சு மக்கள் 17-வது நூற்ருண்டில் சைனு முழுவதும் வென்று தங்கள் பேரரசை நிலை நாட்டியது முதல் சீன நாகரிகத்தையே கொண்டு சீன மக்களுடன் இரண்டறக் கலந்து விட்டனர் என்று கூறலாம். இன்று சைனுவில் இம்மொழி பேசுவோர்களாக சுமார் இருபத்து நான்கு லட்சம் மக்கள் உள்ளனர். மஞ்சு-துங்கூஸ் மக்களை வடபிரிவினர், தென் பிரிவினர் என இரண்டு பிரிவாகப் பிரிப்பர். இவர்களுள் வட பிரிவினர் துங்கூஸ் மக்கள் என்றும் தென் பிரிவினர் மஞ்சு மக்கள் என்றும் அழைக்கப் படுவார்கள். துங்கூஸ் மக்கள் கிழக்கு சைபீரியாவிலும் மஞ்சூரியாவின் சில பகுதிகளிலும் வாழுகின்றனர். மஞ்சூரியாவில் வாழும் மக்களில் தொண்ணூறு விழுக்காடு சீன மக்களாகும். வட பாகங்களில் ஒருசில மஞ்சு ஊர்களைக் காணலாம். மஞ்சு மக்கள் சீன மக்களுடன் இரண்டறக் கலந்து விட்டனர். மஞ்சூரியாவில் பத்து லட்சத்துக்கதிகமான கொரியர்களும் பத்துலட்சம் மஞ்சு—துங்கூஸ் மக்களும் உள்ளனர். துங்கூஸ் என்ற சொல் "தொங்கி" (மக்கள்) என்பதிலிருந்து வந்தது என்பர். சமொயொத் மக்கள் இவர்களை 'ஐய' (aiya) 'தம்பியர்' என்றழைப்பர்.

மஞ்சு மொழியில் எட்டு உயிர்களும் பதினெட்டு மெய்களும் உள்ளன. தமிழ் உயிர்களைப் போன்றே இம்மொழி உயிர்களும் குறில், நெடில் வேற்றுமை கொண்டுள்ளன. 1-ஆவது நூற்ருண்டு முதல் இம்மொழி மங்கோலிய எழுத்துக்களைப் பின்பற்றி உண்டாய எழுத்துக்களால் எழுதப்படுகிறது

என்பர்.[1] மங்கோலிய எழுத்தினைப் போன்றே மேலிருந்து கீழாக எழுதப்படுகிறது.

பிற அல்டய்க் மொழிகளைப் போலவே இதன் கண்ணும் உயிர் ஒருமைப்பாடு காணப்படுகின்றது. இதனால் ஒரே இலக்கணக்கூற்றினைக் காட்டும் உருபுகள் அல்லது ஒட்டுகள் பல மாற்றுருவங்களைக் கொண்டுள்ளன. இறந்த காலம் காட்டும் இடைநிலைகளாக எண்பது உள்ளன. இதே போன்று நிகழ் காலம் காட்டும் இடைநிலைகள் ஆறு உள்ளன. அகரத்தில் முடியும் வினையடிகள் -ஹ, -க என்ற இறந்தகால இடைநிலைகளையும் எகரத்தில் முடிவன -ஹெ, -கெ என்பவற்றையும் ஒகரத்தில் -ஹொ, -கொ இடைநிலைகளையும் இன்னும் சில வினைகள் வேறு இடைநிலைகளையும் ஏற்று வருகின்றன. இதே நிலையைப் பிற பல உருபுகளிலும் ஒட்டுகளிலும் காணலாம்.[2]

இம்மொழிப் பெயர்கள் தமிழ்ப் பெயர்களைப் போன்று ஒருமை, பன்மை எண்களைக் காட்டுவன. பன்மை பின்னொட்-

---

1. This alphabet was adopted by the Uigurs from a Syriac or Mandaic source, thence adopted to the Mongolian language and in 1599 slightly altered to suit the pronunciation. of Manchu.

P. G. Von Mollendorff, *A Manchu Grammar with Analysed texts*, p. 1.

2. The harmony of vowels consists in certain attraction of vowels physiologically related to eacd other; in accordance with it a vowel can only be followed by a corresponding one. All the Altaic languages show this peculiarity, the Turkish dialects the most, the Tungusic and Manchuthe least Within stems this harmony of vowels is of interest only to th. philologist, but as most of the affixes in Manchu offer the choice between 2 or even 3 vowels (e. g- ha. ho, he; la, le; hon, hun, hūn), a few rules are necessary to show which vowels should be used.

*Ibid*, p. 2.

டுசளாலும் சொற்கள் இரட்டிப்பதாலும் எண்ணுப் பெயர்கள் பெயர்களின் முன் அல்லது பின்னுல் வருவதாலும் காட்டப்படும்.[1]

| | | | |
|---|---|---|---|
| ஹன் | ஹன்ஸ | (han-sa) | பேரரசர்கள் |
| அகெ | அகெஸெ | (age-se) | அண்ணன்மார் |
| ஸெ | ஸெஸெ | (se-se) | வருடங்கள் |
| கெரென் நியல்ம | | (geren-niyalma) | மனிதர்கள் |
| நியல்ம தொமெ | | (niyalma tome) | மனிதர்கள் |

இதன்கண் ஐந்து வேற்றுமைகள் உள்ளன. வேற்றுமை உருபுகள் மூவிடப் பெயர்களுடனிணைந்து நின்று இப்பொருள் காட்டுவதும் பெயர்களின் பின்னுல் பின்னுருபுகளாக வருவதும் பிற அல்டய்க் மொழிகளில் காணப்படாத ஒரு பண்பாகும். அது வேற்றுமை உருபே ஆன் வேற்றுமையாகவும் வரக் காணலாம். கு வேற்றுமையே கண் வேற்றுமையாகவும் பயன் படுகின்றது.

| | | |
|---|---|---|
| பி | (bi) | நான் |
| மினி | (mini) | என்னுடைய |
| மிந்தெ | (min-te) | எனக்கு |

1. *Ibid*, p, 5. **கெரன், தொம,** என்ற சொற்கள் 'all' என்று பொருள்படும்

De denotes the situation (in at), the direction (towards) upon. on), the address (to) the remaining with, according to the locative and the dative.

*Ibid*, p. 5.

Separation and is used in comparisons ....................... It serves to form the comparative, e. g. *minci amba* bigger then myself,

*Ibid*, p. 6.

| | | |
|---|---|---|
| மிம்பே | (mim-be) | என்னை |
| மின்சி | (min-ci) | என்னிடமிருந்து, என்னை விட (என்னிலிருந்து) |
| போ இ எஜென் | (boo-i-ejen) | வீட்டின் தலைவன் |
| சுகை இ | (suhe-i) | கோடாரியால் |
| ஹொதொன் தெ | (godon-de) | நகருக்கு, நகரில் |
| குருன் தெ | (gurun-de) | பேரரசில் |
| பெயெ பெ | (beye-be) | உடலை |
| பைத பெ | (bai-ta-be) | பொருட்களை |

மங்கோலிய மொழியைப் போலவே இதன்கண்ணுள்ள மூவிடப் பெயர்கள் காணப்படுகின்றன. மங்கோலியனில் உளப் பாட்டுத் தன்மை இருக்க இதன்கண் வேறொரு விதமாக தன் மைப் பன்மை காணப்படுகின்றது. இது பேசுவோர்கள் ஒரு குடும்பம் அல்லது இனம் அல்லது நாட்டினர் என்ற பொரு ளில் வரும் என்பர்.[1] இப்பெயர்கள் வேற்றுமை உருபுகளை ஏற் கும் போது உருவம் மாறி வருவது தமிழ் மொழியுடனும் மங் கோலிய மொழியுடனும் வைத்து ஒப்பு நோக்கத் தக்கது. நம் மொழியைப் போலவே இதன்கண்ணும் அண்மை, சேய்மை சுட்டுப் பெயர்கள் அமைந்துள்ளன. ஆனல் ஆங்கிலத்தைப் போன்று இவைகள் பெயரடைகளாகவும் வர வல்லனவாம்.

---

1. *Muse* means (like the Pekingese... tsa men) we that are speaking together, we that belong to one family, one clan, one nation,

*Ibid*, p. 6.

The sign of the past tense *ha*, *he*, *ho*, *ka*, *ke*, *ko*, *ngke*, *ngko* and the sign of the future *ra*, *re*, *ro*, *ndara*, *ndere*. *ndoro* are subject to the laws of vowel harmony.

*Ibid*, p. 10.

| | | |
|---|---|---|
| எரெ | (ere) | இது, இந்த |
| எஸெ | (ese) | இவை, இந்த |
| தெரெ | (tere) | அது, அந்த |
| தெஸெ | (tese) | அவை, அந்த |

பொதுவாக இம்மொழி வினைச்சொற்கள் பிற அல்டய்க் மொழிகளைப் போன்று ஒட்டுகள் பலவேற்று இலக்கணக்கூறுகள் பலவற்றைக் காட்டினும் விகுதியேற்று எழுவாய் காட்டாமலிருப்பது பிறமொழிகட்கும் இதற்குமிடையே காணப்படும் வேறுபாடாகும். இதே நிலை மங்கோலியரின் மொழியிலும் இருப்பது இங்கு ஒப்புநோக்கத் தக்கதாகும். ஆனால் கால இடைநிலைகளை ஏற்றுக் காலம் காட்டுவதும் உயிர் ஒருமைப்பாடும் இம்மொழியில் காணப்படுவதால் ஒரே காலத்தினைக் காட்டும் இடைநிலைகளாக பல இருப்பதும் இங்கு கூறத்தக்கன.

| | | |
|---|---|---|
| அர | (ara) | எழுது |
| அரம்பி | (arambi) | எழுதுகிறேன், எழுதுகிறான் |
| அரமெ | (arame) | எழுத |
| அரஹ | (araha) | எழுதினேன், எழுதினான் |
| அரர | (arara) | எழுதுவேன், எழுதுவான் |
| அரசி | (araci) | எழுதினால் |
| அரகி | (araki) | எழுதலாம் |

என்பன இம்மொழி வினைச்சொற்களின் பண்பினைக் காட்டும். வினைச்சொற்களில் வரும் ஒட்டுகளாக இருபத்து மூன்று உள்ளன என்பர்.

கோல்ட் (Gold), ஒல்சா (Olca) ஒரக் (Orok), ஒரொச் (Oroc) என்ற மொழியினர் தங்களை நனய் (Nanaj) பிரிவினர் என்று அழைப்பர். இம்மக்கள் ரஷ்ய—சீன மக்களின் செல்வாக்குக்கு உட்பட்டவர்கள். எனினும் சீன மக்களின் செல்வாக்கு

இவர்களிடம் அதிகமாக இருக்கக் காணலாம். இதுபோன்றே மஞ்சு மொழியினரும் ஜப்பானியரும் இவர்களிடம் தங்களின் செல்வாக்கை அதிகமாகக் கொண்டிருந்தனர்.

**3.73.2 கோல்ட் (Gold)**

1959 மக்கட் கணிப்புப்படி (ரஷ்யா) இம்மொழி பேசுவோராக 8,000 மக்கள் உள்ளனர். இவர்கள் ஓல்சா (Olsa) மொழியினருடனும் எவங்கி (Evenki) மொழியினருடனும் அமுர் (Amur) நதியின் பகுதியில் வாழுகின்றனர். இம்மக்கள் மஞ்சூரியாவின் வடகிழக்குப் பகுதிகளிலும் காணப்படுகின்றனர். மஞ்சு மொழியில் காணப்படும் நாட்டுப்புற பாடல்களில் இம்மொழியைப் பற்றிய குறிப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இம்மொழியினரைப் போலவே ஓல்சா (2000), ஓரக் Orok 741), பிரார், கிலெ (Birar, Kile), அகனி (Akani), உகிதெ (Ugide) மக்களும் இப்பிரதேசங்களில் வாழுகின்றனர்.

வடமேற்குப் பிரிவைச் சார்ந்த எவங்கி (Evenki) மக்கள் துங்கூஸ்கா ஆற்றுப் பகுதிகளில் வாழுகின்றனர். இம்மொழி பேசுபவராக (1959-ம் ஆண்டு மக்கட் கணிப்புப்படி) 25,000 மக்கள் வாழுகின்றனர். இவர்களையொட்டி நெகிதல் (Negital), ஓரசொன் (Orocon) போன்ற மொழியினரும் வாழுகின்றனர்.

## 3. 8 காக்கேசியன் மொழிகள் (Caucasian Languages)

சோவியத் யூனியனில் காஸ்பியன் கடலுக்கும் கருங்கடலுக்குமிடைப்பட்ட பகுதிகளில் (காக்காசன்) வழங்கும் மொழிகளை இப்பெயரால் அழைப்பர். இம்மொழிகளினூடே ஆர்மினியன் போன்ற இந்தோ ஐரோப்பிய மொழிகளும் பேசப்படுகின்றன.[1] பல்வேறு மொழிகள் நிறைந்து காணப்படும் இடங்களில் காக்காசன் பகுதியும் ஒன்று என்பர். இன்று காக்கேசிய மொழி பேசுவோராக சுமார் 50 லட்சம் மக்கள் உள்ளனர். மேலும் இம்மொழி பேசுவோர் பலர் துருக்கி, சிரியா, ஜோர்டான், ஈரான் போன்ற பல நாடுகட்குக் குடிபெயர்ந்துள்ளனர்.

காக்கேசிய மொழிகளை ஜெபட்டிக் (Japhetic) மொழிகள் என்றும் அழைப்பர். மார் என்ற சோவியத் மொழியியல் அறிஞர் முதன் முதலாக, இம்மொழிகள் ஒரே இனத்தைச் சார்ந்தனவென்று கூறியதோடு இவ்வின மொழிகளை 'ஜெபட்டிக்' இனம் எனப் பெயரிட்டழைத்தார்.[2] மேலும் இவர் இம்மொழிகட்கும் செமிட்டிக், திராவிடம், பாஸ்க் போன்ற பல இன மொழிகட்கும் இடையே இனத்தொடர்புண்டு என்றும் கூறி

---

1. Indo - European: Armenian, Ossetes, Yalysh, Yat Kurde, Altaic Azeri Purks, Turkomons, Karapapak, Kumuk, Noghay, Karachay, Balkar, Kalmyk.

2. For the Georgian "branch" Marr proposed the term "Japhetic" [21]. As proposed the term "Noötic" ["Continuing to rely on Biblical terminology"] for the language family of which Semitic and Japhetic would be branches.[22]

Lawrence L. Thomas, "The Linguistic Theories of J. A. Marr", (*U. C. P. L.* Vol. 14, 1957), p. 5.

யுள்ளார்.[1] ஆனுல் இன்று இவருடைய கொள்கை ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று என்றும் காக்கேசிய மொழிகட்கிடையே யுள்ள இனத்தொடர்பு கூட நன்கு தெளிவில்லை என்றும் கூறுவர் பலர்.[2]

பொதுவாக காக்கேசிய மொழிகளில் ஏராளமான மெய் யெழுத்துக்களைக் காணலாம்.[3] சில மொழிகளில் எழுபத்

---

1. Occassionally, Marr even added languages to the **Japhetic** family without ever pursuing a special study of them. In 1922 he was able to say that "not only the Hamites and **Semites**, but also the languages of the Dravidian tribes as well......... are to a greater or lesser degree related to it (Japhetic).

*Ibid.*, p. 38.

According to Mixankova and Meščaminov, the study of Basque and Etruscan meant a return to an interest Marr had had as a student,[20] Basque,[21] Etruscan, and Pelasgian[22] wer classified as Japhetic in 1920.

*Ibid.*, p. 40.

2. The term Caucasian is applied to all languages spoken in the Caucasus area which are neither Indo-European (Ossetic and Russian) nor Turkic (Azarbayjani, Kumik, Balkar, etc.) but the appellation is geographic rather than linguistic, for we here have two families, North Caucasian, and South Caucasian, whose affinity, though often postulated, has not yet been satisfactorily demonstrated.

Louis H. Gray, *Foundations of Language*, p. 374.

3.

| | Vowel | Consonants. |
|---|---|---|
| Georgian | 5 | 33 |
| Routoul | 8 | 47 |
| Tche' tcne | 5 | 60 |
| Thabassaran | 7 | 62 |
| Andi | 5 | 51 |
| Koubatchi | 7 | 66 |
| Agoul | 7 | 61 |
| Dargwa | 6 | 62 |
| Kuri | 7 | 57 |

தைந்து மெய்கள் உள்ளன என்பர். இதே போன்று நான்கு, ஐந்து, ஆறு மெய்மயக்கங்களையும் காணமுடியும்.

mghwdl பாதிரியின் (ஜார்ஜியன்)

இம்மொழிகள் பொதுவாக ஒட்டு மொழிகளே. உராலிக்–அல்டய்க் மொழிகளைப் போன்றே இம்மொழிகள் சிலவற்றில் ஏராளமான வேற்றுமைகள் உள்ளன. தபசரன் (Tabassaran) மொழியில் 35 வேற்றுமைகள் உள்ளன என்பர்.

காக்கேசிய மொழிகளை வடமேற்கு, வடகிழக்கு, தென் மொழிகள் என மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர். இவை தம்மிடையே உள்ள இனத்தொடர்பு இன்னும் நிருபிக்கப்படவில்லையெனினும் பல சோவியத் மொழியியல் அறிஞர்கள் இவற்றை ஒரே இனமாகவே கருதுகின்றனர்.[1]

---

| | | |
|---|---|---|
| Awar | 5 | 48 |
| Lak | 5 | 68 |
| Artchi | 5 | 75 |
| Qabardi | 6 | 52 |
| Besla'ne | 6 | 59 |
| V. Abzakke | 3 | 57 |
| n Abzakhe | 3 | 38 |
| Te'mingoy | 3 | 60 |
| Qubykh | 3 | 61 |
| Bgedoukh | 3 | 61 |
| Chapsagh | 3 | 70 |

Tadeusz, Milewzki, "Languages Caucasienes at americaines," in *Lingua Posnaniensis*, Vol. V. 1955, p. 142.

1. The existence of a genetic relationship between NW and NE Cauc. is probable: the relations of Cauc. to this N group so far remain unclear though many Soviet linguists take a genetic relationship for granted, or at least start from it as a working hypotheis.

Aert H. Kuiper, "Caucasian" in *Current Trends in Linguistics*, p. 314. (Ed. by. Thomas A. Sebeok).

முப்பதுக்கும் அதிகமான மொழிகள் இவ்வினத்தில் இருப்பினும் பன்னிரு மொழிகளே சோவியத் நாட்டில் இலக்கிய மொழிகளாகக் கருதப்படுகின்றன. இவற்றுள் ஜார்ஜியன் மொழிக்கு மட்டுமே தனியான எழுத்து முறையும் கி. பி. ஐந்தாவது நூற்றாண்டு முதலே எழுதப்பட்ட பல்வேறு நூல்களைக் கொண்டுள்ள பெருமையும் உள்ளது. பிற மொழிகள் அனைத்தும் சிரில்லிக் எழுத்து முறையிலேயே எழுதப்படுகின்றன.

| மொழிகள் | | பேசுவோர் |
|---|---|---|
| ஜார்ஜியன் | (Georgian) | 2,700,000 |
| செச்சன் | (Chechen) | 419,000 |
| லெஸ்கியன் | (Lezghan) | 233,000 |
| அவர் | (Awar) | 270,000 |
| கபார்டியன் | (Kabardian) | 204,000 |
| தார்கவா | (Dargwa) | 158,000 |
| மே. சிர்காசியன் | (W. Circassian) | 155,000 |
| இங்குஷ் | (Ingush) | 106,000 |
| அப்கஸ் | (Abkaz) | 65,000 |
| லக் | (Lak) | 64,000 |
| தபசரன் | (Tabassaran) | 35,000 |
| அபஸா | (Abaza) | 20,000 |

### 3.8.1 தென் காக்கேசியன்

இப்பிரிவில் ஜார்ஜியன் (Georgian, 2,700,000), மிங்கிரிலியன் (Mingrelian, 300,000), லஸ் (Laz), சுவன் (Swan, 23,000) என்ற மொழிகள் அடங்கும். இவற்றுள் மிங்கிரிலியனும் லஸ் மொழியும் தம்முள் மிகுந்த தொடர்புடையன

**3 8.2 வடமேற்கு காக்கேசியன்**

சிற்காசியன் (Circassian, 115,000), கபார்டியன் (Kabardian, 204,000), உபிக் (Ubyx) போன்ற மொழிகள் இதனுள் அடங்கும். இவற்றுள் உபிக் சோவியத் நாட்டில் இன்று வழக்கில் இல்லை. துருக்கியில் வழக்கிலிருப்பினும் அழிகின்ற நிலையிலேயே உள்ளது. பொதுவாக இம்மொழிகளில் ஏராளமான மெய்கள் உள்ளன. கபார்டியனில் நாற்பத்தெட்டு மெய்களும் அப்கஸ் (Abkaz) மொழியில் அறுபத்தேழு மெய்களும் காணப்படுகின்றன.[1] ஆனால் இதற்கு நேர்மாறாக கபார்டியனில் இரண்டு உயிர்களே (a, e) உள்ளன.[2]

---

1. The N. - W. Caucasian languages are unique among the languages of the world by virtue of their phonological structure, which is characterised by an extreme abundance of consonants (a minimum of 48 in Kabardian, a maximum of 67 in the Bzyb' — dialect of Abkaz) and according to Trubetzkoy's analysis, by a "vertical" vowel - system, i. e a system employing only distinctions of sonerity or openness, to the exclusion of distinctions of brightness or frontback localization and rounding.[20]

Aert H. Kuiper, *Phoneme and Morpheme in Kabardian*, p. 11.

2. The vowel systems of the Northwest Caucasian language show (in terms of the number of phonemic contrasts) the simplest known system in the world: one distination of each of two tongue heights, /a/ (lower) and /ə/ (higher). Each of these two contrastive vowels has a large variety of non-contrastive allophones (lower front and back for /a/ and higher front and back for /ə/) predictable in terms of the surrounding consonants. The higher vowel /ə/ has often been interpreted as junctural feature. In several of the Northwest languages there is a third vowel generally analyzed as long /a:/ (which appears to be roughly at the same tongue height as /a/).

*Anthropological Linguistics* (Vol. 6, No. 8, 1964), p. 23.

கபார்டியனில் ஏராளமான சொற்கள் ஒரே ஒரு மெய் யெழுத்தைக் கொண்டுள்ளமை பிற மொழிகளில் காணப்படாத தனிப் பண்பாகும்.

இம்மொழிகளில் எளிமையான வேற்றுமைப்பண்பும் சிக்கல் நிறைந்த வினைமாற்றங்களும் காணப்படுகின்றன என்பர். ஆனால் வடகிழக்கு மொழிகளில் ஏராளமான வேற்றுமைகளும் (தபசரன் 35) எளிய வினைமாற்றங்களும் உள்ளன.[1]

### 3.8.3 வடகிழக்கு மொழிகள்

இதனை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர். இதன் கண் செச்சன், இங்குஷ் போன்ற முப்பத்தொரு மொழிகள் உள்ளன. தமிழ்மொழியில் பல்வேறு பின்னுருபுகளைப் பயன் படுத்திக் கூறும் இடப்பொருளையெல்லாம் தனித்தனியான உரு புகளால் இம்மொழியினர் கூறுவதைக் காணலாம். தபசரன் மொழியில் முப்பத்தைந்து வேற்றுமைகளும் லக்கி மொழியில் ஐம்பதுக்குமதிகமான வேற்றுமைகளும் உள்ளன. மேலும் இம்மொழிப் பெயர்கள் தமிழ்ப் பெயர்களைப் போன்று உயர் திணை, அஃறிணையாகவும் ஆண், பெண் பால்களாகவும் பிரிக் கப்படுகின்றன.

---

1. Morphemes are short: especially in the case of the N. Cauc. languages is evidence that historically many if not all morphemes consisted of single consonants or of consonant-groups with homogeneous glottal articulation (socalled "harmonic complexes")

Aert H. Kuiper, "Caucasian", in *Current Trends in Linguistics* (Ed. by Thomas A. Sebeok), p. 317.

While the NW Cauc. languages have simple case-systems and a rich, polypersonal conjugation, NE Caus. has extensive serial case-system and mostly does not express person in the verb. The S. Cauc. languages occupy in both respects an intermediate position.

*Idid.*, p. 317.

| | | |
|---|---|---|
| தொவ் | (do-*u*) | அவன் |
| தொஇ | (do-*i*) | அவள் |
| தொப் | (do-*b*) | அது (அவர்) |

**do*w* tchi *w*ugo** இம்மனிதன் வீட்டில் இருக்கிறான்

**do*b* keto *b*ugo rogob** இப்பூனை வீட்டில் இருக்கிறது

**do*y* thladi *y*igo rogoy** இம்மனைவி வீட்டில் இருக்கிறாள்

என்ற வாக்கியங்கள் தொடரியலில் இப்பாகுபாடு தரும் வேற்றுமையை நன்கு காட்டும்.

## 3.9 பாஸ்க் (Basque)

இது வட ஸ்பெயினிலும் பிரஞ்சு நாட்டில் தென் மேற்குப் பகுதிகளிலும் வழங்கும் மொழியாகும். இன்று இம்மொழி பேசுவோராக ஸ்பெயின் நாட்டில் சுமார் 50,000 அல்லது 60,000 மக்களும் பிரஞ்சு நாட்டில் சுமார் 90,000 மக்களும் உள்ளனர். ஆயிரக்கணக்கான வருடங்களாக நடந்து வந்த அந்நிய மொழியினரின் படையெடுப்பிற்கும் ஆதிக்கத்திற்கும் அழிவுபட்டுச் சிதைவடையாத மொழி இது. பிற மொழிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டிருப்பினும் தன்னுடைய தனித் தன்மையை விட்டு அவற்றுடன் இது இரண்டறக் கலந்து விட வில்லை.

பிற மொழிகளுடன் இதன் தொடர்பு பற்றிப் பல்வேறு கருத்துக்கள் உள்ளன. எனினும் அக்குத்தேனியன் (Aquitanian) மொழியினுடைய தொடர்ச்சியே இம்மொழி என்று பலர் கருதுகின்றனர்.[1] சீஸர் காலத்து ஸ்பெயின் நாட்டில் அக்குத்தேனிய மக்கள் வாழ்ந்து வந்ததாகவும் இம்மக்கள் மிகுந்த வீரம் கொண்டு விளங்கினர் என்றும் கூறப்படும்.

ஹம்போல்ட் போன்றோர் பண்டு இம்மொழி ஸ்பெயின், பிரான்சு போன்ற பல நாடுகளில் பரந்திருந்தது என்றும் இம் மொழியும் முன்னால் ஸ்பெயின், போர்ச்சுக்கல் போன்ற நாடு களில் வழக்கிலிருந்த ஐபிரியன் மொழியும் தம்முள் மிகுந்த தொடர்புடையன என்றும் கூறுவர். ஆனால் அட்லாண்டிக் கரை

---

1. *Encyclopaedia Brittanica* (1972), p. 256

Such specialists in Basque research Rane and C. C. Uhlenbeck, however, believe Basque to be direct descendants of the Aqditansans (who in the time of Julius Caesar inhabited the region between the Garronne River, the Pyrenees and the Atlantic) and the Vascones (who once occupied the greater part of the Spanish Navarre and adjacent areas).

*Anthropological Linguistics* (Vol. 6, No. 8), p. 31.

யோரப்பகுதிகளின் இடப்பெயர் ஆராய்ச்சி இக்கருத்தை வலி யுறுத்துவதில்லை என்றும் இக்கொள்கை பொருந்தாது என்றும் கூறுவர் பலர். [1]

மேலும் இம்மொழிக்கும் உராலிக்—அல்டய்க் மொழிகட்கு மிடையே இனத்தொடர்பு உண்டென்றும் இதற்கும் ஹெமிட்டோ செமிட்டிக் மொழிகட்கும் தொடர்பு உண்டென் றும் இதுவும் ரொமான்ஸ் மொழிகளும் தம்முள் தொடர்புடை யன என்றும் கூறுவர் பலர். இன்னும் சிலர் காக்கேசியன் மொழி கட்கும் இதற்குமிடையே பல ஒற்றுமைக்கூறுகள் காணப்படு கின்றன என்றும் பலவாயிரம் ஆண்டுகட்கு முன்னால் இம் மொழிகள் தம்முள் ஓரினமாக விளங்கின என்றும் கூறுவர். [2]

பழைய அக்குத்தேனியன் மொழிக் கல்வெட்டுக்களில் பல பாஸ்க் சொற்கள் காணப்படுகின்றன. பத்தாவது நூற்றாண் டைச் சார்ந்த இக்கல்வெட்டுக்களில் கடவுளர் பெயர்களும் பல பட்டப் பெயர்களும் உள்ளன. எனினும் இம்மொழியில்

---

1. A study of place names in these regions has confirmed many of these conclusions, and has relegated to the background the theory of the wider extension of the Basque people in primitive Spain - a theory advanced by Humboldt. Nor does there appear to be a solid basis for the hypothesis advanced by Lewy and in some ways attractive - that the Basque belong to a very old racial substractum which at one time pervaded the whole Atlantic coast of Europe.

Antonio Tover, *The Basque Language*, p. 18.

2. *Encyclopaedia Brittanica*, (1972) p. 256.

Today we are able to affirm as being a truth of common acceptance that in fundamental and typical characteristics, and in many elements of vocabulary, the Basque resembles the complex Caucasian group, which assumes a relationship most remote in time and which we carry back several millennia.

Antonio Tover, *Ibid.*, p. 37.

எழுதப்பட்ட முதல் நூல் 1545-இல் தோன்றிய சில பாடல்களின் தொகுதியாகும். இதன் பின்னர் 1571-ல் புதிய வேதாகமத்தின் மொழி பெயர்ப்பு ஒன்று அச்சிடப்பட்டது. இம்மொழி இலக்கியத்தின் தந்தையாகக் கருதப்படுபவர் பதினேழு, பதினெட்டாம் நூற்றூண்டுகளில் வாழ்ந்த லாரமெண்டி (Manuel de Larramendi 1690-1766) என்ற பாதிரியாராகும். சிறந்த இலக்கணம் (1725) ஒன்றும் பேரகராதி ஒன்றும் ஆக்கியுள்ளார் இவர்.

இம்மொழியினர் தங்களை "எயுஸ்கரா" என்றும் "எஸ்குவரா" (Euskara, Eskuara) என்றும் அழைப்பர். குயுன்ஸ்கோ (Cuipuzcoa), பிஸ்காய் (Biscay), நவரூ (Navarro) போன்ற மாநிலங்களில் பேசப்படும் இம்மொழியின்கண் எட்டுக் கிளை மொழிகள் உள்ளன.[1] இவற்றுள் சில பிரான்சில் பேசப்படுகின்றன. இன்று இது ஸ்பானிய, பிரஞ்சு எழுத்துக்களால் எழுதப்படுகிறது.

பொதுவாக பாஸ்க் மொழியில் இருபது மெய்களும் அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்து உயிர்களும் உள்ளன. சில கிளை மொழிகளில் ü உயிர் அதிகமாகக் காணப்படுகிறது. தமிழைப் போன்றே இதன்கண்ணும் இரண்டு ரகரவொலிகள் (ர, ற) உள்ளமை காணத்தக்கதாம்.[2]

---

1. There are eight Basque dialects known by French and or Spanish provincial names. Viscayan (most divergent as well as most widely spoken).

Cuipuzcoan, Northern Upper Navarrese, Southern Upper Navarrese, Labourdin, Western Lower Navarrese, Eastern Lower Navarrese, Souletin.

2. There is a voiced alveolar flap and a voiced alveolar trill : /r/ and /rr/ respectively.

Dorita Lochak, "Basque Phonemics," in *Anthropological Linguistics*, 1960, No. 3, p. 26.

| | | |
|---|---|---|
| ஹாரி | (hari) | நூல் |
| ஹறி | (harri) | கல் |

பாஸ்க் மொழியில் எந்தவிதமான பால் பகுப்பும் இல்லை. ஆனால் தமிழைப் போன்று ஒருமை, பன்மை எண்கள் உள்ளன. எனினும் பன்மை எப்போதும் சிறப்புச் சுட்டுடன் மட்டுமே வருதல் காணலாம். [1]

| | | |
|---|---|---|
| கிஸொன் | (gizon) | மனிதன் |
| கிஸொன | (gizona) | the man |
| கிஸொனக் | (gizonak) | மனிதர்கள் |

தமிழைப் போன்றே பாஸ்க் மொழியும் ஒரு ஒட்டு மொழி யாகும். பல்வேறு இலக்கணக்கூறுகள் பல்வேறு பின்னொட்டு களாலேயே உணர்த்தப்படுகின்றன. எழுவாய், அன், கு, ஒடு, அது, கண் வேற்றுமைகளுடன் "ergative" வேற்றுமையும் காணப்படுவது தமிழ் போன்ற மொழிகளில் காணப்படாத ஒரு பண்பாகும். [2] தமிழில் "ஜான் வீட்டை வாங்கினன்" என்று கூறும்போது 'ஐ' உருபினைச் செயப்படுபொருள் காட்டும் சொல்லுடன் இணைத்துக் கூறுகிறோம். ஆனால் இம்மொழியில் நிலைமை வேறாகும். தன்வினையாயின் எழுவாய்ச் சொல் எந்த உருபினையும் ஏற்காது எழுவாய் காட்ட,

---

1. Number is either singular or plural. The suffix of the plural is *-k*; e. g., *gizona*, 'the man'; *gizonak*, 'the men'; *emakumea*, 'the woman'; *emakumeak*, 'the women'. The plural noun is never without the article; 'men' cannot be expressed.

W. J. Eys, *The Basque Language*, pp. 8-9.

2. The 'case' may be reduced to nominative, ergative dative, comitative, locative of direction of seperation and partitive.

Antonio Tover, *Ibid.*, p. 65.

பிறவினையாயின் எழுவாயாக நிற்கும் சொல் -k உருபினையேற்று, செயப்படுபொருள் காட்டும் சொல் எந்த உருபினையும் ஏற்காது செயப்படுபொருள் காட்டும். இது பிற மொழிகளில் காணப்படும் செயப்பாட்டு வினையை ஒத்துக் காணப்படுகிறது.[1]

gizona (எழுவாய்) do go — மனிதன் தங்குகிறான்

gizonak (active) badaki — மனிதன் (அதை) அறிகிறான்

gizonk dakusa haurra (nominative) — மனிதன் குழந்தையைப் பார்க்கிறான் (குழந்தை மனிதனால் பார்க்கப்பட்டது)

hurrak dakusa gizona — குழந்தை மனிதனைப் பார்க்கிறது (மனிதன் குழந்தையால் பார்க்கப் பட்டான்)

இவ்வாறு பிறவினையில் உருபினையேற்று எழுவாய்ப் பொருள் காட்டுவதை இம்மொழியினர் "ergative" அல்லது "active" வேற்றுமை என்பர்[2]. எனவே தமிழ் போன்ற மொழி களில் செய்வினையாக காணப்படுகின்ற பிறவினைப் பொருள்

---

1. The nominative, with 'sufflx zero', serves as the subject of substantive and intransitive verbs, and also as the object of transitive verbs. In reality the latter usage resembles our passive voice.

Antonio Tover, *Ibid.*, p. 66.

2. The ergative case, or active (*in - ek*) is rigorously connected with the "passive" concept of the verb or as it is sometimes termed, of 'nominal" nature.

*Ibid.*, p. 67.

There exists a so-called active case contrasted with the nominative; the subject or passive case.

செயப்பாட்டு வினையாக காணப்படுகின்ற பிறவினைப் பொருள் செயப்பாட்டு வினையாகவே காட்டப்படுகிறது.[1]

பெயர்கள் பெயரடைகளுடன் வரும்போது வேற்றுமைப் பொருள் காட்ட வேண்டின் பெயரடைகளே வேற்றுமை உருபு களை ஏற்று நிற்பதைக் காணலாம்.[2] லத்தீன் போன்ற மொழி களில் பெயரும் பெயரடைகளும் உருபேற்பதும் தமிழ் போன்ற மொழிகளில் பெயர்கள் உருபேற்பதும் பல மொழி களிடையே காணப்படும் வெவ்வேறு பண்புகளை நன்கு காட்டு வனவாக அமைந்துள்ளன.

| | | |
|---|---|---|
| கிஸொனெஸ் | (gizone-z) | மனிதனால் |
| கிஸொனஸ் | (gizona-z) | by the men |
| எறெகின கஸ்தெஅரி | (erregina gaztea-ri) | இளைய அரசிக்கு |
| கிஸொனரி | (gizona-ri) | மனிதனுக்கு |

---

1. The verb is much less complicated than is generally supposed. but has no active voice (e. g., "the men sees the dog" is represented by the equivalent of 'by the man is seen the dog' cf. p. 280) and though not originally periphrastic, has now become so (e. g., 'I am in sight= 'I see').

Louis H. Gray, *Foundations of Language*, p. 377.

2. It is interesting, however, in determining the meaning and value of the Basque declension. to note that in a combination of noun and attributive abjectives or abjectives, only one of the words involved takes normally the signs of number and case : *etxe handi huntan*, 'in this large house' and not as occusrs in an "inflected" language like Latin. If Basque followed the Latin usage, we would have *etxean handian huntan*, in *hac magan domo*: A usage may be shown in which both the noun and the abjective, attributive or determinative, take the case suffixes, in that type the implication is one of the emphasis : *etxean handian berean egoiten da*, they dwell in the same large house.

Antonio Tover, *Ibid.*, pp. 72-73.

| | | |
|---|---|---|
| கிஸொனரென் | (gizona-ren) | மனிதனின் |
| பதெதிக் | (fate-tik) | ஒன்றிலிருந்து |
| கொஸெரெகின் | (gosear-ekin) | பசியுடன் |

பழந்தமிழ் போன்றே பாஸ்க் மொழியும் அண்மை, இடைநிலை, சேய்மைச் சுட்டுகளைக் கொண்டுள்ளது. இது போன்றே படர்க்கை மூவிடப் பெயர்களும் சுட்டுப் பெயராலேயே குறிக்கப்படுகின்றன.

வினைச்சொற்கள் காலம், எண், செயப்படுபொருள் போன்ற இலக்கணக்கூறுகளைப் பல்வேறு ஒட்டுகளால் உணர்த்துகின்றன. காலங்களில் நிகழ்காலம் இறந்தகாலம் என இரண்டு காலங்களே உள்ளன. இவற்றுள் இறந்தகாலம் காட்டும் ஒட்டாக னகரம் காணப்படுமாயினும் நிகழ்காலம் காட்டும் ஒட்டு எதுவுமில்லை. இறந்த கால வினைச்சொற்கள் செயப்படுபொருள் காட்டுவதில்லை என்பர்.[1]

| | | |
|---|---|---|
| நொஅ | (n-oa) | போகிறேன் |
| ஹொஅ | (ho-a) | போகிறாய் |
| தெகர்த் | (d-ekar-t) | அதைப் பொறுக்கிறேன் |
| தெகர்ஹி | (d-ekar-hi) | அதைப் பொறுக்கிறாய் |
| தெகர் | (d-ekar-$\phi$) | அதைப் பொறுக்கிறான் |
| நெகறென் | (n-ekar-n > nekarren) | பொறுத்தேன் |
| ஹெகறென் | (h-ekar-n > hekarren) | பொறுத்தாய் |

1. The indicative has two tenses - the Present and the Imperfect. The present is formed by the verbal theme, preceded by the object and followed by the subject. The present is never without the objecr 'it' expressed by *-d*.

W. J. Eys, *Ibid.*, p. 29.

## 3. 10 அமெரிக்க இந்திய மொழிகள் (American Indian Languages)

இன்று அமெரிக்க நாடுகளில் வாழும் பழங்குடி மக்களை "அமெரிக்க இந்தியர்கள் என அழைப்பர். இந்திய நாட்டைக் காணுவதாக எண்ணியதாலேயே இம்மக்களை இந்தியர்கள் எனவும் பின்னர் சிவப்பிந்தியர்கள் எனவும் அழைத்தனர்.[1] இம் மக்கள் இன்று வட அமெரிக்காவிலும் தென்அமெரிக்காவிலும் பரந்து வாழுகின்றனர். ஐரோப்பியர்கள் அமெரிக்க நாட்டில் குடியேறுவதற்கு முன்னர்க் காடுகளிலும் மேடுகளிலும் நாட்டுப்புற பகுதிகளிலும் பரந்து வாழ்ந்த இவர்கள், பின்னர் ஐரோப்பியர்களுக்குப் பயந்த நிலையில் காட்டுப்புற பகுதிகளில் ஒதுங்கி வாழத் தலைப்பட்டனர். இம்மக்களைப் "பாலியோ இந்திய மக்கள் (Paleo Indians) எனப் பொதுவாக அழைப்பர்.

இவர்கள் அமெரிக்க நாட்டில்[2] குடியேறி வாழ்ந்தவர்கள் என்றே கருதப்படுகின்றனர். ஏறத்தாழ 25,000-30,000 ஆண்டு

---

1. On his great voyage, Columbus was searching for and thought he had found a new route to India — and had thus reached the fabled orient, which Marco Polo had described for Europeans. Hence he spoke of the lands he had discovered as "the Indies," which long continued to be Spain's official name for her American possessions.

*Encyclopædia Britannica*, Vol. 1. p. 785

2. The name "America" is derived from that of the early explorer and friend of Columbus, Amerigo Vespucci (*q. v.*), who made several voyages to the new world and, perhaps just as important, described his travels in letters to friends in Italy. One of these letters, published in 1504, used the term *Mundus Novus* ("New World") in referring to South America. The letter circulated from hand to hand; the eye-catching title of *Mundus Novus* excited popular fancy. When a copy reached Martin Waldseemüller in Germany, he (apparently unaware of Columbus' voyage of 1498 during which he discovered the

கட்கு முன்னர் அலாஸ்காவின் வட பகுதி (Bering Strait) வழியாக அமெரிக்க நாட்டில் நுழைந்தனர் என்றும் பின்னர்ப் படிப்படியாகக் கானடா நாட்டின் தென்பகுதிக்கு வந்தனர் என்றும் ராக்கி மலைப் பிரதேசத்தில் தங்கி அதன்பின் நடு அமெரிக்கப் பகுதிகளிலெல்லாம் பரந்து வாழ்ந்தனர் என்றும் அதன்பின்னர் படிப்படியாகக் கிழக்கு, மேற்கு கடற்கரைகட்குச் சென்று உறைந்தனர் என்றும் கருதப்படுகின்றனர். சிறிது காலத் திற்குப் பின்னர் தென் அமெரிக்காவில் குடியேறினர் என்றும் வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். பொதுவாகச் சின்னஞ் சிறு கூட்டங்களாகப் பல்வேறு தடவைகளில் அமெரிக்க நாடு களில் வந்து உறைந்ததாகக் கருதப்படுகின்றனர். இம்மக்கள் இப்பகுதிகளிலெல்லாம் பரந்து வாழுவதற்கு 16,000 ஆண்டுகட்கு மேல் வேண்டியதிருந்தது என்றும் இக்காலப் பகுதியில் இவர் களும் இவர்களின் மொழிகளும் எத்தனையோ மாற்றங்களை அடைந்துவிட்டன என்றும் புதைபொருள் ஆராய்ச்சி அறிஞர் களும் வரலாற்று அறிஞர்களும் கருதுகின்றனர். இத்தகைய குடியேற்றம் 4000 ஆண்டுகட்கு முன்னர்வரை நிகழ்ந்து வந்ததாகக் கருதுகின்றனர்.

இம்மக்களை மங்கோலிய இனத்தவராக இருக்கலாம் எனக் கருதுகின்றனர்.[1] இன்று வாழும் மக்களிடையே பல்வேறு

---

continent of South America) included some of Vespucci's writings in his *Cosmagraphiae Introdutio* (1507).

Waldseemüller observed that "Another fourth part (of the inhabited earth) had been discovered by Americus Vespucius .... ", and he suggested that the new land be called America. Waldseemüller's book was a best seller, and in time his proposa, became universally acccepted.

*Encyclopædia Britannica*, Vol. 1, p. 785.

1. It is assumed that the first inhabitants of Middle America were early American Indians of Asian and Mangoloid derivations, who migrated into the area at sometime during the final, or Wisconsin, stage of the Pleistocene.

*Encyclopædia Britannica*, Vol. 15, p. 405.

வேற்றுமைகள் இருப்பினும் அடிப்படையில் இவர்கள் ஒற்றுமை யுடையவர்களாகவே காணப்படுகின்றனர். ஒரே மாதிரியான உயரத்தையும், நேரான மயிரினையும், சிவந்த தவிட்டு நிறத் தினையும் கருமையான கண்களையும் கொண்டு விளங்குகின்ற இவர் கள், மங்கோலிய இனத்தைச் சார்ந்தவராகத்தான் இருக்க முடி யும் எனக் கருதுபவர் பலர். இன்று இவர்களிடையே காணப்படும் ஒரு சில வேறுபாடுகள், இவர்கள் வாழும் இடத்தினையும் அவர்கள் வாழுகின்ற முறையினையும் அடிப்படையாகக்கொண்டு ஏற்பட்ட மாற்றங்களின் விளைவே எனப் பலர் எண்ணுகின்றனர். இவர்கள் இந்நாட்டில் நுழையும்போதே தங்களுக்கெனத் தனி நாகரிகம் ஒன்றைக் கொண்டிருந்தனர் என எண்ணலாம். இவர்கள் சோளம், அவரை, பூசணி போன்றவைகளை உருவாக்கினர் என்றும் நீர் பாய்ச்சுதல், கனிகள் வெட்டுதல் போன்ற தொழில்களைச் செய்து வந்தனர் என்றும் பஞ்சாங்கக் குறிப் புக்கள் போன்றவற்றைத் தங்களிடையே கொண்டிருந்தனர் என்றும் கருதலாம்.

இதுபோன்றே அமெரிக்க நாட்டிற்கு வந்தபோதே முதிர்ந்த மனிதக்கூறுகளைக் கொண்டிருந்த இவர்கள், வளர்ந்துவிட்ட மொழிக்கூறுகளையும் கொண்டிருந்தனர். இவர்களுடைய நாகரீக மும் மொழிகளும் இவர்கட்கு முன்னர் இங்கு வாழ்ந்த மக்களின் நாகரீகத்தையும் மொழிகளையும் விட சிறந்து இருந்தமையால்தான் இவர்களின் நாகரீகமும் மொழிகளும் நிலை பெற்றன. இவர்கள் கையிலிருந்த ஆயுதங்கள் இவண் வாழ்ந்த விலங்குகளை வேட்டையாடவும் அஞ்சாமல் வாழவும் வழி வகுத்தன. இந்நிலையெல்லாம் புதைபொருள் ஆராய்ச்சி தரும் உண்மைகளாகும்.[1]

---

1. Adequately developed material culture enabled Paleo Indians to cope with the animals they encountered in the prehistoric era; they became predators of animals mcuh largrc

ஐரோப்பியர்கள் குடியேறியபொழுது, இந்நாடுகளில் 110,000,000 இந்திய மக்கள் வாழ்ந்து வந்தனர் என்றும் இவர்களில் 10,000,000 மக்கள் தென் அமெரிக்காவில் வாழ்ந்து வந்தனர் என்றும் கருதுவர். இவர்களில் பலர் மெக்சிக்கோ, அமெரிக்க நாட்டின் நடுப்பகுதி, தென் அமெரிக்காவின் மேற்குப் பகுதிகள் ஆகிய ஒரு சில இடங்களிலேயே அதிகமாகக் காணப் படுகின்றனர். அமெரிக்க ஐக்கிய நாட்டில் நான்கு விழுக்காடு மக்களே இந்தியர்கள்; ஆயினும் இக்குவேட்டர் (Ecuador), பொலிவியா, பெரு போன்ற இடங்களில் ஐம்பது விழுக்காடு கட்கும் அதிகமாக உள்ளனர். இப்பகுதிகளில் வாழும் இம்மக்கள் தங்களுடைய நாகரீகம், மொழி போன்றவற்றை இன்றும் பாதுகாத்து வருகின்றனர். எனவே, இவர்கள் இன்று இந்நாடுகளில் சிறப்பான இடத்தையும் பெருமையையும் பெற்றுள்ளனர். சில இந்தியர்கள் ஐரோப்பிய மொழிகளைத் தழுவியுள்ளனராயினும், ஏராளமான இந்தியர்கள் இந்திய மொழி களையே பேசி வருகின்றனர்.

இறங்கு முகத்திலிருந்த இவர்களின் எண்ணிக்கை தற்கால மருத்துவ வசதியின் காரணமாக ஏறுமுகத்தில் இப்போது உள்ளது என்றும் வரலாற்று அடிப்படையிலும் இவர்கட்கு ஒரு சிறந்த இடம் உண்டு என்றும் கூறுவர் பலர்.

இந்திய மொழிகளாக 1700-க்கும் அதிகமாக உள்ளன என்றும் இவையனைத்தும் 400-க்கும் அதிகமான பழங்குடி

---

than themselves, as the mammoth (larger than modern elephants) or more fleet-footed than themselves, as wild horses which, like the mammoth, became extinct. This is not conjecture, but attested in archeology. However, archeological evidence cannot tell us how frequently societal and language extinction took place in prehistoric times; yet there is no doubt that the Paleo Indians-unlike some of the animals they hunted-survived until today when they are known as American Indians.

*Anthropological Linguistics*, Vol. 6. (1964), No. 6, pp. 64-65

மக்கள் வகையினரால் பேசப்படுகின்றன என்றும் கருது கின்றனர். இம்மொழிகளை 160-க்கும் மேலான குழுக்களாகப் (Stocks) பிரிப்பர். இம்மொழிகளைப்பற்றி ஆராய்ந்த வோகளின் (C. F. Voegelin), மக்குவான் (Norman A. Mc Quown), கிரீன்பெர்க் (Joseph H. Greenberg), ஸ்வாடாஷ் (Morris Swadesh) போன்றவர்கள் இம்மொழிகள் பற்றிய பல்வேறு உண்மைகளைக் கூறியுள்ளனர். இம்மொழிகள் அனைத்தும் பல்வேறு புதிய புதிய அமைப்புக்களைக் கொண்டனவாகவும் உள்ளன எனக் கருதுகின்றனர்.

முன்னர்க் குறிப்பிட்டபடி இம்மொழிகள் அனைத்தும் வட அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் பரக்கப் பேசப் படுகின்றன. இம்மொழிகளை ஆராய்ந்தவர்கள் சில சூழ்நிலை களின் காரணமாக இவற்றை இவை பேசும் நிலப்பரப்பினை அடிப்படையாக வைத்து

1. வட அமெரிக்காவில் (Anglo America) பேசப்படு கின்ற மொழிகள்.

2. இலத்தீன் அமெரிக்காவில்[1] (Latin America) பேசப் படுகின்ற மொழிகள்.

என இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர். இப்பிரிப்பு அவை பேசப்படும் இடங்களை அடிப்படையாக வைத்து அமைந்ததே யன்றி இனத் தொடர்பு அடிப்படையில் அன்று என்பது

---

1. Latin America, which, broadly defined, includes Mexico Central America, most of the West Indies, and all of South America; and Anglo America; *i.e.*, the United States and Canada. The term Middle America is sometimes used to designate Mexico, Central America and the West Indies, collectively.

*Encyclopædia Britannica*, Vol. 1, p. 785.

இங்கு நினைவுகூரத் தக்கது. வடஅமெரிக்காவில் பேசப்படுகின்ற சில இன மொழிகள் தென்அமெரிக்காவிலும் வழங்குகின்றன. எடுத்துக்காட்டாக, பெனுஷியன் (Penutian), ஹோக்கன்-சியோஅன் (Hokan-Siouan) போன்ற பெருங்குழு மொழிகள் இரண்டு இடங்களிலும் வழங்குதல் காணலாம்.

இம்மொழிகளைப்பற்றி விரிவாகக் காண்பதன் முன்னர் இம்மொழிகள் பேசப்படுகின்ற சில நிலப்பரப்புக்களையும் அங்கு பேசப்படுகின்ற பிற மொழிகள் பற்றியும் அறிந்துகொள்ளுதல் அவசியமாகும்.

**இலத்தீன் அமெரிக்கா (Latin America)**

வடஅமெரிக்காவில் உள்ள மெக்சிக்கோ (Mexico) முதல் தென்அமெரிக்காவின் தென்பகுதி வரை நீண்டு கிடக்கும் நிலப் பரப்பையே இப்பெயரால் அழைக்கின்றனர். இதன்கண் கேரிபியன் தீவுகளும் (Caribbean Islands) அடங்கும். இப் பெரும் நிலப்பரப்பில் போர்ச்சுகீஸ் (Brazil), ஆங்கிலம் (Jamica), பிரஞ்சு (Haiti) ஆகிய மொழிகள் பேசப்படினும் ஸ்பானிஷ் (Spanish) மொழியே (Argentina, Bolivia, Chile, Ecuador, Peru, Uruguay, Venezuela, Costa Rica, Cuba, Dominican Republic, El Salvador, Guatemala, Honduras, Mexico, Nicaragua and Panama) முதன்மை பெற்று விளங்கு கிறது.

இன்று இவ்விடங்களில் ஐரோப்பிய மொழிகளே முதன்மை யான மொழிகளாக இருப்பினும் சில அமெரிக்க இந்திய மொழிகள் இரண்டாவது நிலையில் உள்ளன. சில இந்திய மொழிகள் பல ஆயிரக்கணக்கான மக்களால் பேசப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கொச்சுஆ | (Quechua) | 4,000,000 |
| அய்மார | (Aymara) | 1,000,000 |

**மெக்சிக்கோ (Mexico)**

இங்கு வாழும் 34,626,000 (1960 Census) மக்களில் 7.5 விழுக்காடு மக்கள் இந்திய மொழிகளைப் பேசுகின்றனர். ஏனையோர் ஸ்பானிஷ் மொழியாளர்கள்.

**குத்தமலா (Guatemala)**

இங்கு வாழும் 3,822,233 மக்களில் 14-இலட்சம் மக்கள் ஸ்பானிஷ் மொழியினையும் ஏனையோர் (2,422,233) அமெரிக்க இந்திய மொழிகளையும் பேசுகின்றனர். இங்கு அமெரிக்க மொழி பேசுவோரே அதிகமாக உள்ளனர். பத்துக்கும் அதிகமான இந்தியமொழிகள் இந்நாட்டில் வழங்குகின்றன.

**பிரிட்டிஷ் கொந்துராஸ் (British Honduras)**

1960-ஆம் ஆண்டைய மக்கள் கணக்குப்படி இங்கு வாழும் 90,343 மக்களில் 50 விழுக்காட்டிற்கு மேற்பட்டவர்கள் ஆங்கிலம் அல்லது ஆங்கில கிரியோல் (Creole) மொழிகளைப் பேசுகின்றனர். 6000 மக்கள் காரிப் (Carib) மொழியினையும் ஏனையோர் இந்திய மொழியினையும் (Maya) பேசுகின்றனர். பல இந்தியர்கள் ஸ்பானிஷ் மொழியினையும் பேசுதல் காணலாம். 1957 முதல் வடக்கு மெக்சிக்கோவிலிருந்து ஜெர்மன் பேசும் மக்கள் பலர் இங்கு குடியேறியுள்ளனர்.

**கொந்துராஸ் (Honduras)**

இங்கு வாழும் 1,883,480 (1961) மக்களில் 90 விழுக்காடு மக்கள் ஸ்பானிஷ் மொழியையே பேசுகின்றனர். 6 விழுக்காடு மக்கள் இந்திய மொழிகளை (Jicaque, Mosquito, Zambos, Payas) யும் வாழைத்தோட்ட வேலைக்காகக் கடலோரப் பகுதிகளில் வந்துள்ள நீக்ரோ மக்கள் ஆங்கிலத்தையும் பேசுகின்றனர்.

**எல் சல்வேதார் (El salvador)**

இங்கு வாழும் 2,500,000 (1958) மக்களில் ஒரு சிலரே அமரிக்க இந்திய மொழிகளைப் பேசுகின்றனர். ஏனையோர் ஸ்பானிஷ் மொழியாளர்கள்.

**நிக்கரகுவா (Nicaragua)**

இங்கு 1,500,000 மக்கள் உள்ளனர். பெரும்பாலோர் ஸ்பானிஷ் மொழியினையும் ஒரு சிலர் ஆங்கில மொழியினையும் பேசுகின்றனர். இங்கு வழங்கிய அமெரிக்க இந்திய மொழிகள் அழிந்து விட்ட நிலையிலேயே உள்ளன.

**கோஸ்டரிக்கா (Costarica)**

இங்கு வாழும் 1,100,000 மக்களில் பெரும்பான்மையோர் ஸ்பானிஷ் மொழி பேசுவோர்களாகவே உள்ளனர். சுமார் 4000 மக்கள் இந்திய மொழிகளைப் பேசுகின்றனர். இவர்கள் அனைவரும் தூர மலைப் பிரதேசங்களிலேயே வாழுகின்றனர். இவர்கள் பேசும் சிப்சான் (chibchan) மொழியில் பல கிளை மொழிகள் உள்ளன என்பர்.

**பனாமா (Panama)**

1,067,766 மக்களைக் கொண்ட இந்நாட்டில் ஸ்பானிஷ் மொழியே நாட்டு மொழியாகவும் முதல் மொழியாகவும் உள்ளது. இம்மொழியைப் பேசுவோராக 1,000,000 மக்கள் (1960) உள்ளனர். இம்மொழிக்கு அடுத்தபடியாக ஆங்கிலம் உள்ளது. ஆங்கிலம் இரண்டாவது மொழியாக இருப்பதோடன்றி உயர்நிலைப் பள்ளிகளிலும் பல்கலைக்கழகத்திலும் பயிற்றுவிக்கப் படுகிறது. ஜமெய்க்கா போன்ற இடங்களிலிருந்து குடியேறிய நீக்ரோ மக்களும் ஆங்கிலம் பேசுகின்றனர். இங்கு வாழும் ஒரு சிலர் இந்திய மொழிகளை (Choco)யும் பேசுகின்றனர்.

**காரிபியன் தீவுகள் (Caribbean Islands)**

இத்தீவுகளில் காரிப் மொழியும் அரவாக்கன் (Arawakan) மொழியும் வழக்கிலிருந்தன. எனினும் ஸ்பானிஷ் மக்களின் வரவினுல் அவர்களுடைய மொழி செல்வாக்குடன் வளர அரவாக்கன் அழிய நேரிட்டது. 1600-ஐ ஒட்டிய காலப் பகுதியில் ஆங்கிலேயரும் பிரஞ்சு மக்களும் குடியேற அவ்விரு மொழிகளும் ஓரளவு காலூன்றின.

**ஜமெய்க்கா (Jamaica)**

இங்கு ஆங்கில மொழியே முக்கிய மொழியாக உள்ளது. இங்கு வாழும் 1,613,880 (1960) மக்களில் 1,453,660, மக்கள் ஆப்பிரிக்க நாட்டிலிருந்து வந்த நீக்ரோ மக்களாகவும் 18,000 மக்கள் ஐரோப்பிய நாட்டிலிருந்து வந்தவர்களாகவும் உள்ளனர். ஆப்பிரிக்க மக்களும் ஆங்கில மொழியையே பேசுகின்றனர். இம்மொழிகளைத்தவிர இந்தி, உருது, சீனம் ஆகிய ஆசிய மொழிகளும் பேசப்படுகின்றன.

**பகமா தீவுகள் (Bahama Island)**

இங்கு வாழும் 100,000 மக்களும் ஆங்கில மொழியையே பேசுகின்றனர்.

**கியூபா (Cuba)**

ஸ்பானிஷ் மொழியே இந்நாட்டில் முதல் மொழியாக உள்ளது. இங்கு வாழும் 6,933,253 (1961) மக்களில் பெரும்பாலோர் இம்மொழியையே பேசுகின்றனர். ஆங்கிலம் அடுத்த மொழியாகவும் லுக்குமி (Lucumi) என்னும் மொழி நீக்ரோ மக்களின் ரகசிய மொழியாகவும் உள்ளன. இம்மொழி ஆப்பிரிக்க நாட்டில் வழங்கும் யொருபா (Yoruba) மொழியோடு தொடர்புடையது எனக் கூறுவர் சிலர் (*Language* 29. 157 64).

ஸ்பானிஷ் நாட்டின் படையெடுப்புக்கு முன்னர் தய்னோ (Taino), சிபோனி (Ciboney) ஆகிய மொழிகள் வழக்கில் இருந்தன. இம்மொழிகள் அரவாக்கன் மொழியோடு இனத் தொடர்பு உடையன.

**ஹெய்ட்டி (Haiti)**

இங்கு வாழும் 4,345,948 (1962) மக்களில் பெரும் பாலோர் ஹெய்ட்டி கிரியோல் (Haitian Creole) மொழி பேசு கின்றனர். ஒரு சிலர் பிரஞ்சு மொழியே பேசினும் கிரியோல் மொழியினையும் தெரிந்தவர்களாக உள்ளனர்.

**போர்ட்டரிக்கோ (Puertorico)**

இங்கு ஸ்பானிஷ் மொழியே முக்கிய மொழியாக உள்ளது. இங்குள்ள 2,348,544 (1960) மக்களில் பெரும்பாலோர் இம் மொழியைப் பேசுகின்றனர். ஆங்கிலமொழி அடுத்தமொழியாக உள்ளது. ஐரோப்பியரின் வருகைக்கு முன்னால் அரவாக்கன் மொழியே இங்கு வழங்கியது என்றும் பின்னர் பிரெஞ்சு மொழி யினரும் ஸ்பானிஷ் மொழியினரும் குடியேறினர் என்றும் வரலாறு கூறும்.

**வெர்ஜின் தீவுகள் (Virgin Islands)**

ஆங்கிலமே இத்தீவுகளின் முக்கிய மொழியாக வழங்கு கிறது. 40,000 மக்கள் இங்கு வாழுகின்றனர்.

**டிரினிடாட் (Trinidad)**

இங்கு ஆங்கிலமே முக்கிய மொழி. இது தவிர பிரஞ்சு, இந்தி, ஸ்பானிஷ் ஆகிய மொழிகளும் வழங்குகின்றன. இங்கு வாழும் 827,957 (1960) மக்களில் பெரும்பாலோர் ஆங்கிலமே பேசுகின்றனர்.

**கியூரக்கா (Curacao)**

டச்சு மொழியே இங்கு முதல் மொழியாக வழங்குகிறது. இங்கு வாழும் 124,500 (1960) மக்களில் பெரும்பாலோர் இம்மொழியைப் பேசுகின்றனர்.

**தென் அமெரிக்கா**

வட அமெரிக்காவைவிட தென் அமெரிக்க நாடுகளில் இந்திய மொழிகள் நிலைத்து வாழுகின்றன எனக் கூறலாம். பல்வேறு மொழிகளைக் கொண்டிருந்த வட அமெரிக்கா இன்று ஐரோப்பிய நாட்டைப் போன்று ஒரு சில மொழிகளைக் கொண்டுள்ளமையும் ஆனால் தென் அமெரிக்காவோ பலப் பல இந்திய மொழிகளைத் தன்னகத்தே கொண்டு நிற்பதும் இங்கு நினைவுகூரத் தக்க செய்திகளாகும். கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் பிரேசில் நாட்டில் ஐரோப்பியர்கள் குடியேறியபோது அங்கு 1,000,000-க்கு அதிகமான இந்தியர்கள் வாழ்ந்திருந்தார்கள். நாட்டுப்புறங்களில் வாழ்ந்துவந்த இந்தியர்களும் படிப்படியாக மலைப் பாங்குகளிலும் கடற்கரையோரப் பகுதிகளிலும் சென்று உறைந்தனர். 1820 வரையிலும் அவர்களின் மொழியையே (Tupi) போர்ச்சுக்கீஸ் மக்களும் குடியேறிய நீக்ரோ மக்களும் பேசத் தலைப்பட்டனர் என்பதும் பின்னர் போர்ச்சுக்கீஸ் அந்நாட்டின் மொழியாக மாறிற்று என்பதும் வரலாறு காட்டும் உண்மைகளாகும். இன்று போர்ச்சுகீஸ் மொழியே முக்கிய மொழியாயினும் பல அமெரிக்க இந்திய மொழிகளும் வாழ்வதைக் காணலாம். இதைப்போன்ற நிலையினைப் பிற தென் அமெரிக்க நாடுகளிலும் காணமுடியும். பெரு, அர்ஜண்டினா போன்ற நாடுகளில் ஸ்பானிஷ் மொழியே முக்கியமாக இருப்பினும் பல்வேறு இந்திய மொழிகளும் வாழ்ந்து வருதல் காணலாம்.

அமெரிக்க இந்திய மொழிகள் இன்று உலக அரங்கில் சிறந்த இடத்தைப் பெறவில்லையாயினும் மொழியியல் ஆராய்ச்சியில்

இவற்றின் பங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அமெரிக்கக் கண்டங்களில் 1600 முதல் 2000 வரையுள்ள மொழிகள் பேசப்படுவது இம்மொழிகளின் எண்ணிக்கையையும் அவற்றின் தன்மையையும் காட்டி நிற்கும். இம்மொழிகளை ஆராய்ந்த அறிஞர்கள் பலர் இவற்றோடுஉலகில் காணப்படும் பல இன மொழிகளை இனவுறவு அடிப்படையில் இணைத்துக் காட்டுவர். எஸ்கிமோ மொழிக்கும் உராலிக்—அல்டய்க் மொழிகட்குமிடையே இனவுறவு காண்பர் சிலர். இன்னும் சிலர் நா-தென் குழு மொழிக்கும் சைனோ – திபேத்திய மொழிகட்குமிடையே இனவுறவு காண்பர். இன்னும் சிலர் ஹோக்கன் மொழிக்கும் மலேயோ-பாலினேஷியன் மொழிகட்குமிடையே உறவு காண்பர். ஆனால் இவர்கள் காணுகின்ற முடிவு எதுவும் எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்படுகின்ற ஒன்று அன்று.

பொதுவாக இம்மொழிகள், நாகரீகம் அதிகம் இல்லாத மக்களால் பேசப்படினும் நன்கு வளர்ந்த மொழிகளாகவே காணப்படுகின்றன. பல மொழிகள் உட்பிணைப்பு மொழியாகவும், இணைப்பு நிலை மொழியாகவும் ஒரு சில மொழிகள் பல்லிணைப்பு நிலை (**Polysynthetic Languages**) மொழியாகவும் உள்ளன. எஸ்கிமோ போன்ற மொழிகளில் பல்லிணைப்புத் தன்மை அதிகமாகக் காணப்படுகிறது. நாம் ஒரு வாக்கியத்தில் கூறும் கருத்துக்களை எஸ்கிமோ மொழியினர் பல்வேறு ஒட்டுகளை இணைத்துக் கூறிவிடுவர். இதுபோன்றே ஒரு சொல்லுடன் பல சொற்களையும் பல ஒட்டுகளையும் இணைத்துக் கூறுதல் மரபு. "ஒருவன் தங்குவதற்கு ஏற்ற இடம் எதையும் கண்டுபிடிக்கவில்லை" என நாம் ஒரு வாக்கியத்தில் கூறுகின்ற கருத்துக்களை இவர்கள் ஒரே சொல்லில் கூறிவிடுகின்றனர்.

அமெரிக்க இந்திய மொழிகளில் சில மொழிகள் உள்ளடக்கு நிலை (**Incorporative**) மொழிகளாகவும் உள்ளன. நகுவத்தில் மொழிகள் இத்தன்மையை நன்கு காட்டுகின்றன. இம்மொழிகள்

வினைச்சொற்களில் பெயர்ச்சொற்களை உள்ளடக்கி செயப்படு பொருளைக் காட்டுகின்றன. இம்மொழிகளில் ஒன்றான தொத்தானக் மொழியில் 'என்னை', 'எங்களை' போன்ற செயப்படு பொருள் காட்டும் சொற்கள் தமிழ் மொழியில் போலல்லாமல் ஒரே சொல்லில் வருதல் காணலாம். **kin-tuk-sly** என்ற சொல்லில் (அவன் என்னைக் குத்தினான்) **kin-** என்ற ஒட்டு 'என்னை' எனப் பொருள் தந்து நிற்கக் காணலாம். இது போன்றே "நான் இறைச்சி உண்ணுகிறேன்" என்பதை இவர்கள் **(Nahuatl)** ஒரே சொல்லில் **(ni-naka-kwa)** கூறி விடுகின்றனர்.

இம்மொழிகளில் காணப்படும் வேற்றுமையும் (Case) பலவேறாக உள்ளது.

தமிழ், உராலிக்—அல்டய்க் போன்ற மொழிகளில் காணப் படுவது போன்று அமெரிக்க இந்திய மொழிகள் பெரும் பாலானவற்றில் வேற்றுமை காணப்படுவதில்லை. நாம் பல வேற் றுமைகளில் கூறுகின்ற கருத்துக்களைச் சில மொழியினர் ஒரே சொல்லில் கூறி விடுவர். சினூக் மொழியில் **am Laxcgā'mx** என்ற சொல் ' நீ அவளிடம் எடுப்பதை தொழிலாகக் கொண் டுள்ளாய் என்றும் **tctalō'ta** என்ற சொல் "அவன் அவளுக்கு அவற்றை கொடுப்பான்" என்றும் பொருள்படுவதைக் காண லாம்.[1] பல மொழிகள் வேற்றுமைப் பொருளைப் பல பின்னுரு புகளால் காட்டுகின்றன.[2] முன்னர்க் குறிப்பிட்டது போன்று பல மொழிகள் வினைச்சொல்லில் வேற்றுமைப் பொருள் தரும் ஒட்டுகளை இணைத்துக் கூறுகின்றன. பாக்ஸ் மொழியில் -h-

---

1. tc - = அவன்; -t- = அவற்றை; -a- = அவளுக்கு; -l- = க்கு -o- = பேசுவோனிடமிருந்துள்ள திசை; -ot- = கொடு; -a- = எதிர்காலம் Boas, "Chinook", *A. H. A. I. L.* Vol. I, p. 576.

2. William Jones, "Algonquian (Fox)," *A. H. A. I. L.* Vol. I, pp. 807 - 808.

என்ற ஒட்டு கருவிப் பொருளையும் -n- என்ற ஒட்டு கையினால் செய்கின்ற தன்மையையும் -sk- காலினால் செய்கின்ற செயலையும் -pu- வாயினால் செய்கின்ற செயலையும் -c- கத்தி போன்ற கூர்மையான கருவிகளால் செய்கின்ற செயலையும் காட்டும்.[1] அதபாஸ்கன் மொழியான ஹூபாவில் யெ- என்ற முன்னொட்டு வீடு, ஆறு போன்ற பொருட்களுக்குச் செல்வதைக் குறிக்கும். நாம் "வீட்டுக்குப் போனான்' என்பதை இம்மொழியினர் 'போனான்' என்ற வினையுடன் யெ- என்ற ஒட்டை இணைத்துக் (yenawityai) கூறி விடுவர்.[2] நாம் காலினால், கையினால், முதுகினால், தண்ணீரினால், விரலினால் என்றெல்லாம் பெயர்ச் சொற்களுடன் கருவிப் பொருள் காட்டும் உருபினை இணைத்துக் கூறுவதை ஹைடா மொழியினர் வினைச்சொல்லுடன் இப்பொருள் படும் பல்வேறு ஒட்டுகளை இணைத்துக் கூறுவர். இத்தகைய கருவிப்பொருள் தரும் ஒட்டாக இம்மொழியில் முப்பது உள்ளன.[3]

அமெரிக்க மொழிகள் பலவற்றில் வேற்றுமை காணப்படாவிடினும் மைது, எஸ்கிமோ போன்ற ஒரு சில மொழிகளில் காணப்படுவது குறிப்பிடத் தக்கதாம். எழுவாய், செயப்படுபொருள் போன்றவை இம்மொழிகளில் வேற்றுமை உருபுகளால்

---

1. Pliny Earle Goddard, "Athapaskan (Hupa)", *A. H. A. I. L.* Vol. I. p. 113.

2. John R. Swanton, "Haida", *A. H. A. I. L.* Vol. I. pp. 219 - 227.

3. Wishram, differing markedly in this respect from Lower Chinook, makes rather considerable use of a series of post - positive particles defining material case relations (chiefly local and instrumental)

*Ibid.*, pp. 650-651.

காட்டப்படுகின்றன.[1] தமிழில் எழுவாய் வேற்றுமை எந்த உருபையும் ஏற்காது செயப்படுபொருள் உருபேற்று வருவதும், மைது மொழியில் செயப்படுபொருள் காட்டும் சொல் எந்த உருபையும் ஏற்காது நிற்பதும் எழுவாய் வேற்றுமை உரு பேற்று நிற்பதும் காணத்தக்கன.[2] மத்திய கலிபோர்னியா மொழிகளில் எழுவாய்ச்சொல் உருபேற்கின் செயப்படுபொருட் சொல் உருபேற்காதிருப்பதையும் செயப்படுபொருள் ஏற்பின் எழுவாய் ஏலாதிருப்பதையும் காணலாம்.

அமெரிக்க இந்திய மொழிகளில் காணப்படும் எண்ணும் (number) பல நிலைகளில் உள்ளன. சில மொழிகளில் ஒருமை, பன்மை எண்களையும் சிலவற்றில் ஒருமை, இருமை, பன்மை களையும் இன்னும் சிலவற்றில் ஒருமை, இருமை எண்களையும் காணமுடியும். சில மொழிகள் ஒருமை, குழு என்ற நிலையி னையும் கொண்டுள்ளன. இவ்வெண் வேறுபாடும் பல வழிகளில் உணர்த்தப்படுகின்றன. முன்னொட்டு, பின்னொட்டு, உயிர் மாற்றம், இரட்டிப்பு என்ற பலமுறைகள் பயன்படுகின்றன.

ஒருமை – பன்மையைக் காட்டுவன.

---

1. The Maidu differs from many American Indian languages in that it lacks any development of Incorporation as a means of expressing syntatic relations. In common with most of the languages of Central California, subjective and objective as well as possessive relations are expressed by regular case-endings, suffixed to the noun or independent form of the pronoun, both of which stand separate and independent, outside the verb.

Roland B. Dixon, "Maidu", *A. H. A. I. L.* Vol. 1. p. 711.

2. The Maidu is among those which distinguish by a special suffix the subjective, leaving the objective form unchanged. To designate the subjective, the Maidu uses the suffix — *m*.

Roland B. Dixon, *Ibid.*, p. 711.

திசிம்ஷியன் போன்ற மொழிகள் ஒருமை பன்மை எண்களைக் காட்டுகின்றன.

| | |
|---|---|
| வக் | தம்பி |
| வக்கு | தம்பிகள் |

ஒருமை, இருமை, பன்மை காட்டுவன

| | | |
|---|---|---|
| இக்லு | வீடு | |
| இக்லுக் | இரு வீடுகள் | |
| இக்லுத் | வீடுகள் | (எஸ்கிமோ) |

ஒருமை, இருமை, பன்மை, கூட்டத்தைக் காட்டுவன.

மைது போன்ற மொழிகளில் இத்தன்மையைக் காணலாம். மைது மொழியில் பன்மை காணப்படினும் பன்மையை விட இருமையே அதிகமாகக் காணப்படுகிறது என்பர்.

| | |
|---|---|
| கியுலெ | பெண் |
| கியுலெத்ஸொ | இருபெண்கள் |
| கியுலெஸெம் | பெண்கள் |
| கியுலொக்ஞெஞெ | ஒரு கூட்டம் பெண்கள் |

அமெரிக்க மொழிகள் பலவற்றில் பன்மை நன்கு வளர்ச்சியடையவில்லை. சில மொழிகளில் மூவிடப் பெயர்களில் பன்மை இருக்க சாதாரணப் பெயர்ச் சொற்கள் பன்மையைக் காட்டுவதில்லை. குவகுதில் மொழி மூவிடப் பெயர்களில் தன்மை ஒருமையும் பன்மையும் காட்ட பிற பெயர்கள் பன்மையைக் காட்டுவதில்லை; ஆனால் சில உறவுப் பெயர்களும் மனித இனத்தைக் குறிக்கும் பெயர்களும் பன்மை காட்டும். சினூக் மொழியில் மூவிடப் பெயர்களில் ஒருமை, இருமை, பன்மை என்ற பகுப்பைக் காணும் நம்மால் பிற பெயர்களில்

இவற்றை அதிகமாகக் காணமுடிவதில்லை. திலிங்கித் மொழியில் உறவுப் பெயர்கள் 'அவர்கள்' என்ற சொல்லுடன் இணைந்து பன்மையைக் காட்ட, பிற பெயர்கள் தொகுதி அல்லது முழுத் தன்மையைக் குறிக்குமேயன்றிப் பன்மையைத் தருவதில்லை என்பர்.[1] சில மொழிகள் பன்மையைப் பற்றிக் குறிப்பிடாமல் அங்குமிங்கும் கிடக்கின்ற பொருட்களின் தொகுதியைக் குறிப்பிடுவதைக் காணலாம்.[2] இன்னும் சில மொழிகள் மனித இனத்தைக் குறிக்கும் பெயர்களில் மட்டுமே பன்மையைக் காட்டுகின்றன.

இத்தகைய எண் வேற்றுமையைப் பல அமெரிகக மொழிகளும் பல்வேறு முறைகளில் காட்டுகின்றன. ஒரே மொழி பல முறைகளில் காட்டுவதையும் காணலாம்.

முன்னொட்டு :

| | | |
|---|---|---|
| சுவெ | தம்பி | |
| ஆ-சுவெ | தம்பிமார் | (சூனி) |

பின்னொட்டு :

| | | |
|---|---|---|
| காக | அடிமை | |
| காகெ-க | அடிமைகள் | (குவகுதில்) |

1. Plurality is not expressed in the noun, but there is a suffix indicating the collective. The plural of terms of relationship is formed by the same element that expressed the third person of the personal pronoun.

John R. Swanton, "Tlingit", *A. H. A. I. L*, p. 166.

2. It would seem on the whole, American languages are rather indifferent in regard to the clear expression of plurality but they tend to express much more rigidly the ideas of collectivity or distribution. Thus the Kwaikiutl, who are rather indifferent to the expression of plurality, are very particular in denoting whether the objects spoken of are distributed here or there.

Boas, *A. H. A. I. L*, p. 37.

இரட்டிப்பு :

| | |
|---|---|
| மால் | படகு |
| ம்மால் | படகுகள் |
| கின் | உணவு கொடு |
| கிகின் | உணவுகள் கொடு (திசிம்ஷியன்) |

உயிர் மற்றம் :

| | | |
|---|---|---|
| ஹனுக் | பெண் | |
| ஹானக் | பெண்கள் | (திசிம்ஷியன்) |

ஒரே சொல் :

| | | |
|---|---|---|
| வன் | பல் | |
| வன் | பற்கள் | (திசிம்ஷியன்) |

முன்னொட்டு + பின்னொட்டு :

| | | |
|---|---|---|
| வக் | தம்பி | |
| கவக்கு | தம்பிமார் | (திசிம்ஷியன்) |

பிற மொழிகளில் 'தண்ணீர்' போன்ற சொற்கள் பன்மை உருமை ஏற்று அவற்றின் பன்மையைத் தருவதில்லை. ஆனல் சூனி மொழியில் இச்சொற்கள் பன்மையிலேயே வருகின்றன.

யுச்சிமொழிகளில் ஆண்கள் பயன்படுத்துவனவும் பெண்கள் பயன்படுத்துவனவும் எனத் தனித்தனியான பன்மை உருபுகள் உள்ளன என்பர்.[1]

இம்மொழிகளைப்பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் பலர் இவற்றை வகைப்படுத்திக் காட்டியுள்ளனர். முதன் முதலில் இம்மொழிகளை

1. G. Wagner, "Yuchi", *A. H. A. I. L*, p. 322.

வகைப்படுத்திய பெருமை பௌவல் (J. W. Powell) என்பாரைச் சாரும். இவர் அமெரிக்க ஐக்கிய நாடுகள் (U. S. A.), கானடா ஆகிய நாடுகளில் பேசப்படுகின்ற மொழிகள் பலவற்றை இணைத்து ஒரு வகையான வகைப்பாட்டினைக் கண்டார். 891-இல் வெளியான இவ்வகைப்பாடு 58 குழுக்களைக் கொண்டது. இதன் பின்னர் மெக்சிக்கோ, நடு அமெரிக்கா ஆகிய பகுதிகளில் 29 குழு மொழிகளும் தென் அமெரிக்காவில் 84 குழுக்களும் உள்ளன எனக் கண்டனர். வட அமெரிக்க மொழிகளை ஆராய்ந்த குரோபர் (A. L. Kroeber), டிக்சன் (R. M. W. Dixon) போன்றோர் முன்னர்க் காணமுடியாத ஒற்றுமைகளைப் பல்வேறு மொழிகளிடையே கண்டனர்.

எட்வர்டு சபீர் வட அமெரிக்க மொழிகளைப்பற்றி ஆராய்ந்தவர்களில் குறிப்பிடத் தக்கவராவார். இவர் இம்மொழிகளை ஆறு பெரும் பிரிவுகளாகப் பிரிப்பார்.

1. எஸ்கிமோ – அலியுத் பெருங்குழு
   **(Eskimo-Aliut Phylum)**
2. அல்கோன்கியன் - வகாஷன் பெருங்குழு
   **(Algonquean-Wakashan Phylum)**
3. நா - தென் பெருங்குழு
   **(Na-Dene Phylum)**
4. பெனூஷியன் பெருங்குழு
   **(Penutian Phylum)**
5. ஹோக்கன் சியோவன் பெருங்குழு
   **(Hokan Siouan Phylum)**
6. அஸ்டெக் தனோவன் பெருங்குழு
   **(Aztec Tanoan Phylum)**

இன்று இப்பிரிவுகளுள் ஓரளவு மாற்றம் ஏற்பட்டிருப்பினும் பொதுவாக இவ்வகைப்பாடே பின்பற்றப்படுகிறது. 1944-இல் கண்ட இவ்வகைப்பாட்டிலுள்ள ஒரு சில மொழிகள் வெவ்வேறு குழுக்களில் அடங்குவனவாக இருப்பினும் வட அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் இவ்வகைப்பாடு பயனுள்ளதாகவே அமைகிறது.

அமெரிக்க இந்திய மொழிகள் வட அமெரிக்காவில் மட்டுமின்றி தென் அமெரிக்க நாடுகளிலும் மெக்சிக்கோ பனமா போன்ற மெசோ அமெரிக்கப் பகுதிகளிலும் வழங்குவனவாகக் கண்டோம். வட அமெரிக்காவில் வழங்குகின்ற நா-தென், அல்கோன்கியன், அஸ்டெக் – தனோவன், பெனூஷியன், ஹோக்கன் – சியோவன் ஆகிய பெருங்குழுவைச் சார்ந்த சில மொழிகள் இப்பகுதிகளிலும் பேசப்படுகின்றன. ஆனால் தென் அமெரிக்க நாடுகளில் மட்டும் பேசப்படுகின்ற ஒரு சில பெருங் குழுக்களும் உள்ளன.

1. மேக்ரோ – ஓட்டோ மேன்குவன் பெருங்குழு (Macro-Oto-Manguan Phylum)
2. மேக்ரோ – சிப்ச்சன் பெருங்குழு (Macro-Chibchan Phylum)
3. கே – பானு காரிப் பெருங்குழு (Ge-Pano-Carib Phylum)
4. ஆண்டியன் இக்குவெட்டரியல் பெருங்குழு (Andean Equatorial Phylum)

ஆகிய பெருங்குழுக்கள் காணப்படுகின்றன. இவற்றுள் 300-க்கும் அதிகமான மொழிகள் உள்ளன. இம்மொழிகள் அனைத்தும் பல்வேறு சிறு குழுக்களாகவும் (stocks) குடும்பங்களாகவும் (families) சிறு குடும்பங்களாகவும் (sub-families) பிரிக்கப்படுகின்றன.

### 3. 10. 1 எஸ்கிமோ - அலியுத் பெருங்குழு
### (Eskimo - Aliut Phylum)

இம்மொழிகள் கிரீன்லாந்து (Greenland) அலாஸ்கா, கானடா, ரஷியா ஆகிய இடங்களில் பேசப்படுகின்றன. இம் மொழிகளைப் பேசுவோராக சுமார் 50,000 மக்கள் உள்ளனர். இம்மொழிகளை எஸ்கிமோ மொழிகள் என்றும், அலியுத் மொழிகள் என்றும் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர். இவற்றுள் எஸ்கிமோ மொழி கிரீன்லாந்து, அலாஸ்கா, கானடா ஆகிய இடங்களில் வாழும் எஸ்கிமோ மக்களால் பேசப்படுகிறது. அலியுத் மொழிகள் அலூஷியன் தீவுகளிலும், போர்ட்மோலர் (Port Moller) ஆகிய இடங்களிலும் வழங்குகின்றன. இவற்றைப் பேசுவோராக 6000 மக்கள் உள்ளனர்.

#### 3.10.1 1 எஸ்கிமோ

சைபீரியா முதல் கிரீன்லாந்து வரையிலும் கிழக்கு மேற்காகக் கிடக்கும் நிலப்பகுதிகளில் வாழும் சுமார் 50000 மக்களின் மொழி இது. இவர்கள் சைபீரியா, அலாஸ்கா, கானடா, கிரீன்லாந்து முதலிய இடங்களில் வாழுகின்றனர். கிரீன்லாந்தில் பேசப்படும் எஸ்கிமோ மொழிக்கும் அலாஸ்காவில் வழங்கும் எஸ்கிமோ மொழிக்கும் வேற்றுமை உண்டு. ஒருவர் பேச்சை இன்னொருவர் புரிந்து கொள்ளுவதில்லை. கிரீன்லாந்தில் மட்டுமே ஐந்துக்குமதிகமான கிளை மொழிகள் உள்ளன.

கிரீன்லாந்து, லாப்ரடார் போன்ற இடங்களில் கிறித்துவ பாதிரிமார்களால் உரோமன் எழுத்துக்கள் பழக்கத்தில் வந்துள்ளன. இன்று வேதாகமம் போன்ற சில நூற்களும் வெளிவந்திருப்பதைக் காணலாம். கானடாவில் அரசாங்கம் நிறுவியுள்ள சில பள்ளிகள் எஸ்கிமோ குழந்தைகட்கு எழுத்

தறிவிக்கின்றன. ரஷ்யநாட்டில் வாழும் எஸ்கிமோக்களிடையே 'சிரில்லிக்' எழுத்துக்கள் பரந்துள்ளன. இங்கு வாழும் எஸ்கிமோக்களில் 99 விழுக்காடு எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என ரஷ்ய அரசாங்கக் குறிப்பு கூறுகிறது.

1814-இல் ராமஸ் ராஸ்க் எஸ்கிமோ மொழிக்கும் அலியுட் (Aleut) மொழிக்குமிடையே காணப்படும் சில ஒற்றுமைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சுவாடாஷ் இவ்விரு மொழிகளும் சுமார் 4000 ஆண்டுகட்கு முன்னுல் ஒன்ருக இருந்திருக்கலாம் என்பார்.

அ, இ, உ என்ற மூன்று உயிர்களைக்கொண்ட இம்மொழி ஒரு உட்பிணைப்பு மொழியாகும். இம்மொழிகளில் 3 முதல் 20 வரை மெய்களைக் காணலாம். சில மொழிகளில் காணப்படும் எல்லாச் சொற்களும் உயிரில் ஆரம்பிப்பதோடு மட்டுமல்லாமல் உயிரிலேயே முடிவதையும் காணலாம். இரண்டு அல்லது மூன்று உயிர்கள் இணைந்து வருவது சாதாரண ஒரு பண்பாகும்.[1]

முன்னர்க் குறிப்பிட்டது போன்று இம்மொழி மிகச்சிறந்த ஒரு உட்பிணைப்பு மொழியாகும். நாம் ஒரு வாக்கியத்தில் கூறும் செய்திகளை இவர்கள் ஒரே சொல்லில் கூறிவிட முடியும்.

அனெர்குவாதித் (anerquawaadit) என்ற சொல் அவன் (-அ-) உன்னை (-தித்-) வெளியே போகுமாறு (-அனெர்-) வேண்டுகிறுன் (-குவ-) எனப் பொருள்படுவது இத்தன்மையினை

---

1. Vowels occur initially, medially and finally in the word, and they occur both singly and in clusters. Clusters of two and three vowels are common, of four and five ...... relatively rarer.

Morris Swadesh, "South Greenlandic" in *Linguistic Structure of Native America* p. 31.

நன்கு காட்டும். இதன்கண் காணப்படும் இலக்கணக்கூறுகள் அனைத்தும் பின்னொட்டுகளாலும் இடை ஒட்டுகளாலும்தான் உணர்த்தப்படுகின்றன. வினைச்சொல்லில் மட்டும் ஆயிரத்துக்குமதிகமான ஒட்டுகள் உள்ளனவாம்.

இம்மொழியில் ஒருமை, இருமை, பன்மை என்ற எண் பாகுபாட்டினைக் காணலாம். இப்பாகுபாடு பெயரிலும் வினையிலும் உள்ளன.

| | | |
|---|---|---|
| இக்லு | (iglu) | வீடு |
| இக்லுக் | (igluk) | இரு வீடுகள் |
| இக்லுத் | (iglut) | வீடுகள் |
| து(க்)குப்பா | (tuquppaa) | அவனைக் கொல்லுகிறான் |
| து(க்)குப்பாத் | (tuquppat) | அவளைக் கொல்லுகிறான் |
| து(க)குப்பாக் | (tuquppak) | அவர்களிருவர் அவனைக் கொல்லுகிறார்கள் |

தமிழ் மொழியைப் போன்றே எஸ்கிமோவிலும் பல வேற்றுமைகள் உள்ளன. வேற்றுமையுருபுகள் ஒருமை, பன்மையுடன் வருவதைக் காணலாம்.

**மேற்குக் கிரீன்லாந்து**

| | | | |
|---|---|---|---|
| -ut | கக்கமுத் | (qaqamut) | மலைக்கு |
| -e | கக்கமெ | (qaqame) | மலையில் |
| -it | | | மலையிலிருந்து |
| -ik | கக்கமிக் | (qaqamik) | மலையால் |
| -kut | கக்கக்குத் | (qaqakut) | மலையின்மேல் |
| -tuk | கக்கதுக் | (qaqatuk) | மலைபோல் |
| -g | கக்கக் | (qaqag) | மலையை |

| | | | |
|---|---|---|---|
| -p | கக்கப் | (qaqap) | மலையின் |
| -nut | கக்கனுத் | (qaqanut) | மலைகட்கு |

உடைய பொருள் மூவிடப் பெயர்களாயின் மூவிடப் பெயர்கள் (உடைமை) சொற்களுடன் இணைந்து நின்று இப்பொருள் தருகின்றன. ஒருமை, இருமை, பன்மை எண்களைக் குறிக்கும் பெயர்கள் தனித்தனியே உடைமையால் இதன்கண் உடைமைப் பொருள்தரும் மூவிடப் பெயர்களாக 18 உள்ளன. இவை மட்டுமல்லாமல் 'அவனுடைய சொந்த வீடு', 'அவனுடைய சொந்த இரு வீடுகள்', 'அவனுடைய சொந்த வீடுகள்' என்பன போன்று படர்க்கையில் 'சொந்த' என்ற பொருளைத் தருவதற் கெனத் தனியான சொற்களும் உள்ளன. இவற்றைச் சிலர் நான்காவது இடப்பெயராகக் கொள்ளுவர். மேற்குக் கிரீன்லாந்து மொழியில் இவற்றை நன்கு காணமுடியும்.[1]

இம்மொழியில் பல்வேறு சுட்டுகளைக் காணலாம்.

| | | |
|---|---|---|
| உன | – | உவன் / உவள் / உது |
| மன்ன | – | இவன் / இவள் / இது |
| இங்க | – | அவன் / அவள் / அது |
| தாவ்ன | – | அவன் / அவள் / அது |

(முன்னல் குறிப்பிடப்பட்டவை)

இவைமட்டுமல்லாமல் இன்னும் பல்வேறு சுட்டுகளும் இதன்கண் காணப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| $a^{w}$ nna | – | அவன் / அவள் / அது | (வடக்கில் இருப்பவை) |
| $ga^{w}$ nna | – | ,, | (தெற்கில் ,, |
| $pa^{w}$ nna | – | ,, | (கிழக்கில் ,, |

1. Franz Boas, *Hand Book*, pp. 1021-22.

| | | | |
|---|---|---|---|
| $sa^{w}nna$ | - | ,, | (கடலில் ,, |
| kanna | - | ,, | (அங்கே ,, |
| kiṅṅa | - | ,, | (தெற்கே ,, |
| piṅṅa | - | ,, | மேலே (கிழக்கில்) |

(கிரீன்லாந்து)

பெயர், பெயரடை போன்றவற்றினின்றும் வினைச் சொற்கள் உண்டாகின்றன.

| | | |
|---|---|---|
| லவ்க | – வீடு | |
| லவ்கலிலொ | - வீடு கட்டுகிறேன் | |
| நுஜிக் | - கத்தி | |
| நுஜிச்துக் | - கத்தியால் வெட்டுகிறான் | (அலாஸ்கா) |

போன்ற பல வினைகள் இம்மொழியில் உள்ளன.

வினைகள் எழுவாய், செயப்படுபொருள் போன்ற பல இலக்கணக்கூறுகளைக் காட்டுவதோடு பிற மொழிகளில் வெவ் வெறு சொற்களால் காட்டப்படும் பல்வேறு கூறுகள் ஒரே வினைச்சொல்லில் பல பின்னொட்டுகளால் காட்டப்படுகின்றன.

வீட்டுக்குப் (iglumut) போகிறான் என இரு சொற்களால் நாம் கூறுவதை இவர்கள் வீட்டுக்கு என்ற சொல்லை வினையுட னிணைத்து iglumuaktot என ஒரே சொல்லினால் உணர்த்து வதைக் காணலாம். இதுபோன்றே

iglumingaktok - வீட்டிலிருந்து வருகிறான்

iglukurktok - வீடு வழியாக வருகிறான்

எனப் பல சொற்களைக் காணலாம். வினைச்சொற்களில் பற்பல இடையொட்டுகளை இணைத்தும் பல செய்திகளைக் கூறுவர் இவர்.

| | | |
|---|---|---|
| தனெய்க் | - | இறுதியாக |
| தகுவா | - | அதைக்கண்டேன் |
| eaku-tanaik-tara | - | இறுதியாக அதைக் கண்டேன் |
| நசாக் | - | அதிக நேரம் |
| எர்ங்முக்தொக் | - | அவள் கழுவுகிறுள் |
| tngming-nasa·k-tok | - | அதிக நேரமாக கழுவவில்லை |

போன்ற பல செய்திகள் இவ்வாறு காட்டப்படுகின்றன.[1]

1. A. E. Spalding, *A Grammar of the Eest and West Coasts of Hudson Bay*, pp. 95-97.

## 3. 10. 2 அல்கோன்கியன் — வகாஷன் பெருங்குழு (Algonquean - Wakashan Phylum)

இப்பெருங்குழு வட அமெரிக்க நாடுகளில் வழங்குவதாகும். இதில் சாலிஷ் (Salish), சிமொக்குவான் (Chimakuan) அல்கோன்கியன் (Alganquean), வகாஷன் (Wakashan) ஆகிய நான்கு குடும்பங்களும் வியோத் (Wiyot 236), யுரோக் (Yurok, 960), குத்தெனெய் (Kutenai, 1000) ஆகிய மூன்று தனிமொழிகளும் அடங்கும்.

### 3.10.2.1 சாலிஷ் மொழிகள்

இக்குடும்பத்தில் பதினைந்துக்குமதிகமான மொழிகள் உள்ளன. இவை பொதுவாகப் பிரிட்டிஷ் கொலம்பியா, வாஷிங்டன், மாண்டானே, ஐடகோ, ஆரகன் முதலிய இடங்களில் பேசப்படுகின்றன. [1]

### 3 10.2.2 சிமாக்குவன் மொழிகள் (Chimakuan)

இக்குழுவில் குய்லெயுத் (Quileute 280), சிமாக்குவன் ஆகிய இரு மொழிகள் உள்ளன. இவற்றுள் சிமாக்குவன் இப்போது வழக்கில் இல்லை.

---

1. Interior Salish :

1. Lillooet (1500)
2. Shuswap (1500)
3. Tnompson (1500)
4. Okanagon (1000)
5. Flathead Spokane (200)
6. Coeurd'Alene (700)
7. Wenatchi (200)

Coastal Salish :

8. Tillamook
9. Twana (10)
10. UppuChehalis (100)
11. Quinauln (100)
12. Snoqualmi (50)
13. Lummi (200)
14. Halkomelem (1000)
15. Squamish (200)
16. Comox (500)
17. Bella Coola (200)

### 3.10.2.3 அல்கோன்கியன் மொழிகள்

அமெரிக்க இந்திய மொழிகளில் இது முக்கியம் வாய்ந்த பிரிவாகும். இப்பிரிவு மொழிகளில் பல வழக்கு இழந்துவிட்டன. எனினும் இருபதிற்கும் அதிகமான மொழிகள் இன்று பேசப் படுகின்றன.[1] இவை பிரிட்டீஷ் கொலம்பியா, மாண்டானோ, விஸ்கான்கின், அயாவோ, கான்சாஸ், ஒக்லஹோமா, ஆண்டாரியோ, குயூபக், பென்சில்வேனியா, மெய்ன் (Maine), ஆல்பர்ட்டா ஆகிய இடங்களில் பேசப்படுகின்றன.

### 3.10.2.4 வகாஷன் மொழிகள்

இப்பிரிவில் ஆறு மொழிகள் உள்ளன. இவற்றுள் நூத்கா (Noatka மிக முக்கியமானது. இம்மொழிகள் (Nitinat, Makah, Bella Bella, Kwakiute, Kitamat) வான்கூவர் தீவுகள், பிரிட்டிஷ் கொலம்பியா ஆகிய இடங்களில் வழங்குகின்றன. இம்மொழிகளைப் பேசுவோராக 4000 மக்கள் உள்ளனர்.

### 3.10.2.5 குய்லெயுத் (Quileute)

வாஷிங்டன் மாநிலத்தில் குய்லெயுத் ஆற்று முகத்துவாரத்தில் வாழும் சுமார் 280 மக்களின் மொழியாம். டௌன் செண்டு துறைமுகத்தின் பக்கம் வழங்கிய சிமாக்குவன் (Chimakuan) மொழிக்கும் இதற்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பர்.

இதன்கண் a, i, e, o, u, æ என்ற ஆறு உயிர்களும் முப்பத்திரண்டு மெய்களும் உள்ளன. இரட்டிப்பு, பின்னொட்டு

1. Cree (15000); Montagnais (1550); Naskapi; Menomini (2500), Fox, Sauk (2500), Kickapoo (650), Shawnee (730); potawatomi (5500); Chippiwa (U.S.) or Objibwa (Canada) (32000), Ottawa (1000); Algonkin; Delaware (2000); Penobscot (250), Abnaki (250); Malecite (150); Passamquoddy (385); Micmac (3800): Black foot, Blood, Piegan (7600); Cheyenne (4000); Arapaho (3775).

கள் போன்றவற்ருல் இலக்கணக்கூறுகள் பல உணர்த்தப்படு கின்றன.

இம்மொழி மூவிடப் பெயர்களில் விசேடப் பண்பொன் றினைக் காணலாம். தன்மையும் முன்னிலையும் தமிழைப்போன்று காணப்படினும் படர்க்கைப் பெயர்களில் பெண்பாலைக் காட்டுவன ஒரு பிரிவாகவும் பிறபாலைக் காட்டுவன மற்றொரு பிரிவாகவும் உள்ளன. மேலும் இவை "கண்கட்குப் புலப்படுவன" (visible), "கண்கட்குப் புலப்படாதன" (invisible) எனப் பகுக்கப்படுவ தோடு புலப்படாத பெயர்கள் மீண்டும் நாம் "அறிந்தவை", "அறியாதவை" (known and unknown) என வகை செய்யப் படுகின்றன. இத்தகைய பெயர்கள் அனைத்திலும் ஒருமை, பன்மை என்ற பகுப்பினையும் காணமுடியும். பெண்பால் பெயர் கள் அனைத்தும் ஒருவகையாகவும், ஆண்பால் பெயர்களும் அஃறிணைப் பெயர்களும் மற்றொரு வகையாகவும் காணப்படுவது தமிழில் காணப்படாத ஒரு பண்பாம்.

மூவிடப் பெயர்களில் மட்டுமன்றி இத்தன்மையினை வினை விகுதிகளிலும் காணலாம். "வந்தான்" என நாம் கூறுவதை இம்மொழியினர் – *as* (visible) -*te* (invisible, known) -*x* (invisible, unknown) என மூன்று விகுதிகளை உபயோ கித்துக் கூறமுடியும். மேலும் இதன்கண் வினைச்சொற்கள், செயின் எச்சம் போன்றவற்றில் வெவ்வேறு விகுதிகள் வருவ தால் ஏராளமான விகுதிகள் உள்ளன. 63-க்குமதிகமான விகுதி கள் உள்ளன என்பர்.[1]

1. Manuel J. Andrade, in *H. A. I. L.* Vol. 3, p. 204.



மூவிடப் பெயர்கள்
தன்மை
ஒருமை
பன்மை
ஒருமை
பன்மை
படர்க்கை
பெண்பால் (Feminine)
பிறபால்கள் (Non-feminine)
கண்கட்குப் புலப்படுவன
visible
கண்கட்குப் புலப்படாதன
invisible
ஒருமை
பன்மை
அறிந்தவை
known
அறியாதவை
unknown
ஒருமை
பன்மை
ஒருமை
பன்மை
கண்கட்குப் புலப்படுவன (visible)
கண்கட்குப் புலப்படாதன (invisible)
ஒருமை
பன்மை
அறிந்தவை
அறியாதவை
ஒருமை
பன்மை
ஒருமை
பன்மை

இதேபோன்று ஒரு பகுப்பினை இம்மொழிச் சுட்டுப்பெயர் களிலும் காணலாம். பொதுவாகச் சுட்டுப் பெயர்களைக் கண் கட்குப் புலப்படாதன, புலப்படுவன என இரு பெரும் பிரிவாக வும் புலப்படாதனவற்றை நாம் அறிந்தன, அறியாதன என்றும் அறியாதனவற்றை மீண்டும் தொடர்பற்றவை (**unrelated**), தொடர்புடையன எனவும் பிரிப்பர்.

கண்ணுக்குப் புலப்படுவனவற்றை (1) பேசுவோனின் பக்கத்திலுள்ளவை, (2) யாரிடம் பேசுகிருனே அவன் பக்கத்தி லுள்ளவை, (3) இருவருக்கும் பக்கத்திலுள்ளவை, (4) இருவருக் கும் தூரத்திலுள்ளவை என நான்கு வகையாகப் பரிப்பர். எல்லாச் சுட்டுப்பெயர்களிலும் பெண்பால் – பிறபால்கள் வேற் றுமையும் உள்ளன.

பேசும்போது தெரியாது பொருட்களைப் பற்றிக் குறிப் பிடும்போது $k^u$ (பெண்பால்), $x^u$ (பிறபால்கள்) என்ற சொற் களை உபயோகிப்பர். ஆனல் பேச்சில் பின்னல் இப்பொருட்களைக் குறிப்பிடுவார்களாயின் முறையே **'xwa'**, **'kwa'** என்ற சொற் களைப் பயன்படுத்துவர். காரணம் முன்னல் குறிப்பிட்டுப் பின் னல் குறிப்பிடும்போது ஒருவிதத் தொடர்பு ஏற்பட்டுள்ளது என்ற எண்ணந்தான். எடுத்துக்காட்டாக

'உனக்கு அந்தத் திமிங்கிலம் கிடைக்கும்; அந்தத் திமிங்கி லத்தைக் கொண்டு பிறருக்கு உணவளிப்பாய்' என்று கூறும் போது முதலில் வரும் 'அந்த' என்ற சொல் $x^u$ என்ற சொல் லாலும் இரண்டாவது வரும் 'அந்த' **xwa** என்ற சொல்லாலும் உணர்த்தப்படும். $x^u$ தெரியாத, தொடர்பற்ற பொருட்களையும், **'xwa'** தெரியாத ஆனல் தொடர்புள்ள பொருட்களையும் சுட்டும் சுட்டுகளாம்.




* இடைச்சுட்டிலும் சேய்மைச்சுட்டிலும் ஆண் பெண் பால்கட்கு ஒரே சொல்தான் பயன்படுகின்றது.

வினைச்சொற்கள் காலம், இடம், எண், பால், செயப்படு பொருள் போன்ற பல இலக்கணக்கூறுகளைக் காட்டும். முன்னர்க் குறிப்பிட்டது போன்று பல்வேறு விகுதிகள் இதன்கண் உள்ளன. படர்க்கையில் எழுவாய் கண்ணுக்குத் தெரிகின்ற பொருளாயின் அதைக் குறிக்கவென ஒரு விகுதியும் (–as) கண்ணுக்குத் தெரியாத பொருட்களில் நாம் அறியாத பொருளாயின் அதைக் குறிக்கவெனத் தனி விகுதியும் ( $x^u$ ) அறிந்த பொருளாயின் வேறு தனி விகுதிகளும் (-te, -ate) இருப்பதைக் காணலாம். மேலும் பெண்பால், பிறபால் வேற்றுமையும் காணப்படுகிறது.

இறந்த காலமும் நிகழ்காலமும் ஒரே இடைநிலையால்தான் உணர்த்தப்படுகின்றன. இடத்தைப் பொறுத்தே இக்காலங்கள் உணரப்படும். ஆனால் எதிர்காலம் தரும் இடைநிலை வேறாக உள்ளது. இவ்வெதிர்கால இடைநிலையினைப் பெயருடனும் இணைக்கமுடியும்.[1]

he'. ci' l.s ஹேசிவ்(ல்)ஸ் = என்னுடைய வருங்கால உணவு.

தமிழில் உடைய பொருளுடன் உடைமை உருபு வருவதும் (தலைவனுடைய தந்தை) இம்மொழியில் உடைமைப் பொருளுடன் உடைமை உருபு வருவதும் (தந்தை – உடைய தலைவன் = தலைவனின் தந்தை) காணத்தக்கதாம்.

ஹேதய = தந்தை

ஹேதய (க்)கஸ் ஆ(க்)த்(க்)கித் = தலைவனின் தந்தை

மேலும் படர்க்கையில் உடைமைப் பொருள் கண்ணுக்குத் தெரிவதாயின் அதற்குத் தனி உருபும், தெரியாததாயின் வேறு

1. *H. A. I. L*, Vol. 3, p. 266.

உருபும் அறிந்த பொருளாயின் தனி உருபும், அரியாத பொரு ளாயின் வேறு உருபும் உள்ளனவாம்.

**3. 10. 2.6 பாக்ஸ் (Fox)**

இது அல்கோன்கியன் இனத்தைச் சார்ந்ததாகும். இவ்வின (Central Algonqueon) மொழிகள் கிரேட்லேக்கைச் சார்ந்த பகுதிகளில் (மிக்சிக்கன், மினசோட்டா, விஸ்கான்சின், இல்லி ஞய், இண்டியாஞ, ஒகாயோ போன்ற மாநிலங்களில்) வழங்கு கின்றன. இவ்வினத்தில் Ogibwa, Ottawa, Potawatomi Menominee, Kickapoo, Sauk, Fox போன்ற மொழிகள் அடங்கும். இவற்றுள் பாக்ஸ், அயாவோ மாநிலத்தில் அயாவோ ஆற்றங்கரையோரத்தில் (Tama county) வாழும் ஒரு சில நூறு மக்களால் பேசப்படுவதாகும்.

இதன்கண் காணப்படும் விசேடப் பண்பாகக் கருதப் படுவது பெயர் வகைப்பாடாகும். இம்மொழிப் பெயர்களனைத் தும் உயிர்த்திணை, உயிரல்திணைப் பெயர்களாக வகை செய்யப் படுகின்றன. இத்தகைய வேற்றுமை, பெயர்களில் மட்டுமல்லாது வினைகளிலும் தெளிவாகக் காட்டப்படுகின்றன. உயிர்ப்பெயர்க ளனைத்தும் —அ என்ற ஒலியைக்கொண்டும் உயிரல்பெயர்கள் —இ என்ற ஒலியைக்கொண்டும் முடிகின்றன.[1]

---

1. A rigid classification of the objective world into things animate and things inanimate underlies the whole structure of the language. Thus the terminal *-a* indicates an object possessing the combined qualities of life and motion and the terminal *-i* indicates an object without these attributes.

Every verb and noun must fall in one or the other class. Forms ending in *-a* are termed ANIMATE, and those ending in *-i* INANIMATE.

Franz Boas, *Hand Book of American Indian Languages* p. 761.

| | | |
|---|---|---|
| அனெமோஹ | (Anamō$^{c}$) | நாய் |
| அஹ்கி | (a$^{c}$ki) | உலகம் |
| ஈன | (īna) | அவன்/ அவள்/ அது |
| ஈனி | (īni) | அது |

எனினும் உயிரற்ற பொருட்களை உயிர்ப் பொருட்களாக உருவகப்படுத்தும்போது அவை உயிர்ப் பெயர்களாகவே பயன் படுத்தப்படுகின்றன. இதுபோன்று சில செடிகளின் பெயர் களும் உயிர்ப்பொருட் பெயர்களைப் போன்று –a ஒலியில் முடி கின்றன.

இவ்வேற்றுமை, படர்க்கை மூவிடப் பெயர்களிலும் காணப் படுகிறது. உயிர்ப்பொருளின் பன்மை, ஒருமையைக் குறிக்கும் சொல் தமிழ் மொழியைப் போன்று அவன், அவள் என்று பொருள்படுவதோடு அது என்று பொருள்படுவதைக் காண லாம். தமிழில் யானை, சிங்கம், காகம் போன்ற பெயர்ச்சொற் கள் அஃறிணையாகவிருக்க இம்மொழியில் இவையும் உயிர்த் திணைச் சொற்களும் ஒரே இனமாகக் கருதப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| ஈன | (īna) | அவன் / அவள் / அது |
| ஈனி | (īni) | அது |
| ஈனிகி | (īnigi) | அவர்கள் (உயிர்) |
| ஈனினி | (īnini) | அவைகள் (உயிர்) |

தமிழ் மொழியைப் போன்றே இதன் கண்ணும் உளப்பாட்டுத் தன்மையினைக் காணலாம் ஆனல் இம்மொழியில் இவ்வேற் றுமை வினைச் சொற்களிலும் காட்டப்படுவது பிற மொழிகளில் காணப்படாத ஒரு பண்பு. தமிழிலும் பிற மொழிகளிலும் வினைச்சொற்கள் மாறுவதில்லை.

நாம் வந்தோம்

நாங்கள் வந்தோம்

என்ற வாக்கியங்களில் வினைச்சொற்கள் எந்த வேற்றுமையு மின்றி இருப்பதும் பாக்ஸ் மொழியில்

நெனெசாபென நாங்கள் அவனைக்கொன்றோம்

கெனெசாபென நாம் அவனைக்கொன்றோம்

என வினையிலும் இவ்வேற்றுமை காட்டப்படுகின்றது.

உடைமைப் பொருள் முன்னொட்டுகளாலும் பின்னொட்டு களாலும் உணர்த்தப்படுகின்றன. இவ்வொட்டுகள் உடைமைப் பொருட்களுக்கேற்ப மாறுகின்றன. உடைமைப் பொருள் உயிர்ப்பொருள் ஒருமையாயின் அதற்கெனத் தனி ஒட்டுகளும் பன்மையாயின் வேறு ஒட்டுகளும் உயிரற்ற பொருள் ஒருமை, பன்மைக்கேற்ப வேறு வேறு ஒட்டுகளும் உள்ளன.[1] இதனல் என் என்ற ஒரே பொருளைத்தரும் சொற்கள் நான்கு இருப்ப தைக் காணலாம். உடைமைப்பொருள் உயிர்ப்பொருள் ஒருமை யாயின் நெ– .... ம (ne - ma) என்ற சொல்லும் பன்மையாயின் நெ– .... மகி (ne – mAgi) என்ற சொல்லும் உயிரற்ற பொருள் ஒருமையாயின் நெ– .... மி (ne – mi) என்ற சொல்லும் பன்மை யாயின் நெ– மனி (ne – mAni) என்ற சொல்லும் 'என்னுடைய' என்ற பொருளைத்தரும் சொற்களாகும்.

நெ - த் - அனெமோஹெ - ம என் நாய்

நெ - த் - அனெமோஹெ - மகி என் நாய்கள்

நெ - த் - அசெனி - மி என் பாறை

நெ - த் - அசெனி - மனி என் பாறைகள்

---

1. Possession is expressed by prefixes and suffixes which are related to the pronouns of the independent mode. The suffixes differ for nouns of the animate class, and for singular and plural of the object possessed.

*Ibid*., p. 851.

இவ்வாறே உன்னுடைய, உங்களுடைய, எங்களுடைய, நம்முடைய, அவனுடைய, அவர்களுடைய என்று பொருள்படும் சொற்களாக நான்கு, நான்கு சொற்கள் உள்ளன.[1]

பாக்ஸ் மொழியில் மூன்று முக்கிய சுட்டுகள் உள்ளன. அண்மைச்சுட்டு, சேய்மைச்சுட்டு, இடைநிலைச்சுட்டு எனக் கூறலாம். பிற பெயர்களைப்போன்றே இச்சுட்டுப் பெயர்களிலும் உயிர்த்திணை, உயிரல்திணை வேற்றுமையினையும் ஒருமை, பன்மை வேற்றுமையினையும் காணலாம். இத்தகைய வேற்றுமைகள் காட்டப்படுவதால் இச்சுட்டுகளாக 12 உள்ளன. இவை பெயரடைகளாகவே பயன்படுகின்றன.

| | |
|---|---|
| பன நெனிவ | இந்த மனிதன் |
| ஈ·ன நெனிவ | அந்த மனிதன் |
| ஈ·னாக நெனிவ | அந்த மனிதன் |

இச்சுட்டுகளுடன் மேலும் இருவகைச் சுட்டுகள் உள்ளன இவற்றுள் ஒன்று "அந்த" எனப் பொருள்படுவதுடன், ஏதாவது வினாவுக்கு விடையாகப் பயன்படுகிற தன்மை கொண்டதாம்.[2] ஆனால் மற்றைய சுட்டு பேசுகின்ற இருவருக்கும் அறிமுகமான, ஆனால் அப்போது இல்லாத அல்லது இறந்துவிட்ட பொருட்களைச் சுட்டும்போது பயன்படுகிறது.[3] பிற

---

1. உடைமை இடப்பெயர்கள் தந்திருக்கும் பட்டியலில் அதனுடைய, அவற்றினுடைய என்று பொருள் தரும் இடப்பெயர்கள் தரப்படவில்லை.

2 One demonstrative is used in answer to a question, and corresponds to English THAT, YONDER, when both are used in a weak indefin te sense. The object referred to is present and visible.

*Ibid.*, p. 855

3. Another pronoun has a temporal force and refers to an object as invisible and in the past.

*Ibid.*, p. 855.

எல்லாப் பெயர்களைப் போலவே இவையும் திணை எண்களைக் காட்டுவதால் இவற்றைக் குறிக்கும் சுட்டுகளாக எட்டுச் சொற்கள் உள்ளன,

ஈனம மெனிவ அந்த மனிதன்
ஈனிய மெனிவ அந்த மனிதன்

என்பன உயிர் ஒருமைச் சுட்டுகள்.

இம்மொழி வினைச்சொற்கள் பல்வேறு இலக்கணக்கூறுகளைக் காட்டும் தன்மையன. எழுவாய், காலம், செயப்படுபொருள் முதலியவற்றைக் குறிக்கவெனத் தனித்தனி மூவிடப் பெயர்கள் (ஒட்டுகள் அல்லது விகுதிகள்) உள்ளன. தமிழில் எழுவாயைக் குறிக்கும் ஒட்டுகள் எந்த இடத்தைக் குறிக்கினும் ஒரே இடத்தில் இருப்பதைக் காண்கிறோம்.

வ - ந்த் - ஆன்
வ - ந்த் - ஏன்
வ - ந்த் - ஆய்

ஆனால் இம்மொழியிலோ எழுவாய் தன்மை அல்லது முன்னிலையாயின் சொல்லுக்கு முதலிலும்

நெ - ஹ்றப்ய வந்தேன் | வருகிறேன்
செ - ஹ்றப்ய வந்தாய் | வருகிறாய்

படர்க்கையாயின் இறுதியிலும்

ப்ய - வ வந்தான் | வருகிறான்
ப்ய - மிகத் - வி வந்தது | வருகிறது

என வருவது காணத்தக்கது.

வினைச்சொற்களில் எழுவாயினையும் செயப்படுபொருளையும் காட்டும் மொழிகள் பலவற்றில் எழுவாய்க்கெனத் தனி

ஒட்டுகளும் இருப்பதைக் காணலாம். ஒன்றை ஒட்டி மற்றொன்று அமைவதில்லை. செயப்படுபொருள் முன்னிலைப் பெயராயினும் படர்க்கைப் பெயராயினும் அவற்றிற்கேற்ப எழுவாயைக்காட்டும் ஒட்டு மாறுவதில்லை. ஆனால் இம்மொழியில் எழுவாய் காட்டும் ஒட்டும் செயப்படுபொருள் காட்டும் ஒட்டும் ஒன்றிற்கேற்ப மற்றொன்று மாறுவதைக் காணலாம். வந்தேன் என்ற சொல்லின் நெ- எழுவாய் பொருள் காட்ட, நான் உன்னைப்பார்த்தேன் என்பன போன்றவற்றில் கெ- இப்பொருளைத் தருவதைக் காண்கிறோம்.

நெ - வ்ப்ய வந்தேன்

கெ - வபமெ - னெ நான் உன்னைப் பார்த்தேன்

இத்தகைய தொடர்புநிலை இருப்பதால் எழுவாய் ஒட்டு, செயப்படுபொருள் ஒட்டு எனத் தனித்தனியாகப் பிரிக்காது பிரிவினைச் சொற்களில் கெ–னெ தன்மை ஒருமை எழுவாயினையும் முன்னிலை ஒருமை செயப்படுபொருளையும் காட்டும் பொது ஒட்டு என இலக்கண நூலார் பிரிக்கின்றனர்.

மேலும் எதிர்காலத்தைக் காட்டும்போது சில முன்னொட்டுகள் மாறுகின்றன.[1]

நி - ஹ்ப்ய (ni'$^{c}$pya) நான் வருவேன்

கி - ஹ்ப்ய வருவாய்

தமிழ் போன்ற மொழிகளில் வேற்றுமை வாயிலாகக் கூறப்படும் பல செய்திகள் இதன்கண் வினைச்சொற்களில் பல ஒட்டுகளினாலேயே உணர்த்தப்படுகின்றன. செயப்படுபொருள் மட்டுமல்லாமல் 'கு' 'கண்', 'ஆல்' ஆகிய வேற்றுமைகள் இந்நிலையில் காணப்படுகின்றன. கருவிப் பொருளைத் தருவதிலும் காலினால்

1. *Ibid.*, p. 817.

செய்வதற்கும் கையினல் செய்வதற்கும் கூர்மையான பொருட்களால் செய்வதற்கும் எனத் தனித்தனி உருபுகள் உள்ளன.

அதாஹ்றபெ - ன் – அம்வ 'அதை அவன் கையால் எடுத்தான்' என்ற சொல்லில் னகரவொற்று கருவி கை என்பதையும் (அம்வ – அவன் அதை)

தகெ – ஸ்க் – அம்வ 'அவன் (காலால்) உதைத்தான்' என்பதில் 'ஸ்க்' என்ற ஒட்டு கருவி கால் என்பதையும்

சகஹ்ற - பு – தோ - வ 'அவன் அதைக் கடித்தான்' என்பதில் – பு – வாயால் செய்யும் தொழிலேயும்

பெஹ்றதெ - ச - ஓ - வ 'அவன் தற்செயலாகத் தன்னை வெட்டிக்கொண்டான்' என்ற வாக்கியத்தில் – ச் – செயல் கூர்மையான கருவியால் நடந்தது என்பதையும் காட்டுகின்றன.

உன்னோடு உண்பேன் என இரு சொற்களால் உடநிகழ்ச்சிப் பொருளேயும் வினையையும் நாம் கூற, இம்மொழியினர் ஒரே சொல்லால் உடநிகழ்ச்சிப்பொருள் தரும் ஒட்டினை (-ம்-) வினைச் சொல்லில் இணைத்துக் கூறுகின்றனர்.

கீவிஹ் - பு – ம் – எ – னெ உன்னுடன் உண்பேன்

கரடு முரடாக இருக்கிருன், கரடு முரடாக இருக்கிறது

என ஆண்பால், அஃறிணை ஒருமை வேற்றுமையினை வினையில் எழுவாய் காட்டும் விகுதியால் குறிக்கிறோம். பாக்ஸ் மொழியில் இந்நிலை இருப்பதோடு அதனுடன் வெறொரு நிலையும் இருப்பதைக் காணலாம். கரடு முரடு என்பதன் பின்னல் உயிர்ப்பொருட்களைக் காட்டும் இன்னொரு ஒட்டினையும் (-si-) உயிரற்ற பொருட்களைக் காட்டும் ஒட்டினையும் (-ā'-) இணைத்து இவற்றின் பின்னர் விகுதிகளை இணைக்கின்றனர். வெறும் எழுவாய் விகுதிகளே (வ, வி) இவ்வேற்றுமையை நன்கு காட்டுமாயினும் இந்நிலை இதன்கண் காணப்படுகிறது.

காவெ சி வ கரடு முரடாக இருக்கிறான்

கா வா வி கரடு முரடாக இருக்கிறது

### 3.10 2 7 குவக்திஸ் (Kwakiutl)

வகாஷன் (Wakashan) இனத்தைச்சார்ந்த இம்மொழி பிரிட்டிஷ் கொலம்பியா, வான்கூவர் போன்ற இடங்களில் வாழும் சுமார் 1000 மக்களால் பேசப்படுகின்றது. இவ்வினத்தைச் சார்ந்த 'Nootka', 'Nitinat', 'Makah' போன்றன பிரிட்டிஷ் கொலம்பியா, வான்கூவர், வாஷிங்டன் போன்ற இடங்களில் வழங்குவனவாகும். இவற்றைச்சுற்றிலும் அதபாஸ்கன், சாலிஷ் மொழிகள் உள்ளன.

இதன்கண் முப்பத்தொரு மெய்கள் உள்ளன. எனினும் மெய்மயக்கங்கள் மிகமிகக் குறைவு என்பர். எந்தவிதமான மெய்மயக்கங்களும் மொழிக்கு முதலில் வருவதில்லை.

இம்மொழி அடிச்சொற்களைப் பெயர், வினை எனப் பிரிப்பது பொருத்தமன்று என்பர். எல்லா அடிச்சொற்களும் வினையாகவும் பெயராகவும் பயன்படும் தன்மையன. அவைகள் ஏற்கும் ஒட்டுகளை ஒட்டியே பெயர் என்றும் வினையென்றும் அழைக்கப் படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெத்- | பெத | மருந்து | பெதிபத் | மருந்து உண் |
| கெக்- | கெக | மனைவி | கெகெக் | |

---

1. Although the formal distinction of noun and verb is quite sharp, the great freedom with which nouns may be transformed into verbs, and verbs into nouns, makes a classification difficult. All stems seems to be natural, neither noun nor verb; and their nominal or verbal character seems to depend solely upon the suffix with which that are used, although some suffixes are also neutral.

*Ibid.*, p. 441.

குவக்தில் மொழியில் பன்மை எண் நன்கு வளரவில்லை என்பர். மனித இனத்தைக் குறிக்கும் சொற்களில் மட்டுமே ஒருமை, பன்மை என்ற பகுப்பு நன்கு காணப்படுகிறதாம்.

| ஒருமை | பன்மை | |
|---|---|---|
| (க்) நோல | (க்)நோனெல | அண்ணன் |
| காக | காகெக | அடிமை |

பிறவகைச் சொற்களில் காணப்படும் இவ்விரட்டிப்பு, உண்மையான பன்மையினைக்காட்டாது. அங்கும் இங்கும் காணப்படுகின்ற பொருட்களையோ அல்லது ஒரே பொருளின் பல வகைகளையோ குறிக்கின்றன என்பர்[1]

| | | |
|---|---|---|
| ஹானலெம் | ஹெஹானலெம் | அம்பு |
| கோகு | கிகோகு | வீடு |

மூவிடப் பெயர்களிலும் பன்மை எண் நன்கு வளரவில்லை. தன்மைப் பெயரில் ஒருமையும் பன்மையும் இருக்க முன்னிலையிலும் படர்க்கையிலும் பன்மை காணப்படவில்லை. இதே நிலையை வினைச்சொற்களில் எழுவாய் காட்டும் ஒட்டுகளிலும் (விகுதி) காணமுடியும். படர்க்கை ஒருமையில் கண்கட்குத் தெரிவன, தெரியாதன என்ற வேற்றுமை இருப்பது இம்மொழியின் விசேடப் பண்புகளில் ஒன்ருகக் கருதப்படுகின்றது.[2]

---

1. The idea of plurality is not clearly developed. Reduplication of a noun expresses rather the occurance of an object here and there, are of difference kinds of a particular object, than plurality. It is therefore rather a distributive than a true plural.

*Ibid.*, p. 444.

2. The strong tendency of the Kwakiutl language to strict localization appears very clearly in the development of the third person, which is almost always combined with the demonstrative pronoun. Three positions are distinguished —

பல அமெரிக்க மொழிகளைப் போன்றே இதன் கண்ணும் மூன்று சுட்டுகள் உள்ளன. பேசுவோரின் பக்கத்திலுள்ள பொருட்களைச் சுட்டுவன, யாருடன் பேசுகிறானோ அவன் பக்கத்திலுள்ள பொருட்களைச் சுட்டுவன, பேசப்படுவோரின் பக்கத்திலுள்ளவற்றைச் சுட்டுவன என மூன்று சுட்டுகளைக் காணலாம். மேலும் இவை தனித்தனியே கண்கட்குத் தெரிவன, தெரியாதன எனவும் பிரிக்கப்படும். இச்சுட்டுகளை வினையுடன் இணைத்து எழுவாயினைக் காட்டுகின்றனர்.

(gāxga) காஹ்க இவன் (கண்ணுக்குத்தெரியும்) வருகிறான்
(g.āxk ) காஹ்க் இவன் (தெரியாதவன்) வருகிறான்

என்ற வாக்கியங்களின் அண்மைச்சுட்டில் இரு பிரிவு இருப்பது இம்மொழியின் விசேடப் பண்பினைக்காட்டும். இது போன்றே 'உவன்' 'அவன்' என்ற சுட்டுகளிலும் இத்தன்மை காட்டப்படும்.

தமிழ் போன்ற மொழிகளில் பெயர்ச்சொற்கள் காலம் காட்டுவதில்லை. காலம் காட்டும் பெயர்களைக் குறிக்க வேண்டின்

---

that near the speaker, that near the person addressed, and that near the person spoken of; and each of these is subdivided into two forms, according to visibility and invizibility. Therefore we must add to the five forms given before the forms of the third person.

*Ibid*, pp. 527-528.



'முன்னாள் தலைவர்', 'முந்திய தலைவர்', 'வருங்காலத் தலைவர்' என வேறு சொற்களை இணைத்துக் கூறுகிறோம். குறிப்புவினையாக வருஞ்சொற்கள் ('தலையன்' 'குழையன்'), மூன்று காலங்களையும் குறிக்கும் என இலக்கண நூல்கள் கூறுவதை நன்கு அறிவோம். ஆனால் சில அமெரிக்க மொழிகளில் பெயர்களுடன் சில ஒட்டுகளிணைந்து காலம் காட்டுகின்றன. இத்தகைய அமெரிக்க இந்திய மொழிகள் பல உள்ளன என்பர்.[1]

இம்மொழியில் காலம் காட்டும் ஒட்டுகளைப் பெயர்களுடனிணைத்துக் காலம் குறிக்கின்றனர். மிகப்பழைய காலம் (remote past), அண்மை இறந்தகாலம் (recent past), எதிர்காலம் போன்றவை பெயர்சொற்களிலும் உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| -வுல் | ஒம்ப் தந்தை | ஒம்ப்வுல் | முன்பே இறந்துவிட்ட தந்தை |
| -ஷ்த் த் – எச் | கேசோ பெட்டி | கேசோஷ்த் | முன்னால் இருந்த இந்தப் பெட்டி |
| -ல் | ஷ்வாகுன ஒடம் | ஷ்வாகுவல் | வருங்கால ஒடம் |

எனவரும் சொற்கள் இத்தன்மையை நன்கு காட்டும்.

பிற மொழிகளில் பல்வேறு சொற்களால் உணர்த்தப்படும் கருத்துக்கள் இதன்கண் ஒரே ஒரு ஒட்டினால் காட்டப்படுகின்றன. இருநூற்றுக்குமதிகமான ஒட்டுகள் இதன் கண் உள்ளன.

---

1. Tense classes of nouns are not rare in American languages. As we may speak of a future Rasbend or of our late friend, thus many Indian languages express every noun. As existence in presence, past, or future, which they require as much for clearness of expression as we require the distinction of singular and plural.

*Ibid.*, p. 39.

| | |
|---|---|
| ல | போ |
| லாயக | திரும்பிப் போ |
| லகோதெந்து | எதிர்பக்கம் போ |
| லோக்யோ | நடுப்பக்கம் போ |
| லாஷ | கீழே போ |
| லாலெல்ஸ் | வெளியே போ |
| லாஹ்ஸ்தா | தண்ணீரின் வெளியே போ |
| லேக | பின்தொடரு (பின்னல் போ) |

என்பன எடுத்துக்காட்டுகளாம்.

வினைச்சொற்களில் செயப்படுபொருள், எழுவாய், காலம் போன்ற பல இலக்கணக்கூறுகளைக் காட்டும் தன்மை ஒருமை, தன்மைப் பன்மைகள் (உளப்பாட்டுத்தன்மை), முன்னிலை ஒருமை, படர்க்கை ஒருமை ஆகிய விகுதிகளே காணப்படுகின்றன. மிகமிக அரிதாகவே படர்க்கைப் பன்மை காணப்படுகிறது. மேலே தந்திருக்கும் எடுத்துக்காட்டுக்கள் பலவற்றைக் கூர்ந்து நோக்கும் போது படர்க்கைப் பன்மையில் ஒரே ஒரு வாக்கியமே காணப் படுகின்றது. இதன்கண்ணும் படர்க்கைப் பன்மை விகுதியால் காட்டப்படாமல் அடிச்சொல்லினல்தான் உணர்த்தப்படுவது ஒருவிசேடப் பண்பாகும்.

ஹோக்வெல்ஸ் அவர்கள் வெளியே போனர்கள்

ஹோக்-போ (பன்மை), லெல்ஸ் - (வெளியே). பன்மை காட்டும் அடிச்சொற்களாக மூன்றே (கிட, இரு, போ) காணப்படு கின்றன.

இடம் சுட்டிப் பேசுதலேயும் இம்மொழியின் ஒரு பண்பாகக் கூறலாம். 'என் நண்பன் நலமின்றி இருக்கிறுன்' எனக் கூற வேண்டின் இம்மொழியினர் 'கண்கட்குத் தெரியும் என்னுடைய நண்பன் இந்த வீட்டில் இங்கு நலமின்றி இருக்கிறுன்' எனக் கூறுவது காணத் தக்கதாம்.[1]

---

1. The contents of the Kwakiutl sentence are characterized primarily by an exuberant development of localization. This is brought obout partly by the use of local sffixes which define the exact place where an action is performed, without regard to the speaker; partly by the expression of location in relation to the speaker. Thus the sentence 'My friend is sick' would require in Kwakiutl local definition, such as 'My visible friend near me is sick in the house here'.

*Ibid.*, pp. 445-446.

## 3. 10. 3 நா - தென் பெருங்குழு (Na-Dene Phylum)

இம்மொழிகள் சைனோ-திபேத்திய மொழிகளோடு தொடர்புடையன என்பர். இம்மொழிகள் வட அமெரிக்காவிலும், தென் அமெரிக்காவில் மெக்சிக்கோவிலும் பேசப்படுகின்றன. இதன்கண் அதபாஸ்கன் (Athapascan) மொழிக் குடும்பமும் திலிங்கித் (Tlingit), ஹைடா (Haida) ஆகிய இரு தனிமொழிகளும் அடங்கும்.

அதபாஸ்கன் (Athapascan) மொழிகளை வட அதபாஸ்கன் (North Athapascan), பசிபிக்கரையோர அதபாஸ்கன் (Pacific Coast Athapascan) தென்மேற்கு அதபாஸ்கன் (South-West Athapastcan) என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர்.

### 3.10.3.1 வட அதபாஸ்கன்

இதன்கண் தோக்ரிப் (Dogrib), கச்சின் (Kutchin) போன்ற ஒன்பது[1] மொழிகள் உள்ளன. இம்மொழிகள் பேர் ஏரி (Bear Lake), அல்பர்ட்டா. சங்கச்வான், அலாஸ்கா, யுகோன், பிரிட்டீஷ் கொலம்பியா போன்ற இடங்களில் எல்லாம் பேசப்படுகின்றன.

---

1. 1. Dogrib - Bear Lake - Hare (1400)
   2. Chipewyan - Slave - Yellow knife.
      1. Chip (4400-6600)
      2. Slave (1000-2000)
      3. Yellow (400 600)
   3. Kutchin (1200)
   4. Tonana - Koyukon - Han - Tutchome.
      1. Tanana (350)
      2. Kuyukon (400-500)
      3. Han (60)
      4. Tutchone (1000)

**3.10.3.2 பசிபிக் கரையோர அதபாஸ்கன்**

இதன்கண் ஐந்துக்கும்[1] அதிகமான மொழிகள் உள்ளன. இம்மொழிகளைப் பேசுவோராக சுமார் 200 மக்கள் உள்ளனர். கலிபோர்னியா, ஆரகன் (Oregan) போன்ற மாநிலங்களில் பேசப்படுகின்றன.

**3.10.3.3 தென் மேற்கு அதபாஸ்கன்**

இதன்கண் ஆறுக்கும் அதிகமான மொழிகள் உள்ளன.[2] அரிசோனு, நியுமெக்சிகோ, உட்டா, கொலராடோ, ஒக்ல கோமா, ஆகிய இடங்களில் பேசப்படுகின்றன. இம்மொழிகளைப்

---

5. Sekani - Beaver - Sarsi.
   1. Sekani (500)
   2. Beaver (300)
   3. Sarsi (50)
6. Carrier - Chilcotin.
   1. Chilcotin (1500-4000)
   2. Carrier (1000-3000)
7. Tahltan - Kaska.
   1. Tahltan (100-1000)
   2. Kaska (200-500)
8. Tanaina - Ingaalik.
   1. Tanaina (300)
   2. Ingalik (500)
9. Eyak (6)

1. 1. Hupa (130)
   2. Kato - Wailaki.
      1. Kato (10)
      2. Wailaki (Nil)
   3. Chasta Costa (ஒரு சில)
   4. Mattole (ஒரு சில)
   5. Totowa (ஒரு சில)

2. 1. Navaho (100,000)
   2. San Carlos Apache (8000-10,000)

பேசுவோராக சுமார் ஒன்றரை லட்சம் மக்கள் உள்ளனர். இம்மொழிகளில் நாவகோ (Navaho) முக்கியமானது.

இவைதவிர அப்பாச்சே, ஜனோ, ஜக்கோமி, தொபாஸோ (Apache, Jano, Jacome, Toboso) ஆகிய மொழிகளும் இப் பிரிவில் அடங்கும். இம்மொழிகள் மெக்சிக்கோவில் (Latin America) வழங்குகின்றன.

**3.10.3.4 ஹைடா (Haida)**

இது பிரிட்டிஷ் கொலம்பியாவையடுத்த குயின் கார்லெட் (Queen Charlette) தீவின்கண் வழங்கும் மொழியாகும். சுமார் இருநூறு அல்லது முன்னூறு வருடங்கட்கு முன்னால் இப் பிரிவினர் அலாஸ்காவில் குடியேறினர் என்பர். சார்லெட்டில் காணப்படும் ஹைடாவில் Skidegatf, Masset என இரு கிளை மொழிகள் உள்ளன. திசிம்ஷியன், திலின்கித் (Tsimshian, Tlingit) ஆகிய மொழிகள் இவற்றிடையே வழங்கிய காரணத்தால் அவற்றின் செல்வாக்கினை இம்மொழிகளில் காணலாம்.

ஸ்கிதகத் அசைகளில் இரு மெய்கள் மட்டுமே அசையாக நிற்கவல்லன என்பர்.[1] இது இதன்கண் காணப்படும் ஒரு சிறந்த பண்பாகும்.

---

3. Chiricahua - Mescalero Apache.
   1. Chiricahua (100-1000)
   2. Mescalero Apache (1000-1500)
4. Jacarilla (1000-1500)
5. Lipan (10)
6. Kiowa Apache (10)

1. Syllabus may consist of a single vowel; a consonant with following vowel. or with vowel - combination like the above; two consonants with following vowel; two consonants, a vowel, and a terminal consonant; or of two consonants by themselves.

Boas, *A. H A. I. L*, Vol. I, p. 212.

இம்மொழிப் பெயர்ச் சொற்கள் அவைகள் ஏற்கும் இனப் பிரிப்புச் சொற்களை (classifiers) அடிப்படையாக வைத்துப் பல வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. உயிர்த்திணைச் சொற்கள் (animate) என்றும் உயிரல்திணை (inanimate) எனவும் இருவகைகளாகப் பிரிக்கலாம். உயிர்த்திணைச் சொற்களில் மனித இனத்தையும் பிற உயிர்ப்பொருட்களையும் குறிக்கும் சொற்களனைத்தும் அடங்கும். உயிரல் திணைச் சொற்கள் அவை குறிக்கும் பொருட்களின் வடிவங்களையொட்டி முப்பத்தாறு வகைகளாகக் காணப்படுகின்றன.[1] நீண்ட பொருட்களைக் குறிப்பன ஒரு வகையாகவும் வட்டமான பொருட்களைக் குறிப்பன மற்றொரு வகையாகவும் சதுரமானவற்றைக் குறிப்பன இன்னொரு வகையாகவும் எனப் பல வகையினைக் காணலாம். ஒவ்வொரு வகைப் பெயர்களும் தனித்தனியான இனப் பிரிப்புச் சொல்லினை எடுக்கின்றன.[2]

எடுத்துக் காட்டாக பை, தலையணை போன்ற பொருட்களைக் குறிக்கும் சொற்கள் – த்ஸீ (-tcī) என்ற சொல்லை எடுத்து வருகின்றன.

| | | |
|---|---|---|
| ல - த்ஸீ | (latcī) | சாக்கு (நிரம்பியது) |
| கேட்ஜி - த்ஸீ | (kḷē'djitcī) | வயறு |

பல அமெரிக்க இந்திய மொழிகளைப் போன்றே ஹைடாவிலும் பன்மை எண் நன்கு வளரவில்லை எனக் கூறலாம். மூவிடப் பெயர்களிலும் உறவுப் பெயர்களிலும் ஒரு சில மனித

1. *Ib d*, pp. 227-235.

2. The classification of nouns, referred to before, is one of the characteristic traits of the language. The group characterize objects as 'long', 'slender', 'round', 'flat', 'angular', 'thread-like', 'animate' etc.

*Ibid.*, p. 216.

இனத்தைக் குறிக்கும் பெயர்களிலுமே பன்மை விகுதிகள் உள்ளன. இதே போன்றுதான் குறிப்பிட்ட சில வினைச்சொற் சொற்களே பன்மை எண் காட்டுகின்றன.[1]

காக்லங் (-lAṅ) மாமன்மார்
கித்ஜிதை (-த்ஜித்) குறைந்த சாதி மனிதர்கள்

மூவிடப் பெயர்களில் ஒருமை, பன்மை வேற்றுமை உள்ளது. படர்க்கையில் அவன், அவள், அது என்பன ஒரே சொல்லினால்தான் காட்டப்படுகின்றன. தமிழில் காணப்படும் உளப்பாட்டுத் தன்மை இல்லை. இதன்கண் இரண்டுவிதமான பெயர்கள் உள்ளன. ஒருவகை எழுவாயாகவும் மற்றொருவகை செயப்படு பொருளாகவும் சில இடங்களில் எழுவாயாகவும் வருகின்றன.[2]

ஹைடா வினைகளை இரண்டு வகைகளாகப் பிரிப்பர். ஒரு வகை உடலின் நிலையினையும் (States of the body and quality) தன்மையினையும் இன்னொருவகை செயலினையும் குறிக்கும். முதல் வகையில் 'இற', 'ஆகு', 'வேண்டு', 'அஞ்சு', 'தெரி' போன்ற ஒரு சில வினைகளே அடங்கும்.

எனக்கு வேண்டும்
எனக்குத் தெரியும்

---

1. ....... ; consequently there are only a few cases in which the verbal stem differs in the singular and plural. This agrees also with the fact that in the noun the idea of plurality is only weakly developed. It occurs only in terms of relationship and a few other terms designating human beings.

*Ibid.*, 217.

2. Verbs are strictly distinguished as active and neutral. Neutral verbs are, on the whole, these designating states of the body and qualities, while all the other verbs are considered as active. The subject of the latter is expressed by the subjective pronoun, while the pronominal relations of the neutral verb are expressed by the objective pronouns.

*Ibid.*, p. 217.

எனக் கு வேற்றுமையில் நாம் கூறுவது போன்று மேற்கூறிய வினைகள் இம்மொழியின்கண் செயப்படுபொருள் மூவி ப் பெயர்களையே எழுவாயாகக் கொண்டு வரும். இத்தகைய வினை வேறுபாடு (neutral verbs vs active verbs) அமெரிக்க மொழிகள் பலவற்றில் காணப்படுகிறது என்பர்.[1]

பொதுவாக அமெரிக்க இந்திய மொழிகளில் காணப்படும் மற்றொரு தன்மையும் இதன்கண் நன்கு அமைந்து கிடப் பதைக் காணலாம். பல்வேறு பெயர்களுடன் 'ஆல்' உருபினை இணைத்துக் கருவிப்பொருளை நாம் காட்ட, இம்மொழியினர் வினையுடன் பல்வேறு ஒட்டுகளை இணைத்துக் காட்டுகின்றனர். தோளினால் செய்வதைக் காட்டுவதற்கெனத் தனி ஒட்டு (un-); கையினால் முன்புறமாகத் தள்ளிச் செய்வதைக் காட்டுவதற் கெனத் தனி ஒட்டு (dan-); கையினால் இழுத்துச் செய்வதைக் காட்டுவதற்கெனத் தனி ஒட்டு (dan-); விரலுக்கெனத் தனி ஒட்டு (sl-) என வெவ்வேறு ஒட்டுகள் இருப்பதைக் காணலாம். இத்தகைய ஒட்டுகள் முப்பது உள்ளன.

வேறொரு விசேடப் பண்பாகக் காணப்படுவது இறந்த காலமாகும். பலவகையான இறந்த காலங்கள் உள்ளன.

1. தாமே அனுபவித்த செய்திகளைக் கூறுவாராயின் –கன் என்ற இடைநிலையை உபயோகிப்பர்.[2]

---

1. On the other hand there are certain traits that, although not common to all American languages, are atleast frequent, and which are not less characteristic than the tendency to objective incorporation and to polysynthesis. The most important of these is the tentency to provide the verb sharply into active and a neutral class, one of which is closely related to the possessive forms of the noun, while the other is treated as a true verb.

*Ibid.*, p. 76.

2. *-gan*, sometimes *-An*, inicates past events which the speaker has himself experienced.

*Ibid.*, p. 247.

ல நங் சில்தகன்   நான் ஒன்றை வாங்கினேன்

(ல = நான்; நங் = ஒன்றை; சில் = வாங்கு; த = துணைவினை)

2. யாரோ கூறிந் தாம் அறிந்த செய்திகளைக் கூறுவாராயின் - அகன் என்ற இடைநிலையை உபயோகிப்பர்.[1]

ல ல் (க்) சாவகன்   அவள் அவனிடம் பேசினன்

(ல = அவள்)

3. வழக்கமாகத் தாமே அனுபவித்த செய்திகளைக் கூறுவாராயின் - கின் என்ற இடைநிலையை உபயோகிப்பர்.[2]

க தி லஔஅககிநி   நான் அதற்கு வழக்கமாக பயந்து வந்தேன்

(தி = நான்)

பிறர் அனுபவித்தவற்றைக் கூறுவாராயின் - அன் போன்ற இடைநிலைகளை உபயோகிப்பர் (த், ட், ற், இன் போன்று).

ல்(க்) க்வன்யூஅனன்   அவர்கள் பலராக இருந்தனர்.

இதே போன்று எதிர்காலத்திலும் பல காணப்படுகின்றன. சாதாரணமாக எதிர்காலம் (வருவேன்), உடனே செய்யக்கூடிய செய்திகளைக் கூறுவதற்கென ஒரு எதிர்காலம் (நாளை வருவேன்), நிச்சயமற்ற செய்திகளைக் கூறுவதற்கென ஒரு

---

1. *-agAn* (Masset *-an* or *-gan*) past events known to the speaker only by report.
*Ibid*, p. 248.

2. *-gin* events that occur or occured haitually, and usually those which the speaker himself experienced or is experiencing.
*Ibid*., p. 248.

எதிர்காலம் (ஒரு வேளை வருவேன் 'shall') என மூன்று எதிர் காலங்கள் உள்ளனவாம்.[1]

### 3 10.3.5 அப்பாச்சே (Chiricahua Apache)

பண்டு இம்மொழி பேசினோர் நியூ மெக்சிக்கோவின் தென் மேற்குப் பகுதிகளிலும் அரிசோனுவின் தென்கிழக்குப் பகுதிகளிலும் சோனுராவின் வட பகுதிகளிலும் வாழ்ந்தனர். இன்று இம்மக்களை நியூ மெக்கிக்கோவிலுள்ள, அவர்கட்கென அரசாங்கத்தினரால் ஒதுக்கப்பட்ட காட்டுப் பிரதேசங்களில் மட்டுமே காணமுடியும்.

அமெரிக்க மொழிகளில் இது அழுத்த ஒலியினைக் கொண்டதாகும் சில ஆப்பிரிக்க மொழிகளில் காண்பது போன்று இதன்கண்ணும் ன/நகரவொலி ஒரு தனியசையாக நிற்க வல்லது என்பர்.[1] முப்பத்தொரு மெய்களைக் கொண்ட இம் மொழியில் அ, இ, எ, ஒ என்ற நான்கு உயிர்களும் அவற்றின் நெடில்களும் உள்ளன. மேலும் இவ்வெட்டு உயிர்களும் மூக் கொலியைப் பெற்றுத் தனி ஒலிக் கோள்களாகவும் வருகின்றன. எனவே இதன்கண் பதினுறு உயிர் ஒலிகள் உள்ளன.

இம்மொழிப் பெயர்களை ஓரசைப் பெயர்கள், கூட்டுப் பெயர்கள் எனப் பல வகையாகப் பிரிப்பர். இவற்றுள் ஒருவகை (உறவுப் பெயர்கள்) எப்போதும் உடமை உருபுடன் வருவதைக் காணலாம். இம்முன்னெட்டுகளின்றி இவை தனித்து வருவதில்லை. இவ்வுருபுகளிலும் தற்கிழமை, பிறிதின் கிழமை என்ற வேற்றுமை உள்ளது. தமிழில் காணப்படும் தற்கிழமை, பிறிதின் கிழமைக்கும் இம்மொழியில் காணப்படுவனவற்றிற்கும்

---

1. *Ibid.*, p. 249.

2. The syllabic may be a vowel (short or long), a two vowel cluster, or a syllabic *n*.

Cornelius Osgood (Ed.), *Viking Fund Publications in Anthropology*, No. 6, p. 57.

வேற்றுமை உண்டு. இம்மொழியின் தற்கிழமை "ஒருவனுடைய பொருளையும்,' பிறிதின் கிழமை "முன்னால் மற்றொருவனுடைய தாக இருந்து, தற்போது கூறப்படுவோனுடையதாக இருக்கும் பொருளையும்" தருவனவாம்.[1]

பி - சி = அவனுடைய தலை (தற்கிழமை)

பி - பி - சி = அவனுடைய தலை (பிறிதின்கிழமை)

இப்பண்பு இவ்வகைப் பெயர்களில் மட்டுமே காணப்படுகின்றது. இவ்வாறு வரும் உடைமை உருபுகள் ஐந்து வகைப்படுகின்றன. தமிழ் போன்ற மொழிகளில் தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்று இடங்களே இருக்க இம்மொழியின்கண் ஐந்து இடங்களிருப்பதைக் காண்கிறோம்.[2] படர்க்கையால் சுட்டப் படும் இருவரைத் தனியாகச் சுட்ட விரும்பின் இம்மொழியினர் நான்காவது இடத்தினை உபயோகிப்பதும் நாம் யாரோ ஒருவரு டைய, யாரோ ஒருவர் எனப் படர்க்கை இடமாகக் குறிப்பிடு வதை இவர்கள் ஐந்தாவது இடமாகத் தனியாகப் பிரித்துக்

---

1 With some nouns of this sort, particularly denoting body parts, it is possible to distinguish between alienable and inalienable possession. Thus, for example, bí-cí "his head" denotes the h ad which is a part of the individual's body but bí-pí-cí which means literally "his some one's head" (pí-indefinite possessive) denotes a head once the inalienable part of another's body but now in the possession of the individual referred to by the pronoun bí-.

*Ibid.*, p. 75.

2 Five persons are distinguished : first, second, third, fourth and the indefinite. The fourth person is used when reference is made to certain relatives by marriage with whom a respect relationship is maintained. It may also be used in a context in which it is necessary to distinguish two third persons. The indefinite possessor is employed when it is necessary to indicate that the thing is possessed but it is not necessary to specify the professor.

*Ibid.*, p. 76.

கூறுவதும் நோக்கத் தக்கதாம். உடைமைப் பொருள் காட்டும் மூவிடப் பெயர்களும் இத்தன்மையைக் காட்டும். ஷி - * என்னுடைய என்ற பொருளையும் நி – உன்னுடைய என்ற பொருளையும் பி – அவனுடைய, அவளுடைய, அதனுடைய என்ற பொருளையும் கொ - அதனுடைய, அவருடைய, அதனுடைய (4-வது இடம்) என்ற பொருளையும் கி – யாரோ ஒருவருடைய என்ற பொருளையும் தருகின்றன. இதே போன்று இவற்றின் இருமை எண்ணினைக் குறிக்கும் உருபுகளும் தனியாக உள்ளன. இதன்கண் ஒருமை, பன்மை என்ற வேற்றுமை இல்லை. பன்மையைக் குறிக்க வேண்டின் இவனும் அவனும் இங்குள்ளவனும் அங்குள்ளவனும் என இணைத்துக் கூறுவர். வினையிலும் பன்மை குறிக்கும் விகுதிகள் இல்லை.

தமிழைப் போன்றே வாக்கியங்களில் மூவிடப் பெயர்கள் எழுவாயாகவும் (நான் வந்தேன்) வருகின்றன. வினைச்சொற்களில் ஒட்டுகள் எழுவாயினைக் காட்டுவதால் வாக்கியங்களில் தனியாக இவை வரவேண்டும் என்ற நியதி இல்லை. தமிழில் இவை பெயர்களாகவேயிருக்க இதன்கண் இவை இடைச் சொற்களாகக் கருதப்படுகின்றன. பெயர்களைப் போன்று இவை பல இலக்கண மாற்றங்களை அடைவதில்லை.

| | | |
|---|---|---|
| ஷி | (ší) | நான் |
| ன்தி | (ndí) | நீ |
| பி | (bí) | அவன் / அவள் / அது |
| கி | (kí) | அவன் / அவள் / அது |
| நகி | (nàhí) | நாம் / நாங்கள் இருவர் |
| கொபி | (gòbí) | அவர்களிருவர் |
| நகி | (nàkí) | நீங்களிருவர் |
| தாநகி | (da. nàní) | first / second person distiibutive |
| தாகொபி | (da. gòbí) - | third person distributive |

வினைச்சொற்களில் எழுவாய் காட்டும் ஒட்டுகளாக இரண்டு தனித்தனியான பிரிவுகள் உள்ளன. இவற்றுள் ஒன்று நிகழ் காலம், வியங்கோள் போன்ற வினைகளிலும் இறப்பில் இறப்பு, இறந்த காலங்களில் குறிப்பிட்ட வினைச்சொற்களுடனும் மற்றொன்று பிறவகை வினைச்சொற்களுடனும் வருகின்றன.[1]

தமிழைப் போன்றே வாங்கியங்களில் மூவிடப் பெயர்கள் எழுவாயாகவும் (நான் வந்தேன்) வருகின்றன. வினைகளிலும் விகுதிகள் நின்று எழுவாயினைக் காட்டுவதால் எழுவாய்ச் சொற்கள் வரவேண்டும் என்ற நியதி இல்லை. தமிழில் இவைகளும் பெயர்களாக இருக்க, இதன்கண் மூவிடப் பெயர்களைக் குறிப்பன வெறும் இடைச் சொற்களாகவே உள்ளன. பிற பெயர்களைப் போன்று உடைமை உருபுகளை ஏற்பதோ பெயர்களின் பிற கூறுகளை ஏற்பதோ இல்லை.

| | |
|---|---|
| ஷி | நான் |
| ன்தி | நீ |
| பி | அவன் / அவள் / அது |
| கி | அவன் / அவள் / அது (4-வது இடம்) |
| நகி | நாம் / நாங்கள் இருவர் |
| கொபி | அவர்களிருவர் / அவை இரண்டு |
| நகி | நீங்களிருவர் |
| தாநகி | first person distributive |
| தாநகி | second person distributive |
| தாகொபி | third person distributive |
| தாகி | fourth person distribvtive |

இதன்கண் வினைகளின் வகைக்கேற்ப எழுவாய் ஒட்டுகள் மாறுவதோடு மட்டுமல்லாமல் அவை காட்டும் காலத்திற்கேற்பவும் மாறுவகைக் காணலாம்.

---

1. Set (a) is used in the imperfective, progressive, aerative and optative moods. It is also used in the perfective paradigms when the verb has the *d* or *l* class .... Set (b) is used only in the perfective paradigms of zero and *t* class verbs.

*Ibid.*, p. 79.

### 3. 10. 4 பெனுாஷியன் பெருங்குழு (Penutian Phylum)

இக்குழு மொழிகள் லத்தீன் - அமெரிக்காவிலும், வட அமெரிக்காவிலும் வழங்குகின்றன. லத்தீன் அமெரிக்கப் பகுதிகளில் வழங்கும் மொழிகளை நான்கு மொழிக் குடும்பங்களாகப் பிரிப்பர். இவை தவிர ஹூவெ (Huave) என்ற தனி மொழியும் இதனுள் அடங்கும்.

**மிக்கெ-சோக் குடும்பம் (Mixe Zogue Family)**

இம்மொழிகளைப் பேசுவோராக சுமார் அறுபதாயிரம் மக்கள் உள்ளனர். இதன்கண் மிக்கெ - சோக் (Mixe 32,000 Zogue 20,000), பொபலுகா (Sierra Popoluca 10,000) ஆகிய மொழிகள் உள்ளன. இம்மொழிகள் ஒளக்ஸகா (Oaxca), மெக்சிக்கோ ஆகிய இடங்களில் பேசப்படுகின்றன.

**மயன் குடும்பம் (Mayan Family)**

இம்மொழிகளைப் பேசுவோராக சுமார் இருபது லட்சம் மக்கள் உள்ளனர். இம்மொழியினர் கிழக்கு மெக்சிக்கோவிலும், குத்தமலன் மேட்டு நிலப்பகுதிகளிலும் (Guatemalan Highland) வாழுகின்றனர்.

இப்பிரிவின்கண்ணுள்ள இருபத்து நான்கு மொழிகளில் மாம் (Mam), குச்சே (Quiche), கெக்சி (Kekchi), மாயா (Māya), போன்ற மொழிகள் முக்கியமானவைகளாம். இவற்றைப்பற்றி ஸ்டோல் (Otto Stoll-1884), கிரோபர் (A. L. Kroeber 1939), ஹால்பொன் ஏ. எம் (Halpern A. M 1942), மெக்குவான் (Norman A. Mc Quown-1955), கிரீன்பர்க் (Joseph H. Greenberg 1956) சோல் டாக்ஸ் (Sol Tax 1960), சுவாடாஷ்

(Morris Swadesh 1962) ஆகியோர் எழுதி உள்ளனர். இக்குழு மொழிகளை பத்து பிரிவுகளாகப் பிரிப்பர்.[1]

**சிப்பையா - உரு குடும்பம் (Chipaya - Uru Family)**

இதில் இரு மொழிகள் உள்ளன. இவ்விரு மொழிகளும் பொலிவியாவில் பேசப்படுகின்றன. இவற்றிற்கும் மயன் மொழிகளுக் குமிடையே மிகுந்த தொடர்பு உண்டு என்பர். இம்மொழியினர் அய்மரா (Aymara) மொழியினால் நன்கு பாதிக்கப்பட்டுள்ளனர்.

**தோத்தனக்கன் மொழிகள் (Totonacan)**

இரண்டு மொழிகளைக் கொண்டது இப்பிரிவு. இவற்றுள் தோக்கனக்கோ 90,000 மக்களால் பேசப்படுவது. தெப்பகுவா (Tepehua) 3000 மக்களால் பேசப்படுவது.

---

1. Huasteco (Mexico) 40,000 (1940)
2. 1. Chontal (Mexico) 15,500 (1940)
   2. Chol (Tabasco, Mexico) 22,000 (1940)
   3. Chorti (Honduras) 33,000
3. 1. Tzeltal (Zendal, Mexico) 60,000 (1960)
   2. Tzotzil (Mexico) 35,000 (1947)
   3. Tojolabal (Chiapas, Mexico) 10,000 (1949)
4. Chuh (Western Guatemala) 10,500 (1940)
5. 1. Kanjobal (Western Guatemala)
   2. Jacaltec (Western Guatemala) 12,000
   3. Solomec (Western Guatemala) 40,000
6. Motozintleco (Motozintleca, Chiapas, Mexico) 1000 (1940)
7. 1. Mam (Western Guatemala) 268,000 (1940)
   2. Aguacatce (Western Guatemala) 7,000
   3. Ixil (Central and Western Guatemala) 15,000 (1940)
8. 1. Quiche 450,000 (1940)
   2. Cakchiquel 329,000 (1940)
   3. Tzutufil 24,000 (1940)
   4. Rabinal
9. 1. Kekchi (Guatemala) 250,000
   2. Pokanchi
   3. Pokoman
10. 1. Maya (Ucaran Peninsula) 300,000

**வட அமெரிக்க மொழிகள்**

வட அமெரிக்காவில் பேசப்படும் பெனூஷியன் பெருங் குழுவை ஒன்பது குடும்பங்களாகவும் மூன்று தனிமொழிகளாகவும் பிரிப்பர். சபீர் இம்மொழிகளைக் கலிபோர்னிய பெனூஷியன், ஆரகன் பெனூஷியன், வாஷிங்டன் பெனூஷியன், மெக்சிக்கன் பெனூசியன் என நான்கு பிரிவாக வகைப்படுத்துவார். இப்பிரிவு களில் இருபத்திரண்டிற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன.

**யோகுத்ஸ் மொழிகள் (Yokuts Family)**

இதன்கண் மூன்றுமொழிகள் உள்ளன. கிழக்கு கலிபோர்னி யாவில் வாழும் ஒரு சில மக்களால் பேசப்படுகின்றன இம் மொழிகள்.

**மைது மொழிகள் (Maidu Family)**

இது நான்கு கிளைமொழிகளைக் கொண்டது. கலிபோர்னியா, நவேதா ஆகிய இடங்களில் வாழும் ஒரு சில மக்களால் (170) பேசப்படுகின்றன.

**மிவோக் மொழிகள் (Miwok Family)**

இதில் இரண்டு கிளை மொழிகள் உள்ளன. இவை கலிபோர் னியாவில் பேசப்படுவன. சுமார் 200 மக்கள் இம்மொழிகளைப் பேசுகின்றனர்.

**விந்துன் மொழிகள் (Windun Family)**

இதன்கண் இரண்டு மொழிகள் (Patwin, Wintu/Wintun) உள்ளன. 300 மக்கள் இம்மொழிகளைப்பேசுகின்றனர்.

**சினூக் மொழிகள் (Chinook Family)**

வாஷிங்டன், ஆரகன் ஆகிய இடங்களில் வாழும் ஒரு சில மக்களால் பேசப்படுகின்றன.

**சகாப்தின் மொழிகள் (Sahaptin Family)**

இப்பிரிவில் பதினொரு மொழிகள் உள்ளன. ஆரகன், வாஷிங்டன் ஆகிய மாநிலங்களில் பேசப்படுகின்றன.

இப்பிரிவுகளைத் தவிர யக்கோனன் (Yakonan), கலப்புயன் (Kalapuyan), வெயிலத்புயன் (Wailatpuyan), ஆகிய குடும்பங்களும், தக்கல்மா (Takelma), திசிம்ஷியன் (Tsimshian), கூஸ் (Coos), அல்சியா (Alsea), மொலலே (Molale) ஆகிய தனி மொழிகளும் இப்பெருங்குழுவில் அடங்கும்.

**3.10.4.1 மைது (Maidu)**

வடமேற்குக் கலிபோர்னியாவில், குறிப்பாகச் சாக்ரமண்டோ பள்ளத்தாக்கில் வழங்கும் மொழி இது. முன்னர் இம்மொழி பேசுபவர்களாக சுமார் 10,000 மக்கள் வாழ்ந்தனர் என்றும் இருபதாம் நூற்றாண்டில் இவர்களின் எண்ணிக்கை ஆயிரமாகக் குறைந்துள்ளது என்றும் கூறுவர். இம்மொழியைச் சுற்றிலும் யானு (Yana), விந்துன் (Wintum) முதலிய மொழிகள் வழங்குகின்றன. மைதுவின்கண் வடமேற்கு, வடகிழக்கு, தெற்கு கிளை மொழிகள் உள்ளன. இவை தம்முள் ஒலி. மற்றும் இலக்கணங்களில் ஓரளவு மாறுபட்டவை. இத்தகைய இலக்கண மாறுபாட்டுக்குக் காரணம் இவற்றைச் சுற்றிலும் காணப்படும் பிறமொழிகளின் செல்வாக்குத்தான் என்பர். [1]

---

1. The Maidu language is spoken in three dialects, differing from one another more morphologically than lexically or phonetically, although differences of this sort, of course occur. In general these morphological type of the languages of the other stocks with which the Maidu are in contact; the north western dialect most resembling the Wintun; the north eastern, the Achomawi - Atsugewi; and the southern, the Miwok.

Boas, Vol. I, p. 683.

மைது (வடகிழக்கு) மொழிப் பெயர்கள் தமிழ்ப் பெயர்களைப் போன்று ஆண், பெண் முதலிய பால்களாக வகை செய்யப் படுவதில்லை. [1] இலக்கணப் பால் பகுப்பு இம்மொழியைப் பொறுத்தமட்டில் அவசியமற்றதாகும். ஒரு சில பெயர்களைத் தவிர பிற பெயர்கள் எப்பாலையும் காட்டுவதில்லை. இதே போன்று ஒரு சில பெயர்களே ஒருமை, இருமை, பன்மை பகுப்பினைக் காட்டுகின்றன.

இதன்கண் பன்மையைவிட இருமையே அதிகமாகக் காணப் படுகிறது என்பர். மேலும் ஒரு கூட்டம் அல்லது தொகுதியைக் குறிக்கவெனத் (indefinite plurals) தனி ஒட்டுகள் உள்ளன. பன்மை காட்டும் சொற்கள் அனைத்தும் இருமை ஒட்டினை எடுக்கின்றன. ஆனால் இருமை காட்டும் சொற்கள் எல்லாம் பன்மை ஒட்டினை எடுப்பதில்லை. மூவிடப் பெயர்களைத் தவிர பன்மைச் சொற்களாக ஒருசிலவே உள்ளன. [2] பால் பகுப் பினைப் போன்றே எண்பகுப்பும் இம்மொழியில் வளராத ஒரு இலக்கணக்கூறாகும்.

| | |
|---|---|
| **külok - nono** | ஒரு கூட்டம் பெண்கள் |
| **küle - sem** | பெண்கள் |
| **küle - tso** | இரு பெண்கள் |
| **küle** | பெண் |

---

1. There are in Maidu no genetic classification of nouns, unless we consider the half-dozen cases known, where a few nouns designating human beings take regular dual or plural suffixes.

*Ibid.*, p. 690.

2 Ideas of number are unequally developed in Maidu. In nouns, the exact expression of number seems to have been felt as a minor need; where as, in the case of prominal forms number is clearly and accurately expressed.

*Ibid.*, p. 708.

மூவிடப் பெயர்களில் எண் பகுப்பு நல்ல வளர்ச்சியைப் பெற்றுள்ளது. தன்மை, முன்னிலை, படர்க்கைகளில் ஒருமை இருமை, பன்மை பகுப்பினை நன்கு காணமுடியும்.

| | | |
|---|---|---|
| நீ | (nī) | நான் |
| நிஸாம் | (nīsā'm) | நாங்கள் / நாம் இருவர் |
| நிஸேம் | (nīsē'm) | நாங்கள் / நாம் |
| மீ | (mī) | நீ |
| மிந்த்ஸெம் | (míntsem) | நீங்கள் இருவர் |
| | (mínsöm) | நீங்கள் |
| | (mö'yem) | அவன் / அவள் / அது |
| | (möítsom) | அவர்கள் இருவர் |
| | (mö'sem) | அவர்கள் / அவைகள் |

வினைச்சொற்களிலும் ஒருமைப், பன்மை, இருமை பகுப்பு காணப்படுகின்றன. வடகிழக்கு மொழியில் தன்மையில் மட்டுமே ஒருமை, இருமை, பன்மை எண் ( - s, - as, - es ) வேற்றுமை உள்ளது. முன்னிலை, படர்க்கைகளில் ஒரே ஒட்டு ( – no, - n ) மூன்று எண்களையும் காட்டுகின்றன. ஆனால் வடமேற்கு மொழியில் இவ்வேற்றுமை நன்கு காட்டப்படுகிறது என்பர். தன்மை முன்னிலை, படர்க்கை என்ற மூன்று இடங்களிலும் ஒருமை, இருமை, பன்மை பகுப்புள்ளன. வடகிழக்கு மொழியைச் சுற்றிலும் பேசப்படும் அச்சோமாவி, அத்சுகேவி மொழிகளில் இத்தகைய எண் வேற்றுமை நல்ல வளர்ச்சியடையாமலிருப்பதும் வடமேற்கு மொழியைச் சுற்றிலும் பயிலப்படும் விந்துன் மொழியில் எண் பாகுபாடு நன்கு வளர்ந்திருப்பதும் காணத்தக்கனவாகும்.

பழந்தமிழைப் போல் இதன்கண்ணும் மூன்று சுட்டுகள் உள்ளன. அண்மைச்சுட்டு (unim – இது), இடைச்சுட்டு (amām - உது), சேய்மைச்சுட்டு (anim – அது) எனப் பிரிப்பர்.

அமெரிக்க இந்திய மொழிகள் பெரும்பாலானவற்றில் வேற்றுமை காணப்படுவதில்லை. ஆனால் மைதுவில் வேற்றுமைப் பொருட்கள் பல்வேறு உருபுகளால் காட்டப்படுகின்றன. தமிழைப் போலல்லாமல் எழுவாயைக் குறிக்கவெனவும் தனி உருபு உள்ளது.

| | |
|---|---|
| sü | நாய் |
| süm | நாய் (எழுவாய்) |
| sü | நாயை |
| tsā' - ni | கம்பால் |
| sü - kan | நாயுடன் |
| mín – na | உனக்கு நேராக (illative) |
| höbō'- nan | வீட்டிலிருந்து |
| sü - ki | நாயின் |
| móm - di | தண்ணீரில் |

வினைச்சொற்கள் எழுவாய், காலம் போன்ற பல இலக்கணக் கூறுகளைக் காட்டுகின்றன. நிகழ்காலம், எதிர்காலம், இறந்த காலம் போன்ற காலங்கள் உள்ளன. இவையனைத்தும் ஒட்டுகளால்தான் உணர்த்தப்படுகின்றன. இறந்த காலத்தில்

இறந்த காலம் (-as)

ok - ās - asi நான் பசியாயிருந்தேன்

பழங்காலம் (remote past ( - paai)

ok - paai - kan முன்னால் பசியாயிருந்தேன்

மிகப் பழங்காலம் (mythic past) (-tsoi)

ökoí - tsoi - a அவன் வெளியே போனான்

(எனப்படுகிறது)

என மூன்று வகையான காலவேற்றுமை இருப்பதுடன் பிறர் கூறியதை எடுத்தாளும்போது (direct quotations) கூறுவதற்கெனத் தனியான இறந்தகால இடைநிலையும் உள்ளதாம்.

'செய்' என்ற வினைக்கு முன்னால் கையினால், காலினால், தலையினால் போன்ற சொற்களை இணைத்து

கையினால் செய்தான்

காலினால் செய்தான்

தலையினால் செய்தான்

எனக் கூறுவதை இம்மொழியினர் ஒட்டுகளால் குறிப்பர். எடுத்துக்காட்டாக - ka கையினால் செய்யும் தொழிலையும், - ki என்ற ஒட்டு விரலினால் செய்யும் தொழிலையும் காட்டுவனவாகும்.

நாம் கத்தியால் வெட்டினான், தடியினால் அடித்தான், சுத்தியால் இடித்தான் என்றெல்லாம் கருவிகளைக் குறிப்பிட்டுக் கூறுவதை இம்மொழியினர் 'ஏதோ நீண்ட கருவியின் முனையினால் வெட்டினான்' என்றும் 'நீண்ட கருவியின் அற்றத்தால் அடித்தான்' என்றும் 'ஏதோ வட்டமான கனமான கருவியினால் உதைத்தான்' என்றும் கூறுவதைக் காணலாம்.[1] மேலும் இவையனைத்தும் ஒட்டுகளால்தான் உணர்த்தப்படுகின்றன.

### 3.10.4.2 சினூக் (Chinook)

இது கொலம்பியா ஆற்றின் இரு கரையோரங்களிலும் Cascades முதல் கடற்கரை வரையிலும் வழங்கிய மொழியாகும். இதனைச் சுற்றிலும் சாலிஷன் (Salishan), அதபாஸ்கன், சகாப்டின் (Sahaptin) போன்ற மொழிகள் பேசப்படுகின்றன.

---

1. Boas., Vol. I, p. 704.

*ka-bak-daudom* - கையினால் பலகைக் கூரையை ஆராய்தல்.

*ki'-bak-daudom* - விரலினால் மரப்பட்டையைப் பொறுக்குதல்.

இதை மேல் சினூக், கீழ் சினூக் என இரு பெரும் பிரிவு களாகப் பிரிப்பர். இவற்றுள் மேல் சினூக் பிரிவின்கண் கத்லமெத் (Kathlamet), விஷ்ரம் (Wishram), வஸ்கொ (Wasco) போன்ற கிளை மொழிகளும் கீழ் சினூக்கில் Clatsop, சினூக் (Chinook proper) கிளைகளும் உள்ளன. இவற்றுள் சினூக் கிளைமொழிக் குறிப்புக்களே இங்கு தரப்படுகின்றன.

இதன்கண் முப்பத்தைந்து மெய்கள் உள்ளன. அது போன்றே ஏராளமான மெய்மயக்கங்களும் உள்ளன என்பர்.

பெயர்ச் சொற்கள் ஆண்பால், பெண்பால் – அஃறிணைச் சொற்களாகப் பகுக்கப்படுகின்றன.[1] ஆண்பால் சொற்கள் ஆண்பாலைக் காட்டுவதோடு மட்டுமல்லாமல் (மனிதன், பையன், இளைஞன்) பொதுவாகப் பெரிய விலங்குகளைக் குறிக்கும் சொற்களையும் (கரடி, குதிரை முதலியன) பண்புச் சொற்களையும் (சிறுமை, பெருமை, கூர்மை முதலியன) வினையாலணையும் பெயர்களையும் (உண்ணப்பட்டவை, கொதித்தவை) தன்னகத்தே கொண்டுள்ளன. இது போன்று பெண்பாற் சொற்கள் பெண்ணினத்தைக் காட்டுவதோடு சிறிய விலங்குகள் பறவைகள் முதலியவற்றைக் காட்டும்.

இத்தகைய சொற்கள் ஆண்பாலையும் பெண்பாலையும் காட்ட அஃறிணைச் சொற்களாகக் கருதப்படுவன பொதுச் சுட்டைக் கொண்ட (indefinite article) சொற்களே. இம்மொழிச் சொற்களை ஆண், பெண், அஃறிணை எனப்பிரிப்பினும் தமிழில் காணப்படும் பகுப்பு காணப்படுவதில்லை. 'தலைவன்' என்ற

---

1. Masculine and feminine have assumed the secondlary significance of largeness and smallness. This feature appears most clearly in these cases in which a stem used as a masculine expresses a large object, while as a feminine it expresses a similar smaller object.

Franz Boas, *Hand Book of American Indian Languages*, Part I, p. 603.

சொல் ஆண்பாலாகத் தமிழில் இருக்க இதன்கண் ஆண்பாலாகவோ அஃறிணையாகவோ இருப்பதைக் காணலாம்.[1]

ஒருமை, இருமை, பன்மை என்ற எண்பகுப்பு இம்மொழியில் உள்ளன என்பர். மூவிடப் பெயர்களில் இப்பாகுபாடு நன்கு காணப்படுகிறது. ஆனால் பெயர்ச் சொற்களைப் பொறுத்த மட்டில் இப்பாகுபாடு நல்ல வளர்ச்சியைப் பெற்றுள்ளது என்று கூறுவதற்கில்லை. ஹீப்ரு, அரபிக் போன்ற சொற்களில் இருமை எண்ணைக் காணமுடிவதில்லை. சில குறிப்பிட்ட சொற்கள் இருமை எண் சொற்களாகக் கருதப்படுகின்றன. கண், முகம், ஈட்டி, இருகுழல் துப்பாக்கி போன்ற சொற்களை இப்பிரிவின்கண் அடக்குவர்.

பழந்தமிழைப் போன்றே இதன் கண்ணும் மூன்று சுட்டுகள் உள்ளன. இச்சுட்டுகள் தூரத்தைக் காட்டுவதோடு கண்களுக்குத் தெரிகின்றனவா, இல்லையா என்பதையும் காட்ட வல்லன.[2]

| | | |
|---|---|---|
| ஹிக் | (*x*ĭk) | இவன் (என் பக்கத்தில், தெரிபவன்) |
| ஹிஅவ் | (*x*ĭau) | உவன் (உன் பக்கத்தில், தெரிபவன்) |
| ஹிற் | (*x*ĭ*x*·) | அவன் (அவன் பக்கம், தெரிபவன்) |

---

1. In all these terms the idea of indefiniteness of the individual, corresponding to the indefinite article in English, may be expressed by the neuter; like *ikā'nax* 'the chief', *LKāā'nax* 'a chief'.

*Ibid.*, p. 597.

2. The structure of the demonstrative pronoun of the Chinook proper is analogous to that of the noun. It consists of a model elent, which seems to express visibility and invisibility; the personal pronoun which expresses gender; and the demonstrative element which expresses position near the first, second and third persons.

*Ibid*, p. 617.

| | | |
|---|---|---|
| ஹக் | (x·ak) | அவள் (இவள் பக்கம், தெரிபவன்) |
| கிஅவ் | (qiau) | உவன் (உன் பக்கம், தெரியாதவன்) |
| கிஹ் | (qix·) | அவன் (அவன் பக்கம், தெரியாதவன்) |

முன்னர்க் குறிப்பிட்டதைப்போன்று இம்மொழி மூவிடப் பெயர்கள் ஒருமை, இருமை, பன்மையைக் காட்டுகின்றன. தமிழ்த் தன்மையைப் போல இம்மொழியும் உளப்பாட்டுத் தன்மையையும் கொண்டுள்ளது.

| | | |
|---|---|---|
| நைக | (naika) | நான் |
| மைக | (maika) | நீ |
| இஅஹ்க | (ia'xka) | அவன் |
| அஹ்க | (a'xka) | அவள் |
| லஸ்க | (la'ska) | அது |
| ந்தைக | (ntaika) | நாங்களிருவர் |
| த்ஹைக | (txaika) | நாமிருவர் |
| ம்தைக | (mtaika) | நீங்களிருவர் |
| ச்தஹ்க | (cta'xka) | அவர்களிருவர் |
| ந்த்சைக | (ntcaika) | நாங்கள் |
| ல்ஹைக | (lxaika) | நாம் |
| ம்சைக | (mcaika) | நீங்கள் |
| தஸ்க | (ta'ska) | அவர்கள் |

இம்மொழி வினைச்சொற்கள் எழுவாய், செயப்படு பொருள், நான்காம் வேற்றுமைப் பொருள், காலம், எதிர்மறை போன்ற பல இலக்கணக்கூறுகளை உடையன.[1] எழுவாயினைக் காட்டும்

1. ஹிஹ், கிஹ் போன்றவை தெரிகின்ற, தெரியாத பொருட்களைக் குறிப்பிடுவதோடு 'இப்போது இருக்கின்ற', 'முன்னால் இருந்த' என்ற பொருளையும் தந்து நிற்கும். எனவே இவை காலம் காட்டும் தன்மையனவாகும்.

விகுதிகளாகப் பதின்மூன்று உள்ளன. தமிழில் 'யாரோ வந்தார்கள்' எனக் கூறுவதை இம்மொழியில் கூறும்போது படர்க்கை விகுதியை ஏற்காமல் அதற்கென அமைந்திருக்கும் தனி விகுதியை (-q) இச்சொற்கள் ஏற்று வருகின்றன. மேலும் தன்மை இருமை, தன்மை உளப்பாட்டு இருமை, தன்மைப் பன்மை, தன்மை உளப்பாட்டுப் பன்மை போன்றவற்றைக் குறிக்கவெனத் தனித்தனி விகுதிகள் உள்ளன. பல இடங்களில் தன்வினைச் சொற்களும் பிறவினைச் சொற்களும் ஒரே விகுதியை ஏற்கினும் சில இடங்களில் தனித்தனி விகுதியைக் (படர்க்கை ஆண், படர்க்கை பெண் கொண்டும் வருகின்றனவாம்

நாம் பல சொற்களால் கூறுகின்ற கருத்துக்களை இம் மொழியினர் ஒரே சொல்லால் கூறிவிடுவர்.

tc - t - a - l - ō - t - a என்ற சொல் 'அவன் அவற்றை அவர்கட்குக் கொடுத்தான்' எனப் பொருள்படும். இச்சொல்லி லுள்ள சொற்கூறுகள் முறையே அவன், அவற்றை, அவள், கு, சொல்லுவோனின்றுள்ள திசை, (o) கொடு (ōt, o + ot > ot), எதிர்காலம் என்பவற்றைக் காட்டும். இத்தகைய சொற்கள் எஸ்கிமோ மொழிச்சொற்களுடன் வைத்து ஒப்பு நோக்கத் தக்கன.

இம்மொழியில் இலக்கணக்கூறுகள் முன்னொட்டுகளாலும் பின்னொட்டுகளாலும் காட்டப்படுகின்றன. ஒரு சொல்லில் ஆறுக்கு மேற்பட்ட முன்னொட்டுகள் வருவதைக் காணலாம். தமிழில் பெயர்ச்சொல்லும் பின்னுருபும் இணைந்து நின்று காட்டும் செய்திகளை ஒரே முன்னொட்டோ பின்னொட்டோ சேர்த்துக் கூறிவிட முடியும்.

---

**Demonstrative pronouns form a class by themselves. They contain the personal pronouns of the third person, but also purely demonstrative elements which indicate position in relation to the three persons, and, in Lower Chinook, present and past tense, or visibility and invisibility.**

**Boas, *Ibid.*, p. 574.**

- x̣ - தரைமேல்

ē - x̣ - ō - c அவன் தரைமேல் நிற்கிறான்

சினூக் மொழியின்கண் இறந்தகாலம், எதிர்காலம், இறப்பில் நிகழ்வு (perfect) என்ற இரு காலங்களே உள்ளன. நிகழ்காலம் 'செய்து வருகிறான்' எனத் தமிழில் காணும் வழக்கத் தன்மையால் காட்டப்படும். ஆனால் மேல் சினூக் மொழிகளில் ஒன்றான விஷ்ரத்தில் பல்வேறு காலங்கள் உள்ளன.[1]

1. ga - , gal - என்பன ஒரு வருடத்துக்கு முன்னால் நடந்த செய்திகளைக் குறிக்கின்றன.

கயுய (ga - y - uya) அவன் போனான்

கலுய (gal - a - uya > galuya) அவள் போனாள்

2. ni - , nig- என்பன ஒரு வருடத்துக்குப் பின்னால் ஆனால் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் நடந்த செய்திகளைக் குறிக்கும்.

நியுய அவன் போனான்

நிகுய அவள் போனாள்.

3. na - , nal - ஒரு நாளுக்கு முன்னால் ஆனால் இரண்டு மூன்று நாட்களுக்குப் பின்னால் நடந்தவை.

நயுய அவன் போனான் (நேற்று)

நலுய அவள் போனாள் (நேற்று)

---

1. The work which had been done on Lower Chinook disclosed paucity of tenses, that is, on the whole quite in accordance with the general morphologic character of many American Linguistic Stocks. In Wishram, however, I found that it was necessary to distinguish carefully six tenses.....

Edward Sapir, "Priliminary Report on the Language and Mythology of the Upper Chinook", *American Anthropologist*, Vol. IX, p. 538-39.

4. i - , ig - இன்று நடந்தவை. சொல்லும் நேரத்துக்கு முன்னால் நடந்து முடிந்தவை.

5. - t இப்போது நடப்பவை; ஆனால் சிறிது நேரத்தில் முடிந்து விடக்கூடியவை.

6. - a , - al எதிர்காலம்

அமோக்ல (a - m - ō' - kl - a) நீ அவளைச் சுமப்பாய்

**3. 10. 4. 3 திசிம்ஷியன் (Tsimshian)**

பிரிட்டிஷ் கொலம்பியாவின் வட கரையோரங்களிலும் நாஸ், ஸ்கீனு நதிக்கரைகளிலும் பேசப்படும் மொழி இது. இம்மொழியின்கண் திசிம்ஷியன், நிசாக் (நாஸ்), கியிக்ஷன் என்ற மூன்று கிளைமொழிகள் உள்ளன என்பர்.

திசிம்ஷியன் கிளைமொழியில் ஏராளமான இடைச்சொற்கள் உள்ளனவாம். பல்வேறு இலக்கணக்கூறுகள் இடைச்சொற்களால்தான் காட்டப்படுகின்றன. பல மொழிகளில் ஒட்டுகளால் காட்டப்படும் காலங்களும் இதன்கண் இடைச் சொல்லினாலும் காட்டப்படுவதைக் காணலாம்.[1]

இம்மொழிப் பெயர்ச் சொற்கள் எண்ணுப் பெயர்களின் அடிப்படையிலும் வினைச்சொற்களின் அடிப்படையிலும் பல்வேறு வகைகளாகப் பகுக்கப்படுகின்றன.[2] பெயர்ச் சொற்

1. The Tsimshian language possesses a very large number of particles which qualify the verb or noun that follows them, each particle modifying the whole following complex, which consists of particles and a verbal or nominal stem.

Boas, Vol. I, p. 298

2. Nouns are classified from two points of view, according to form, and as special human individuals and common nouns. The selection of verbal stems and of numerals accompanying the noun is determined by a classification according to form,

களில் எந்தவிதமான வேற்றுமையையும் காணமுடியாததாயினும் அவற்றைக் குறிக்கும் எண்ணுப் பெயர்களில் பல வேற்றுமை களைக் காணமுடியும். தமிழில் 'ஒன்று' எனக் கூறும்போது அஃறிணைப் பொருள் எல்லாவற்றையும் குறிப்பதைக் காணலாம். இதே போன்று ஒருவன் ஒருத்தி, இருவர், மூவர் என உயர் திணைப் பெயர்களைக் குறிக்கும் சொற்களும் உள்ளன. ஆனல் இம்மொழியிலோ 'ஒன்று' என்ற பொருளைத் தரும் பல்வேறு சொற்கள் உள்ளன. குறிக்கப்படும் பொருள் வட்டமான பொருளாயின் அதற்கெனத் தனிச்சொல்லும் (கேஎல்) நீளமான பொருளாயின் பிறிதொரு சொல்லும் (கவுத்ஸ்கன்) அளவுப் பொருளாயின் மற்ருெரு சொல்லும் (கெலொன்) படகு ஆயின் வேருெரு சொல்லும் (கமாத்) தட்டையான பொருளாயின் இன்னெரு சொல்லும் (காக்) மனிதர்களாயின் பிறிதொரு சொல்லும் (கல்), சாதாரணமாக 'ஒன்று' 'இரண்டு' என எண்ணுவதாயின் 'காக, என்ற சொல்லும் பயன்படுவதைக் காணலாம்.[1]

இதன்கண் பல்வேறு முறைகளில் பன்மை எண் உணர்த் தப்படுகிறது. சொற்களையோ, சொற்களின் அசைகளையோ இரட்டிப்பதாலும் சொற்களில் காணப்படும் உயிரினை மாற்றுவ

---

while there is no grammatical differentiation in the noun itself. The classess of the numeral are formed partly by independent stems, but largely by suffixes or by contraction of the numeral and a classifying noun. In syntactic construction a sharp division is made between special human individuals—including personal demonstrative pronouns, some terms of relationship and proper names and — other nouns.

*Ibid.*, p. 297.

1. The Tsimshian dialects use various sets of numerals for various classes of objects. In Tsimshian, one of these classes is used for simple counting. The others designante flat, round, long objects : human beings; canoes; measures.

*Ibid.*, p. 396.

தாலும் சில முன்னொட்டுகளை ஒருமை காட்டும் சொல்லுடன் இணைப்பதாலும் சில பின்னொட்டுகளை இணைப்பதாலும் பன்மை காட்டப்படுகிறது. இவ்வாறு பல வழிகளில் காட்டப்படுதலை இம்மொழியின் ஒரு விசேடப் பண்பாகக் கருதலாம்.

| இரட்டிப்பு | பன்மை | |
|---|---|---|
| கின் | கிகின் | உணவு கொடு |
| மால் | மமால் | படகு |
| ஹ்வ | ஹா·வா < ஹ்வஹ்வ | பெயர் |

உயிர் மாற்றம்

| | | |
|---|---|---|
| கிப | கீப | காத்திரு |
| ஹனக் | ஹானக் | பெண் |

ஓரே சொல்

| | | |
|---|---|---|
| வன் | வன் | பல் |
| பன் | பன் | வயறு |
| இஅக் | இஅக் | (இடி) இடி |
| அனக் | அனக் | சம்மதி |

முன்னொட்டு

| | | |
|---|---|---|
| கத் | ககத் | இருதயம் |
| அஞென் | கஞென் | கை |

முன்னொட்டு + பின்னொட்டு

| | | |
|---|---|---|
| வக் | கவக்கு | தம்பி |
| நெபெப் | கநெபெப்கு | மாமா |

பின்னொட்டு

| | | |
|---|---|---|
| வக் | வக்கு | தம்பி |

வினைச்சொற்களில் வேர்ச்சொற்களும் பன்மை காட்டுவது தமிழில் காணப்படாத ஒரு பண்பாகும்.

| | | |
|---|---|---|
| அக்ஸ | லஅக்ஸ | குடி |
| வை | லுவை | துடுப்பு இடு |

மேற்கூறிய முறைகளையன்றி இன்னும் பல்வேறு ஒழுங்கில்லாத முறைகளிலும் பன்மை உணர்த்தப்படுவதைக் காணலாம். ஒரே அடிச்சொல்லில் முன்னொட்டுகளை இணைத்தும் வேறு சொற்களை உபயோகித்தும் கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| செமகித் | செம்கிகத் | தலைவன் |
| த | வன் | இரு |

போன்ற பல சொற்களைக் காணலாம்.

திசிம்ஷியன் வினைச்சொற்களுடன் வரும் மூவிடப் பெயர்களை எழுவாய்ப் பெயர்கள் செயப்படுபொருட்பெயர்கள் (விடுதிகள்) என இருவகையாகப் பிரிக்கலாம். இவற்றுள் எழுவாய்ப் பெயர்கள் செயப்படுபொருளாகவும் வருகின்றன. தமிழில் பிறவினைச் சொல்லாயினும் (செய்தேன்) தன்வினைச் சொல்லாயினும் (வந்தேன்) எழுவாய் ஒரே விகுதியாக இருக்கக் காண்கிறோம்.[1] ஆனல் இம்மொழியில் தன்வினைச் சொல்லில், பிற

1. The personal pronouns have two distinctive forms, which, according to their probable original significance, may be designated as transitive and intransitive, or, better, subjective and objective. The former express, at least partly, the subject of the transitive verb, the latter, as object, and at the same time the subject of the intransitive verb. Their use is, therefore, to a certain extenl analogues to that of the subjective and objective pronouns in languages like Siouan, Iroquis, Haida, Tlingit and others.

*Ibid.*, pp. 383-384.

வினைச் சொல்லில் செயப்படுபொருளைத்தரும் விகுதிகளே எழுவாயாக நிற்கின்றன.

| | | |
|---|---|---|
| ம் வாயினு | நீ என்னைக் கண்டாய் | (ம் = நீ, உ = என்னை) |
| ம் தெம் தலக்து | நீ என்னைக் கொல்லுவாய் | (தெம் = எதிர்காலம்) |
| ன் தலக்தென் | நான் உன்னைக் கொன்றேன் | (ன் = நான்; ன் = உன்னை) |
| சீப்கெனு | நான் நலமின்றியிருக்கிறேன் | (உ = நான்) |

– உ என்ற ஒட்டு காண், கொல் என்ற பிறவினைச் சொற்களுடன் வரும்போது 'என்னை' எனப் பொருள் தந்து செயப்படு பொருளாகவும் தன்வினைச் சொல்லுடன் வரும்போது 'நான்' எனப் பொருள் தந்து எழுவாயாகவும் நிற்பது காண்க.

அது வேற்றுமைப் பொருளில் தற்கிழமை, பிறிதின் கிழமையினையும் உயிர்த்திணை வேற்றுமையினையும் காணலாம். உடைமைப்பொருள் உயிர்த்திணையாயின் அதற்கெனத் தனி உருபும் உயிரல் திணையாயின் அதற்கெனத் தனி உருபும் இருக்கக் காண்கிறோம்.[1] தற்கிழமையில் உறுப்புக்களைக் குறிக்கும் சொற்களும் உறவுப்பெயர்களும் அடங்கும்.

| | |
|---|---|
| பன் | வயறு |
| பறு | என் வயறு |
| லெம்க்தி | அக்காள் / தங்கை |
| லெம்க்தியு | என் அக்காள் / தங்கை |

1. In the Tsimshian dialect three forms of possession may be distinguished, while the Nass dialect has only two. In the former dialect, separable possession is always introduced by the prefix nA-, whicu is absent in the Nass dialect. Both dialects distinguish possession of inanimate and of animate objects.

*Ibid.*, p. 392.

பிறிதின்கிழமை

| | |
|---|---|
| வால்ப் | வீடு |
| நெவால்பு | என் வீடு (உயிரல் திணை) |
| ஒல் | கரடி |
| நெ ஒல்த்கு | என் கரடி |
| அப் | தேனீ |
| நெ அப் சுகு | என் தேனீ |

## 3. 10. 5 ஹோக்கன் சியோவன் பெருங்குழு (Hokan Siouan Phylum)

இம்மொழிகள் வட அமெரிக்காவிலும் லத்தீன் அமெரிக்கப் பகுதிகளிலும் வழங்குகின்றன. லத்தீன் அமெரிக்காவில் மெக்சிக்கோ, நிக்கரகுவா, கொந்துராஸ், கொலம்பியா, எல்சல் வேடார் ஆகிய இடங்களிலும் வட அமெரிக்காவில் கலிபோர் னியா, அரிஸோனு, நியூயார்க், ஒக்குல ஹோமா, வெர்ஜீனியா ஆகிய இடங்களிலும் கானடா நாட்டில் ஆண்டாரியோ போன்ற இடங்களிலும் பேசப்படுகின்றன.

**வட அமெரிக்க மொழிகள்**

இப்பிரிவின்கண் எட்டு மொழிக் குடும்பங்களும் (Pomo Yuki, Shastan, Yuman, Iroquoian, Siouan, Caddoan, Muskogean) எட்டு தனி மொழிகளும் (Washo (800), Karok (700), Keres (7000), Yuchi (100), Tunica (76), Chiti macha (120), Tonkawa (57), Natchez (ஒரு சிலர்) உள்ளன. இத்தனிமொழிகள் கலிபோர்னியா, நவேதா, நியூ மெக் சிக்கோ போன்ற இடங்களில் வழங்குகின்றன.

**போமோ மொழிகள்**

இதன்கண் நான்கு மொழிகள் உள்ளன. இம்மொழிகள் அனைத்தும் கலிபோர்னியாவில் வாழும் சுமார் 800 மக்களால் பேசப்படுகின்றன.

**யுக்கி மொழிகள்**

இதன்கண் வாப்போ (Wappo, 10), யுக்கி (60) ஆகிய இரு மொழிகள் உள்ளன. இவை சான்பிரான்சிஸ்கோ குடாக் கரையில் வழங்குகின்றன.

**ஷஸ்த்தன் மொழிகள்**

கலிபோர்னியாவில் கலமத் ஆற்றின் கரையோரங்களில் பேசப்படுகின்ற இப்பிரிவின்கண் மூன்று மொழிகள் (Shasta, 120; Achumawi, 270; Atsugewi, 4) உள்ளன.

**யூமன் மொழிகள்**

இது நான்கு மொழிகளைக் கொண்டது. அரிஸோனா, கலிபோர்னியா, மெக்சிக்கோ ஆகிய இடங்களில் வாழும் சுமார் 5000 மக்கள் இம்மொழிகளைப் பேசுகின்றனர். இம்மொழிகளில் பல்வேறு கிளை மொழிகளும் உள்ளன.

**இராக்கியஸ் மொழிகள்**

இப்பிரிவில் ஆறு மொழிகள் உள்ளன. ஆண்டாரியோ, நியூயார்க், ஒக்குலஹோமா, கியூபெக், வெர்ஜீனியா, கரோலினா ஆகிய இடங்களில் எல்லாம் வழங்குகின்றன. சுமார் 60,000 மக்கள் இம்மொழிகளைப் பேசுகின்றனர்.

**1. செனக்கா (Seneca)**

இதன்கண் செனக்கா (Seneca, 2000 — 3000), கயூகா (Cayuga, 1000), ஒனந்தகா (Onantaga, 1000) ஆகிய கிளை மொழிகள் உள்ளன.

**2. மோகாக் *(Mohawk)***

இது ஆண்டாரியோ, கியூபக், நியூயார்க் ஆகிய இடங்களில் வழங்குகின்றது. சுமார் 7000 மக்கள் இம்மொழி பேசுகின்றனர்.

**3. ஓனெய்டா *(Oneida)***

இது ஆண்டாரியோ, கியூபக் ஆகிய இடங்களில் வழங்குகின்றது. இம்மொழி பேசுவோராக சுமார் 4000 மக்கள் உள்ளனர்.

4. **வியன்டாத் (Vyandot)**

ஒக்குலஹோமா, கானடா ஆகிய இடங்களில் வாழும் சுமார் 1000 மக்களால் இம்மொழி பேசப்படுகிறது.

5. **தஸ்க்கரோரா (Tuscarora)**

வெர்ஜீனியா, நியூயார்க் ஆகிய இடங்களில் வாழும் சுமார் 400 மக்களால் இம்மொழி பேசப்படுகிறது.

6. **செரோகி (Cherokee)**

இது கரோலின பகுதியில் வாழும் சுமார் 51,000 மக்களால் பேசப்படுகிறது.

**சியோவன் மொழிகள்**

இப்பிரிவில் எட்டு மொழிகள் உள்ளன. இம்மொழிகள் மாண்டானே, டக்கோட்டா, நெப்ராஸ்கா, விஸ்கான்சின், அயோவா ஆகிய இடங்களில் பேசப்படுகின்றன.

1. கிரோ (Crow, 3000 (Montana))
2. ஹிடஸ்தா (Hidasta, 1000 (Dakota))
3. வின்னெப்கோ (Winnebago, 3000 (Nebraska, Wisconsin))
4. மாண்டன் (Mandan, 300 (North Dakota))
5. சிவரெ (Chiwere, 700 (Iowa, Oklahoma))
6. ஒமகா (Omaha, 3000 (Nebraska))
7. டக்கோட்டா (Dakota, 50,000 (Nebraska))
8. கத்தௌபா (Catawba, 400 (South Carolina) )

**கத்தோவன் மொழிகள்**

இப்பிரிவில் கித்சை (Kitsai), கத்தோ (Caddo, 1200), விச்சிட்டா (Wichita, 600), அரிக்கரா (Arikara, 700),

பானே (Pawnee, 1200) ஆகிய மொழிகள் அடங்கும். இவற்றுள் கித்சை இன்று வழக்கில் இல்லை.

**மஸ்க்கோகியன் மொழிகள்**

ஒக்கலஹோமா, தெற்கு மிசிசிப்பி, ஜியார்ஜியா, அலபாமா, லூசியானு, பிளாரிடா ஆகிய இடங்களில் இப்பிரிவு மொழிகள் பேசப்படுகின்றன. இப்பிரிவின்கண்

| | |
|---|---|
| சோக்டா | (Choctaw 20,000) |
| சிக்காசா | (Chickasaw, 4000) |
| கோசதி | (Kosati, 400) |
| மிக்காசுகி | (Mikasuki, 700) |
| முஸ்கோகி | (Muskogee, 10,000) |
| செமினேல் | (Seminole, 10,000) |

ஆகிய ஆறு மொழிகள் உள்ளன.

**லத்தீன் அமெரிக்க மொழிகள்**

ஹோகன் பெருங்குழுவைச் சார்ந்த மொழிகள் லத்தீன் அமெரிக்காவிலும் பேசப்படுகின்றன என்று முன்னர்க் குறிப்பிட்டோம். இம்மொழிகள் மெக்சிக்கோ, எல் சல்வேதார், நிக்காருவா, கொந்துராஸ், கொலம்பியா ஆகிய நாடுகளில் வழங்குகின்றன. 40 மொழிகள் இப்பிரிவில் உள்ளன. இவற்றை இரண்டு பெருங்குடும்பங்களாகப் பிரிப்பர். செரி (Seri) மொழியைத் தனி மொழியாகக் கருதுவர். சிலர் செரி மொழியை யூமன் மொழிக் குடும்பத்தோடு அடக்குவர்.

**3.10.5.1 யுச்சி (yuchi)**

ஜியார்ஜியாவில் சாவன்ஞ ஆற்றங்கரையிலும் ஒக்கலஹோமாவின் நடுப்பகுதிகளுள்ளும் வழங்கும் மொழி இது.

ஒக்கல ஹோமாவில் இன்று இம்மொழி பேசுவோராக 10 – 100 மக்கள் உள்ளனர் என்பர்.[1] இது ஒரு தனிமொழியாகும். வோகலின் என்பார் இதனை ஹோகன் - சியாவோன் மொழிக் குழுவில் அடக்குவார்.[2]

இதன்கண் 7 சாதாரண உயிர்களும் 6 மூக்கொலி உயிர்களும் 42 மெய்களும் உள்ளன. முன்னொட்டு, இரட்டிப்பு, மூக்கொலியாக்குதல் (nasalization) என்ற வழிகளைப் பயன்படுத்திப் பல்வேறு இலக்கணக்கூறுகள் காட்டப்படுகின்றன.

பெயர்ச் சொற்கள் அவைகள் ஏற்கும் முன்னொட்டினையடிப்படையாகக்கொண்டு (சிறப்புச்சுட்டை உணர்த்துவன) உயிர்த்திணை என்றும் உயிரல் திணை (nanimate) என்றும் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படும். உயிர்த்திணைச் சொற்களை மீண்டும் யுச்சி மக்களைக் குறிக்கும் சொற்கள் பிற மக்களையும் உயிர்ப் பொருட்களையும் குறிக்கும் சொற்கள் எனப்பிரிக்கலாம். உயிரல் திணைச் சொற்கள் மீண்டும் வட்டமான பொருட்களைக் குறிப்பன, நேராக நிற்கும் பொருட்களைக் குறிப்பன என மூன்று வகைகளாகப் பகுக்கப்படுகின்றன.

யுச்சி மனிதனைக் குறிக்கவேண்டின் மனிதன் என்ற சொல்லுடன் (-enõ') என்ற ஒட்டினை இணைத்தும் பிற மனிதனைக்

---

1. CF and FM Voegelin, *Anthropological Linguistics*, Vol. 6, No. 6, p. 107.

2. *Ibid*., p. 105.

Nouns are cla sifi:d by means of article suffixes as animate and inanimate. Within the former group a general dividing line is drawn between members of the tribe and all the other animate being the former again being distinguished according to kinship and sex. Within the second, the inanimate group the distinction between round, upright and horizondal dimensions of objects serves as the classifying principle.

Oünter Wagner, *H. A. I L*., Vol. 3, p. 310.




குறிப்பின் –வனொன் ( - wonõ' ) என்ற ஒட்டினை இணைத்தும் கூறுகின்றனர். மேலும் யுச்சி இனத்தாரிடையே பல்வேறு உறவுப் பெயர்களைக் கூறும்போது இன்னும் பல வேறு ஒட்டுகளை இணைத்தும் பேசுவர். இதே போன்று இன்னும் பல்வேறு ஒட்டுகளை இணைப்பர் இம்மக்கள். உயிருள்ள பொருட்களைக்குறிக்கும் போதும் – வெனொன் என்ற ஒட்டினையே இணைக்கின்றனர். இதனால்தான் யுச்சி இனத்தாரைக் குறிக்கும் சொற்கள்ஒரு பிரிவாகவும் பிற இனத்தாரையும் உயிர்ப்பொருட்களையும் குறிக்கும் சொற்கள் இன்னொரு பிரிவாகவும் கருதப்படுகின்றன.

| | |
|---|---|
| கொந்த (க்) - எனொன் | யுச்சி இனத்தான் |
| கொந்த் (க்) - வனொன் | வெள்ளையன் பிற இந்தியன் நீக்ரோ முதலியோர் |
| தவவனொன் | ஓநாய் |

முதலியன இத்தன்மையினைக் காட்டும்.

உயிரல் திணைப் பொருட்கள் மூன்று வகையாகப் பகுக்கப் படுகின்றன.[1]

1. மரம், உயர்ந்த மலைகள், உயர்ந்த வீடுகள் போன்று நேராக நிற்கும் பொருட்கள்.
2. தளமட்டமான பொருட்கள் (horizontal)
3. வட்டமான பொருட்கள்

முதல் பிரிவைச் சார்ந்த சொற்கள் – ப (- fa) என்ற ஒட்டினையும் இரண்டாவது பிரிவைச்சார்ந்தன – கெ (?ɛ) என்ற ஒட்டினையும் மூன்றுவது உள்ளவை -த்ஜி (-dji) ஒட்டினையும் எடுத்து இவ்வேற்றுமையினைக் காட்டுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| யக்ப | ( ya?ta ) | மரம் | (the tree) |
| யுக்ப | ( yu?fa ) | வீடு | (the house) |
| யகெ | ( ya?ɛ' ) | கட்டை | (the log) |
| திட்ஜி | ( ti?dji ) | பாறை | (the rock) |

நுண்பொருட்களைக் காட்டும் சொற்களும் திட்டவட்டமான வடிவங்களில்லாத பொருட்களைக்காட்டும் சொற்களும் மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் ஏதாவது ஒன்றினுள் அடங்கும்.

---

1. The inanimate objects are differentiated into three parallel groups of equal importance.

(i) Object with a prevailingly vertical dimension (such as standing poles, trees, high mountains tall houses etc.)

(ii) Objects with a prevailingly horizondal dimension (such as lakes, streams, roads, fields, logs lying on the ground, etc.)

(iii) Objects of a roundish shape or, generally speaking, of a dimension that is indifferent to the ideas of vertical and horizondal (such as rocks, bushy trees, chairs etc.)

*Ibid.*, p. 321.

தமிழைப் போன்று இதன்கண்ணும் ஒருமை, பன்மை எண்கள் உள்ளன. உயிரல் திணைச் சொற்களுடன் –ஹ (-ha) ஒட்டிணைந்து பன்மையினைத் தர உயிர்த்திணையில் மூன்று வித ஒட்டுகளைக் காணலாம். யுச்சி இனத்தாரின் பன்மையினைக் குறிக்கும் ஒட்டுகளாக இரண்டுவகை காணப்படுகின்றன. ஒன்று ஆண்களின் பேச்சிலும் ( - henõ ) மற்றொன்று பெண்களின் பேச்சிலும் ( - o?nõ, - i?õ ) காணப்படுவது ஒரு விசேடப்பண்பாகும்.[1] பிற இனத்தாரின் பன்மையைக் குறிக்கவெனத் தனியான பன்மை விகுதியும் உள்ளது. உறவுப்பெயர்கள் பல இரட்டிப்பதாலும் பன்மை உணர்த்தப்படுகிறது.

அண்மை, சேய்மைச் சுட்டுகளே இம்மொழியில் உள்ளன. தமிழைப்போல இவை பெயராக நிற்பதில்லை போலும்! இவை பெயரடைபாக வரும்போது இவற்றின் பின் வருகின்ற பெயர்கட்கேற்ப மாறுவதைக் காணலாம்.

| | |
|---|---|
| நெப யப | இந்த மரம் |
| நெத்ஜி தித்ஜி | இந்தப்பாறை |
| லெப யப | அந்தமரம் |
| நெக யக | இந்தமரங்கள் |
| லெக யக | அந்தமரங்கள் |
| நெஞென் கொந்த் (க்) எஞென் | இந்த மனிதன் (யுச்சி) |

என்பன இத்தன்மையைக் காட்டும்.

யுச்சி மொழியின் மற்றொரு விசேடப்பண்பு இதன்கண் காணப்படும் எழுவாய் காட்டும் விதிகளாகும். பல்வேறு விதிகள் இருப்பது மட்டுமன்றி படர்க்கையில் ஆண்கள் உபயோகிப்பதற்கெனவும் பெண்கள் உபயோகிப்பதற்கெனவும் இருவரும் உபயோகிக்கவெனவும் பல்வேறு விகுதிகள் உள்ளன. எடுத்துக்

1. *Ibid*, p. 322.

காட்டாக வினையில் யுச்சு இனப்பெண் எழுவாயாகவரின் செ -, சியொ, செதிக் (se -, sio -, sedi?) என்ற விகுதிகள் ஆண்களாலும் பெண்களாலும் பயன்படுத்தப்படுகின்றன. எனினும் ஆண்கள் உபயோகிக்கின்ற இவ்வெழுவாய் அவர்களின் தங்கை, மகள், மருமகள், பேத்தி என்போரையே குறிக்கும். பெண்கள் பயன் படுத்தின் அவர்களைவிட வயதில் குறைந்த எல்லோரையுமே குறிக்கும். உறவினராக இருக்கவேண்டும் என்ற கட்டாயமில்லை. [1]

ஸ் (க்) கெ, – ஸ் (க்) கிபொ, – ஸ் (க்) கெதி (se? -, s?io, -s?edi) என்பன பெண்களால் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. இவை எழுவாயாக வரும்போது பேசுபவரின் தம்பி, மகள், மருமகள், பேரன் முதலியோரையே குறிக்கும்.[2]

எ -, எயொன், என்தி (e -, eyõ, - ɛdı') என்பன ஆண்களாலும் பெண்களாலும் பயன்படுத்தப்படுகின்றன இவை எழுவாயாக வரும்போது தாய், அத்தை அல்லது சித்தி, பாட்டி போன்ற உறவினர்களையே குறிக்கும்.

ஒ –, ஒதி (o-, odi) என்பன பெண்களால் பயன்படுத்தப்படும் விகுதிகளாகும். இவை எழுவாயாக வரும்போது ஒருமையில் உறவில்லாத ஒரு யுச்சி ஆணையோ பன்மையில் வயதில் குறைந்த யுச்சி ஆணையோ அல்லது பெண்ணையோ குறிக்கும். [3]

---

1. If used by men they are restricted to a female relative of the same or a descending generation as the speaker (sister, daughter, niece, grand-daughter).... If used by woman they refer to any female of the same or a descending generation whether related or not.

*Ibid*., p. 326.

2. *Ibid*., p. 326.

3. o–, odi', are used by women only and refer either to a third person singular male Yuchi not related to the speaker or, in the plural, to any third persons Yuchi that belong to the

இதே போன்று பெண்களால் மட்டும் உபயோகிக்கப்படும் மற்றொருவிகுதி இ- ( i- ). இது ஒ ஆகும். இது ஒருமையில் தந்தை, மாமா, தாத்தா, கணவன் என்ற உறவினர்களையும் பன்மையில், வயதுக்கு மூத்த எந்த ஆண்களையும் பெண்களையும் குறிக்கும்.[1]

வெ-, யொன்-, வெதி (we-, -yõ, -wedi') என்பவை யுச்சி இனத்தாரைத் தவிர பிற இன ஆண்களையும் பெண்களையும் குறிக்கும் விகுதிகளாம். இவை இருபாலாராலும் பயன்படுத்தப் படுகின்றன.[2]

இத்தகைய பல்வேறு வேறுபாடுகள் முதியோர்களின் பேச்சில் காணப்படினும் இளைஞர்களிடம் சில மாற்றங்கள் உள்ளனவாம். பல விகுதிகள் இவர்களால் பின்பற்றப்படவில்லை என்பர். வயதுவந்த ஒரு தாயின் பேச்சில் காணப்படும் ஒழுங்கு மகளிடம் காணப்படவில்லையாம். இன்றைய நிலை எவ்வாறாயினும் இத்தகைய வேறுபாடுகள் மொழியியல் உலகிற்கு நல்லதொரு விருந்தாகவே அமைந்துள்ளன.

---

same or a descending generation whether related or not, male or female ( ...... )

*Ibid.*, p. 326.

1. i-(which occurs in the first series only) is used by women only and refers to a third person singular male Yuchi who belongs to go an ascending generation (father, uncle, grandfather, husband and not related to old men) or any third persons Yuchi who belong to an ascending generation whether related or not, male or female. It is a term of respect.

*Ibid*, p 326.

2. we-, yõ-, wedi', are used both by men and women and refer to any third person singular or plural outside of the Yuchi tribe regardless, of age. sex race are species. They comprise therefore, all animate beings other than Yuchi Indians.

*Ibid.*, pp. 326-327.

இம்மொழியினர் இன்னும் பல்வேறு விகுதிகளைப் பயன் படுத்துகின்றனர். "நான். வேட்டையாடுகிறேன்" எனக்கூற வேண்டின் ஏதாவது ஒரு குறிப்பிட்ட விலங்கினை உள்ளத்தில் வைத்து வேட்டையாடின் அதைக்குறிக்க ஒரு விகுதி ( di- ), அவ்வாறு இல்லையாயின் மற்றொரு விகுதி ( do- ), செயப்படு பொருள் காட்டும் ஒட்டுடன் வரும்போது ஒரு விகுதி ( tsɛ- ), 'கு' வேற்றுமைப்பொருள் காட்டும் ஒட்டுடன் வரும்போது மற்றொரு விகுதி ( tso- ), தற்சுட்டுப் பொருளுடன் ( reflexive ), வரின் வேறொரு விகுதி ( tsɛdo ) எனப்பல விகுதிகளைக் காணலாம்.

| | | | |
|---|---|---|---|
| di- | தியதெ | ( diadé ) | வேட்டையாடுகிறேன் |
| do- | தொஅதெ | ( doad?ɛ' ) | வேட்டையாடுகிறேன் |
| di- | தி தித்னெ | ( d ditnɛ') | நான் பாக்கிறேன் |
| or tsɛdi / tsɛdó | த்ஸெதொசி | (tsɛ-do-ci) | எனக்காக இரங்குகிறேன் |

இவை தவிர பல ஒழுங்கற்ற விகுதிகளும் உள்ளன. எழுவாய் காட்டும் விகுதிகளாக இம்மொழியில் 105 காட்டப்பட்டுள்ளன.[1]

இது போன்றே நாற்பத்து நாலு உடைமை உருபுகள் காணப்படுகின்றன. இவ்வுருபுகள் உடைமைப்பொருளுடன் இணைக்கப்படுகின்றன.[2]

புச்சிமொழியில் காலம் நன்கு வளரவில்லை என்பர். எந்த விதமான ஒட்டுமின்றியே நிகழ்காலம் காட்டப்பட, பிற காலங்களைக்காட்டவெனச் சில ஒட்டுகள் உள்ளன. இறந்த காலத்தில்

1. *Ibid.*, pp 372-373.

2. [ditó] திதொ என்கை
[netó] நெதொ என் தலை
[setó] செதொ தம்பியின் தலை

முடிந்து விட்ட செய்திகளைக் குறிப்பன (complete past), முடியாத செய்திகளைக் குறிப்பன என இரு வகைகள் உள்ளன. இவை இரண்டும் முறையே –த்ஜின்ப்வ (djin fwa), த்ஜின் (-djin) என்ற ஒட்டுகளால் உணர்த்தப்படுகின்றன. முன்னதைத் தமிழில் இறப்பில் இறப்பாகக் கொள்ளலாம். எதிர்காலம் வினைச்சொற்களின் இறுதியில் வரும் உயிர்களை மூக்கொலி உயிர்களாக மாற்றுதல் காட்டப்படுகிறது.

| | |
|---|---|
| வெத | நான் போகிறேன் |
| வெதன் | நான் போவேன் |

### 3.10.5.2 துனிக்கா (Tunica)

லூசியானாவில் மார்க்ஸ்வில்லி என்னுமிடத்தில் வாழும் சுமார் எழுபது மக்களின் மொழி இது. இன்று இம்மொழி பேசுவோர் பிரஞ்சும் ஆங்கிலமும் பேசத் தெரிந்தவர்களாம். அமெரிக்க மொழிகளில் எந்த இனத்தையும் சாரந்ததல்லவாயினும் வோகளின் இதனுடன் பல தனி மொழிகளினையும் பல இனங்களையும் இணைத்து ஹோகன் – சியோவன் பைலம் (Siouan Phylum) என்பார்.[1]

இதன்கண் i, e, ɛ, a, o, ɔ, u என்ற ஏழு உயிர்களும் பதினெட்டு மெய்களும் உள்ளன. இவ்வேழு உயிர்களிலும் அ, இ, உ என்பவையே மிக அதிகமாகக் காணப்படுகின்றன

---

1. The constituents of this Phylum include eight language families (Pomo, Yuki, Shastan, Iroguoian, Siouan, Caddon Muskogean) and mere than eight language isolates (Washo, Karok, Keres, Yuchi, Tunica, Chitimacha, Tonkawa, Natchez and other languages along the Gulf of Mexico (from Flerida to Coahuila) that are new extinent, as well as Southern outlines of this Phylum language isolates formerly spoken in Mexico, Salvador and Nicaragua.

C. Voegelin, *Anthropological Linguistics*, Vol. 6, No. 6 (1964), p. 105.

சொற்கள் நிற்குமிடம், அவற்றின் இரட்டிப்பு, சொற்களில் ஏற்படும் உள்மாற்றம் (Suppletion) முன்னொட்டு, பின்னொட்டு ஆகியவை இலக்கணக்கூறுகள் பலவற்றைக் காட்டுகின்றன.

செமிட்டிக் மொழிகளைப் போன்று இதுவும் ஆண், பெண் பால்களைக் கொண்டது. பெயர்ச் சொற்களும் முன்னிலை படர்க்கை மூவிடப் பெயர்களும் ஆண், பெண் பால் காட்டும் தன்மையன.

| | | |
|---|---|---|
| கிம | (ʔi'ma) | நான் |
| ம | (ma') | நீ (ஆண்) |
| ஹெம | (hɛma) | நீ (பெண்) |
| குவி | (ʔuwi) | அவன்/அது |
| திச்சி | (tihči) | அவள்/அது |

மேலும் இம்மொழிப் பெயர்ச் சொற்களும் வினைச்சொற்களும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூன்று இடங்களையும் ஒருமை, இருமை, பன்மை என்ற எண்களையும் காட்டுவனவாம்.[1]

இத்தன்மைகளை வைத்து எல்லாப் பெயர்களையும் ஆண்பால் பெயர்கள், பெண்பால் பெயர்கள் எனப் பிரிக்கலாம். உயிருள்ள பொருட்களில் ஆண்மையைக் காட்டும் சொற்களும் உயிரற்ற பொருட்களில் கல் மண் போன்ற முழுமைப் பொருள் காட்டும் சொற்களும் ஆண்பாலாகவும் பிற பெண்பாலாகவும் கருதப்படும். எனினும் கல், மண் போன்ற சொற்களின் ஒருமையும் இருமை

1. There are three persons (first, second and third), three numbers (singular, dual, plural) and two genders (masculine and feminine). Number distinctions, however, are made in all three persons. Gender distinctions, however are made in the second and third persons but not in the first.

Mary R. Hass, *Tunika*, p. 36.

யும் ஆண்பாலாகக் கருதப்பட, பன்மை பெண்பாலாகக் கருதப் படுவது கவனிக்கத் தக்கதாம்.[1]

| | | |
|---|---|---|
| தஷி ஷ்றகலிகு | the stone | (ஆண்பால்) |
| தஷிஷ்றகலிகுனிம | இரு கற்கள் | (ஆண்பால்) |
| தஷிஷ்றகல்கினிம | கற்கள் | (பெண்பால்) |

வினைகள் அடையும் வினைமாற்றங்களைப் (inflection) பொறுத்து இவற்றை துணைவினை, செயல்வினை, நிலைவினை என மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர். கிட, இரு, உள், வா, போ, வாழ் காரணமாயிரு என்ற பொருட்களைத்தரும் வினைகளே துணை வினைகளாக இதன்கண் கருதப்படுகின்றன. இதே போன்று நிலைவினைகளாக சுமார் முப்பது உள்ளன. இவை பொதுவாக உணர்ச்சி நிலையினையும் (மகிழ், ஆசைப்படு, அஞ்சு, ஆச்சரியப் படு) உடல் நிலையினையும் (பசி, குளிர், (தண்ணீர்) தவி, களைப்பாயிரு) மன நிலையினையும் (தெரி, மற) காட்டும் என்பர். செயல்வினைகள் ஒரு மெய்யெழுத்தில் தொடங்குவதும் நிலை

---

1. The Salient feature of Tunica noun classification are as follows : All nouns are either masculine or feminine. This classification into masculine or feminine may be termed the outer or "Grammatical" classification. The Criteria needed in determining the Gender-class of any given noun, however, reflect an inner or "teleogical" classification which is based on certain few selected natural characteristics of the entity to which the noun refers. These are conveniently grouped into a set of interweaving dichotomies as follows :

| | | |
|---|---|---|
| Animate | Vs | Inaminate |
| Human Vs | Nonhuman | |
| Male Vs Female | Male Vs Female | Integral Vs continue |

Mary R. Hass, *A Grammatical Sketch of Tunica in Linguistic Structures of Native America*, (Ed. by Cornelius Osgood) p. 30.

| | |
|---|---|
| *tasihkaliku* | the stone |
| *tasihkal?unima* | the (two) stones |
| *tasihkalsinima* | *the stones* |

*Ibid.*, p. 359.

வினைகள், உயிர் அல்லது ஒன்றோ அல்லது இரண்டோ மெய்யெழுத்தில் தொடங்குவதும் இவற்றிடையே காணும் மற்றொரு வேற்றுமையாகும். மேலும் இவ்வினைகள் எப்போதும் இடம், பால் எண் காட்டும் விகுதிகளுடன் வருவதால் செயவென் எச்ச வாய்பாட்டுச் சொற்கள் இவற்றைப் பொறுத்தமட்டில் இல்லை என்பர்.[1]

பெயர்களைப் போன்றே வினைகளும் தன்மை ஒருமை, பன்மை, இருமை, முன்னிலை ஆண்பால் ஒருமை, இருமைப் பன்மை, பெண்பால் ஒருமை, இருமை, பன்மையினைக்காட்டும். ஒரே சொல்லே இறந்தகாலத்தையும் நிகழ்காலத்தையும் காட்ட வல்லது. இடத்தைப் பொறுத்தே இக்கால வேற்றுமை உணரப்படும்.

இம்மொழிப் பெயர்ச் சொற்களில் சில விசேடப்பண்புகள் காணப்படுகின்றன. பல பெயர்கள் ஆங்கில மொழியில் காணப் படும் சிறப்புச் சுட்டினைக் ( the ) குறிக்கும் முன்னொட்டினையோ அல்லது உடைமையினைக் குறிக்கும் முன்னொட்டினையோ எடுத்து வரும். உறவுப்பெயர்களும், உடலுறுப்புப்பெயர்களும் உடைமை உருபின்றி வாராதிருப்பதும் மனிதர்களின் அல்லது தனிப் பொருட்களின் பெயர்களும் ( proper nouns ) சிறப்புச் சுட்டினை எடுத்து வருவதும் காணத்தக்கதாம். என்னுடைய, உன்னுடைய அல்லது மற்ற ஒருவருடைய தந்தை எனக் கூறமுடியுமே யன்றி இதன்கண் தந்தை எனக்கூறமுடியாது. இதேபோன்று தான் யாராவது ஒருவருடைய கண் எனக்கூறுவதன்றித் தனி யாகக் கண் எனக்கூறுவதற்கில்லை.

---

1. Static verb stems are inflected for person, gender and number by means of the inalienable pronominal prefixes and may not be used without them. Hence they may not be used without them. Hence they may not be used as infinitives and in this respect differ markedly from active verb stems.

Mary R. Hass. *Tunica*, p. 59.

தமிழில் பெயர்கள் பால், எண் காட்டும் ஒட்டுகளை ஏற்பதும் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போதும் இவ்வொட்டுகள் நிலைத்து நிற்பதும் கண்கூடாகும். ஆனால் துனிக்காவில் பெயர்கள் உள்ள ஒரே வேற்றுமையான 'கண்' வேற்றுமை உருபினை ஏற்கும் போது பால் எண் காட்டும் ஒட்டுகள் வாராதிருப்பது தமிழிலோ பிற மொழிகளிலோ காணப்படாத ஒரு பண்பாம்.[1]

**3.10.5.3 தோங்கவா (Tonkawa)**

பண்டைக் காலத்தில் டெக்சாஸ் மாநிலத்தில் வாழ்ந்த மக்களின் மொழியாகும். இன்று இம்மொழி பேசுவோராக எழுவரே உள்ளனர் என்பர்.[2] துனிக்காவைப் போன்று இதுவும் ஒரு தனி மொழியாகும்.

அ. இ, உ, எ, ஒ, என்ற ஐந்து உயிர்களையும் பதினைந்து மெய்களையும் கொண்ட இம்மொழியில் உயிர்களில் குறில்–நெடில் வேற்றுமை உள்ளது. ஏராளமான பின்னொட்டுகளையும் ஆறு முன்னொட்டுகளையும் உடைய இதனை ஒரு ஒட்டுமொழி ஒன்பர்.[3] சிறப்புச்சுட்டு, வேற்றுமை, எண், காலம், எழுவாய் போன்ற பல இலக்கணக்கூறுகள் பின்னொட்டுகளால் உணர்த்தப்படு கின்றன. செயப்படுபொருள் போன்ற ஒரு சில இலக்கணக் கூறுகளே முன்னொட்டால் காட்டப்படும்.

தமிழ் மொழியைப் போன்று இதன் கண்ணும் ஐ, ஆன், கு, அது, எழுவாய் போன்ற வேற்றுமைகள் உள்ளன. தமிழில் எழுவாய் வேற்றுமையைக் குறிக்கவெனத் தனி உருபு இல்லா

---

1. The Gender - number suffixes and the locative suffixes are mutually exclusive but the number of a nouu in the locative case may be singular or plural depending on context.
*Ibid.*, p. 66.

2. *Anthropological Linguistics*, Vol. 6, p. 107.

3. Harry Hoijer in *H. A. I. L.*, Vol. 3, p. 1.

திருப்பதும் பெயர் ஒருமையாயினும் பன்மையாயினும் ஓரே உருபி னைக் கொண்டு வருவதும் இம்மொழியில் காணப்படாத பண்பாம். இதன்கண் காணப்படும் வேற்றுமை உருபுகளைச் சிறப்புச்சுட்டு வேற்றுமை உருபு (definite), பொது வேற்றுமை உருபு (indefinite) எனவும் அவற்றை மீண்டும் ஒருமை உருபு, பன்மை உருபு எனவும் பிரிப்பர்.[1]

**எழுவாய்**

| | | |
|---|---|---|
| -ல | ஹா(க்) ககோன் - ல (ha.? ako. n-la) | மனிதர்கள் (பொது) |
| -க | ஹா (க்) ககோன்-க | மனிதன் (பொது) |
| -(க்) கால | ஹா (க்) ககோன்-(க்) கால | மனிதன் (சிறப்பு) the man |
| -(க்)காகக் | ஹா(க்) ககோன்-(க்)காகக் | மனிதர்கள்(சிறப்பு) |

**செயப்படுபொருள்**

| | | |
|---|---|---|
| -லக் | ஹா (க்) ககோன் - லக் | மனிதர்களை |
| -கக் | ஹா(க்)ககோன் - கக் | மனிதனை |
| -(க்)காலக் | ஹா(க்)ககோன்-(க்) காலக் | மனிதனை (சிறப்பு) |

என்பன இத்தன்மையைக் காட்டும்.

சாதாரண பெயர்களில் இருமை எண் காணப்படாவிடினும் மூவிடப் பெயர்களிலும் வினைகளிலும் ஒருமை, இருமை, பன்மை என்ற எண்கள் காணப்படுகின்றன. அரபிக் போன்ற மொழி களில் சாதாரணப் பெயர்களிலும் இவ்வெண் வேற்றுமை இருக்க இம்மொழியின்கண் மூவிடப் பெயர்களிலும் வினைகளில் எழுவா யிலும் மட்டுமே காணப்படுவது கவனிக்கத்தக்கதாகும். மூவிடப் பெயர்களின் வேற்றுமை உருபுகளும் வேறாகவே உள்ளன.

---

1 Harry H ijer in *Viking fund Publications in Anthropology*, No. 6, p. 302.

**எழுவாய்**

| | | |
|---|---|---|
| சாய | (sa-ya) | நான் |
| நாய | (na-ya) | நீ |
| (க்)காயேல | (?a-ye-la) | அவன்/அவர்/அது |
| கெவ்சாய | (kewsay-ya) | நாம்/நாங்கள் இருவர் |
| வெனய | (we-naa-ya) | நீங்கள் இருவர் |
| (க்)கவேல | (?a-wa-la) | அவர்கள் இருவர் |
| கெவ்சாக | (kew-sa-ka) | நாம்/நாங்கள் |
| வெனக | (we-na.-ka) | நீங்கள் இருவர் |
| (க்)கவேக | (?a-we.-ka) | அவர்கள் |

பல அமெரிக்க இந்திய மொழிகளைப்போன்றே இம்மொழியிலும் நான்கு விதமான சுட்டுகள் உள்ளன. அண்மை, சேய்மை, இடைநிலைச் சுட்டுகளைத் தவிர "மேலே குறித்த" என்ற பொருளைத் தரும் சுட்டும் இதன்கண் உள்ளது. சுட்டுப்பெயர்களில் ஒருமை, பன்மை காணப்படுகின்றனவேயன்றி இருமை காணப்படாமை கவனிக்கத் தக்கதாம்.

வினைச்சொற்கள் காலம், செயப்படுபொருள் எழுவாய் முதலியவற்றைக்காட்டும். பல அமெரிக்க இந்திய மொழிகளில் கடந்த காலத்தில், அண்மைக் கடந்தகாலம், சேய்மைக் கடந்த காலம் என ஓரிரு பிரிவுகள் இருப்பதைக் காணலாம். ஆனல் தோங்கவா மொழியில் எதிர்காலத்தில் இத்தகைய பிரிவுகள் உள்ளன. அண்மை எதிர்காலம், சேய்மை எதிர்காலம் என இரு எதிர்காலங்கள் உள்ளன. அண்மை எதிர்காலம் சொல்லுகின்ற அன்றே நடக்கின்ற செய்திகளையும் சேய்மை எதிர்காலம் அடுத்த நாளோ அன்றிப் பலநாட்கள் கழித்து நடக்கின்ற செய்திகளையோ குறிக்கும்.[1]

---

1. The declarative may, therefore, be subdivided into four tenses, the present, the past, the near future, and the remote future.

Harry Hoijer, *H. J. I. L,*, Vol. 3, p. 83.

| | | |
|---|---|---|
| அண்மை | yakp–a.tew–o? | அவனை அடிப்பான் |
| சேய்மை | yakp-aitew–o?o | அவனை அடிப்பான் |
| கடந்தகாலம் | yakp–o-?o | அவனை அடித்தான் |
| நிகழ்காலம் | yakp–o–? | அவனை அடிக்கிறான் |
| இருமை | yakpa-nes?-o-? | அவர்களிருவர் அவனை அடிக்கிறார்கள் |
| பன்மை | yakp o-?o-yuk | அவனை அடிக்கிறார்கள் |
| முன்செயப்படுபொருள் | ke-yakp-o–? | என்னை அடிக்கிறான் |

எழுவாய் காட்டும் விகுதிகள் பல இம்மொழியில் உள்ளன. காலங்கட்கேற்ப இவை மாறும் தன்மையன. தன்மையில்மட்டுமே செயப்படு பொருள் காட்டும் ஒட்டுகள் உள்ளன. இடத்தைப் பொறுத்தே முன்னிலை, படர்க்கை, செயப்படுபொருட்கள் உணரப்படும்.

### 3.10.5.4 டக்கோட்டா (Dakoto)

இம்மொழி அமெரிக்காவில் மேற்குச்சமவெளிப் பிரதேசங்களில் வழங்கும் சியோவன் இனத்தைச் சார்ந்ததாகும். இவ்வின மொழிகள் மேற்கு அமெரிக்காவில் வட பகுதி முதல் தென்பகுதி வரையிலும் பரந்துள்ளன. இவற்றுள் சில அப்பலேச்சியன் பிரதேசங்களிலும் மெக்சிக்கன் பகுதிகளிலும் வழங்குகின்றன. இதன்கண் பல கிளை மொழிகள் உள்ளன. சாந்தி, தெதொன் போன்றவை இவற்றுள் அடங்கும்.

---

**This tense define a time in the near future-sometime in the day on which the remark is made.**

**It defines an action to take place sometime in the future beyond the present time – from tomorrow on to infinity.**

***Ibid., pp. 85 - 86.***

சியோவன் இன மொழிகளில் சிறப்புச் சுட்டுகளைக் காண லாம். டக்கோட்டா மொழியில் இவை நன்கு வளராவிடினும் இவ்வினத்தைச் சார்ந்த பொஞ்ச (Poncha) மொழியில் நன்கு வளர்ந்துள்ளன.[1] பெயர்கள் ஏற்கும் இச்சுட்டுகளை அடிப்படை யாகக்கொண்டு அவற்றை உயிர்த்திணை, உயிரல்திணை என இரு பிரிவுகளாகப் பிரிப்பர். உயிரல்திணைப் பெயர்களும் பற்பல சுட்டு களை ஏற்கின்றன. தளமட்டமான (horizondal) பொருட்களைக் குறிப்பன, நுண் பொருட்களைக் குறிப்பன, வட்டமான பொருட் களைகுறிப்பன எனப் பலவகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.[2] எடுத்துக்காட்டாகத் தண்ணீர், தரை, நடைபாதை போன்றபெயர் கள் குறிப்பிட்ட சில சுட்டுகளை ஏற்பதால் முதல் வகையையாகவும்

நிகெ (ni-khĕ) தண்ணீர்

மரம், கதவு போன்ற பெயர்கள் இரண்டாவது வகையாகவும் (standing objects)

ஹ்தபெதெ (h()abe - the) மரம்

வேலை, வலிமை, கொல்லுதல் போன்ற பெயர்கள் மூன்றுவது வகையாகவும் (atbstract nouns)

இவஸ்கன்தெ (iwaskhãthĕ) - வலிமை

வட்டமான பொருட்களைக் குறிப்பன நான்காவது வகையாகவும்

மின்தன் (mĩ - thã) ஞாயிறு

---

1, The articles of Poncha are much more highly developed we have to distinguish between inanimate and animate articles and the latter are differentiated as subjective and objective singular and plural.

Boas, *Hand Book*, Vol I, p. 939.

2. Some of the Siouan languages classify nouns by means of articles. and strict distinction are made between animate moving and animate at rest, inanimate long, inanimate round, inanimate high, and inanimate colleetive objects.

Boas, *Hand Book* p. 36.

சிதறிக் கிடக்கின்ற பொருட்களின் தொகுதியைக் குறிப்பன ஐந்தாவது வகையாகவும்

வகிகெ (wahi-ge) எலும்புகள்

கருதப்படுகின்றன இவை முறையே – khe, - the, - the - thã, - ge என்ற சிறப்புச் சுட்டுகளை எடுக்கின்றன.

உயர் திணைப் பெயர்கள் எழுவாயாக வரும்போது அவற்றை இரு பிரிவுகளாகப் பிரிக்கின்றனர். நிலையில் இருக்கின்ற பொருட்கள் எழுவாயாயின் அவை akha என்ற சுட்டையும் நிலையில் இல்லாது நகருகின்ற பொருட்களாயின் ama என்ற சுட்டையும் இப்பெயர்கள் ஏற்பதைக் காணலாம்.

இஷ்தினிகெ அகெ (išthinikhe akha) (உறக்கத்திலிருந்து) எழுந்தான்

என்று கூறும்போது அசைவற்ற நிலையில் அவன் இருந்ததாகக் காட்டுவதால் akha என்ற சுட்டும்

இஷ்தினிகெ அம (išthinikhe ama) போனான்

என்று கூறும்போது அவன் போகும் தன்மையைக் காட்டுவதால் எழுவாயுடன் ama என்ற சுட்டை இட்டும் கூறுவர். இதே போன்று பெயர்கள் செயப்படுபொருளாக வரும்போதும் நிற்கின்ற பொருட்களைக் குறிப்பன, நகருகின்ற பொருட்களைக் குறிப்பன, இருக்கின்ற பொருட்களைக் குறிப்பன எனப்பிரிப்பர். தமிழில் காணப்படும் ஆண், பெண் போன்ற பால் பகுப்பு இவண் இல்லாது பொருட்களின் நிலையினையடிப்படையாகக் கொண்ட பகுப்பு இருப்பது காணத் தக்கதாகும்.

பொதுவாக இம்மொழிகளில் ஒருமை, பன்மை எண்கள் உள்ளன. பெயர்ச் சொற்களும் வினைச்சொற்களும் இவற்றைக் காட்டும்.

Poncho மொழியில் ஆறுவகையான சுட்டுகள் உள்ளன.

1. பேசுவோனின் பக்கத்தில் உள்ள பொருட்களைக் குறிக்கவும்

   **தெ** எகிமன் (θe egimã) இதைச் செய்வேன்

2. யாரிடம் பேசுவோமோ அவன் பக்கத்திலுள்ள பொருட்களைக் குறிக்கவும்

   **ஷெ** எகிசன் (še egijã) அதைச் செய்கிறாய்

3. முன்னர்க் குறிப்பிட்ட பொருட்களைக் குறிக்கவும்

   **எ** நி (e ni) அந்தத் தண்ணீர்

4. காணாத பொருட்களைச் சுட்டவும்

   **க** தன் பெத (ga tã betha) நான் அதைக் கண்டேன்

என நான்கு முக்கியமான சுட்டுகள் இருப்பதைக்காணலாம். இவையன்றி அரிதாகப் பயில்கின்ற வேறு இரு சுட்டுகளும் உள்ளன. து (du) பேசுவோனின் பக்கத்தில் இருப்பனவற்றை யும் கு (gu) சிறிது தூரத்தில் இருக்கின்ற பொருட்களையும் சுட்டுகின்றன. இவ்வாறே டக்கோட்டா மொழியிலும் நான்கு சுட்டுகள் உள்ளன.[1] இம்மொழிச் சுட்டுகள் குறிப்பிட்ட சில வினைகளுடனும் வருகின்றன. தமிழில் 'அதைச்சொல்' எனக் கூறுவதை இவர்கள் ஒரே சொல்லாகக் கூறுகின்றனர். சுட்டுகள் முன்னொட்டுகளாகப் பயன்படுகின்றன.[2]

---

1. The demonstrative pronouns proper are *e*, *le*, *he*, *ka* and *to*. The first of these always refers to something that has just been said, and as use is more syntactic than local; be corresponds very merely to English THIS and *he* to English THAT; but when an object is very remote, the proper form is *ka* to indicate that what is indefinite;.....

   Boas, *Hand book*, p. 944.

2. The demonstratives are employed regular by as prefixes to the verbs meaning to SAY, TO THINK and TO DO.

   *Ibid.*, p. 944.

வினைச்சொற்களில் எழுவாய் காட்டும் விகுதிகள் நன்கு வளரவில்லை என்பர். நான், நீ, நானும் நீயும் என்பனவற்றைக் காட்டவே தனியான விகுதிகள் உள்ளன. படர்க்கை ஒருமையை வினைச்சொல் எந்த விகுதியுமின்றி காட்டுகிறது.

| | |
|---|---|
| தி | அவன் உறைகிறான் |
| வ-தி | நான் உறைகிறேன் |
| ய-தி | நீ உறைகிறாய் |
| உன்-தி | நானும் நீயும் உறைகிறோம். |
| உன்-தி-பி | நாம் உறைகிறோம் |
| தி-பி | அவர்கள் உறைகின்றனர் |

என்ற தெதொன் வினைச்சொற்கள் இத்தன்மையை நன்கு காட்டும்.

பிறவினைச் சொற்களில் எழுவாயும் செயப்படுபொருளும் ஒரே ஒட்டினால்தான் காட்டப்படுகின்றன. எடுத்துக்காட்டாக சாந்தி மொழியில் நீ—என்னை என்பது maya என்ற ஒட்டினாலும் நான்—உன்னை என்பது ci என்ற ஒட்டினாலும் நானும் நீயும் அவர்களை என்பது wicun என்ற ஒட்டினாலும் காட்டப்படுவதைக் காணலாம்.[1]

| | |
|---|---|
| மய-கஸ்க | நீ என்னைக் கட்டுகிறாய் |
| சி-கஸ்க | நான் உன்னைக் கட்டுகிறேன் |
| விசுன்-கஸ்க | நானும் நீயும் அவர்களைக் கட்டுகிறோம் |

1. The development of the personal pronoun in the Siouan language is very weak. Distinct pronominal forms occur only or I, THOU, THOU AND I.

Boas, *Ibid.*, p. 908.

Transitive verbs with pronominal subject and object form combined pronominal forms in which the first person always precedes the second.

Boas, *Ibid.*, p. 90).

தமிழ் வினைச்சொற்களில் இறந்தகாலம் காட்டும் இடைநிலை கள் பல இருப்பதைக் காணலாம். (த், ட், ற், இன்,) இதே போன்று இம்மொழிகள் சிலவற்றில் விகுதிகள் பல இருக்கின் றன. எடுத்துக்காட்டாகப் போஞ்சாவில் தன்மை ஒருமை விகுதி கள் மட்டும் ஆறு உள்ளன. இவற்றிற்கேற்ப வினைச்சொற்கள் வகை செய்யப்படுகின்றன.

பிறமொழிகளில் இல்லாத சிறப்பான தன்மை இம்மொழி களிலுள்ள ஏவல் வினைகளில் காணப்படுகின்றன. ஆண்கள் கூறு வதற்கெனத் தனிச்சொற்களும் பெண்கள் கூறுவதற்கெனத் தனிச்சொற்களும் உள்ளன. எடுத்துக்காட்டாகப் போஞ்சாவில் ஆண்கள் ஏவும்போது – ga என்ற ஒட்டினை இணைத்தும் பெண் கள் – a என்ற ஒட்டினை இணைத்தும் கூறுகின்றனர்.[1]

இத-க இதை அனுப்பு (ஆண்)

கிக்தை-அ வீட்டுக்குள் போ (பெண்)

இதே நிலை தெதொன் மொழியிலும் உள்ளது. yo, po (பன்மை) என்பவை ஆண்களாலும் ye, pe என்பவை பெண்களாலும் பயன்படுத்தப்படுகின்றன.[2]

---

1. *ga* and *a* express the imperative, *ga* being used by men, *a* by women.

*Ibid.*, 936.

2. The forms *yo* and *po* are used by men; while *ye* and *pe*, which seems to express milder form of request, are used by women.

*Ibid.*, p. 933.

## 3. 10. 6 அஸ்டெக் தனோவன் பெருங்குழு (Aztec Tanoan Phylum)

இம்மொழிகள் வட அமெரிக்காவிலும் மெக்சிக்கோவிலும் பேசப்படுகின்றன. வட அமெரிக்காவில் கலிபோர்னியா, அரிசோனா, நவேதா, உட்டா, ஐடகோ, ஒக்கலஹோமா ஆகிய மாநிலங்களிலும் தென் அமெரிக்காவில் குத்தமாலா, கோஸ்டரிக்கா, நிக்காருவா, குந்துராஸ், எல் சவேதார் ஆகிய இடங்களிலும் வழங்குகின்றன. இப்பிரிவில் உட்டோ அஸ்டெகன் (Uto-Aztecan), தனோவன் (Tanoan) என இரு மொழிக் குடும்பங்களும் கியோவா (Kiowa), சூனி (Zuni), ஆகிய இரு தனி மொழிகளும் உள்ளன.

### 3.10 6.1 உட்டோ அஸ்டெகன் மொழிகள்

இம்மொழிகள் தென் அமெரிக்காவிலும் வட அமெரிக்காவிலும் வழங்குகின்றன. அமெரிக்க இந்திய மொழிகளில் அதபாஸ்கன் மொழிகட்கு அடுத்தபடியாக மிகப்பரந்த நிலப்பரப்பில் பேசப்படுகின்றன. மேனோ (Mono), பையூட் (Piute) ஹோப்பி (Hopi), பீமா (Pima), பாப்பகோ (Papago), செரானோ (Serrano , லூய்செனோ (Luiseno), குய்ச்சொல் (Huichiol), நகுவத்தில் (Nahuatl) ஆகிய 22 மொழிகள் உள்ளன. இம்மொழிகளைப் பேசுவோராக 40,000 மக்கள் உள்ளனர்.

### 3.10.6.2 தனோவன் மொழிகள்

இதன்கண் தீவா (Tiwa), தேவா (Tewa), தோவா (Towa) ஆகிய மொழிகள் உள்ளன. இவை நியூமெச்சிக்கோ, அரிஸோனா முதலிய இடங்களில் வழங்குகின்றன. இம்மொழிகளைப் பேசுவோராக 4000 மக்கள் உள்ளனர்.

**3.10.6.3 கியோவா**

இம்மொழி ஒக்கலஹோமாவில் வாழும் சுமார் 3000 மக்களால் பேசப்படுகிறது.

**3.10.6.4 சூனி (Zuni)**

நியூ மெக்சிக்கோவில் சூனி ஆற்றங்கரையில் வாழும் சூனி இந்தியர்களால் பேசப்படும் மொழி இது. இம்மொழி பேசுவோராக சுமார் 3000 பேர் இருந்தனர் என்பர். அமெரிக்க இந்திய மொழியாயினும் இதன்கண் பல ஸ்பானிஷ் சொற்களும் சில ஆங்கிலச் சொற்களும் இரண்டறக் கலந்துள்ளன.

ஆண்களின் பேச்சுக்கும் பெண்களின் பேச்சுக்கும் இடையே மிகுந்த வேற்றுமை காணப்படுகிறது என்பர். இதே போன்று இளைஞர்களின் பேச்சுக்கும் முதியவர்களின் பேச்சுக்கு மிடையே வேற்றுமை உண்டு. முதியவர்களின், குறிப்பாகப் பெண்களின் பேச்சில் குரல்வளை வல்லினம் (Glottal), நன்கு ஒலிக்கப்படுகிறது. இளைஞர்களின் பேச்சில் ஏராளமான பிற மொழிச் சொற்கள் காணப்படுகின்றன.[1]

இதன்கண் ஆறு உயிர்களும் இருபத்தொரு மெய்களும் உள்ளன. உயிர்களில் குறில், நெடில் வேற்றுமையையும் காணலாம்.

---

1. There is considerable variation in the speech of different groups, eg. men and women and old and young The young people at Zuni are bilingual. In addition to these dialectic differences there is a considerable range of variation in the speech of any one individual. The variations are marked in the slurring of unaccented syllables, variability of vowel quality, omision of glottal stops and loss of glottalisation. All of these features found freequently in the speech of older people and especially women, have become more marked in the speech of younger generation who are accused by their elder of "not speaking plainly".

Ruth L. Bunzel "Zuin", *H. A. I. L.*, Vol. I, p. 430.

இம்மொழியில் காணப்படும் பெயர்ச்சொற்களை அவை ஏற்கும் பின்னொட்டுகளை அடிப்படையாக வைத்து, மக்களினத்தைக் குறிப்பன (human), உயிருள்ளவை (animate), உயிரற்றவை (inanimate), என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். பெயர் அடிச் சொற்களின் பின்னால் (-ki) –கி என்ற ஒட்டினை இணைத்து உயர் திணைச் சொற்களையும் -சி அல்லது (–க்)கொ (-ci, k'o) என்ற ஒட்டுகளை இணைத்து விலங்கு, செடி, மரம் போன்றவற்றைக் குறிக்கும் சொற்களையும் வேறுபல ஒட்டுகளை இணைத்து உயிரல் திணைச்சொற்களையும் உண்டுபண்ணுகின்றனர்

| | | |
|---|---|---|
| –கி | த்ஸ்வ–கி | இளைஞன் (மணமாகாதவன்) |
| -கி | தொன–கி | ஒருவகைக்காரடி **(badagar)** |
| -வெ | ஒ–வெ | கை |
| –(க்)க்லெ | பி–(க்)க்லெ | நூல் |
| –மெ | ச–மெ | எலும்பு |

இத்தகைய சொற்கள் பல காணப்படுகின்றன. பெயர்கள் ஏற்கும் ஒட்டுகளைவைத்து இதன்கண் பதினன்கு வகையான பெயர்கள் உள்ளன. இவற்றுள் ஒட்டுகள் எதுவுமின்றி வருகின்ற பெயர்களும் அடங்கும்.

மூவிடப் பெயர்களில் ஒருமை, இருமை, பன்மை என்ற எண் வேற்றுமை உள்ளமையும் பெயர்ச்சொற்களில் இருமை உணர்த்தப்படாமையும் காணத் தக்கன. இருமை எண்ணைக் கொண்ட மூவிடப்பெயர்களே எழுவாயாகவரினும் பயனிலையாக வரும் வினைச்சொற்கள் ஒருமை எண்ணையே காட்டுவது குறிப்பிடத் தக்கதாகும். பன்மை காட்டுவதிலும் உயர்திணைச் சொற்கட்கும் பிற சொற்கட்கும் வேற்றுமை உண்டு. உயர்திணைச்சொற்களனைத்தும் முன்னொட்டுகளால் (a-) பன்மையை உணர்த்த, பிற சொற்கள் -சி, –வெ (ci, -we) போன்ற பின்னொட்டுகளால் பன்மையை உணர்த்துகின்றன.

| | |
|---|---|
| ஆ-சுவெ | தம்பிமார் |
| விகே-வெ | குழந்தைகள் |
| தொன-சி | கரடி / கரடிகள் |

என்பவை எடுத்துக்காட்டுகளாம்.

தமிழில் தண்ணீர் போன்ற சொற்கள் எப்போதும் ஒருமையில் வருவதும் இம்மொழியில் இப்பெயர்கள் (collectives) பன்மையில் வருவதும் நுண்பொருட்பெயர்கள் (abstract nouns) எப்போதும் ஒருமையில் வருவதும் காணத் தக்கதாம்.

இதன்கண் காணப்படும் மூவிடப் பெயர்களில் ஒருமை, இருமை, பன்மை எண்கள் காணப்படுவதோடு மட்டுமல்லாமல் எழுவாய், செயப்படுபொருள், 'கு' வேற்றுமைப் பொருள், உடைமைப் பொருள் ஆகியவற்றைக் (உன்னுடையது போன்று) காட்டுவதற்கெனத் தனித்தனியாக சொற்களும் உள்ளன. எழுவாயாகவும் செயப்படுபொருளாகவும் வரும்போது படர்க்கையில் ஒருமையையும் பன்மையையும் காட்டும் சொற்கள் இல்லை.

| ஒருமை | | இருமை | பன்மை |
|---|---|---|---|
| ho'o | நான் | hon | hon |
| t'o'o | நீ | t'on | t'on |
| | அவன்/அவள்/அது | a.tci | |

ஆனல் பிற பொருளில் அவை வருவதைக் காணலாம்.

| | |
|---|---|
| an | அவனுக்கு, அவளுக்கு, அதற்கு |
| a.ni | அவனுடையது, அவளுடையது - அதனுடையது |
| a.wa | அவர்களுடையது - அவற்றினுடையது |
| a.wan | அவர்கட்கு, அவற்றிற்கு |

வினைச் சொற்களையும் வினை மாற்றத்தையும் அடிப்படையாகக்கொண்டு சூனி வினைகளை இரண்டு பெரும்பிரிவுகளாப்

பிரிப்பர். பொருளின் நிலையினைக் குறிக்கும் வினைகள் (வீடு இருக்கிறது) ஒருவகையாகவும் செயலினைக் குறிக்கும் வினைகள் மற்றொரு வகையாகவும் கருதப்படுகின்றன. இவற்றை முறையே நிலைவினைகள் (verbs of condition) செயல் வினைகள் (verbs of action) எனக்கூறலாம். இவை எண், காலம் காட்டும்போது தம்மில் வேறுபடுகின்றன.[1]

| | | |
|---|---|---|
| அக்லியெ | ( akliye ) | தீ உள்ளது |
| அக்லு | ( aklu ) | தீ உண்டுபண்ணுகிறான் |

செயல்வினைகளையும் தன்வினை, பிறவினை எனப்பிரிக்கலாம். தன்வினைச்சொற்கள் (intransitive) காலம் காட்டுவதில் செயல் வினைகளைப் போன்றும் (active) எண் காட்டுவதில் நிலை வினைகளைப் போன்றும் (static) உள்ளன. பெருவாரியான வினைச் சொல்லடிகள் ஒன்றாகவே இருக்க அவை ஏற்கும் ஒட்டுகளை ஒட்டியே அவை பிரிக்கப்படுகின்றன எனலாம். சில அடிகள் செயல்வினைகளாக இருக்க அவற்றினின்று நிலைவினைகளும் உண்டு பண்ணப் படுவதையும் காணலாம். இன்னும் சில நிலைவினையாக இருக்க அவற்றினின்று செயல் வினைகளும் தோன்றுகின்றன.

வினைச்சொற்கள் எழுவாய், காலம், எண், செயப்படு பொருள் போன்ற இலக்கணக்கூறுகள் பலவற்றைக் காட்டும். படர்க்கை ஒருமையைக் காட்டவென தனிவிகுதி இம் மொழியின்கண் இல்லை. சாதாரண வினையடிகள் ஏவல் வினை யாகவும் படர்க்கை ஒருமையாகவும் நிற்கின்றன.

---

1. The fundamental classification of predicative concepts is into verbs of condition and verbs of action, which are differently conjucated in regard to tense and number. Included among the statit verbs in Zuni are verbs of condition v rbs predicating existence, (there is a house, eg., literally "it houses") position, (to be on, in, beside certain class of object)

*Ibid.*, p. 448.

**ito** உண், அவன் / அவள் / அது
உண்ணுகிருன் / உண்ணுகிருள் / உண்ணுகிறது

**kwato** உள்ளே வா, அவன் உள்ளே வருகிருன்

என்பன இத்தன்மையைக் காட்டும். சாதாரணமாக ஒருமையும் பன்மையும் ஒட்டுகளால் காட்டப்படுகின்றன. எனினும் பல இந்திய மொழிகளில் காணப்படுவதுபோன்று பன்மைக்கெனத் தனியான அடிச்சொற்களும் உள்ளன.[1]

ஒட்டு

| | | |
|---|---|---|
| பியஹ | **(piyaha)** | அதைத் கீழே எடுக்கிருன் |
| பியஹ ஏவ | **(piyahae:we)** | அவர்கள் அதைக் கீழே எடுக்கிருர்கள் |

**வேறு அடிகள்**

| | | |
|---|---|---|
| அலெ | **(ale)** | அது கிடக்கிறது |
| வேத்திய | **(wcitiye)** | அவை கிடக்கின்றன (நிலைவினை) |
| அல | **(ala)** | உறங்குகின்றன |
| யாஎதெல | **( ya:tela)** | அவர்கள் உறங்குகிருர்கள் (செயல்வினை) |

செயல் வினைகளில் செயப்படுபொருளைக் காட்டும் மொழிகள் பலவற்றை நோக்கின் அப்பொருளைக் காட்டும் விகுதிகளைக் (ஒட்டுகள்) காணமுடியுமேயன்றி சாதாரண பெயர்களைச் செயப்படு பொருளாகக் கண்பது மிகமிக அரிதாகும். இதே நிலையைத்தான் எழுவாய் காட்டும் வினைகளும் கொண்டுள்ளன. தமிழ் வினைகள் எழுவாய் காட்டும் விதிகளை உடையனவேயன்றி இராமன், கண்ணன் போன்ற பெயர்களில் வினைச்சொற்களில்

---

1. Plurality of subject or object may be expressed by prefixes, suffixes or the use of different and specifically plural stems the mechanism employed being conditioned by the character and fundamental significance of the verbal stem.

*Ibid.*, p., 455.

காணமுடியாது. ஆனால் சூனி மொழியில் எழுவாய், செயப்படுபொருள் காட்டும் விகுதிகளையும் எழுவாய் செயப்படுபொருளாக வரும் பெயர்களையும் காணலாம்.[1] சூனி இலக்கணக் குறிப்பில் முற்றுவினைகளாக வரும் எடுத்துக்காட்டுகள் தரப்படவில்லையாயினும் எச்சவினைகளாக வரும் ஓரிரு எடுத்துக்காட்டுகள் உள்ளன.

அயொச்னம் **( ayocnan )** கற்களைப் பொறுக்குதல்

**a** = கல்; **yoc** = பொறுக்கு; **-nan = participle**

மேலும் இம்மொழியில் செயப்படுபொருள் அச்சொல்லிற்குமிடத்திலும் காட்டப்படுகின்றது.

---

1. The direct object is ordinarily expressed by a separate noun or pronoun, but the nominal object may be incorporated into the verbal complea in the first position. Or else it is joxtaposed. Object incorporation is more common than subject incorporation but is largely a matter of rehetorical choice.

*Ibid.*, p. 511.

## 3.10.7 மேக்ரோ – ஒட்டோ மேன்குவன் பெருங்குழு (Macro - Oto Manguvan Phylum)

இம்மொழிகள் மெக்சிக்கோ, மெசோ – அமெரிக்கா ஆகிய பகுதிகளில் பேசப்படுகின்றன. இக்குழுவில் ஐந்து பிரிவுகளும் அவற்றைச்சார்ந்த 18 மொழிகளும் அடங்கும். முதல் பிரிவாகிய ஒட்டோமியன் (Otomian) பிரிவில் ஆறு மொழிகள் உள்ளன. இரண்டாவது பிரிவில் (Poppolocan) நான்கு மொழிகளும் மூன்றாவது பிரிவில் (Mixtecan) நான்கு மொழிகளும் நான்காவது பிரிவில் (Chinantecan) இரண்டு மொழிகளும் ஐந்தாவது பிரிவில் (Zapotecan) இரண்டு மொழிகளும் உள்ளன. இவற்றைப்பற்றி நீயூமென், லாங் ஏக்கர், சுவாடாஷ், குர்ச்சின்ஸ்கி போன்றவர்கள் நன்கு ஆராய்ந்துள்ளனர்.

## 3.10.8 மேக்ரோ சிப்ச்சன் பெருங்குழு
## (Macro - Chibchan Phylum)

இக்குழு மொழிகள் தென் அமெரிக்காவில் பேசப்படும் மொழிக் குழுக்களில் முக்கியம் வாய்ந்தவை. தென் அமெரிக்காவில் கொலம்பியாவை மையமாக வைத்து அதன் வட பகுதியிலும் தென்பகுதியிலும் கீழ்ப்பகுதியிலும் பரந்து வாழுகின்றன இம்மொழிகள். இக்குவேடர், பெரு, பிரேஸில், வெனசூலா, கொந்துராஸ், நிக்கரக்குவா ஆகிய இடங்களிலெல்லாம் இம் மொழிகள் பேசப்படுகின்றன. இம்மொழிகளைப்பற்றி ஆராய்ந்த கிரீன் பெர்க் இவற்றை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிப்பார். இன்னும் சிலர் இதனை ஏழு பிரிவுகளாகப் பிரிப்பர். இக்குழுவில் ஐம்பதுக்கும் அதிகமான மொழிகள் உள்ளன.

## 3.10.9 கே - பானு காரிப் பெருங்குழு
## ( Ge - Pano - Carib Phylum )

இக்குழுவில் 200-க்கும் அதிகமான மொழிகள் உள்ளன. இக்குழு மொழிகளைப் பேசுவோர் குறைந்த அளவினராயினும் தென் அமெரிக்காவில் ஆண்டியன் மலைக்குக் கிழக்கே உள்ள பகுதிகளாகிய கொலம்பியா, பெரு, பொலிவியா, அர்ஜென்டீனா முதலிய இடங்களிலெல்லாம் பரந்து வாழுகின்றனர். .5 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் இம்மொழிகளைப் பேசுவதாகக் கருதுகின்றனர். கே (Ge) மொழிகளையும் பானு (Pano) மொழிகளையும் காரிப் (Garib) மொழிகளையும் பலர் இணைத்துக் கூறினும் இவை தம்முள் இனவுறவு கொண்டவையல்ல எனச் சிலர் கருதுகின்றனர். இப்பெருங்குழுவை ஆறு பிரிவுகளாகப் பிரிப்பர். இக்குழு மொழிகளில் பல அழிந்து விட்டன என்றும் இன்னும் சில அழிந்து கொண்டிருக்கின்றன என்றும் கூறுவர்.

## 3.10.10 ஆண்டியன் இக்குவெட்டரியல் பெருங்குழு ( Andean Equatorial Phylum )

இக்குழு மொழிகள் சிலி, அர்ஜென்டீனு, பெரு, கொலம்பியா, இக்குவேடர், பொலிவியா போன்ற இடங்களில் பேசப்படுகின்றன. இம்மொழிகளைப்பற்றி ஆராய்ந்த கிரீன் பெர்க் என்பார் இக்குழுவினை

1. ஆண்டியன் (Andean)
2. மேக்ரோ – துக்கனேவன் (Macro — Tucanoan)
3. இக்குவெட்டரியல் மொழிகள் (Equatorial)
4. பிற மொழிகள்

எனப் பிரிப்பார். ஜிவரோவன் (Jivarovan), கண்டோசியன் (Candoshian), எஸ்மரால்தா (Esmeralda), காபன் (Cofan) எருரோ (Yaruro) ஆகிய மொழிகள், பிற மொழிகள் என்ற தலைப்பில் அடங்கும். இக்குழுவில் 21 குடும்பங்களும் 100-க்கு அதிகமான மொழிகளும் உள்ளன.

அமெரிக்க இந்திய மொழிகள் இந்தோ–ஐரோப்பிய மொழிகளைப் போலவோ அல்லது இந்திய மொழிகளைப் போலவோ இலக்கிய வளம் கொண்டவை அல்ல. இம்மொழிகளில் ரூஸோவையோ, ஷேக்ஸ்பியரையோ அல்லது திருவள்ளுவரையோ நாம் காணமுடிவதில்லை. எனினும் இம்மொழிகள் 20,000 ஆண்டுகட்கு முன்னமேயே வழக்கில் இருந்தன என்றும் இம்மொழிகளைப் பேசிய பண்டைய மக்கள் தங்கட்கென ஒரு வாழ்வை வகுத்துக் கொண்டிருந்தனர் என்றும் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அமெரிக்க நாடுகளில் குடியேறுவதற்கு முன்பே இவர்கள் வளர்ந்து விட்ட மனிதக்கூறினையும் பண்பட்ட மொழிக் கூறினையும் கொண்டிருந்ததாக அறிகிறோம். இந்நிலையில் நாகரிகம் நிறைந்த ஒரு சமுதாயத்தின்

மொழியாக இவை இல்லையாயினும் தங்களின் சிந்தனையில் ஊறு கின்ற கருத்துக்களை சொல்லுவதற்குரிய அளவிற்கு இம்மொழி கள் வளர்ந்திருக்கக் காணலாம். நாகரிகம் வாய்ந்த பல மொழி களில் காணப்படாத பல மொழிக் கூறுகளை இம்மொழிகளில் காணலாம். அங்காங்கே நாம் குறிப்பிட்டது போல பல இந்திய மொழிகள் விசேடப் பண்புகள் பலவற்றைக் கொண்டிருக்கின் றன. நாம் பல சொற்களில் கூறுவதை இம்மொழிகளில் சில ஓரிரு சொற்களில் கூறிவிடுகின்றன. இம்மொழிகளில் காணப்படும் சில ஒலியன்களும் (phonemes) உருபன்களும் (morphemes) பலருக்கு வேடிக்கையாகவும் சிலருக்கு விருந்தாகவும் அமைகின் றன. வளர்ந்துவிட்ட நாகரிக மொழிகளையே அறிந்து, அவையே வளர்ந்து விட்ட மொழிகள் என்ற கருத்தில் இருக்கும் பலர் இம்மொழிப் பண்புகளைக் காணும்போது வேடிக்கையெனக் கருதுகின்றனர். ஆனல் எளிய வாழ்வைக் கொண்டுள்ள இம் மக்கள் சிக்கல் நிறைந்த மொழிகளை உருவாக்கியிருப்பது வியத் தற்குரியதாகும்.

அமெரிக்க இந்திய மொழிகள் மொழியியல் அறிஞனுக்கு விருந்தாக அமைகின்றன; ஆராய்ச்சியாளனுக்கு ஆராய்ச்சிக் குரிய கருவியாக அமைகின்றன; மொழிகளைப்பற்றிய பொதுப் பண்புகளைக் கண்டு அறிவதற்கு ஏற்ற புதிய புதிய பொருட்க ளாக அமைகின்றன. இந்நிலையில் இம்மொழிகளை அறிவதும் ஆராய்வதும் மகிழ்ச்சியைத் தந்து நிற்பவையாகும்.

பிற்சேர்க்கை - 1

## உராலிக் – அல்டய்க் மொழிகள்

### பால்டிக் பின்னிக் மொழிகள்

| | | |
|---|---|---|
| 1. | பின்னிஷ் | 4,000,000 |
| 2. | எஸ்தோனியன் | 1,250,000 |
| 3. | காரெலியன் | 167,000 |
| 4. | வோதே | ஒரு சிலர் |
| 5. | வெப்ஸ் | 20,000 |
| 6. | லூட் | ஒரு சிலர் |
| 7. | லிவோனியன் | 2,000 |
| 8. | ஒலனத் | ஒரு சிலர் |

### வால்கா பின்னிஷ் மொழிகள்

| | | |
|---|---|---|
| 1. | மார்வினியன் | 1,500,000 |
| 2. | செரிமிஸ் | 5,500,000 |

### உக்ரிக் மொழிகள்

| | | |
|---|---|---|
| 1. | ஹங்கேரியன் | 13,000,000 |
| 2. | வொகுல் | 6,000 |
| 3. | ஒஸ்த்யக் | 19,410 |

### பெரிமியன் மொழிகள்

| | | |
|---|---|---|
| 1. | சிரியன் | 43,000 |
| 2. | வொத்யக் | 600,000 |

### லாப்பிஷ் மொழிகள்

| | |
|---|---|
| லாப்பிஷ் | 30 000 |

### சமொயொதிக் மொழிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | நெனெட்ஸ் | (யுரக்) | 25,500 |
| 2. | எனெட்ஸ் | (எனிசெ) | 300 |
| 3. | நெஙனசன் | (தக்வி) | 700 |
| 4. | செல்கப் | (ஒஸ்த்யக்) | 3,800 |
| 5. | கமாஸ் | (கமாஸியன்) | சிலர் |

## அல்டய்க் மொழிகள்

| | | |
|---|---|---|
| *துருக்கிமொழிகள்* | | *65,000,00* |
| வடகிழக்கு | | |
| 1. | துவா (உரியங்கை) | 100,000 |
| 2. | கரகாஸ் | 6,000 |
| 3. | கக்காஸ் | 57,000 |
| 4. | ஷோர் | 15,000 |
| 5. | அல்டய் | |
| வடமேற்கு | | |
| 1. | கிர்க்கிஸ் | 665,310 |
| 2. | கசக் | 6,250,000 |
| 3. | கரச்சய் | 345,000 |
| 4. | பால்கர் | 42,410 |
| 5. | நொகய் | 4,1000 |
| 6. | கரய்ம் | 6,000 |
| 7. | தாத்தர் | 5,000,000 |
| 8. | பஷ்கீர் | 3,819,000 |
| தென்கிழக்கு | | |
| 1. | புதிய உகுர் | 3,000,000 |
| 2. | உஸ்பெக் (சகதை) | 7,000,000 |
| தென்மேற்கு | | |
| 1. | துர்க்குமென் | 1,000,000 |
| 2. | ஆஸபர்ஜானி | 3,500,000 |
| 3. | துருக்கி | 20,000,000 |
| 4. | யகுத் | 280,000 |
| 5. | சுவாஷ் | 1,500,000 |
| *மங்கோலிய மொழிகள்* | | |
| வடக்கு | | |
| | புரியத் | 300,000 |
| மேற்கு | | |
| 1. | ஓலியத் | 300,000 |
| 2. | மொகுல் | *சிலர்* |

| | | |
|---|---|---|
| 3. | தகூர் | 50,000 |
| 4. | மொங்கூர் | 60,000 |

கிழக்கு

| | | |
|---|---|---|
| 1. | ஓர்தொஸ் | சிலர் |
| 2. | கார்க்கின் | சிலர் |
| 3. | சகா | சிலர் |
| 4. | கால்கா | சிலர் |

## துங்கூஸ் மொழிகள்

தெற்குத் துங்கூஸ்

| | | |
|---|---|---|
| 1. | மஞ்சு | 2,400,000 |
| 2. | நனய் | |
| 1. | உகிதே | 1,400 |
| 2. | ஓரொச் | 800 |
| 3. | நனய் | 8,000 |
| 4. | கோல்ட் | 8,000 |
| 5. | சமாகிர் | சிலர் |
| 6. | ஓல்சா | 2,000 |
| 7. | ஓரக் | 473 |
| 8. | பிரார் | சிலர் |
| 9. | கிலோ | சிலர் |
| 10. | அக்கனி | சிலர் |

வடக்குத் துங்கூஸ்

| | | |
|---|---|---|
| 1. | எவெங்கி | 25,000 |
| 2. | நெகிதலல் | சிலர் |
| 3. | ஓரொச் | சிலர் |
| 4. | சொன் | சிலர் |
| 5. | எவன் | 9,400 |
| 6. | சொலொன் | சிலர் |

## காக்கேசியன் மொழிகள்

தென் காக்கேசியன்

| | | |
|---|---|---|
| 1. | ஜார்ஜியன் | 2,700,000 |
| 2. | மிங்கிரிலியன் | 300,000 |

| | | |
|---|---|---|
| 3. | லஷ் | 2,000 |
| 4. | சுவான் | 23,000 |
| 5. | கெஸ்கியன் | 203,000 |
| 6. | அவர் | 270,000 |
| 7. | தார்கவா | 188,000 |
| 8. | மேற்கு சிற்காசியன் | 155,000 |
| 9. | அபஸா | 20,000 |

வடமேற்குக் காக்கேசியன்

| | | |
|---|---|---|
| 1. | சிற்காசியன் | 115,000 |
| 2. | கபார்டியன் | 204,000 |
| 3. | உபிக் | |
| 4. | அப்கஸ் | 65,000 |

பாக்ஸ் மொழி

அமெரிக்க – இந்திய மொழிகள்

## வட அமெரிக்க மொழிகள்

*எஸ்கிமோ - அலியுத் மொழிகள்*

| | | |
|---|---|---|
| 1. | எஸ்கிமோ | 50,000 |
| 2. | அலியுத் | 6,000 |

*அல்கோன்கியன் வகாஷன் பெருங்குழு*

**சாலிஷ் மொழிகள்**

**சாலிஷ் (உட்பகுதி)**

| | | |
|---|---|---|
| 1. | லில்லோயட் | 1,500 |
| 2. | ஷஸ்வப் | 1,500 |
| 3. | துஞேம்சன் | 1,500 |
| 4. | ஒகனகன் | 1,000 |
| 5. | பிளாத்கெட் ஸ்போகனே | 200 |
| 6. | கோயர்ட் அலெனே | 700 |
| 7. | வெனட்ச்சி | 200 |

சாலிஷ் (கடற்கரைப் பகுதி)

| | | |
|---|---|---|
| 1. | தில்லமூக் | ஒரு சிலர் |
| 2. | துவஞ | 10 |

| | | |
|---|---|---|
| 3. | உப்பு செகாலிஸ் | 100 |
| 4. | குல்னெளல்ன் | 100 |
| 5. | ஸ்ஞேகுவல்மி | 50 |
| 6. | லும்மி | 200 |
| 7. | கல்கொமெலெம் | 1,000 |
| 8. | ஸ்குவாமிஷ் | 200 |
| 9. | கோமோக்ஸ் | 500 |
| 10. | பெல்லகோலா | 200 |

சிமாக்குவன்

| | | |
|---|---|---|
| 1. | சிமாக்குவன் (இறந்த மொழி) | |
| 2. | குய்லெயுத் | 280 |

அல்கோன்கியன்

| | | |
|---|---|---|
| 1. | கிரீ | 15,000 |
| 2. | மொன்டாக்னேஸ் | 1,500 |
| 3. | நஸ்கபி | சிலர் |
| 4. | மெஞேமினி | 2,500 |
| 5. | பாக்ஸ், சாக் | 2,500 |
| 6. | சிக்சபூ | 650 |
| 7. | ஷவ்னே | 730 |
| 8. | பொட்டவட்டோமி | 5,500 |
| 9. | சிப்பிவா | 32,000 |
| 10. | ஒட்டவா | 1,000 |
| 11. | அல்கோன்கின்; தெலவரே | 2.000 |
| 12. | பெஞேப்ஸ்காட் | 250 |
| 13. | அப்னகி | 250 |
| 14. | மலெசைட் | 150 |
| 15. | பசம்க்வொடி | 385 |
| 16. | மிக்மாக் | 3,800 |
| 17. | பிளாக் புட், பிளட், பீகன் | 7,600 |
| 18. | செயன்னே | 4,000 |
| 19. | அரபகோ | 3,775 |

வகாஷன் மொழிகள்

| | | |
|---|---|---|
| 1. | நோத்கா | 6,000 |
| 2. | நித்தினத் | சிலர் |

| | | |
|---|---|---|
| 3. | மகக் | 1500 |
| 4. | பெல்லபெல்லா | சிலர் |
| 5. | குவகுதே | சிலர் |
| 6. | கிதமத் | சிலர் |
| 7. | குவக்தில் | 1,000 |

## நாதென் பெருங்குழு

### அதபாஸ்கன்

#### வட அதபாஸ்கன்

| | | | |
|---|---|---|---|
| 1. | தோக்ரிப் | | 1,400 |
| 2. | சிப்பெவ்யென், ஸ்லேல், எல்லோ நைப் | | |
| | 1. | சிப் | 4,000-6,000 |
| | 2. | ஸ்லேவ் | 1,000 - 2,000 |
| | 3. | எல்லோ | 400 - 600 |
| 3. | குட்சின் | | 1,200 |
| 4. | தொனன - கொயுகன் - கன் - தச்சொன் | | |
| | 1. | தோனன | 350 |
| | 2. | குயுகு | 400 - 500 |
| | 3. | கன் | 60 |
| | 4. | தத்சொன் | 1,000 |
| 5. | செகனி - பீவர் சர்ஸி | | |
| | 1. | செகனி | 500 |
| | 2. | பீவர் | 300 |
| | 3. | சர்ஸி | |
| 6. | காரியர் - சில்சொதின் | | |
| | 1. | சில்சொதின் | 1,500-4,000 |
| | 2. | காரியர் | 1,000-3,000 |
| 7. | தகுல்தன் - கஸ்கா | | |
| | 1. | தகுல்தன் | 100-1,000 |
| | 2. | கஸ்கா | 200-500 |
| 8. | தனய்ஞ-இங்காலிக் | | |
| | 1. | தனய்ஞ | 300 |
| | 2. | இங்காலிக் | 500 |
| 9. | எயக் | | 6 |

பசுபிக் கரையோர அதபாஸ்கன்

| | | |
|---|---|---|
| 1. | ஹியூபா | 130 |
| 2. | கடோ – வைலகி | |
| | 1. கடோ | 10 |
| | 2. வைலகி | சிலர் |
| 3. | சஸ்தாகோஸ்தா | சிலர் |
| 4. | மத்தோல் | சிலர் |
| 5. | தொதோவா | சிலர் |

தென்மேற்கு அதபாஸ்கன்

| | | |
|---|---|---|
| 1. | நவகோ | 100.000 |
| 2. | சன் கர்லோஸ் அப்பாச்சே | 8,000-10,000 |
| . | சிரிகாகுவா - மெஸ்கலெரோ அப்பாச்சே | |
| | 1. சிரிகாகுவா | 100 - 1,000 |
| | 2. மெஸ்கலெரோ அப்பாச்சே | 1,000-1,500 |
| 4. | ஜகாரில்லா | 1,000-1,500 |
| 5. | லிபான் | 10 |
| 6. | கிவா அப்பாச்சே | 10 |
| 7. | அப்பாச்சே | சிலர் |
| ஹைடா | | சிலர் |
| திலிங்கித் | | சிலர் |

## பெனூசியன் பெருங்குழு

லத்தீன் அமெரிக்க மொழிகள்

| | | |
|---|---|---|
| மிக்கெ-சோக் குடும்பம் | | 60,000 |
| 1. | மிக்கெ | 32,000 |
| 2. | சோக் | 20,000 |
| 3. | பொபலுகா | 10,000 |
| மயன் குடும்பம் | | |
| 1. | ஹூக்ஸ்தெகே | 40,000 |
| 2. | 1. சௌதல் | 15,000 |
| | 2. சொல் | 22,000 |
| | 3. சொர்த்தி | 33,000 |
| 3. | 1. செல்தல் | 60,000 |

| | | | |
|---|---|---|---|
| | 2. | சொட்சில் | 35,000 |
| | 3. | தொசொலபல் | 10,000 |
| 4. | சக் | | 10,500 |
| 5. | 1. | கஞ்சொபல் | |
| | 2. | ஜகல்தெக் | 12,000 |
| | 3. | சொலமெக் | 40,000 |
| 6. | மொதொசிந்தலெகோ | | 1,000 |
| 7. | 1. | மம் | 268,000 |
| | 2. | அகுவாகதெக் | 7,000 |
| | 3. | இக்சில் | 10,000 |
| 8. | 1. | குயுசே | 450,000 |
| | 2. | கச்சிகுவல் | 329,000 |
| | 3. | சுத்துபில் | 24,000 |
| | 4. | ரபிஞல் | ஒரு சிலர் |
| 9. | 1. | கெச்சி | 250,000 |
| | 2. | பொகன்சி | சிலர் |
| | 3. | பொகமன் | சிலர் |
| 10. | 1. | மாயா | |

| | |
|---|---|
| சிப்பையா – உரு குடும்பம் | சிலர் |
| **தோத்தனக்கன் மொழிகள்** | |
| 1. தோக்கனக்கோ | 90,000 |
| 2. தெப்பகுவா | 3,000 |
| **வட அமெரிக்க மொழிகள்** | |
| (பெனூஷியன் பிரிவு) | சிலர் |
| யோகுத்ஸ் மொழிகள் | சிலர் |
| மைது மொழிகள் | 170 |
| மிவோக் மொழிகள் | 200 |
| விந்துன் மொழிகள் | 300 |
| சினூக் மொழிகள் | 200 - 300 |
| சகாப்தின் மொழிகள் | சிலர் |
| யக்கோனன் | சிலர் |
| கலப்புயன் | சிலர் |
| வெயிலத்புயன் | சிலர் |
| தக்கல்மா | சிலர் |

| | |
|---|---|
| திசிம்ஷியன் | சிலர் |
| கூஸ் | சிலர் |
| அல்சியா | சிலர் |
| மொலலே | சிலர் |

## ஹோக்கன் சியோவன் பெருங்குழு

### மொழிக் குடும்பங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | போமோ மொழிகள் | | | 800 |
| 2. | யுக்கி மொழிகள் | | | |
| | 1. | வாப்போ | | 10 |
| | 2. | யுக்கி | | 60 |
| 3. | ஷஸ்தன் மொழிகள் | | | |
| | 1. | ஷஸ்தா | | 120 |
| | 2. | அசுமாவி | | 270 |
| | 3. | அத்சுகெவி | | 4 |
| 4. | யூமன் மொழிகள் | | | 5,000 |
| 5. | இராக்கியஸ் மொழிகள் | | | 60,000 |
| | 1. | செனக்கா | | |
| | | 1. | செனக்கா | 2,000-3,000 |
| | | 2. | கயூகா | 1,000 |
| | | 3. | ஒனந்தகா | 1,000 |
| | 2. | மோகாக் | | 7,000 |
| | 3. | ஏனெய்டா | | 4,000 |
| | 4. | வியன்டாத் | | 1,000 |
| | 5. | தஸ்கரோரா | | 400 |
| | 6. | செரோகி | | 51,000 |
| 6. | சியோவன் மொழிகள் | | | |
| | 1. | கிரோ | | 3,000 |
| | 2. | ஹிடஸ்தா | | 1,000 |
| | 3. | வின்னெப்கோ | | 3,000 |
| | 4. | மாண்டன் | | 300 |
| | 5. | சிவரோ | | 700 |
| | 6. | ஒமகா | | 3,000 |

| | | |
|---|---|---|
| | 7. டக்கோட்டா | 50,000 |
| | 8. கத்தெளபா | 400 |
| 7. | கத்தோவன் மொழிகள் | |
| | 1. கித்சை | சிலர் |
| | 2. கத்தோ | 1,200 |
| | 3. விச்சிட்டா | 600 |
| | 4. அரிக்கரா | 700 |
| | 5. பானே | 1,200 |
| 8. | மஸ்கோகியன் மொழிகள் | |
| | 1. சேக்டா | 20,000 |
| | 2. சிக்காசா | 4,000 |
| | 3. கோசதி | 400 |
| | 4. மிக்காசுகி | 700 |
| | 5. முஸ்கோகி | 10,000 |
| | 6. செமினோல் | 10,000 |
| | தனி மொழிகள் | |
| | 1. வாஷோ | 800 |
| | 2. கரோக் | 700 |
| | 3. கெரெச் | 7,000 |
| | 4. யுச்சி | 100 |
| | 5. துனிக்கா | 76 |
| | 6. சிதிமகா | 120 |
| | 7. தேங்கவா | 57 |
| | 8. நட்செஸ் | சிலர் |

லத்தீன் அமெரிக்கா

(ஹோக்கன் சியோவன் பிரிவு)

## அஸ்டெக் தனோவன் பெருங்குழு

| | |
|---|---|
| உட்டோ அஸ்டெகன் | 40,000 |
| தனோவன் மொழிகள் | 4,000 |
| கியோவா | 3,000 |
| சூனி | 3,000 |

## பிற்சேர்க்கை - 2

1. அமெரிக்கா

(இரண்டாம் பகுதி பக்கம் 308)

2. ஆப்கானிஸ்தான்

| | | |
|---|---|---|
| 1. | பஷ்தோ | 8,000,000 |
| 2. | பெர்சியன் | 3,000,000 |
| 3. | உஸ்பெக் | 800,000 |
| 4. | துர்க்குமென் | 200,000 |

3. இக்குவேட்டர்

| | | |
|---|---|---|
| 1. | ஸ்பானிஷ் | 4,000,000 |
| 2. | கியூசுவா | 350,000 |

4. ஈராக்

| | | |
|---|---|---|
| 1. | அரபிக் | 6,500,000 |
| 2. | குர்டிஷ் | 1,000 000 |
| 3. | துர்க்குமென் | 70,000 |
| 4. | ஆரமய்க் - சிரியாக் | 50,000 |
| 5. | ஆர்மீனியன் | 50,000 |
| 6. | பெர்சியன் | 50,000 |

5. ஈரான்

| | | |
|---|---|---|
| 1. | பெர்சியன் | 12,000,000 |
| 2. | ஆஸர்பஜானி | 4,000,000 |
| 3. | குர்டிஷ் | 1,500,000 |
| 4. | ஆர்மீனியன் | 300,000 |
| 5. | பலுச்சி | 100,000 |
| 6. | ஆராமய்க் - சிரியாக் | 40,000 |
| 7. | பிராகூயி | 30,000 |

6. எல்சல்வேதார்

| | | |
|---|---|---|
| 1. | ஸ்பானிஷ் | 400,000 |
| 2. | நகுவத்தில் | 20,000 |

7. கானடா

(இரண்டாம் பகுதி பக்கம் 309)

8. கியூபா

| | |
|---|---|
| ஸ்பானிஷ் | 7,000,000 |

9. கிரீஷ்

| | | |
|---|---|---|
| 1, | கிரீக் | 8,000,000 |
| 2. | துருக்கி | 200,000 |
| 3. | அல்பேனியன் | 100,000 |
| 4. | மாசடோனியன் | 100,000 |
| 5. | லத்திேைறு | 30,000 |

10. கிரீன்லாந்து

| | | |
|---|---|---|
| 1. | எஸ்கிமோ | 28,000 |
| 2. | டேனிஷ் | 10,000 |

11. குத்தமலா

| | | |
|---|---|---|
| 1. | ஸ்பானிஷ் | 1,600,000 |
| 2. | மாயா | 500,000 |
| 3. | காரிப் | 3,000 |

12. சிரியா

| | | |
|---|---|---|
| 1. | அரபிக் | 4,200,000 |
| 2, | ஆர்மீனியன் | 300,000 |
| 3. | குர்டிஷ் | 300,000 |
| 4. | சிர்க்காசியன் | 5,000 |
| 5. | ஆரமய்க் - சிரியாக் | 4,000 |

13. சுவீடன்

| | | |
|---|---|---|
| 1. | சுவீடிஷ் | 7,500,000 |
| 2. | பின்னிஷ் | 30,000 |
| 3. | லாப் | 10,000 |

14. சைனு (தேசியம்)

| | | |
|---|---|---|
| 1. | புகியெனிஸ் | 9,000,000 |
| 2. | சீன - மாண்டரின் | 1,500,000 |
| 3. | ஜப்பானி | 500,000 |
| 4. | மலாய் | 100,000 |

சைனு (மக்கள் குடியரசு)

| | | |
|---|---|---|
| 1. | சீன - மாண்டரின் | 515,000,000 |
| 2. | வூ | 56,000,000 |
| 3. | காண்டனீஸ் | 46,000,000 |
| 4. | புகியெனீஸ் | 36,000,000 |

| | | |
|---|---|---|
| | 5. ஹக்கா | 20,000,000 |
| | 6. திபேத்தன் | 6,000,000 |
| | 7. உகூர் | 4,000,000 |
| | 8. லோலோ | 3,000,000 |
| 15. | சௌதி அரேபியா | |
| | அரபிக் | 7,000,000 |
| 16. | டிரினீடாட் | |
| | 1. ஆங்கிலம் | 700,000 |
| | 2. அரவாக் | 20,000 |
| 17. | துருக்கி | |
| | 1. துருக்கி | 26,000,000 |
| | 2. குர்டிஷ் | 2,000,000 |
| | 3. கிரீக் | 500,000 |
| | 4. அரபிக் | 300,000 |
| | 5. ஆர்மீனியன் | 300,000 |
| | 6. லத்தினோ | 80,000 |
| 18. | நிக்கரகுவா | |
| | ஸ்பானிஷ் | 1,600,000 |
| 19. | பல்கேரியா | |
| | (இரண்டாம் பகுதி பக்கம் 310) | |
| 20. | பனமா | |
| | 1. ஸ்பானிஷ் | 1,000,000 |
| | 2. ஆங்கிலம் | 60,000 |
| 21. | பிரான்சு | |
| | 1. பிரஞ்சு | 44,000,000 |
| | 2. ஜெர்மன் | 1,800,000 |
| | 3. பிரேதொன் | 1,000,000 |
| | 4. இத்தாலியன் | 1,000,000 |
| | 5. பாஸ்க் | 100,000 |

22. பிரிட்டிஷ கடற்கரைப்பகுதி

| | | |
|---|---|---|
| 1. | ஆங்கிலம் | 200,000 |
| 2. | பிஜி | 100 000 |
| 3. | இந்துஸ்தானி | 100.000 |
| 4. | தொங்கன் | 70,000 |

23, பிரிட்டிஷ் கொந்துராஸ்

| | | |
|---|---|---|
| 1. | ஆங்கிலம் | 40,000 |
| 2. | மாயா | 10,000 |

24. பிரிட்டிஷ் கொலம்பியா

| | | |
|---|---|---|
| 1. | ஸ்பானீஷ் | 13,000,000 |
| 2. | ஜெர்மன் | 200,000 |

25. பின்லாந்து

| | | |
|---|---|---|
| 1, | பின்னிஷ் | 4,000,000 |
| 2. | சுவீடிஷ் | 400,000 |
| 3. | லாப் | 5,000 |
| 4. | ரொமானி | 2,000 |

26. பெரு

| | | |
|---|---|---|
| 1. | ஸ்பானிஷ் | 6,000,000 |
| 2. | கியூசுவா | 3,000,000 |
| 3. | ஐமரா | 800,000 |

27. பொலிவியா

| | | |
|---|---|---|
| 1. | ஸ்பானிஷ் | 1,600,000 |
| 2. | கியூசுவா | 1,600,000 |
| 3. | ஐமரா | 400,000 |

28. போர்ச்சுக்கல்

| | | |
|---|---|---|
| | போச்சுக்கீஸ் | 9,000,000 |

29. மங்கோலியா

| | | |
|---|---|---|
| 1. | கல்கா | 900,000 |
| 2. | கசாக் | 500,000 |

30. மெக்சிக்கோ

| | | |
|---|---|---|
| 1. | ஸ்பானிஷ் | 35,000,000 |
| 2. | நகுவத்தில் | 800,006 |
| 3. | மாயா | 600,000 |
| 4. | ஜெர்மன் | 200,000 |
| 5. | இட்டிஷ் | 200,000 |

31, யுகோஸ்லேவியா

(இரண்டாம் பகுதி பக்கம் 311)

32. ரஷ்யா

(இரண்டாம் பகுதி பக்கம் 311)

33. வெர்ஜீன் தீவுகள்

| | |
|---|---|
| ஆங்கிலம் | 30,000 |

34. ஸ்பெயின்

| | | |
|---|---|---|
| 1. | ஸ்பானிஷ் | 23,000,000 |
| 2. | கதலன் | 5,000,000 |
| 3. | போர்ச்சுக்கீஸ் | 2,000,000 |
| 4. | பாஸ்க் | 700,000 |
| 4. | ரொமானி | 200,000 |

35. ஜமாய்க்கா

| | |
|---|---|
| ஆங்கிலம் | 1,700,000 |

36. ஜெர்மனி

(இரண்டாம் பகுதி பக்கம் 311)

37. ஹங்கேரி

| | | |
|---|---|---|
| 1. | ஹங்கேரியன் | 9,000,000 |
| 2. | ஜெர்மன் | 300.000 |
| 3. | ரோமானி | 200,000 |
| 4. | செர்போ – கிரேஷியன் | 50,0000 |
| 5. | சிலாவக் | 50,000 |

## உதவிய நூல்கள்


1. Agesthialingom, S., உலக மொழிகள் (முதல் பகுதி)
2. ———, உலக மொழிகள் (இரண்டாம் பகுதி)
3. Andrade, Manuel A., "Quileute" *Hand book of American Indian Languages* (*H.A.I.L*), Vol. 3.
4. Arthur, A., & Ginever, Ilone, *Hungarian Grammar.*
5. Austin, William M., Hargin, John G., & Onan, Peter M., *Mangol Reader.*
6. Boas, Franz *An Introduction to the Hand Book of American Indian Languages* (*A. H. A. I. L*).
7. Bunzel, Ruth L, "Zuni" *A. H. A. I. L.*, Vol. 1.
8. Caldwell, Robert, *Comparative Grammar of the Dravidian Languages.*
9. Collinder, B., *Comparative Grammar of the Uralic Languages.*
10. ———, *Survey of the Uralic Languages.*
11. Dixon, Roland B., "Maidu", *A. H, A. I. L.* Vol. 3.
12. Eliot, C. N. E., *A Finnish Grammar.*
13. *Encyclopaedia Britannica*, Vols. 1–24. (1972)
14. Eys, W. J., *The Basque Language.*
15. Goddard, Pline Earle, "Athapaskan (Hupa"), *A. H. A. I. L*, Vol. 1.
16. Gray, Luise H., *Foundations of Language.*
17. Grϕnbech, Kaare & Krueger, John R., *An Introduction to Classical (Literary) Mangolian.*
18. Hajdu, Peter, *The Samoyed Peoples and Languages.*
19. Hall, Rober A., Jr., *Hungarian Grammar.*
20. Hakulinen, Lauri, *The Structure and developement of the Finnish Language.* (Translated by Altinson, John,).

21. Harms, Robert T., *Estonian Grammar.*

22. Hass, Mary R., *Tunika.*

23. ———, "A Grammatical Sketch of Tunica", *Linguistic Structures of Nutive America* (Ed. by Osgood Cornelivs).

24. Hoijer, Hrry, "Tonkawa", *A. H A. I. L,* Vol. 3.

25. ———, "Tonkawa", *Viking Fund Publications in Anthropology.* No. 6.

26. Joberg, Andree F., *Uzbek Structural Grammar.*

27. Jones, William, "Algonguean (Fox)", *A. H. A. I L,* Vol. 1.

28, Kroeber. Hands Hordewin Von, *Comparative Study of the Turkish Mangol and Japanese Languages.*

29. Krader, Lawrence, *Classical (Literary) Mangolian Social Organization of the Mangol-Turkic.*

30. Krueger, John R., *Chuvash Manual.*

31. ———, *Yakut Manual.*

32. Kuiper, Aert H., "Caucasian", *Current Trends in Linguistics*

33. ———, *Phoneme and Morpheme in Kabardian.*

34. Lanyon. Orgill Peter A., *An Introduction to the Thai (Siamese) Language for European Students.*

35. Lochok, Dorita, "Basque Phonetics", *Anthropological Linguistics,* No. *3.*

36. Loewonthal, Rudolf, *The Turkish Languages and Literatures of Central Asia.*

37. Milewzki, Tokensy, "Language Caucasienes Ameriacaines," *Lingua Posnaniensis,* Vol. V.

38. Mollondorff, P. C., Von, *A Manchu Grammar.*

39. ———, *A Manchu Grammar with Analysed texts.*

40. Muller, Siegfried H., *The World's Living Languages.*

41. Nemeth, T., *Turkish Grammar.*

42. Niemi, Clemens A., *Finnish Grammar.*

43. Poppe, Nicholas, *Grammar of written Mangolian.*

44. Sapir, Edward, "Primilary report on the Language and Mythology of the Chinook", *Amer'can Anthropologist.* Vol. IX.

45. Sebeok, Thomas, A., "Finnish and Hungarian case system-their Fram and Function", *Language monograph.*

46. Singer, Tgnatius, *Simplified Grammar of Hungarian Language.*

47. Spalding, A. E., *A Grammar of the East and West Coasts of Hudson Bay.*

48. Swadesh, Morris, "South Greenlandic", *Linguistic structures of Native America.*

49. Swanton, John R., "Haida" *A. H. A. I. L*, Vol. 1.

50. ————, "Tlingit" *A. H. A. I. L.* Vol. 1.

51. Tihany, Leshie C., *A Modern Hungarian Grammar.*

52. Thomas, Lawrence L., "The Linguistic Theories of A. J. Marr", *U. C. P. L.* Vol. 14.

53. Tover, Antonio, *The Basque Language.*

54. Tuomikoski, Aune & Deans, Helen, *Elemantary Finnish,*

55. Wagner, Oünter, "Yuchi", *A. H. A. I. L* Vol. 3.

56. Whitney, Arther H., *Teching Yourself Finnish.*

57. Whymant, A Nevillo J., *A Mangolian Grammar.*

58. Wojatsek, Charles, *Hungarian Text Book and Grammar.*

59. Wurm Dr. Stefan, *Turkic people of the U S S R.*

UG
R03